வரு. 76 இல. 08 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

2024 பெப்ரவரி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

February 25 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-







03 பன்னிரண்டு வருடங்களின் பின்னர் கிடைத்த நீதி!!



05 ஜனாதிபதிக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்!



10 "விஜயகுமாரதுங்கவை இரண்டு முறை சுட்டேன்"



24 ஹசரங்க எனும் இலங்கையின் கபில் தேவ்






## கங்காராம நவம் மஹா பெரஹரா; ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு



கொழும்பு, ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் 45ஆவது வருடாந்த நவம் மஹா பெரஹராவை நேற்று முன்தினம் (23) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யானையின் மீது புனித சின்னம் வைத்து ஆரம்பித்து வைத்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இதன்போது கலந்துகொண்டார்.

## புலம்பெயர் வாழ் இலங்கையரை கணக்கெடுக்கும் பணி விரைவில்

### சிறப்பு அடையாள அட்டை வழங்கவும் ஏற்பாடு

### சுயவிருப்பத்தின் பேரில் அடிப்படை தகவல்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள தீர்மானம்



புலம்பெயர்ந்து வாழும் இலங்கையரை கணக்கெடுக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படுமென, வெளிநாடு வாழ் இலங்கையருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் சிரேஷ்ட இராஜதந்திரி வீ.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் பேசாப்பொருள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "புலம்பெயர்வானது புதிய விடயம் அல்லவென்பதுடன், மனித வாழ்க்கை முறை ஆரம்பித்த காலத்திலிருந்து பல்வேறுபட்ட காரணங்களுக்காக இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. மனிதன் தனக்கு சாத்தியமான வளங்கள் காணப்படும் பகுதிகளை நோக்கி நகர்வதை காண முடிகிறது. இன்றளவில் நியூசிலாந்து - வட அமெரிக்கா வரை உலகின் பல பகுதிகளில் இலங்கைத் தமிழர் வாழ்கின்றனர். இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

06

## மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பஞ்சரத பவனி



மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவத்தின் பஞ்சரத பவனி நேற்று (24) மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் பெருமளவான பக்தர்களும் கலந்துகொண்டனர்.

*(எம்.சதுர்தீன், டி.வசந்தகுமார், மாத்தளை சுழற்சி, நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்கள்)*

### PUCSL இடம் மின்சார சபை யோசனை சமர்ப்பிப்பு

# அனைத்து வீட்டுப் பாவனையாளரின் மின் கட்டணம் 18% ஐ விட குறையும்

### ரூ. 5,000 ஆக இருந்த பட்டியலில் இனி 4,000 ரூபாவாகும்

### மத வழிபாட்டுத் தலங்கள் 18%, கைத்தொழிற்சாலைகள், ஹோட்டல்கள் 12%, அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் 24 வீதத்தாலும் குறையும்

அனைத்து வீட்டுப் பாவனையாளருக்கான மின்சாரக் கட்டணம் 18 வீதத்தை விட குறைக்கப்படுமென்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடந்த 2023 ஒக்டோபர் மாத மின் கட்டணப் பட்டியலுள்ள அல்லது அதற்கு குறைவான மின் கட்டணத்தை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுப்பதற்கான யோசனையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தற்போது சமர்ப்பித்துள்ளதாகவும், அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதற்கமைய 5,000 ரூபா மின்சார கட்டணத்தை பெற்ற வீட்டு வாடிக்கையாளருக்கு அந்தக் கட்டணம் சுமார் 4,000



ரூபாவரை குறைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. மின் கட்டணத்தை முடிந்தளவு குறைப்பதற்கு பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், பலர் சாதகமான யோசனைகளை முன்வைத்தனர். இதற்கமையவே கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை முழுமையாக இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீட்டு மற்றும் மத வழிபாட்டுத் தலங்களின் மின் கட்டணம் 18 சதவீதத்தாலும் கைத்தொழிற்சாலைகள், ஹோட்டல்களுக்கான மின் கட்டணம் 12 சதவீதத்தாலும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கான

06

### சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகள்

## கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தல்



சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவ்வாறான கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

06

### மியன்மாரில் நிர்க்கதியாகியுள்ளோரை மீட்க நடவடிக்கை;

## மியன்மாருடன் அமைச்சர் அலி சப்ரி தொடர் பேச்சு



மியன்மாரில் ஆட்கடத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ள இலங்கையரை மீட்டு, அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகளை இலங்கை வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி முன்னெடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இலங்கையரை மீட்பதற்காக மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து அமைச்சர் பணியாற்றி வருகின்றார்.

06

### எங்கள் கருத்து...

## மின் கட்டண குறைப்பின் போது வர்த்தக சமூகத்தின் பொறுப்பு

எடிசனின் மின் விளக்கும், சிமன்ஸ் நிறுவனத்தின் டைனமோவும் அமெரிக்கா மற்றும் மேற்குலகின் ஊடாக வியாபிப்பதை லெனின் கண்டார். மனிதனின் அன்றாட வாழ்வினுள் அதன் மூலம் புரட்சி ஏற்படும், அந்தப் புரட்சியில் மின்சாரத்துக்கு கிடைக்க வேண்டிய இடம் தொடர்பிலும் லெனின் புரிந்து கொண்டார். 1908ஆம் ஆண்டளவில், ஜெர்மனியில் மின்சார தொழில்நுட்பத்தின் போக்கைக் கண்டு, அந்தப் பரிணாமம் முதலாளித்துவத்தின்

06

### மீனவர் கைதால் கச்சதீவு புறக்கணிப்பு

## தமிழக தரப்பு நியாயப்படுத்தலை எந்த விதத்திலும் ஏற்க முடியாது

### கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா

**கச்சதீவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம், ஸாதிக் ஷிஹான்**



தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டமை காரணமாகவே கச்சதீவு திருவிழாவை புறக்கணித்தோமென்ற இந்திய மக்களின் நியாயப்படுத்தலை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதென, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார். நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கமைவாகவே நாம் செயற்படுகிறோமென குறிப்பிட்ட

06

## அதிகமான உஷ்ண காலநிலை சில மாதங்களுக்கு தொடரும்

### 08 மாவட்டங்களுக்கு பாதிப்பு



நாட்டின் 08 மாவட்டங்களில் அதிக உஷ்ணமான காலநிலையை எதிர்பார்ப்பதுடன், இந்த நிலைமை எதிர்வரும் சில மாதங்களுக்கு தொடருமென்று எதிர்பார்ப்பதாகவும், வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருநாகல், ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிக உஷ்ணமான காலநிலை நிலவுமென்று

06

### 'விசிஷ்ட கௌசல்யாபிமானி' 'விசிஷ்ட ஜனரஜ அபிமானி'

## இரண்டு தேசிய விருதுகள் ஜனாதிபதியால் அறிமுகம்



இலங்கையர் மற்றும் இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கும் நோக்கில் 'விசிஷ்ட கௌசல்யாபிமானி' மற்றும் 'விசிஷ்ட ஜனரஜ அபிமானி' ஆகிய இரண்டு புதிய விருதுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட PS/NC/ACD/95/2023 இலக்க அமைச்சரவை குறிப்பு மூலம், 'விசிஷ்ட கௌசல்யாபிமானி' மற்றும் 'விசிஷ்ட ஜனரஜ அபிமானி' ஆகிய இரண்டு புதிய விருதுகளை அறிமுகப்படுத்த

06

# ஒதுக்கப்பட்ட 400 பஸ்கள் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் பயணிகள் போக்குவரத்தில்





"கைவிடப்பட்ட இ.போ.சபை பஸ் சேவை "இ.போ.சபை காலாவதியாகிவிட்டது" இவை கடந்த காலங்களில் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாக இருந்தன. இ.போ.சபை அந்தளவுக்கு மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தது. அந்த மோசமான நிலை எந்தளவுக்குச் சென்றிருந்தது என்றால், தனியார் பஸ்கள் தங்கள் ஆதிக்கத்தை வியாபித்திருந்த அளவுக்காகும். என்றாலும் இன்று அந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. இ.போ. சபை பஸ்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, பொதுப் பயணிகள் சேவை மேன்மையடைந்தது. நமது பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி புதிய பஸ்களை இறக்குமதி செய்யுமளவுக்கு அது வளர்ச்சியடைந்தது, இது எமது தொழில்நுட்பத்தினாலேயே அதிகம் சாத்தியமானது. அத்தியாவசிய உதிரிப் பாகங்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டன.

இதனடிப்படையில் இ.போ.சபை பஸ்களின் எண்ணிக்கை பல துறைகளிலும் மேம்படுத்தப்பட்டது.



அதன் ஒரு செயன்முறையாக இருந்தது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு பல்வேறு குறைபாடுகள் காரணமாக சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியதாகும். அதன் ஊடாக பயணிகள் போக்குவரத்து சேவைகளை வழங்கி, அதன் மூலம் தினமும் ஒரு லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது.

உதிரிப் பாகங்கள் இல்லாமல் சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பஸ்களை மறுசீரமைத்தமை மற்றொரு சிறப்பு நடவடிக்கையாகும். இது இரண்டு கட்டங்களின் கீழாகும்.

அது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனையின் பேரில் இ.போ. சபையின் தலைவர் லலித் டி அல்விஸின் வழிகாட்டுதல்களின் மூலமுமாகும். இ.போ.சபையின் தலைமை இயந்திர பொறியாளர் (உற்பத்தி) ஆர்.பி. லக்ஷ்மன் புஸ்பகுமாரவின் மேற்பார்வையில் 12 பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது போன்ற பஸ்களை டிப்போக்களில் நிறுத்தி விட்டு, சில காலம் கழித்து ஏலம் விடப்படும், பாவனைக்கு உதவாத பஸ்களை ஏலம் விட வேண்டும் என்ற உண்மையைச் சுட்டிக் காட்டினர். ஆனால் இம்முறை அந்த விளையாட்டை நடுநிலையான அதிகாரிகளால் ஆட முடியவில்லை. பேருந்துகளின் குறைபாடுகளே, அவை சேவையில் இருந்து நீக்கப்பட்டதற்கான காரணமாகும். பேருந்துகளின் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு, அவை எத்தனை கிலோமீட்டர்கள் ஓடின மீண்டும் சேவையில் ஈடுபடுத்த பார்க்க வேண்டிய பழுதுகள் மற்றும் பல காரணங்கள் நிறுத்தப்பட்ட பல பேருந்துகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று உணர்ந்ததால் அவை முழுவதுமாக புதுப்பிக்கப்பட்டன.

முன்னைய காலங்களில் இவ்வாறான பஸ்கள் டிப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டு சிறிது காலத்திற்குப் பின்னர் ஏலத்தில் விற்கப்படுவது வழக்கம். எனினும் இம்முறை அந்த விளையாட்டைச் செய்வதற்கு இ.போ. சபை நடுநிலை அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. பஸ்களின் குறைபாடுகள், கோளாறுகள், அவை சேவையில் இருந்து நீக்கப்பட்டதற்கான காரணம், பஸ்கள் உற்பத்தி செய்யப்பட்ட வருடம், எத்தனை கிலோமீட்டர்கள் ஓடின, மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்குச் செய்ய வேண்டிய பழுதுபார்ப்புக்கள் போன்ற பல காரணங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. அவ்வாறு ஆராய்ந்து பார்த்ததில் சேவையிலிருந்து ஒதுக்கப்பட்ட பல பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டு அவை முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டன.

அதன்படிப்படையில், அதன் முதல் கட்டமாக 2023 மார்ச் மாதத்தில் அவ்வாறான 200 பஸ்களை மறுசீரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த கட்டத்தின் கீழ், இ.போ. சபையால் அந்தப் பணி மிகவும் வெற்றிகரமாகச் செய்யப்பட முடிந்தது. 200 பஸ்களில் 193 பஸ்களின் மறுசீரமைப்புப் பணிகளை முடித்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு இ.போ.சபைக்கு 5 மாதங்களுக்கும் குறைவான காலமே தேவைப்பட்டது.

முதற் கட்டத்தில் இந்த பஸ்களை முழுமையாக புனரமைப்பதற்காக 197 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. (ரூபா 197,676, 828.28) இதன்பிரகாரம் சராசரியாக ஒரு பஸ்ஸுக்காக செலவிடப்பட்ட தொகை ஒரு மில்லியன் ரூபாவை அண்மித்த தொகையாகும். இந்தப் பஸ் ஒன்றை இந்தியாவிலிருந்து புதிதாக இறக்குமதி செய்வதானால், ஒரு பஸ்ஸுக்கு 21 மில்லியன் ரூபாய் (இரண்டு கோடி பத்து இலட்சம்) செலவழிக்க வேண்டும். அப்போது எமது பணம் வெளிநாட்டிற்குச் செல்கிறது. எமது வேலைவாய்ப்பின்மை அப்படியே இருக்கும். இந்நாட்டின் வளங்கள் பயன்படுத்தப்படாமல் அவ்வாறே இருக்கும்.

இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் ஒரு நாளைக்கு சுமார் 30 ஆயிரம் ரூபாய் வருமானத்தை ஒரு பஸ்ஸின் மூலம் ஈட்டிக் கொள்ள முடியும். இதனடிப்படையில் மறுசீரமைக்கப்பட்ட அந்த பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் பெருமளவிலான வருமானத்தை இ.போ.சபையினால் ஈட்டிக் கொள்ள முடியும். ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு பஸ் ஆறு முறை பயணத்தை மேற்கொண்டால் குறைந்தது அந்த 394 பஸ்களில் (முதற் கட்டத்தில் 193 பஸ்களும், இரண்டாம் கட்டத்தில் 201 பஸ்களும்) ஒரு பஸ்ஸில் 50 பயணிகள் வீதம் பயணிப்பதாக எடுத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு (50 X 6 X 394) 118,200 பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்க முடியும். எனினும் நெரிசலான பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் இ.போ.சபை பஸ் ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு 10 முதல் 15 முறை பயணத்தில் ஈடுபடுவதோடு, அவ்வாறு பார்க்கும் போது இந்த பயணிகளின் தொகை சில பஸ் சேவைகளில் இரு மடங்காகக் கூட அதிகரிக்க கூடும்.

இந்த பஸ்களைத் துரிதமாகச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ஒரே இடத்தில் அன்றி பிராந்திய ரீதியாக அந்த பஸ்களை மறுசீரமைக்குமாறு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இ.போ.சபைத் தலைவருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதன்பிரகாரமே, பஸ்களின் சீரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. அதன்பிரகாரம் நாடு முழுவதிலுமுள்ள 11 பிராந்தியங்கள் ஊடாக இந்த பஸ்களின் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. லேலண்ட் மற்றும் டாடா எனும் இரண்டு வகை பஸ்கள் மற்றும் மலையகம் மற்றும் கிராமப்புறங்களில் சேவையில் ஈடுபடும் ஒற்றைக் கதவுகளை மாத்திரம் கொண்ட பஸ்களும் இதன் கீழ் முழுமையாக மறுசீரமைக்கப்பிக்கப்பட்டன.

கடந்த 2003 ஜனவரி மாதமாகும் போது இ.போ.சபை டிப்போக்களில் 852 பஸ்கள் சேவையில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்ததோடு, நாடு முழுவதிலும் உள்ள 107 இ.போ.சபை டிப்போக்கள் மற்றும் 12 பிராந்திய வேலைத் தளங்களில் பணியாற்றும் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தப் பஸ்களை மறுசீரமைக்கத் தொடங்கினர்.

அதனடிப்படையில், வருடத்தின் 365 நாட்களில் 300 நாட்கள் மாத்திரம் ஒரு பஸ் சேவையில் ஈடுபட்டால், அந்த 394 பஸ்கள் மூலம் ஆண்டுக்குக் கிடைக்கும் வருமானம் குறைந்தபட்சம் (ரூபாய். 30000 X 394 X 365) = 35,46,000,000) 354 கோடி ரூபாய் சம்பாதிக்க முடியும். அந்தப் பஸ்களை நீண்ட தூர சேவைகளுக்குப் பயன்படுத்தினால், அல்லது ஆண்டுக்கு ஓடும் நாட்களை 325 ஆக உயர்த்தினால், அந்தத் தொகை நிச்சயமாக 400 கோடி ரூபாய் எனும் 4 பில்லியனைத் தாண்டும். அந்தப் பணத்தைப் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து சுமார் 200 புதிய பஸ்களைக் கொள்வனவு செய்திருக்க முடியும். அதில் பாதியை பஸ்களின் பராமரிப்பு உள்ளிட்ட இதர செலவுகளாக ஒதுக்கினால் குறைந்தது 100 புதிய பஸ்களையாவது வாங்க முடிந்திருக்கும்.

இது இதுவரைக்கும் நாம் அறிந்திராத இரகசியமாகும். அந்த இரகசியத்தை ஏன் எம்மால் வெளிப்படுத்த முடியாமல் போனது? இ.போ.சபையின் சில டிப்போக்களது தலைவர்கள் தனியார் பஸ்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளனர். அம்பாறை போன்ற டிப்போக்களின் பிரதானிகள் ஊழல் மோசடிகளின் மூலம் நன்மையடைந்தனர். இவை கண்டுபிடிக்கப்பட்ட ஓரிரு சம்பவங்கள் மாத்திரமேயாகும். இ.போ.ச பஸ்களின் டிக்கெட் பரிசோதகர்கள், நடத்துனர்கள் மற்றும் நேரக் கண்காணிப்பாளர்கள் போன்றோர் அதிவேக நெடுஞ்சாலை பஸ்களில் சுரண்டிய முறைகளை நாம் கடந்த காலங்களில் வெளிப்படுத்தினோம். இந்த அனைத்து முறைகேடுகளும் நடந்திருக்காவிட்டால் இ.போ.சபை முன்னேற்றப் பாதையில் வெகு தூரம் சென்றிருக்கும். எனினும் அவை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளாமை அதற்கு காரணமாகியது.

இந்த பஸ்கள் முழுமையாக மறுசீரமைக்கப்பட்டது இ.போ.சபையின் பிராந்திய வேலைத்தளங்களான ஊவா, நுவரெலியா, கண்டி, வட மேற்கு, கொழும்பு, கம்பஹா, சப்ரகமுவ, களுத்துறை, றுஹுனு, ரஜரட்ட, வடக்கு, கிழக்கு ஆகிய வேலைத்தளங்களிலாகும். அத்துடன் கொழும்பு மத்திய பஸ் வண்டி அலுவகத்தில் முதலாம் கட்டத்தின் கீழ் ஒரு பஸ் வண்டியும், இரண்டாம் கட்டத்தின் கீழ் மற்றொரு பஸ் வண்டியும் புதுப்பிக்கப்பட்டது. அதேபோன்று சிசு செரிய பாடசாலை மாணவர் சேவை பஸ்களும் இங்கு முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டது.

காடு மண்டிப் போயிருந்த பல பஸ்கள் இவ்வாறாக வீதிக்கு வந்துள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள டாடா பஸ்களில் ஒன்று இன்னும் சில மாதங்கள் அங்கேயே இருந்திருந்தால் அதன் தலைவிதியைச் சொல்லத் தேவையில்லை. இ.போ.சபையைக் கட்டியெழுப்புவது எமக்கு சிரமமான விடயமல்ல. அதற்குத் தேவை மனோநிலை மாற்றம் மாத்திரமேயாகும். அந்த மாற்றம் தற்போது ஏற்பட்டுள்ளதாக இந்த பஸ்களின் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக எமக்குத் தெரிய வருகிறது. டிப்போக்களில் உள்ள பஸ்களின் உதிரிப் பாகங்கள் தனியார் பஸ்களுக்கு திருட்டுத்தனமாக வழங்கப்படும் செயற்பாடுகள் கூட இ.போ. சபையில் இடம்பெற்றதாக எமக்கு இதற்கு முன்னர் செய்திகள் வந்தன. அந்த நிலையும் தற்போது முடிவுக்கு வந்துள்ளதால் இ.போ.சபைக்கு எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

**தாரக விக்ரமசேகர**

**தமிழில் – எம். எஸ். முஸப்பிர்**









## வலம்புரி கவிதா வட்டத்தின் 97ஆவது கவியரங்கம்



தனது 97ஆவது கவியரங்கை கடந்த பௌர்ணமியன்று வலம்புரி கவிதா வட்டம் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடாத்தியது. கவிஞர் இளநெஞ்சன் முர்ஷிதீன் கவியரங்குக்குத் தலைமை வகித்தார். வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வினை நெறிப்படுத்தினார். வரவேற்புரையை நிர்வாகக் குழு உறுப்பினர் மஸீதா அன்சார் வழங்க, நன்றியுரையை ஈழகணேஷ் வழங்கினார். அண்மையில் எம்மைவிட்டும் மறைந்த ஜீவநதி ஆசிரியர் க. பரணீதரனின் தந்தையான கலாநிதி கலாமணி அவர்களுக்கான மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. இளநெஞ்சன் முர்ஷிதீனின் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் எம். பிரேம்ராஜ், பிறைக்கவி முஸம்மில், கிண்ணியா அமீர் அலி, வாசுகி பி. வாசு, லிந்துல ஆர். நவரட்ணம், வாழைத்தோட்டம் எம். வஸீர், எம். ஸ்ரீதரன், இ. கலைநிலா, மினுவன்கொட ஏ. சிவகுமார், அருந்தவம் அருணா, ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், லைலா அக்ஷியா, மஸீதா அன்சார், தாமரைச் செல்வி, திருஞானசம்பந்தன் ஜீவேஸ்கௌதம், சத்தியகுமாரன் அருணன், ரிஸ்மினா ரபீக், கமர்ஜான் பீபி, பாத்திமா நாதியா, ஆர். தங்கமணி, கே. லோகநாதன் ஆகியோர் கவிதை பாடினர். தமிழ்த் தென்றல் அலி அக்பர், திருமதி ஜெயா உதயா, வெளிமடை ஜஹாங்கீர், சு. ஜெகதீஸ்வரன், ஏ. எல். நஸீப், அ. உதயகுமார், ரா. ரேணுகா, எம்.எஸ்.எம்.ராஸிக், அமல் பாண்டி, ஏ. சஜ்ஹா, இ. கவிதா, இ. தமிழ் பிரியன், ஆர்.எஸ்.ரஸ்மியா, மாத்தளைக் கமால் போன்றோர் சபையை அலங்கரித்தனர். (படங்கள் : முஹம்மத் நசார்)




# பன்னிரண்டு வருடங்களின் பின்னர் கிடைத்த நீதி!

## கொட்டக்கெத்தன தொடர் கொலையாளிக்கு மரணதண்டனை

**இரத்தினபுரி, கஹவத்தை என்றவுடனே பலருக்கும் கோரமான படுகொலை சம்பவங்களே நினைவுக்கு வரும். பெண் படுகொலை சம்பவங்கள் பல வருடங்களாகவே தொடராக இடம்பெறுவது இப்பகுதியில் மர்மமாகவே இருந்துவந்தது.**

2008ஆம் ஆண்டு தொடக்கம் இரத்தினபுரி மாவட்டத்தில் கஹவத்தை, கொட்டக்கெத்தன, தம்புலவல, வாரபிட்டிய, ஒபடவத்த மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இடம்பெற்ற மர்ம இரண்டைக் கொலை முழுநாட்டையும் அச்சத்தில் உறைய வைத்தது.

இரண்டொரு நாட்கள் இடைவெளியில் இருவர் இருவராக அதுவும் பெண்கள் கொலைசெய்யப்பட்டனர். அனைத்து கொலைகளும் அந்த பகுதியை மையமாக கொண்டு இடம்பெற்றதுடன் பெண்கள் தனியாக இருக்கும் போதே இவை நடத்தப்பட்டன. பல பெண்கள் கொலைசெய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டிருந்தனர். இதனால் அப்பகுதி பெண்கள் அச்சம் கலந்த வாழ்க்கையையே அனுபவித்தனர். இரவு நேரங்களில் பல குடும்பங்கள் ஒரே வீட்டில் ஒன்றாக உறங்கினர். பொலிஸ் விசாரணையில் நம்பிக்கையிழந்த மக்கள் வீதியில் இறங்கி போராடினர்.

இத்தகையதொரு பின்னணியிலேயே கஹவத்தையில் தாயும் மகளும் படுகொலைசெய்யப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்னவினால் கடந்த வாரம் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் இரத்தினபுரி கஹவத்தை கொட்டக்கெத்தன, பிரதேசத்தில் இடம்பெற்ற பெண் படுகொலை சம்பவத்தில் (DNA) மரபணு சாட்சியங்களூடாக குற்றவாளி அடையாளம் காணப்பட்டு அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டமையால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.



2012ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் திகதி இரவு 10.00 மணிக்கும் அதிகாலை 3.00 மணிக்குமிடையில் கஹவத்தை, கொட்டகெத்தன பிரதேசத்தைச் சேர்ந்த லியனாராச்சிகே பிரேமாவதி (60) அவரது மகளான ஹேவாகமகே புஷ்பகுமாரி (29) ஆகியோர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். 29 வயதான பிரேமாவதி பாலியல் துஷ்பிரயோகத்துக் குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்தில் மரபணு சாட்சியங்கள் ஊடாகவே குற்றவாளி இனம்காணப்பட்டார். அதில் இலங்கை திறந்த பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் ருவன் இலேபெரும முக்கிய இடத்தை பெறுகின்றார்.

இதுதொடர்பில் அவர் கருத்துத்தெரிவிக்கையில், இரத்தினபுரி கஹவத்தை பிரதேசத்தில் பல வருடங்களாகவே பெண்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுவந்தன. சுமார் 21 பெண்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர். 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 60 வயது பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அதன்பின்னர் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அதைபோல் 2012ஆம் ஆண்டு மே மாதமும் ஜுலை மாதமும் இப்பகுதிகளில் இரட்டை படுகொலை சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இதில் 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் இடம்பெற்ற சம்பவத்தில் 29 வயது இளம் பெண்ணொருவரும் அவரது தாயும் கொலை செய்யப்பட்டு அவர்களது உடலுக்கு தீ வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து நால்வர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதில் 29 வயதான பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு அது ஆணொருவருடையது என கண்டறியப்பட்டது. அதன்பின்னர் இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் டி.என்.ஏ பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர். ஆனால் இதில் எவருடைய டி.என்.ஏன் மாதிரிகளும் பெண்ணிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளுடன் ஒத்துபோகவில்லை.

இதனிடையே மேலும் சில பெண்களின் படுகொலைச் சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. எனினும் அவை அனைத்தும் மர்மமாகவே இருந்தன. இதனால் குற்றவாளியை கண்டுபிடிப்பது பொலிஸாருக்கு பெரும் தலையிடியாக விருந்தது. அதனால் இக்கொலைச் சம்பவத்தில் பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரியை ஏனைய கொலை சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரிகளுடன் தொடர்புப்படுத்தி ஆராய ஆரம்பித்தோம்.

அப்போது தான் 2012ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் சாட்சியமாக பெறப்பட்ட மர இலையொன்றிலிருந்த வெற்றிலை உமிழ் நீரை டி.என்.ஏ பரிசோதனைக்காக அனுப்பிவைத்தோம். இதன்போதே ஜுலை மாதம் இடம்பெற்ற கொலை சம்பவத்தில் பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து பெறப்பட்ட டி. என்.ஏ மாதிரியும் வெற்றிலை உமிழ் நீரிலிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரியும் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போனது. அதுமட்டுமின்றி 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் படுகொலை செய்யப்பட்ட 60 வயது பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ மாதிரியும் ஏனைய இரண்டு மாதிரிகளுடனும் ஒத்துப்போனது. சுமார் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற படுகொலை சம்பவங்களுடன் ஒரு நபர் தொடர்புபட்டுள்ளமை டி.என்.ஏ மாதிரிகள் ஊடாக நிரூபமானது. எனினும் அந்த டி.என்.ஏ மாதிரி யாருடையது என்பது பெரும் புதிராகவே இருந்தது. இதுதொடர்பில் நீதிமன்றத்துக்கு முழுமையான அறிக்கை சமர்ப்பித்தோம். அதற்கமைய டி.என். ஏ மாதிரி ஊடாக குற்றவாளியை கண்டுபிடிக்கும் மிக முக்கிய பொறுப்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சூட்சுமமான விசாரணைகளின் மூலம் சந்தேகத்தின் பேரில் 12பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் டி.என்.ஏ மாதிரிகளும் பெறப்பட்டு எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதன்போதே 12 பேரில் ஒருவருடைய டி.என்.ஏ மாதிரி ஏற்கனவே சம்பவம் நடைபெற்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட டி . என்.ஏ மாதிரியுடன் ஒத்துப்போனது. அதற்கமையவே குற்றவாளி இனம்காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

1999ஆம் ஆண்டு இலங்கையில் டி.என்.ஏ பரிசோதனை கொண்டுவரப்பட்டது. எனினும் டி.என்.ஏ பரிசோதனையை பயன்படுத்தி குற்றவாளியொருவரை கண்டுபிடித்தது இதுவே முதல் தடவை என கூறப்படுகின்றது. இலங்கையில் சுமார் 4,500 வழக்குகளில் டி.என்.ஏ பரிசோதனை பயன்படுத்தப்பட்டுள்ளது.

குற்றவாளி தனது பாலியல் தேவைகள் பூர்த்தியானவுடன் அப்பெண்களையும் அவர்களுடன் இருப்பவர்களையும் கொலை செய்துள்ளமை சாட்சியங்கள் ஊடாக உறுதிசெய்யப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்தார். எனினும் இவ்வழக்கில் கொலை செய்யப்பட்டவர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டாரா? என்பது தொடர்பில் நிரூபிப்பதற்கான போதிய சாட்சியங்கள் இல்லாமையால் இக்குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவிப்பதாகவும் கொலைக்குற்றச்சாட்டின் கீழ் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய இவ்வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட “செயின் கில்லர்” எனும் நீல் லக்ஷ்மன் என்பவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி செல்வி லங்கா ஜயரத்ன மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

டி.என்.ஏ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சட்டமாஅதிபர் சார்பில் ஆஜராகி வழக்கு தொடரை நடத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க இவ்வழக்கு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி, மரண தண்டனை தீர்ப்பு எழுதிய எழுதுகோலை சம்பிராதயப்படி நீதிமன்ற ஆசனத்தில் அமர்ந்தவாறே உடைத்தார்.

147 பக்கங்கள் கொண்ட இந்த இரட்டை கொலைகளின் தீர்ப்பு சுமார் இரண்டு மணி நேரம் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வசந்தா அருள்ரட்ணம்

# பெங்கொக் சர்வதேச மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சியில் இலங்கையர்களும் பங்கேற்பு




*(அஜ்வாத் பாஸி)*

*தாய்லாந்தின் தலைநகர் பெங்கொக்கில் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமான சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியில் உலகிலுள்ள முன்னணி நாடுகளின் மாணிக்க வியாபாரிகள் உட்பட இலங்கையைச் சேர்ந்த முன்னணி வர்த்தகர்களும் கலந்து கொண்டுள்ளனர்.*



*தலைநகர் பெங்கொக்கின் 'Queen Sirikit National Convention Center' மண்டபத்தில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பல நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகள் தங்களது மாணிக்க கற்களை காட்சிப் படுத்தியிருந்தனர். இலங்கையிலிருந்தும் முன்னணி மாணிக்க வியாபாரிகள், வர்த்தகர்கள் உட்பட சுமார் 800க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதோடு தங்களது பெறுமதியான மாணிக்க கற்களையும் சந்தையில் விற்பனைக்காக காட்சிப்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.*

*இக்கண்காட்சியில் இரத்தினபுரி, பெல்மதுளை, பேருவளை, காலி, கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரிகள் கலந்துகொண்டனர். அதிலும் விசேடமாக தென்னிலங்கையின் பேருவளை, சீனன்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் மாணிக்க வியாபாரிகள் சுமார் 80க்கும் மேற்பட்டோர் இக்கண்காட்சியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.*


CAR CARRIER FOR HIRE



Colombo City Limit:
Rs. 7,850.00
Outside City Limit:
Rs 120.00 Per Km

The Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha,
Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 210)
Web: www.aaceylon.lk

**கொழும்பில் அமைந்துள்ள பிரதான தனியார் நிறுவனமொன்றில் சேவைக்காக**

**துப்புரவேற்பாட்டுச் சேவை தொழிலாளர்கள் தேவை**

✶ சிறந்த ஆரோக்கிய நிலையில் இருத்தல் வேண்டும்.

✶ 50 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

✶ கொழும்பு 14, 15 மற்றும் அதற்கு அருகிலுள்ள பிரதேசத்தவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு விசாரணைகள்:**
**சிரேஷ்ட நிர்வாக அதிகாரி**
**தொலைபேசி - 0763911051**
**இல. 833, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-14.**



# நிலையான வருமானமில்லாத உங்களுக்கு, உங்கள் வருமானத்தை நிர்வகித்துக் கொள்வதற்கான வழி

### தொழில்முனைவோருக்கான நிதித் திட்டமிடல் மற்றும் செலவு திட்டமிடலுக்கான பரந்த வழிகாட்டல்

தொழில்முனைவோர் பெரும்பாலும் சவால்கள் நிறைந்த நிதிப் பயணத்தில், உறுதியற்ற மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கக்கூடும். Mani Talks Money என்பதன் வடிவமைப்பாளர் மனோஷ் குலசேன, நிலையான வருமானமில்லாத தொழில்முனைவோருக்காக வருமானத்தை நிர்வகித்துக் கொள்வது தொடர்பில் பெறுமதியான வழிகாட்டலை அண்மையில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் GOODCENTS நிகழ்ச்சியில் பகிர்ந்து கொண்டார். நிதி உறுதித்தன்மைகளுக்கு முகங்கொடுக்கும் தொழில்முனைவோருக்கு பரந்த வழிகாட்டலை வழங்கி வியாபார திட்டமிடல் முதல் சுகாதார காப்புறுதியை பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் போன்ற பெறுமதியான தகவல்கள் இந்த கலந்துரையாடலில் உள்ளடங்கியிருந்தது.

இலங்கையில் சாதாரணமாக வியாபாரத் திட்டமொன்றை பயன்படுத்துவது வங்கியிலிருந்து கடன் பெற்றுக் கொள்வதற்கு, அல்லாவிடின், முதலீட்டாளர் ஒருவரை தேடிக் கொள்வதற்காகும். ஆனாலும், வியாபாரத்தினுள் காணப்படும் நிதித் திட்டமிடல் மிகவும் முக்கியமானது, எளிமையாக குறிப்பிடுவதானால், நாம் வியாபாரத்தை முன்னெடுத்து, இலாபமீட்டு கஷ்டங்களுக்கு மத்தியில் கற்றுக் கொள்வதை விட வியாபார திட்டமொன்றினூடாக வியாபாரத்தின் வெற்றித் தன்மை தோல்வியை அளவிட முடியுமாயின் அது மிகவும் முக்கியமானதாகும். தற்போதைய பொருளாதார சூழலுக்கமைய தொழில்முனைவோருக்கு தவறு ஏற்படுவதற்கு காணப்படும் சந்தர்ப்பம் மிகவும் அதிகமாகும். அதனால், வியாபாரமொன்றை முன்னெடுப்பதற்கு முன்னர் எமக்கு காணப்படும் திட்டங்களை நடைமுறை சாத்தியம் வாய்ந்ததா என்பதைப் பற்றி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வெற்றிகரமான வியாபாரமொன்றை கட்டியெழுப்புவது மற்றும் நிர்வகிப்பதற்கு வெவ்வேறு நிதிப் பிரிவுகள் பற்றி நன்கு கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். வருமானம், செலவு, நிரந்தர செலவு, வரவு செலவு மற்றும் விலைமதிப்பீடுக் காரணிகள் தொடர்பில் தொழில்முனைவோர் விசேட கவனம் செலுத்த வேண்டும். நிதி நிலைப்பாடு தொடர்பில் தெளிவாக அறிந்திருப்பது, தரவுகளின் அடிப்படையிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் திறனை ஏற்படுத்திக் கொள்வதற்காக பரந்த வரவுசெலவுத் திட்டமொன்றை நிறுவுவது மிகவும் முக்கியமானதாகும்.

செலவைப் பற்றி அறிந்திருப்பது அடிப்படையானது என்பதுடன் தொழில்முனைவோர் அவற்றை நிலையான மற்றும் தற்காலிக செலவுகள் என வகைப்படுத்த வேண்டும். இந்த பகுத்தறிவினூடாக தொழில்முனைவோருக்கு தமது வரவு செலவை நிர்வகித்துக் கொள்வதற்கு, நிதி ஒழுக்கத்தை கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பளிக்கும். செலவு சொத்துகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் சமநிலையை பேணுவது மற்றும் பயனுள்ள வகையில் செலவை நிர்வகித்துக் கொள்வதனூடாக தொழில்முனைவோருக்கு தமது பொருளாதார இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளவும் வெற்றியை நெருங்கக்கூடிய வகையிலும் செயற்பட வேண்டும்.

### வரவு செலவை தயார்ப்படுத்துவதற்கான வழி

வரவு செலவை தயாரிப்பதற்கு மேலதிகமாக, தொழில்முனைவோருக்கு கடன் மற்றும் சொத்துகளை பெற்றுக் கொள்வது பற்றி அவதானமாக இருக்க வேண்டும். கடனைப் பெற்றுக் கொள்வது மிகவும் எளிமையானதாக இருந்தாலும், நிதி வெற்றித்தன்மை என்பது, சொத்துக்களின் இருப்பில் மாத்திரம் தீர்மானிக்கப்படாது என்பதை இனங்கண்டு கொள்வது அத்தியாவசியமானதாகும். கடன் ஒன்றை பெற்றுக் கொள்ள சிந்திக்கும் போது, முதலீடு செய்வதற்கு மற்றும் இலாபமீட்டுவதற்கு காணப்படும் வாய்ப்புகளை ஆராய்வது மிகவும் முக்கியமானதாகும். கடனைப் பெற்றுக் கொள்வது செலவாக மட்டுமன்றி, முதலீடாக காண்பது நிலைபேறான நிதி வளர்ச்சிக்கு உங்களுக்கு வழிகாட்டுவதாக அமைந்திருக்கும்.

நிதித் திட்டமிடலில் வெற்றிகரத் தன்மை தங்கியிருப்பது என்பது சமநிலையை பேணுவது என்பதிலாகும். எதிர்கால இலாபகரத்தன்மைக்கு கடன் பங்களிப்புச் செய்யும் என்பதை உறுதி செய்து, சிந்தித்து முதலீடு செய்யும் ஆற்றலை தொழில்முனைவோர் எப்போதும் வரவேற்க வேண்டும். நிதித் தீர்மானங்கள் மற்றும் வளங்கள் நிர்வகிப்பை முறையாக மேற்கொள்வதனூடாக உங்களின் தொழில்முயற்சிப் பயணத்தை நிலைபேறான வெற்றியை நோக்கி கொண்டு செல்லும் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும்.



மனோஷ் குலசேன தனுஜா ஜயவர்தன

### தொழில்முனைவோருக்கான ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் திடீர் நிதியமொன்றுக்கான அவசியம்

தொழில்முனைவோருக்காக உறுதியான ஓய்வூதிய கொடுப்பனவுத் திட்டமொன்றை அல்லது திடீர் நிதியமொன்றை நிறுவுவது மிகவும் முக்கியமானதாகும். வியாபாரங்களில் காணப்படும் எதிர்பாராத தன்மை நிதித் தயார் நிலையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டமொன்றினூடாக தொழில்முனைவோருக்கு வியாபாரங்களிலிருந்து எழும் உறுதியற்ற நிலைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன் பாதுகாப்பான ஓய்வூதியமொன்றை உறுதி செய்து கொள்வதற்கும் பங்களிப்பு வழங்கும். அது வியாபாரத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிதி உறுதித் தன்மையை வழங்கி பாதுகாப்பான வலையொன்றாக செயற்படுவதுடன், அதற்கு சமமான, திடீர் நிதி அவசியம், பொருளாதார பின்னடைவுகள் அல்லது எதிர்பாராத செலவுகள் போன்ற எதிர்பாராத நிலைகளுக்கு எதிராக தடையாக செயற்படும். இந்த நிதி வசதி தொழில்முனைவோருக்கு தெளிவான மனநிலையுடன் செயலாற்ற வாய்ப்பை வழங்குவது மட்டுமன்றி, நீண்ட கால நிதிப் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புத்தாக்கம் மற்றும் விருத்தி தொடர்பில் கவனம் செலுத்தவும் அவர்களுக்கு வாய்ப்பளித்து, அவர்களின் தொழில்சார் பயணத்தில் சளைக்காமல் முன்னோக்கி செல்வதற்கு வாய்ப்பை வழங்கும்.

GOOD CENTS by Union Assurance
இலங்கையர்கள் மத்தியில் நிதிசார் நலனை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்

### தொழில்முனைவோருக்கான சுகாதார காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம்

சுகாதார காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதி தொழில்முனைவோருக்கு மற்றும் சுதந்திர பணியாளர்களுக்கு மிகவும் முக்கியமானது என்பதுடன், இந்த எதிர்பாராத நிலைகளில், அது மிகவும் பாதுகாப்பான வலையாக செயற்படும். பாரம்பரியமாக சேவை வழங்குபவர் அனுசரணை மற்றும் அனுகூலங்கள் இல்லாதவிடத்து, நோய் நிலை ஏற்படுகையில், விபத்து மற்றும் எதிர்பாராத மரணத்தில் கூட உயர் நிதி அவதானமான சூழ்நிலைக்கு முகங்கொடுக்க தொழில்முனைவோருக்கு நேரிடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சுகாதார காப்புறுதி ஆரோக்கியமான சுகாதார சிகிச்சைகளுக்கு பிரவேசத்தை உறுதி செய்து, சுகாதார காப்புறுதி ஆயுள் காப்புறுதி தொழில்முனைவோரின் நிதி உறுதித்தன்மையை நிலைகுலையச் செய்யக்கூடிய அதிக சுகாதார சேவைகளுக்கான செலவுகளிலிருந்து அவர்களை பாதுகாக்கும். அத்துடன், ஆயுள் காப்புறுதியினூடாக தொழில்முனைவோரின் குடும்பத்துக்கு அல்லது தங்கியிருப்போருக்கு அவர்களின் மரணத்தின் போது அல்லது எதிர்பாராத துரதிர்ஷ்டவசமான நிலையின் போது அத்தியாவசியமான நிதிசார் வசதியை வழங்குவதுடன், சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் நிதி ஆதாரமாக இருப்பதுடன், ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்யும். இந்த காப்புறுதித் திட்டங்கள் அத்தியாவசிய பாதுகாப்பு மூலமான செயற்படுவதுடன், சுயாதீன தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் உறுதியற்றதன்மையை தவிர்த்து நலன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்யும்.

இறுதியாக, வருமானமீட்டுவது மற்றும் பெற்றுக் கொண்ட நிதியை பயனுள்ள வகையில் நிர்வகிப்பது என்பதற்கிடையே வேறுபாட்டை இனங்காண்பது நபர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். இது நிதி முகாமைத்துவத்தில் விசேட மற்றும் முக்கியமான பிரிவாகும். நிலைபேறான வெற்றிகரமான செயற்பாடு மற்றும் நீண்ட கால நிதி உறுதியான நிலையை உறுதி செய்வதற்கு விசேடமாக தொழில்முனைவோர் இந்த நிதிக் காரணிகளில் கவனத்தை செலுத்த வேண்டும்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்



1924ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி 25 ரூபாய் பெறுமதியான முத்திரையும், முதல் நாள் தபாலுறையும் வெளியீடு.





# இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையின் நூற்றாண்டு விழா!

**சில தினங்களுக்கு முன்னர் ஒரு விசித்திரமான சம்பவத்தைப் பற்றி அறியக் கிடைத்தது. களுத்துறை மாவட்டத்தின் முதல் முஸ்லிம் பெண்கள் பாடசாலையான மருதானை பேருவளையில் அமைந்துள்ள அல்பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பெண்கள் பாடசாலைக்கு நூறு வருடங்கள் நிறைவடைந்ததை (1924 – 2024) முன்னிட்டு விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் தபாலுறை வெளியிடப்பட்டதே அந்தச் சம்பவமாகும்.**

இந்த சிறப்புமிக்க முக்கிய நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் இடம்பெற்றது. “100 வருடங்கள் நிறைவடைந்த இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கற்கைநெறிகளை ஆரம்பிக்க வேண்டும்” என இந்தச் சந்தர்ப்பத்தின்போது அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கூறினார். இலங்கையின் வரலாற்றில் முதல் முஸ்லிம் குடியேற்றமான முதலாவது முஸ்லிம்களின் பள்ளிவாசல் அமைந்துள்ள வரலாற்று நகரமான பேருவளையில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நினைவு முத்திரை வெளியிடப்படுவது மிகவும் முக்கியமிக்க சந்தர்ப்பமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நாட்டின் பாராளுமன்ற சபாநாயகர் பொறுப்பை வகித்த இரண்டு முஸ்லிம் சபாநாயகர்களை நாம் சந்தித்துள்ளோம். பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மாக்காரின் தந்தை பக்கீர் மாக்கர் மற்றும் எம். எச். முகம்மது ஆகியோரே அவர்கள் இருவராவார். இந்த சபாநாயகர்கள் மிக உயர்ந்த பாராளுமன்ற பாரம்பரியத்தை உருவாக்கப் பாடுபட்டவர்களாவார். சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி என அனைத்துப் பிரிவினரையும் வெறுப்பின்றி சமத்துவ அடிப்படையில் ஒரே நாட்டின் பிள்ளைகள் என்ற சிந்தனைப் போக்கை அமைப்பதற்கு இம்தியாஸ் பக்கீர் மாக்கார் மாபெரும் பணிகளை ஆற்றியுள்ளார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உலகை மாற்றும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி என நெல்சன் மண்டேலா ஒருமுறை கூறினார். நூறு வருடங்களை நிறைவு செய்யும் இந்தப் பாடசாலை, அதன் வரலாறு நெடுகிலும் எதிர்கொண்ட முக்கிய நெருக்கடிகளில் ஒன்று ஆசிரியர்கள் மற்றும் ஏனைய வசதிகளின் பற்றாக்குறையாகும். பல கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்களின் பற்றாக்குறை உள்ளிட்ட நிலைமைகளினால் உயர் தரத்தில் கலைப் பிரிவிலேயே தமது கல்வியைத் தொடர்ந்தனர். அதன்பிரகாரம், கலைப் பட்டதாரிகளுக்குப் பொருத்தமான தொழில் சந்தை இருக்கவில்லை. இருக்கும் வேலைவாய்ப்புக்களுக்குப் பொருத்தமான கற்றவர்கள் உருவாகவில்லை. தாம் பெற்ற கல்வியால் வாழ்வாதாரங்களை உருவாக்கிக் கொள்ள முடியாத அனேக இளைஞர்கள், தமது பெற்றோரையும், சமூக அமைப்பையும், நாட்டையும் வெறுக்கும் கூட்டமாக மாறினர். அந்த வெறுப்பின் வெளிப்பாடே பல வன்முறைச் செயல்களுக்கு அவர்களைத் தூண்டியது. கல்வி அறிவற்ற சமூகத்தில் வெறுப்பை பரப்புவது மிகவும் எளிதானதாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் மூன்று தசாப்தங்களுக்கும் அதிக காலம் அவ்வாறான யுத்த சூழலின் அனுபவங்கள் தற்போதைய சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் உள்ளது. இந்நிலைமை உருவாவதற்கு நிலவிய கல்வி முறையே பிரதான காரணமாகும் என முன்னாள் கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் நம்புகிறேன்.

இந்த நிலைமைகள் தொடர்பில் புரிந்துணர்வுடன் நான் கல்வி அமைச்சராக இருந்த போது பல சவால்களுக்கு மத்தியில் உயர்தரத்திற்கான தொழில்நுட்ப பாடத்திட்டத்தை இலங்கையில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தேன். அதற்காக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வசதிகளுடன் கூடிய ஆயிரம் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் தற்போது 13 தொழில்நுட்ப பீடங்கள் தற்போதுள்ளன. தொழில்நுட்பம் தற்போது மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான உயர்கல்வி துறையாக உள்ளது. அதனபடிப்படையில் தற்போது

**இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் பாடசாலைக்கும் தொழில்நுட்ப பாடப் பிரிவை வழங்குவோம் என பேருவளை மருதானை அல்பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் போது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவிப்பு**

உயர்தரப் பிரிவில் கலை மற்றும் வணிகப் பாடப் பிரிவுகளை மட்டும் நடத்தி வரும் இவ்வாறான பாடசாலைகளில் அடுத்த ஆண்டு தொழில்நுட்பப் பாடப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான பங்களிப்பை நாம் வழங்கவுள்ளோம். அதற்குத் தேவையான நிதியையும், ஆசிரியர்களையும் தேடுவதற்காகப் பெற்றோர்களினதும் பங்களிப்பு எமக்கு கிடைக்கும் என்று நாம் நம்புகிறேன்.

இந்த நிகழ்வின் போது உரையாற்றிய அமைச்சர், பல சாதகமான நம்பிக்கைகளை வெளிப்படுத்தினார்.

“இந்தப் பாடசாலையானது வரலாற்று மதிப்புமிக்க ஒரு பாடசாலையாகும். அதேபோன்று நீங்கள் வந்திருக்கும் இந்தப் பிரதேசம் எமது நாட்டின் வரலாற்று ரீதியில் மிகவும் முக்கியமிக்க ஒரு பிரதேசமுமாகும். இந்த கிராமம் தொடர்பில் வெளியிடப்படும் இரண்டாவது முத்திரை இதுவாகும். இலங்கையின் முதல் அரேபிய குடியிருப்பு என்ற வகையில் முதல் முத்திரை வெளியிடப்பட்டது. இன்று இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக அல்ஃபாஸியத்துல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை உள்ளது. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து இப்பாடசாலையில் கூட்டமொன்றை நடத்தியதாக எனக்கு ஞாபகம். ஒரு மத்ரசாவாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஒரு அரச பாடசாலையாக ஆக்கப்பட்டதன் பின்னர் முதலாவது கட்டடத்தைத் திறந்து வைக்க விஜயம் செய்தது அவரது பாட்டனார் என்பதை நான் அவ்விடத்தில் நினைவு கூர்ந்தேன். அந்நேரம் அவர் களுத்துறை அரசாங்க அதிபராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பத்திற்கும் பேருவளைக்கு இடையில் பெரிய தொடர்புள்ளது. இந்தப் பாடசாலையை ஆரம்பிக்கும் போது காணப்பட்ட சவால்களைப் பற்றி எனது தந்தையின் தாய் என்னிடம் கூறியது எனக்கு நினைவில் உள்ளது. பாடசாலையை ஆரம்பிக்க முன்னின்றவர்களின் வீடுகளுக்கு கற்கள் வீசப்பட்டதாக அவர் கூறினார். பெண்கள் கல்வி கற்பது என்பது அந்தக் காலத்தில் நினைத்தும் பார்க்க முடியாத ஒன்றாகும். அதற்கு



பல்வேறு அச்சங்கள் காரணமாக இருந்தன. அது முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரம் இருந்த மனோநிலை அல்ல. அது பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலும், ஹிந்து தமிழ் மக்களிடத்திலும் அந்தப் பயம் இருந்தது” என இந்நிகழ்வில் கலந்து கொண்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.



இன்று புதிய கட்டிடங்களுடன் காணப்படும் இந்தப் பாடசாலை இதுவரை பயணித்துள்ள பாதையைப் பார்த்தால், பலரது விடாப்பிடியான துணிச்சலாலும், முயற்சியாலும் கிடைத்த பலன் என்று சொல்லலாம். இப்பிரதேசத்தில் காலனித்துவ காலத்தில் உருவான இளைஞர் இயக்கத்தின் முயற்சி இதற்காக கிடைத்துள்ளது. அவ்வேளையில் பேருவளை மக்கொன பிரதேசத்திற்கு அருகாமையில் ஆரம்பப் பாடசாலையொன்று இருந்ததுடன், அந்தப் பாடசாலையைப் பார்த்த மருதானைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் வர்த்தகர்கள் ஒன்று கூடி இந்தப் பிரதேசத்திலும் பாடசாலை ஒன்றை நடாத்திச் செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து கலந்துரையாடினர். அதனடிப்படையில் அந்த இளம் தலைவர்கள் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு அயராது உழைத்தார்கள். இதற்காக முன்னின்று செயற்பட்ட இளம் வர்த்தகர்களுள் எஸ்.எல்.எச். முகம்மது, ஏ. எஸ். எல். மரிக்கார், ஏ.எல். எம். பி. முகம்மது, ஓ. எல். எம். வதூத், எம். எஸ். ஏ. சமது, பி. எல். எம். ஜுனைட், எம். எஸ். எம். செய்னுல் ஆப்தீன், எம். எஸ். எம். ஷெரீப் போன்றோர் சிறப்பான பணியாற்றினார்.

பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்காகச் சென்ற அவர்களின் பாதை மலர்களால் தூவப்பட்டிருக்கவில்லை. அப்பாதை பல்வேறு தடைகள் மற்றும் முற்கள் நிறைந்த பாதையாக அவர்கள் முன்னால் இருந்தது. அதனடிப்படையில் 1924ம் ஆண்டு பாடசாலையை ஆரம்பிக்க நேர்ந்தது, ஓலையால் வேயப்பட்ட மண்டபம் ஒன்றிலாகும். 35 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் முதலாவது அதிபராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா நியமிக்கப்பட்டிருந்ததோடு, திருமதி செல்லமுத்து உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு ஓலையால் வேயப்பட்ட மண்டபத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பாடசாலைக்கு நிலையான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு அவர்களால் 1929ம் ஆண்டு முடிந்தது. அந்தக் கட்டடத்தில் மாணவர் விடுதி, அதிபர் அலுவலகம் மற்றும் வகுப்பறை என்பன அமைக்கப்பட்டிருந்தன. அந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக விஜயம் செய்தது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டனான சிரில் லெனாட் விக்கிரமசிங்கவாகும். அக்காலத்தில் சீ. சீ. விக்கிரமசிங்க என பிரபலமாகியிருந்த அவர், இலங்கையில் முதலாவது சிங்கள காணி ஆணையாளராகவும், முதலாவது சிங்கள அரசாங்க அதிபராகவும் இருந்தவராவார்.

எம்மோடு இணைந்து கருத்து தெரிவித்த பாடசாலையின் தற்போதைய அதிபராக முஹம்மட் மூசின் மஸ்னவியா இவ்வாறு கூறினார். “எமது பாடசாலை களுத்துறை மாவட்டத்தின் பேருவளை கோட்டத்தில் அமைந்துள்ள பிரபலமிக்க 1C தர தமிழ் மொழி மூலப் பாடசாலையாகும். நான் இந்தப் பாடசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றது 2016ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதியாகும். நான் அதிபருக்கான பரீட்சையில் சித்தியடைந்து எனக்கு மூன்றாம் தர அதிபருக்கான நியமனம் கிடைத்தது. ஆசிரியர் சேவையில் இளம் வயது அதிபராக நியமனம் பெற்றேன். அப்போது எனக்கு வயது 31. நாம் பொறுப்பேற்றபோது நான் வெற்றிகொள்ள வேண்டிய சவால்கள் ஏராளமிருந்தன. எனினும் நான் பின்வாங்கவில்லை. அந்தச் சவால்களை ஒன்றன் பின் ஒன்றாக வெற்றி கொண்டேன். முதலில் மாணவர்களின் கல்வியிலேயே எனது கவனம் சென்றது. நான் வந்த நான்கு மாதங்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்றது. அதன் பெறுபேற்றுக்கு அமைய நூற்றுக்கு 63 வீதத்தை பெற்றிருப்பதாக நான் வலய கல்வி அலுவலகத்திலிருந்து அறிந்து கொண்டேன். அதன் போது இவ்வாறு குறைந்துள்ள கல்விச் சத வீதத்தை எப்படியாவது மேலே கொண்டு வருவேன் என சவால் விட்டேன். நான் பாடசாலைக்கு வந்து மாணவர்களிடம் பேசினேன். “நாம் இந்த வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற பாடசாலையாக ஆக வேண்டும்” எனக் கூறினேன். மாணவர்களும் என்னோடு இணங்கினார்கள். காரணம் நான் முன்னர் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களையே கற்பித்தேன். அதனடிப்படையில் நான் குறைந்த மட்டத்தில் இருந்த மாணவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களுக்கான விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுத்தேன்.

முதலில் நாம் ஆங்கிலம் கற்பிக்க ஆரம்பித்தோம். அதனிடையே ஏனைய பாடங்கள் தொடர்பில் மாணவர்களிடத்தில் காணப்படும் அறிவினை அறிந்து கொள்ள என்னால் முடிந்தது. அதனடிப்படையில் ஆசிரியர்களும் கலந்துரையாடி அவர்களுக்கும் இலக்கை வழங்கினேன். ஆசிரியர்களும், “மெடம் நாம் அதற்கு தயார்” என்றவாறு என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றினார்கள். பாடசாலைக்கு வராத மாணவர்களைத் தேடி வீடுகளை நோக்கிச் சென்றோம். அதனடிப்படையில் “கெபகரு குருபவதா” என்ற எண்ணக்கருவின் கீழ் குறைந்த புள்ளி மட்டத்தில் இருந்த மாணவர்களை இருவர் இருவராக ஒவ்வொரு ஆசிரியர்களிடத்திலும் ஒப்படைத்தேன். அதனடிப்படையில் பரீட்சை எழுதிய 40 மாணவர்களுள் 35 மாணவர்கள் உயர் மட்டத்தில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்கள். 2018ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் அனைத்து தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கிடையில் உயர் பெறுபேற்றைப் பெற்ற பாடசாலையாக முதலிடத்தைப் பெறுவதற்கு எம்மால் முடிந்தது. அதேபோன்று கல்விக் கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும், கல்வி வலய மட்டத்தில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுக் கொள்ள எம்மால் முடிந்தது. கடந்த ஆறு வருடங்களினுள் நாம் பாரிய அடைவுகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். எமக்குள்ள பெரும் பிரச்சினை ஆசிரியர் பற்றாக்குறையாகும். 1115 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் இருப்பது 27 ஆசிரியர்கள் மாத்திரமேயாகும். 28 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை எமக்குள்ளது.

நாம் இந்தப் பயணத்தை முன்னெடுத்துச் செல்வது தொண்டர் ஆசிரியர்களை இணைத்துக் கொண்டாகும். அத்துடன் எனக்கு தங்கி இருப்பதற்கு அதிபருக்கான உத்தியோகபூர்வ இல்லம் இல்லை. அதனை நிர்மாணிப்பதற்கான பணிகள் சில காலங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்பணிகளை இதுவரை நிறைவு செய்ய முடியாது போயுள்ளது. அதேபோன்று பாடசாலைக் கட்டிடங்களின் ஜன்னல்கள் கழன்று விழுகின்றன. அவை மோசமான நிலையில் உள்ளன.

பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக உள்ளதால் பல மாணவர்கள் பாடசாலைக்கு வர ஆரம்பித்துள்ளனர். சில வகுப்புகளில் ஐம்பது மாணவர்கள் வரை உள்ளனர். வகுப்புக்களின் அளவை அதிகரிக்க வேண்டுமானால் இன்னும் வகுப்பறைக் கட்டிடங்கள் தேவை. அதற்குத் தேவையான நிலத்தை ஒரு தொழிலதிபர் நன்கொடையாக வழங்கியுள்ளார். அதில் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் கூட நாம் திட்டமிட்டோம். இந்த அனைத்துப் பணிகளுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்களும் என்னுடன் ஒரே குடும்பத்தைப் போலச் செயல்படுகிறார்கள். இந்தச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பு எனக்கு கிடைக்கும் என்ற பெரும் நம்பிக்கை எனக்குள் இருக்கின்றது.

தற்போதைய அதிபர் மற்றும் நிர்வாகக் குழுவின் அணுகுமுறைக்கு ஏற்ப பாடசாலையின் நோக்கு மற்றும் குறிக்கோள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், ஒரே மாதிரியான ஆளுமைகளைக் கொண்ட எதிர்கால சந்ததியை உருவாக்குவதே அதன் நோக்கமாகும் என்பதோடு, அதன் குறிக்கோளாக இருப்பது அறிவு, திறன்கள், சிறந்த அணுகுமுறைகளினால் நிறைந்த சமய கண்ணோட்டத்துடன் கூடிய, அத்துடன் கணினி அறிவு உள்ளிட்ட பிரதானமான மூன்று மொழிகளிலும் ஆற்றலைக் கொண்ட பெண்கள் குழுவினை நாட்டிற்கு வழங்குவதேயாகும்.

ரசிக கொட்டுதுரகே
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்





எதிர்வரும் ரமழான் மாதத்தை முன்னிட்டு தெஹிவளை சரணங்கர மைதானத்தில் நேற்றுக் காலை கோஷா அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவி நஃதியா யாக்கூப் தலைமையில் பத்தாவது ஆண்டாக இடம் பெற்ற களியாட்ட மற்றும் விற்பனைக் கூடங்கள் கண்காட்சியில் பிரதம அதிதிகளாக புரவலர் ஹாசிம் உமர், திருமதி. மரியம் ஹாஸிம் உமர் ஆகியோரும் மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், ஐ.ரி.என். தொலைக்காட்சியின் செய்தி உதவிப் பணிப்பாளர் நளிந்த பெரேரா உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகள்







அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியாகவும், நீதவான் நீதிமன்ற நீதிபதியுமாக A,C. றிஸ்வான் கடந்த 2024.01.01 கடமையேற்றதன் பின்பு அக்கரைப்பற்று நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருப்பெற்றுள்ளன.

நீதிமன்றின் நீண்ட காலமாக சேதமடைந்திருந்த வாகனத் தரிப்பிடம் சுமார் பத்து இலட்சம் ரூபா செலவில், புனரமைக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற, திறந்த நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கான, புதிய திரைச்சீலை வசதிகள், புதிய சிறைக்கூண்டு போன்றவையும், இலட்சக் கணக்கான ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று நீதிமன்ற நுழைவாயிலில், இதுகாறும் இருந்து வந்த பெயர்ப் பலகை அகற்றப்பட்டு, புத்தம் புதிய பெயர்ப் பலகை பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி வசதிகளை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, திருக்கோவில் பிரதேச சபைகள் ஒதுக்கியிருந்தன.அக்கரைப்பற்று நீதிமன்ற வளாகத்தில், புதிதாக அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம் அக்கரைப்பற்று, மாவட்ட, நீதவான் நீதிமன்ற நீதிபதியான றிஸ்வானால் திறந்து வைக்கப்பட்ட அதேவேளையில், மேலதிக மாவட்ட நீதிபதியும், கௌரவ நீதிபதியுமாகிய திருமதி தெசீபா ரஜீவன் புதிய பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்து வைத்தார். அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்க அங்கத்தவர்கள்,கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் றயிசுல் ஹாதி, நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# ஜனாதிபதிக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பேட்டி

'நாட்டை இக்கட்டான சூழலில் இருந்து மீட்பதற்கு முன்வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்' என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், ஆளும் கட்சியின் முதற்கோலாசானுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**கே: நாட்டைக் கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதிக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில்: நமது நாட்டின் வரலாற்றை எடுத்து நோக்கினால் இங்கு காணப்பட்ட சில தேசியப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதிகளின் நியமனங்கள் இடம்பெற்றுள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் காலத்திலிருந்து இதுதான் நடைபெற்று வந்துள்ளது. சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவை இருந்தபோதும், அவரால் அதனை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், சர்வதேச அளவில் அவருக்கு எவ்வளவு ஆதரவு கிடைத்தாலும் அதைச் செய்வது கடினமாக இருந்தது. இதனையடுத்து மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். நல்லதோ கெட்டதோ போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர்.

அவர் போரை முடித்தார். யுத்தம் முடிவடைந்த பின்னர், யுத்தம் பற்றிப் பேசாமல் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறியே மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். அதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் 2015 வரைதான் அவரால் செயற்பட முடிந்தது. இந்த அமைப்பில் தவறு இருப்பதாக மக்கள் கூறினர். எனவே இந்த முறையை மாற்றி நல்லாட்சியை உருவாக்க மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று மக்கள் அதற்கு வாக்களித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பில் மக்கள் அதிகம் பேசிக் கொண்டிருந்த நிலையில், அறுபத்தொன்பது இலட்சம் மக்கள் வாக்களித்து கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர்.

இன்று நாட்டில் நிலவும் மிகப்பெரிய பிரச்சினை பொருளாதார நெருக்கடி என்பது அனைவரும் அறிந்ததே. இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளினால் நாட்டின் நெருங்கடி நீங்கி வருகின்றது. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடியில் இருந்த நிலைமை தற்போது படிப்படியாக நீங்கி வருகின்றது.

**கே: இதன் அடிப்படையில் பார்க்கும்போது இந்த நேரத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப வேறு யாரும் இல்லை என்று கூற வருகின்றீர்களா?**

பதில்: அதுதான் உண்மை, அதனால், அடுத்த தேர்தலை ஓராண்டுக்கு தள்ளி வைத்து, இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்டுக் கொண்டுவருவதற்கு அவருக்கு மீண்டும் வர காலஅவகாசம் வழங்க வேண்டும் என்ற கருத்தும் பொதுமக்களிடையே எழுந்துள்ளது. ஆனால் அரசியலமைப்பை மாற்ற முடியாத காரணத்தினால், தற்போதைய ஜனாதிபதிக்கு மேலும் ஒரு காலஅவகாசம் வழங்கப்பட வேண்டுமென நாங்கள் பரிந்துரைக்கிறோம். இது தொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களை எடுத்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அநுரகுமார திஸாநாயக்க 'திருடர் திருடர்' எனப் பேசிக்கொண்டிருக்கின்றாரே தவிர பொருளாதார மறுசீரமைப்புக்களை கொண்டு வரமாட்டார். ஆனால் அதைவிட தகுதியானவர் யாராவது இருந்தால் எனக்குக் காட்டுங்கள். இதற்போதைய ஜனாதிபதி நாட்டுக்காகப் பல விடயங்களைச் செய்துள்ள போதும் இந்தப் பணிகள் அனைத்தும் பூரணமாக முடிவுக்கு வரவில்லை. இதற்கு நாம் அவகாசம் வழங்க வேண்டும்.



> 'திருடர் திருடர்' என அநுரகுமார திஸாநாயக்க பேசிக்கொண்டிருக்கின்றாரே தவிர பொருளாதார மறுசீரமைப்புக்களை கொண்டு வரமாட்டார்!

**கே: இது தேர்தல் ஆண்டு. புதியதொரு ஜனாதிபதியை நியமித்து பரிசோதனை செய்து பார்க்க வேண்டிய சூழல்நிலையில் நாம் இருக்கின்றோமா?**

பதில்: இது அரசியல் நிலைமைகளைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கான சந்தர்ப்பம் அல்ல. நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று கூறுவதைப் பாருங்கள். அநுரகுமார திஸாநாயக்க என்ன பேசுகிறார் என்பதைப் பாருங்கள். அவர்களைப் பின்பற்றுபவர்கள் என்ன செய்கிறார்கள்? ஆனால் இந்த பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமும் அரசியல் கலாசார வேலைத் திட்டமும் நாட்டிற்கு தேவை என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். எந்த அரசியல்வாதி வந்தாலும், சிஸ்டம் இப்படி இருந்தால் இந்த நிலையில் இருந்து மீள முடியாது. இந்த முறையை மாற்றுவதற்கு தேவையான அனைத்துப் பணிகளையும் ஜனாதிபதி ஏற்கனவே செய்துள்ளார். அந்த வித்தியாசத்தை மக்கள் அனுபவிப்பார்கள்.

**கே: புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிப்பது ஆபத்தானதாக அமையுமா?**

பதில்: நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் தற்போதைய ஜனாதிபதிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென கட்சி என்ற வகையில் எனது கருத்தைத் தெரிவித்தேன்.

**கே: நீங்கள் பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிக்கின்றீர்கள். தற்போதைய ஜனாதிபதிக்கு அந்தக் கட்சியிலிருந்து முழுமையான ஆதரவு கிடைக்கும் என நம்புகின்றீர்களா?**

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் தகுதியானவர் யாராவது இருந்தால் எனக்குக் காட்டுங்கள்!

பதில்: தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்சி என்ற ரீதியில் அந்தக் கருத்தின் அடிப்படையில் செயற்படுவோம் என நான் நம்புகிறேன்.

**கே: நீங்கள் ஆளும் கட்சியின் அமைப்பாளர். ஆனால் அந்தக் கட்சியில் இருந்து இன்னொரு பொதுவேட்பாளர் முன்னிறுத்தப்பட்டால் உங்கள் நிலைப்பாடு என்னவாகவிருக்கும்?**

பதில்: ரணில் விக்கிரமசிங்கவை விட வேறு ஒரு சிறந்த வேட்பாளர் இருந்தால் பரவாயில்லை. ஆனால் அப்படிப்பட்டவர் கண்ணில் படவில்லை என்றே சொல்ல வேண்டும். 'எதிர்வரும் வேட்பாளர்களை பார்த்து முடிவெடுப்பேன்' என எமது கட்சியின் செயலாளர் தெளிவாகக் கூறியுள்ளார்.

**கே: நாட்டில் இதுவரை பணவீக்கம் குறைந்துள்ளது. ஆனால் மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்கின்றனர். மக்கள் வித்தியாசத்தை உணரவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: இப்போது நன்கு அவதானியுங்கள்... ஒன்றரை வருஷத்துக்கு முன்னர், போராட்டம் நடக்கும் போது ஒரு லீட்டர் பெற்றோலை 3000 ரூபாவுக்குக் கூடப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இப்போது அந்த நிலைமையை மக்கள் மறந்துவிட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. கியூ.ஆர் குறியீடுகளை வைத்து பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட அளவிலும் வரம்பு இருந்தது. இன்று அந்த நிலையை மாற்றி மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை வழங்கி வருகிறோம். டொலர் 400 ரூபாய்க்கு சென்றது. வெளிநாட்டில் இருந்து பொருட்களை கொண்டு வர டொலர்கள் போதுமானதாக இருக்கவில்லை. இன்று இவ்வாறான நிலைமை இல்லை. எனவே, நாட்டில் மாற்றம் ஏற்படவில்லையென மக்களால் கூற முடியாது.

**கே: எதிர்காலத்தில் பொருளாதாரம் முன்னேற்றமடையும் பட்சத்தில் பெறுமதி சேர் வரியைக் குறைக்க முடியும் என ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்ப உரையில் தெரிவித்தார். அது சாத்தியமாகுமா?**

பதில்: வரவுசெலவுத்திட்ட சமயத்திலும் இந்த விடயத்தைச் சொன்னார். பெறுமதி சேர் வரி மாத்திரமல்ல மக்களின் வருமான நிலையை மேம்படுத்தும் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். பொருட்களின் விலையை குறைப்பது எப்போதும் சாத்தியமில்லை. இன்று இந்தியாவுக்குப் போய் தோசை சாப்பிடும் போது, அன்றைய காலத்தைவிடத் தற்பொழுது விலை அதிகம்.

ஏனைய நாடுகளுக்குச் சென்றாலும் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. ஆனால், பொருட்களின் விலை உயரும்போது மக்களின் வருமானம் அதிகரிக்க வேண்டும். வருமானத்தை அதிகரிக்க ஒரு ஏற்பாடு தேவை. அதற்கு, நாட்டில் உற்பத்தி செயல்முறையைத் தொடங்க வேண்டும்.

நாம் மேற்கொள்வதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன. அரசு சீர்திருத்தங்கள் மூலம் இந்தத் திட்டம் நாட்டுக்கு முன்வைக்கப்பட வேண்டும். 1977 இல் திறந்த பொருளாதாரத்திற்குப் பிறகும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் சூழ்நிலையில் இருந்தோம். இந்த நிலைமையை உலகப் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும்.

---

# ஆளில்லா விமானங்களிலிருந்து கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்ட முதலாவது சம்பவம்!



## பொலிசாரின் அனைத்து அடக்குமுறைகளையும் மீறி இந்தியத் தலைநகர் டெல்லியில் முடிவின்றித் தொடரும் விவசாயிகள் போராட்டம்!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் மீண்டும் இந்தியத் தலைநகர் டெல்லி நோக்கி பேரணியைத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் விவசாயிகளை 5 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு அழைத்திருக்கிறது.

நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்று சொல்லப்பட்டாலும், கடந்த பல ஆண்டுகளாகவே இந்திய விவசாயிகளின் முதுகெலும்பு இன்னும் நிமிரவில்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. குறிப்பாக பா.ஜ.க ஆட்சி அதிகாரத்திற்கு வந்த கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். இந்த குற்றச்சாட்டுகளை உறுதி செய்யும் வகையில் கடந்த 2020 ஆம் ஆண்டு மத்திய அரசு 3 புதிய வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்தது.

ஆனால், இந்தச் சட்டங்களை எதிர்த்து அப்போது நாடு முழுவதும் இருந்து அனைத்து விவசாயிகளும் டெல்லியில் ஒன்று சேர்ந்து பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். தொடர் போராட்டம் காரணமாக இந்தச் சட்டங்கள் மத்திய அரசால் வாபஸ் பெறப்பட்டன. இந்நிலையில், தங்களின் நீண்ட காலக் கோரிக்கையான 'விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை(MSP)' சட்டபூர்வமாக்க வேண்டும் என்று விவசாயிகள் மீண்டும் டெல்லி நோக்கி தற்போது அணிதிரண்டுள்ளனர்.

விவசாயிகளின் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும், சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன் மின்கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும், 2021 லக்கிம்பூர் கெரி வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும், நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 2013 ஐ மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும், மற்றும் 2020-21 இல் முந்திய போராட்டத்தின் போது இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட கோரிக்கைகளை தற்போது விவசாயிகள் எழுப்பியுள்ளனர்.

இவர்கள் டெல்லி நோக்கி வருவதைத் தடுக்க முள்வேலிகள், சீமெந்துத் தடுப்புகள், தரையில் ஆணிகளை பதித்து வைத்தல் என பல்வேறு தடைகளை பொலிஸும், துணை இராணுவமும் ஏற்படுத்தி வருகின்றன. பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து டெல்லியை இணைக்கும் அனைத்து வீதிகளிலும் இந்த தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

டெல்லி எல்லையில் மீண்டும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்படுகின்ற போதிலும், இந்தத் தடைகளைத் தாண்டி விவசாயிகள் டெல்லி நோக்கி அணிவகுத்து வருகின்றனர். இதனைத் தடுக்க ஏற்கனவே, மத்திய அரசு தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இவ்வாறாக 4 தடவை நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இந்நிலையில் தற்போது 5 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது.



மத்திய வேளாண்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா இந்தப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஆனால் விவசாய சங்கங்கள் இதனை, "நேரம் கடத்தும் செயல். அதனால்தான் எங்களை மீண்டும் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்கள்" என்று விமர்சித்துள்ளன. நாடாளுமன்றத்தை கூட்டி குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டு அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்று அச்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

டில்லி நோக்கி பேரணி செல்லும் போராட்டத்துக்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய விவசாய அமைப்புகள் அழைப்பு விடுத்தன. இதை ஏற்று பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட வாகனங்களில் டில்லிக்கு விரைந்தனர். இவ்வாண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், இந்த போராட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

விவசாயிகளின் போராட்டத்தால் காய்கறி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால் டில்லியில் காய்கறி விலை உயரும் அபாயம் உள்ளதாக காஜிபூர் மொத்த விற்பனைச் சந்தையின் வியாபாரி ஒருவர் கூறினார்.

விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்கும்படி பா.ஜ.க அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக 'டில்லிக்கு செல்வோம்' எனும் போராட்டத்தை சம்யுக்தகிசான் மோர்ச்சா (அரசியல் சாராதது), கிசான் மஸ் தூர் மோர்ச்சா ஆகிய அமைப்புகள் அறிவித்தன. இதையொட்டி பஞ்சாப் மாநில விவசாயிகள் கடந்த 13.02.2024 அன்று டில்லி நோக்கிப் புறப்பட்டனர். இவர்கள் பஞ்சாப் – அரியானா எல்லையில் உள்ள ஷம்புவில் பாதுகாப்பு படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். கடந்த 13.02.2024 முதல் விவசாயிகள் அங்கேயே முகாமிட்டுள்ளனர். அவர்களின் போராட்டம் தொடர்கின்றது.

விவசாயிகளின் போராட்டம் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதேவேளை பஞ்சாப் ஹரியானா ஷம்பு எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகள் மீது ஹரியானா பொலிசார் ட்ரோன் உதவியுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியுள்ளனர்.

ட்ரோனில் இருந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிய இந்தியாவின் முதல் பொலிஸ்படை ஹரியானா பொலிஸ்துறை என்று ஊடக அறிக்கைகள் கூறுகின்றன. ஆளில்லா விமானத்தில் இருந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுவது இதுவே முதல் முறை என்று பொலிஸ் அதிகாரி ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசுவதற்கு ட்ரோன்களைப் பயன்படுத்துவது பல தரப்பிலிருந்தும் விமர்சிக்கப்படுகிறது.

'மாநில பொலிசார் இதுபோன்ற முறையைப் பயன்படுத்தக் கூடாது. மக்களுக்கு முதலில் எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும், அவர்கள் பின்வாங்க வேண்டும், இல்லையெனில், ட்ரோன்கள் மூலம் குறிவைக்கப்படுவோம் என மக்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும். பொலிசார் அவ்வாறு செய்திருக்கக் கூடாது' என்று முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் இச்சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்தார்.

"ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி வானத்திலிருந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி ஹரியானா பொலிசார் சோதனை செய்துள்ளனர். தங்கள் உரிமைகளுக்காக அணிவகுத்துச் செல்லும் நிராயுதபாணியான விவசாயிகளுக்கு எதிராக இவ்வாறு மனித உரிமையை மீறும் விதத்தில் கொடூரமான முறையில் நடந்து கொள்வது நியாயமல்ல" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் நெருங்கிவரும் வேளையில் பா.ஜ.க அரசுக்கு உருவான நெருக்கடி!

எஸ்.சாரங்கன்...

அமரர் நீலகண்டன்

## நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டனின் ஆறாவது வருட நிறைவின் நினைவுப் பேருரை இன்று (25) முற்பகல் 10.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம அருளாளராக யாழ்.நல்லைதிருஞானசம்பந்தர்ஆதீனம்குருமுதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொள்வார். இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் கலந்துகொள்வதுடன், அவர் 'அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் மீதான ஒரு பிரதிபலிப்பு' எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

## எங்கள் கருத்து...

## மின் கட்டண குறைப்பின் போது வர்த்தக சமூகத்தின் பொறுப்பு

மிக சக்திவாய்ந்த கருவியாக மாறும் என்று குறிப்பிட்டார்.

1920 நவம்பரில், விளாடிமிர் இலிச் லெனின் ரஷ்ய கம்யூனிசத்துக்கான பாதையில் மின்சாரம் மட்டுமே எஞ்சியிருக்கும் ஒரே படிமுறையென அறிந்து கொண்டு அவர் குரல் எழுப்பினார். "கம்யூனிசம் சமமாவது சோவியத் தேசத்தின் வலிமை மற்றும் ஒட்டுமொத்த தேசத்தையும் மின்சாரத்தில் உயிர்ப்பிப்பதற்காகும்". அன்றிலிருந்து கேபிள் (கம்பிகள்) இழுத்து சோவியத் தேசத்தின் கிராமங்கள் முழுவதும் மின்சாரம் பரந்தது. அதனைப் பார்த்த லெனின், 'இந்தக் கம்பிகளின் வழியே அபிவிருத்தி பரவுகிறது' என்று மீண்டும் ஒருமுறை குரல் எழுப்பினார்.

நாம் மின்சாரப் பிரச்சினையினால் கடந்த மூன்றரை வருடங்களாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். அதற்கு முன்னர் பிரச்சினை இல்லாமலில்லை. எனினும் நோயாளியை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு உட்படுத்தியது இந்தக் காலப் பகுதியிலாகும். உற்பத்திக்காகச் செலவாகும் செலவைக் பொறுப்பேற்றுக் கொண்டே ஒன்பது வருடங்களாக மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காமல் அரசு இருந்தது. அவ்வாறான சுமையை அரசாங்கத்தினால் தொடர்ந்தும் சுமக்க முடியாது. கோவிட்19 தொற்றுக்கு நாடு முகம் கொடுத்து பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போதே இது சிக்கலுக்கு உள்ளானது. அரை மணி நேரத்தில் ஆரம்பித்து நான்கு மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வீடுகளில், பிரதேசங்களில் மின்சாரம் இல்லாததால் வேலை முடிந்து வீட்டுக்குச் செல்பவர்கள் இருளிலேயே எதையாவது சாப்பிட்டுவிட்டு நித்திரைக்குச் சென்றனர். ஆடைகளைத் தைப்பதும் கூட நேர அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டது. அடுத்தடுத்து இரண்டு தடவைகள் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. ஒரு மாதத்துக்கு 100 மணி கிலோவோட் பயன்படுத்தப்படும் இலங்கையில், சாதாரண நுகர்வோரின் மின்சாரக் கட்டணம் இதனால் 100 வீதம் உயர்ந்தது. வரும் மின்சாரப் பட்டியல் கட்டணத்தை சிரமத்துடன் செலுத்தி வந்த சாதாரண குடிமகனுக்கு இதனைத் தாங்கிக்கொள்ள முடியாது போனது.

2022ஆம் ஆண்டு முழுவதும் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததன் காரணமாக 2,47,250 மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. 2023ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதி வரையான காலத்தினுள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத மின் பாவனையாளர்கள் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானோரின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. இவ்வாறான சுமை மக்களுக்கு ஏற்பட்டதோடு, டொலரின் பெறுமதி அதிகரிப்பு, உலக பொருளாதாரத்தின் வீழ்ச்சியை மையப்படுத்தி மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது. நிறுவனங்களின் மின்சாரக் கட்டணம் உயர உயர அதன் செலவுகளும் அதிகரித்தன. மின்சாரம் போன்ற வரையறுக்க முடியாத விடயங்கள் அவ்வாறிருக்கும் போது நட்டத்தை ஈடு செய்து கொள்வதற்காக பணியாளர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகளையும் குறைக்க நேர்ந்தது.

லெனின் கூறியதைப் போன்று மின்சாரத்தினூடாக அபிவிருத்தி விரிவடைந்தது.அது தாங்கிக்கொள்ள முடியாத சுமையாக மின்சாரப் பட்டியலுடன் சேர்ந்தால் அவ்விடத்திலேயே அபிவிருத்தியின் கதை முடிவடைகிறது.

மின்சார சபையின் நாளாந்த இழப்பு சுமார் 500 மில்லியன் ரூபாவாக இருப்பதால், வங்குரோத்து அடைந்த நாடு மீள வேண்டுமானால் முதலில் அத்தகைய சேதங்கள் ஈடு செய்யப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அறிவுறுத்தல்களின் படி மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. மக்கள் பெரும் சுமைகளுக்கு முகம் கொடுத்தனர். எவ்வாறு கட்டணத்தைச் செலுத்துவது என்பது வருந்தத்தக்க விடயமாகும். மின்சாரக் கட்டணம் அதிகரித்தவுடன் உணவுப் பணவீக்கம் உயரும். இலங்கையில் நாம் உணவு மற்றும் பாணங்களுக்கே அதிகளவு சுமையை சுமக்கிறோம்.

இது நமது மாதச் செலவில் 50.7 வீதமாக காணப்படுகிறது. அமெரிக்கா போன்ற ஒரு நாட்டில் உணவுக்காக செலவிடப்படுவது மொத்த செலவில் 8.3 வீதம் மட்டுமே.

இந்த கடினமான பயணத்துக்கு அரசு தற்போது சாதகமான பதிலை வழங்கியுள்ளது. அர்ப்பணிப்புடனேயே கனவுகள் நனவாகும். இக்கட்டான காலங்களில் நாம் செய்த அர்ப்பணிப்பினால் பொருளாதாரம் தற்போது மீண்டு வருகிறது. அந்த நிம்மதியும் எமக்கே உரியதாகும்.

இதற்கிடையில், மின் கட்டணம் உயர்த்தப்பட்டபோது, அனைத்து வர்த்தகர்களும் மற்றும் பெரிய, சிறிய வர்த்தக நிறுவனங்களும் தங்கள் நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்களை அதிகரித்தன. மரத்திலிருந்து விழுந்த மனிதனை மாடு முட்டியதைப் போன்ற நிலை உருவானது.

இப்போது அதனை ஈடு செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் வந்துள்ளது. அதன்படி தமது நுகர்வுப் பொருட்களினதும், சேவைகளினதும் விலைகளை,கட்டணங்களை கடந்த ஒக்டோபர் மாதத்துக்கு முன்பிருந்த நிலைக்கே குறைக்க அவர்கள் முன்வர வேண்டும். இது அவர்கள் செய்யவே வேண்டிய கண்டிப்பான கடமையாகும்.

அவ்வாறில்லாமல் வழமைபோன்று அவர்கள் வாரிச் சாப்பிடுவதற்கு முனைந்தால் மின்சாரக் கட்டணக் குறைப்பின் முழுமையான பலன் நாட்டு மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

முன்னர் மின்சாரக் கட்டணம், எரிபொருள் விலை, எரிவாயு விலை, நீர்க் கட்டணம் போன்றன அதிகரித்த போதெல்லாம் அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலைகளை ஒரு சதத்திலேனும் குறைக்கப்படாததன் காரணத்தினாலேயே நாம் இதனை கூற வேண்டியுள்ளது.

ஒரு தேநீரின், அப்பத்தின் விலைகளிலிருந்து சொகுசு பொருட்களின் விலைகள் வரை இந்த நாட்டில் இவ்வாறே இடம்பெற்றுள்ளன.

எனவே, இந்தத் தருணத்தில் தமக்கும் ஒரு தேசியப் பொறுப்புடன், கட்டாயப் பொறுப்புக்கூறலும் உள்ளது என்பதை இந்த வர்த்தக சமூகம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்திய மத்திய அரசு அனுமதி

# விடுதலையான சாந்தன் இரண்டு நாட்களில் இலங்கை வருவார்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று கருணை மனு அடிப்படையில் விடுதலையாகியுள்ள சாந்தன் விரைவில் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவாரென, திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் தெரிவித்தார்.



இலங்கை செல்வதற்கான அனுமதியை சாந்தனுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர், விமான டிக்கெட்டை அவரது சொந்த செலவிலேயே எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், சாந்தன், முருகன், ராபாட்ப்பயஸ், ஜெயக்குமார் ஆகிய 07 பேரையும் விடுவிக்க கடந்த 2022 நவம்பர் 11ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர்களில் பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் இந்திய குடியுரிமையை கொண்டுள்ளதால் அவர்களின் இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனைய 04 பேர் இலங்கை குடியுரிமையை கொண்டுள்ளதால், வெளிநாட்டவர் பதிவு அலுவலகத்திலிருந்து உரிய உத்தரவு கிடைக்கும்வரை திருச்சி சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 04 பேர் தொடர்பான விபரங்களை மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பியதாகவும், திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் தெரிவித்தார். சாந்தன் தனது தாயாருடன் இலங்கையில் இருக்க விருப்பம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, சாந்தன் மட்டும் இலங்கை செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தற்போது சுகயீனம் காரணமாக சென்னை அரசு மருத்துவமனையிலுள்ள சாந்தன், சிகிச்சையை முடித்துக்கொண்டு, பயணச்சீட்டு, கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு 02 நாட்களுக்குள் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் (23) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### மியன்மாருடன் அமைச்சர்...

தகவல் தொழில்நுட்பத்துறையில் தொழில் வாய்ப்புகள் வழங்குவதாக வெளியிடப்பட்டிருந்த போலி பிரசாரத்தை நம்பிய இந்த இலங்கையர், மியன்மாரின் மியாவாடி பகுதியில் பல்வேறு நிகழ்நிலை மோசடிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக மியன்மாரின் பிரதிப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சருக்கு அமைச்சர் அலி சப்ரி எடுத்துக்கூறியதுடன், பாதிக்கப்பட்ட இலங்கையரை மீட்பதற்கான உதவியையும் கோரினார். பாதிக்கப்பட்ட இலங்கையரை துரிதமாக மீட்பதற்கான முயற்சியின் பயனாக கடந்த 22ஆம் திகதி கொழும்பிலுள்ள மியன்மார் தூதுவரை இலங்கை வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் யு.எல். மொஹமட் ஜௌஹர் சந்தித்து கலந்துரையாடினார். இதற்கிடையில் கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து பாதிக்கப்பட்ட இலங்கையரை மீட்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்படுமென்று மியன்மார் அரசாங்கமும் உறுதியளித்துள்ளது.

இந்த இலங்கையரின் நல்வாழ்வு மற்றும் அவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்வதற்காக தென்கிழக்காசியாவின் அண்டை நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சு நெருக்கமாக செயற்படுகின்றது. இதேவேளை ஆட்கடத்தலுக்குள்ளானவர்களை மீட்டு நாட்டுக்கு அழைத்து வருவதாகக் கூறி சில அமைப்புகள், பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினரிடம் பணம் அறவிட முயற்சிப்பதாக தெரியவருகின்றது. ஆகையால், இது தொடர்பாக மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

### கௌரவ நாமங்களை...

குறிப்பிட்ட ஒரு சில நியதிகளின் அடிப்படையில் உரிய செயன்முறைக்கமைய தெரிவு செய்யப்படும் சிறப்புக்குரிய இலங்கை பிரஜைகளுக்காக ஜனாதிபதியால் வழங்கப்படும் விருதுகள் மற்றும் கௌரவ நாமங்களுக்காக பயன்படுத்தப்படும் பெயர்களை பயன்படுத்தி, சில நபர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விருதுகள் மற்றும் பாராட்டு (சன்னஸ்) பத்திரங்கள், சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றமை ஜனாதிபதி அலுவலகத்துக்கு தெரியவந்துள்ளது. அதனால் தேசிய விருதுகளுக்காக பயன்படுத்தப்படும் கௌரவ நாமங்களை வேறு தரப்பினர் தவறாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், முறையற்ற விதத்தில் வழங்கப்படும் விருதுகள் காரணமாக இதுவரையில் இலங்கையில் கௌரவிப்புக்கு பாத்திரமானவர்களுக்கு செய்யும் அநீதியாகவும் அவமரியாதையாகவும் அமைவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

### தமிழக தரப்பு நியாயப்படுத்தலை...

அவர், அடுத்த ஆண்டு கச்சதீவு திருவிழாவுக்கு முன்னர் சுமுகமான தீர்வு எட்டப்படுமென்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் இம்முறை இந்தியர் எவரும் பங்குபற்றவில்லையென்றும் நேற்று முன்தினம் (23) ஆரம்பமாகிய திருவிழாவில் சுமார் 5,200 இலங்கையர் பங்கேற்றதாக கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார். அத்துடன் இந்தியர்கள் குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் புறக்கணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

"இலங்கையில் தேசிய நல்லிணக்கத்துக்கு கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா சிறந்த எடுத்துக்காட்டாக காணப்படுகிறது. இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளுமில்லாமல் இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவரும் இந்த திருவிழாவில் கலந்துகொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வருடாந்த திருவிழாவை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய மற்றும் இலங்கையின் உறவின் பாலமாக இந்த திருவிழா அடையாளப்படுத்தப்படுகிறது. இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை பல ஆண்டுகாலமாக தொடர்கிறது.

இதற்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அடுத்த திருவிழாவுக்கு முன்னர் முரண்பாடற்ற தீர்வொன்று காணப்பட வேண்டும். இந்திய மீனவர்கள் வழமை போல் திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலம்பெயர் வாழ் இலங்கையரை...

இடைக்கால வரவு, செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு வாழ். இலங்கையருக்கான நிதியம், அலுவலகம், அலுவலகச் சட்டமூலம் ஆகிய மூன்று விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கமைய வெளிநாடு வாழ். இலங்கையருக்கான அலுவலகம் கடந்த வருட இறுதியில் கொழும்பு பழைய சார்டட் கட்டடத்தில் அமைச்சரவை அனுமதியுடன் திறக்கப்பட்டது. இலங்கையர் இதுவரை 05 அலையாக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

2.5 முதல் 03 மில்லியன்வரை இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருப்பதை அண்ணளவாக கணக்கிட்டுள்ளோம். அவர்களில் 1.6 மில்லியன் பேர் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக உள்ளனர். தொழிலாளர்களை பதிவு செய்துவிட்டு செல்வதால் அவர்களுடைய தகவல்கள் எம்மிடத்தில் உள்ளன.

ஏனைய காரணங்களுக்காக புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான தகவல்கள் சரியான வகையில் இல்லை. ஆனால் விரைவில் மற்றைய தூதரங்களை தொடர்புகொண்டு, இவர்கள் தொடர்பான தகவல்களை நாம் சேகரிக்க முயற்சிக்கிறோம். அதற்காக அவர்களின் சுயவிருப்பத்தின் பேரில் சில அடிப்படை தகவல்களை மாத்திரம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

இந்த தகவல்களின் இரசியத்தன்மை முழுமையாக பாதுகாக்கப்படும். இந்த அலுவலகம் வெளிநாட்டு வாழ் இலங்கையரையும் தாயகத்தையும் ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாக செயற்படும்" என்றார்.

## தவக்கால சிந்தனை



# ஆன்மிக ரீதியான பலம்

இந்தத் தவக்காலத்தினை கடந்து செல்லும்போது நாம் ஆன்மிக ரீதியாக பலமடைய வேண்டும்.

வருடாந்த மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவரை நாட யாரும் விரும்புவது கிடையாது. நானும் அவ்வாறான விருப்பம் அற்றவனாயினும் இது அத்தியாவசியமானது என்று எனக்குத் தெரியும்.

முதலாவதாக இரத்தப் பரிசோதனைக்காக இரத்தம் கொடுக்க வேண்டும். அதற்காக குறிப்பிட்ட மணி நேரங்களுக்கு உண்ணாமல் இருக்க வேண்டும். அதனை நான் செய்து முடித்து விட்டேன். இப்போது மருத்துவரை சந்திப்பதற்கான நாள் வந்துவிட்டது.

அவரை உரிய வேளையில் சந்திக்கும் நோக்குடன் நேரத்திற்கு முன்னதாக மருத்துவமனைக்கு சென்று விட்டேன்.

அப்போது தாதியர் அழைத்தனர். முதலில் எனது உடல் எடை பரீட்சிக்கப்பட்டது. குறித்த இயந்திரத்தில் நின்ற போது எனது எடை சற்று குறைந்துள்ளது என்றதும் நான் பிரார்த்தனையில் ஈடுபட்டேன். பின்னர் எனது இரத்த அழுத்தம் பரிசோதிக்கப்பட்டது.

தாதியர் அங்கிருந்து விலகிச் செல்லும்போது ‘மருத்துவர் உள்ளே வருவார்’என்றார். நான் காத்திருக்கின்றேன். மருத்துவர் உள்ளே வந்தபோது பரீட்சித்துப் பார்த்து எல்லாமே நன்றாகவுள்ளது என்று கூறிவிட்டு உடல் எடையைக் குறைப்பதில் கவனம் செலுத்தச் சொன்னார். அவ்வாறு செய்தால் அதை நீர் நன்றாக உணர்வீர். உமது இரத்த அழுத்தம் நன்றாக இருக்கும் உமக்கு நல்ல ஆற்றல். இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவர் கூறுவதைச் செய்தால் நான் நன்றாக இருப்பேன் என்பதும் எனக்குத் தெரியும்.

இன்றைய நற்செய்தியானது இயேசுவின் தோற்ற மாற்றத்தைப் பற்றி பேசுகிறது. இந் நாளில் இயேசு பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரது கண்களுக்கு முன்பாக உரு மாறினார். இங்கு இயேசு மட்டும் உரு மாறவில்லை. அவர்களும்தான் மாறினார்கள்.

இந்தத் தவக்காலத்தினை கடந்து செல்லும்போது நாம் ஆன்மிக ரீதியாக பலமடைய வேண்டும்.

இயேசுவின் அருகினில் வர நாம் எத்தகைய பாரத்தை, சுமையை, பாவத்தை விட்டுவிட வேண்டும்? இத் தவக்காலத்தில் மருத்துவரின் ஆலோசனைக்கமைய உடல் எடையை மட்டும் குறைப்பதோடு நின்றுவிடாமல் தெய்வீக மருத்துவராகிய இயேசுவைப் பின்பற்றவும் முடிவு செய்துவிட்டேன். இயேசு மலையில் தோற்றமாற்றம் பெற்றது போல் நானும் அவரைப் போல் மாற விரும்புகிறேன்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

### இரண்டு தேசிய விருதுகள்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண ஆளுநர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் ஊடாக தேசிய விருதுகளுக்கான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படுவதோடு, ஜனாதிபதியினால் பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்காக சிறந்த சேவை ஆற்றிய இலங்கையர் மற்றும் இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகளை வழங்குவதற்கான தெரிவுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தேசிய விருதுகளை பெற விரும்பும் தகுதியுள்ள இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கான புதிய முறைமை ஒன்றை தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்களை கொண்ட தேர்வுக் குழுவால் விருது பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விருது பெற்றவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட திகதியில் ஜனாதிபதி தலைமையில் விருதுகள் வழங்கப்படும். சுதந்திரதினம், நினைவுதினம், தேசியவீரர்கள் தினம் உட்பட விருதுகள் வழங்கப்படுவதற்கு பொருத்தமான திகதிகளை ஜனாதிபதிக்கு தீர்மானிக்க முடியும். மேலும், இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அதிகமான உஷ்ண காலநிலை...

எதிர்பார்ப்பதாகவும், வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கை பிரிவுக்கான பிரதிப் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்தார். இந்த மாவட்டங்களில் மனித உடலால் தாங்கிக் கொள்ளக்கூடிய வெப்பத்தை விட, அதிக உஷ்ணம் நிலவுமெனவும், அவர் கூறினார். நாட்டில் காற்றின் அளவு குறைந்துள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய அவர், அதிக உஷ்ணத்திலிருந்து பொதுமக்கள் தம்மை பாதுகாக்க வேண்டுமெனவும் கூறினார்.

அதிகளவு நீரை அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணிதல், நிழலான இடங்களில் இருத்தல் ஆகிய நடைமுறைகளை பின்பற்றுமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார். உஷ்ணமான காலநிலை காரணமாக உடலிலிருந்து அதிகளவான வியர்வை வெளியேறுவதால் களைப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க நீர், இளநீர், கஞ்சி போன்ற நீராகாரத்தை எடுக்குமாறு, கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேலும், உஷ்ணம் காரணமாக தோல் சார்ந்த பிரச்சினை ஏற்படலாம். எனவே சிறுவர்களை காலை, மாலையில் நீரில் குளிர்ப்பாட்ட வேண்டுமெனவும், அவ்வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

### அனைத்து வீட்டுப் பாவனையாளரின்...

மின் கட்டணம் 24 சதவீதத்தாலும் குறைக்கப்படுமென்றார். மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். மின் உற்பத்தியின் செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டதாலேயே மின் விநியோகம் தற்போது சீராக முன்னெடுக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். வரட்சியை எதிர்நோக்கிய கடந்த ஒக்டோபர் மாதத்தில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. எனினும் அதிஷ்டவசமாக கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் அதிகளவான மழை வீழ்ச்சி கிடைத்தது. அதனால் நீர் மின்னுற்பத்தியின் வீதம் அதிகரித்தது. இதன் பின்னணியிலேயே மின் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்ற தீர்மானம் கடந்த டிசம்பர் மாதம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் மின் கட்டணத்தை 03 சதவீதத்தால் குறைக்க முடியுமென ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. டொலருக்கு இணையாக ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு, நீர் மின்னுற்பத்தி அதிகரிப்பு ஆகிய சாதகமான காரணங்களால் மின் கட்டணத்தை மேலும் குறைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தினர். இதன் பயனை நாட்டு மக்களுக்கு முழுமையாக வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வளிமண்டலவியல் திணைக்களம், நீர் முகாமைத்துவக் குழு மற்றும் ஏனைய நிறுவனங்கள் வரவிருக்கும் வரட்சி தொடர்பில் முன்வைக்கப்பட்ட கணிப்புகளின் அடிப்படையில் குறைந்த நீரைப் பயன்படுத்துமாறு பணிப்புரை வழங்கியதாகத் தெரிவித்தார். நீர்மின்சார உற்பத்தி குறைந்ததால், வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் மின் கட்டணம் ஒக்டோபர் முதல் 18 வீதமாகவும், தொழிற்சாலைகள் மற்றும் ஹோட்டல்களின் மின் கட்டணம் 12 வீதமாகவும் உயர்த்தப்பட்டது.

அரசு நிறுவனங்கள் மற்றும் அரச கட்டடங்கள் 24 சதவீதம் அதிகரிக்க வேண்டும். ஆனால் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம்வரை கடந்த 05 ஆண்டுகளில் பெய்யாதளவு மழை வீழ்ச்சி கிடைத்ததால் நீர் மின் உற்பத்தி எளிமையாக இருந்ததால் மின் கட்டணத்தை 3% குறைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து மின்சாரக் கட்டணத்தை மேலும் குறைக்கக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதியும் அமைச்சரவையும் பணிப்புரை வழங்கியது. கடந்த 15ஆம் திகதி இது தொடர்பாக மீண்டுமொரு கலந்துரையாடல் இடம்பெற்று அதன்படி, தேவையான கட்டணங்களைக் குறைப்பது தொடர்பான திருத்தங்கள் குறித்து ஆராயப்பட்டு, குறைப்புக்கான பரிந்துரைகள் பெப்ரவரி 22ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். அதற்கிணங்க உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் எதிர்வரும் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்

# நீதி கேட்டு நிற்கும் சிறுபான்மை இனங்கள்



இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவோடு, உலகில் புதிதாகத் தோற்றம் கண்ட அரசுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு சென்றது. புதிய தேசங்களின் அரசுகளின் இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என்ன? ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கமும் அதன் சாசனமுமே முக்கிய காரணமாகும். அதுகால வரை குடியேற்ற நாடுகளைக் கட்டியாண்ட வல்லரசுகள், தாங்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரமும் விடுதலையும் வழங்கியாக வேண்டும் என்று சர்வதேசச் சட்ட வரையறைகளையும் நிபந்தனைகளையும் முன்வைத்தன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது வல்லரசுகள் நடத்திக்கொண்டிருக்கும் ஆட்சிமுறை சட்டவிரோதமானது அன்று அவை தீர்ப்பெழுதின. அதுகாலவரை நாடுகளின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியற் கோரிக்கையாக மட்டுமே இருந்த நிலை இப்போது மாறிவிட்டது. சுயநிர்ணய உரிமை சர்வதேசச் சட்டத்தின் பிரிக்கமுடியாத அங்கம் என்றும் காலனிய நாடுகள்மீது சுயநிர்ணய உரிமையை அமுலாக்கவேண்டிய பொறுப்பு வல்லரசுகளுக்கு உண்டு என்றும் விதி செய்தது.

இத்தகைய சர்வதேச அரசியற் பின்னணியில், இந்தியா தனக்கென்ற தார்மிக நோக்கினைக்கொண்டு, தனித்துவத்துடன் செயற்பட்டு வந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்திற்கான சட்ட வரைவுகள் பற்றிய ஆலோசனை மாநாடுகளில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கியுள்ளது. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை உலக சமாதானத்திற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வாளாவிருக்கும் சந்தர்ப்பங்களில், பெருமளவு அங்கத்தவர்களைக் கொண்ட பொதுச் சபை தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தைச் சாசனங்களில் சேர்த்துக் கொள்வதற்கு இந்தியா ஏனைய நாடுகளுடன் இணைந்து முக்கிய பங்காற்றியுள்ளது.

இந்திய காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டம் வேகம் பெற்றபோது, இரண்டாம் உலக யுத்தத்தோடுகளைத்துப்போனபிரித்தானியஇராணுவம் இன்னுமொரு யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாரில்லை என்று அன்றைய பிரித்தானியப் பிரதமர் பொதுமக்கள் சபையில் அறிவிக்க நேர்ந்தது. இவை இந்திய விடுதலையை முன்னோக்கி நகர்த்தின.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவைத் தொடர்ந்தும் வைத்திருப்பதனால் ஏற்படக்கூடிய இலாப,நஷ்டக் கணக்கை பிரித்தானியா கையில் வைத்திருந்தது. இலங்கை அமைச்சரவை அப்போது பிரித்தானிய அரசிடம் முன்வைத்திருந்த சுயாட்சிக் கோரிக்கையையும், இரண்டாம் உலகயுத்தத்தின்போது இலங்கை அமைச்சரவைக்கு பிரித்தானிய அரசு அளித்த வாக்குறுதிகளையும் அது எடை போட்டுப் பார்த்தது. வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவு ஓர் இந்து மாகாணமே என்ற கருத்தும், இலங்கை ஒரு கலாசார சுயாட்சிப் பிரதேசமாக இருக்கமுடியுமே தவிர, இறைமை கொண்ட நாடாக விளங்க முடியாது என்ற இந்தியத் தலைவர்களின் கருத்தும் மேலோங்கி நின்ற காலம் அதுவாகும்.

பிரித்தானிய அரசு தனது கையில் வைத்திருந்த லாப நஷ்டக் கணக்கோடு, தங்கள் நலன்களை இலங்கையில் எவ்வாறு தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதற்கான வழிவகைகளைத் தேடியது. அதுவரை அமுலாக்கப்படாதிருந்த அரசியற்சட்ட ஏற்பாடுகளோடு, சுதந்திர இலங்கையின் அரசாங்கத்தோடும் புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள முடிவெடுத்தது.1947ஆம் ஆண்டு வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சுதந்திர மசோதாவானது, இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான சட்ட நடவடிக்கையில் பிரித்தானிய அரசு முனைப்புடன் இருந்தது என்பதை நிரூபிக்கிறது. அம்மசோதா மீதான விவாதங்களில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறுபட்ட கருத்துகளையும் கரிசனத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவற்றில் ஹோன்சி தொகுதி உறுப்பினர் சேர். டேவிட் கமன்ஸ் அன்று தெரிவித்த கருத்துகள் இன்றைய இலங்கையின் இடர் மிகுந்த சூழலில் நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அந்த மசோதாமீது அவர் உரையாற்றுகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:'இலங்கை ஒரு இன அலகு கொண்ட நாடு அல்ல. அத்தீவில் இரு இனங்கள் வாழ்கின்றனர். இலங்கைத் தமிழர்கள் மொத்த சனத்தொகையான 6,500,000 பேரில் 1,500,000 பேர்களைக் கொண்ட சமூகத்தவர்கள் ஆவர். இவர்கள் சிங்கள சமூகத்திலிருந்து இன, மத, சமூகப் பின்னணி போன்ற அடையாளங்களினால் வேறுபட்டவர்கள். அவர்கள் அபரிமிதமான திறமையும் வல்லமையும் கொண்டவர்களாவர். ஒரு நாட்டில் இன அடிப்படையிலான சிறுபான்மையினர் இருப்பார்களானால், அவர்கள் நிரந்தர அரசியற் சிறுபான்மையினராகக் கூடிய அபாயம் காணப்படும். அவ்வாறு அவர்கள் நிரந்தர சிறுபான்மையினராக்கப்படுவார்களானால், இலங்கை ஜனநாயக அடிப்படையில் பரிணாம வளர்ச்சி காண்பதில் தோல்வியையே சந்திக்கும்.இந்நிலை இந்த இரு இன மக்கள்மீதும் மிகப்பெரிய பொறுப்புகளைச் சுமத்துகிறது. நியாயமான அவசிய மேற்படின், தமிழர்களை நியாயமானதற்கும் மேலான உரிமைகளுடன் நடத்தவேண்டிய பொறுப்பினைச் சிங்கள மக்கள்மீது சுமத்துகிறது. இப்பொறுப்பு அரசியல் அதிகாரத்தில் மட்டுமல்ல, நிர்வாகம் சார்ந்த அதிகாரங்களினால் ஆனதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு தமிழர்கள் நடத்தப்படுவதன் மூலமே அவர்கள் தம்மை நிரந்தர அரசியற் சிறுபான்மையினராகக் கருதாத நிலை ஏற்படும்'

இது சேர். டேவிட் கமன்ஸ் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் முன்வைத்த கருத்து. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி முடிவுற்று, பின்னர் நடந்த நிகழ்வுகளின் அடைப்படையில் நோக்கும்போது, இவரின் அரசியல் எதிர்வுகூறல் முற்று முழுவதும் பொருத்தமானது என்பது உறுதியாகிறது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையினூடாகவும், சர்வதேசரீதியாகவும் அரசுகள்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டக் கடமைப்பாடுகளை நோக்கும்போது, அரசுகள், தேசிய இனங்கள், சிறுபான்மைச் சமூகங்கள் என்பன சர்வதேசச் சட்டத்தின் முக்கிய பேசுபொருளாக மாறியிருப்பதை அவதானிக்கலாம். அவற்றின் உரிமைகளும் கடப்பாடுகளும் உறுதிப்படுத்தப்படும் நிலையும் வளர்ச்சிகண்டுள்ளது.

சிறுபான்மை இனங்களின் உரிமைகள், பாதுகாப்புகள் தொடர்பாக சட்டபூர்வமாக இவ்வளவு ஏற்பாடுகள் இருந்தபோதும், இலங்கையில் தமிழ்த் தேசிய இனமும் சிறுபான்மைச் சமூகங்களும் இன்றுவரை நீதி மறுக்கப்பட்ட இனங்களாகவே இருந்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய நீதித்துறை நிறுவனங்களினதும் செயலற்ற தன்மை காரணமாகவே இந்த நிலை நீடித்து வருகிறது.

மேலும் தமிழர்களின் இன்றைய அவல நிலைக்கு 1948இல் பிரித்தானிய அரசு ஏற்படுத்திய அரசியல் சட்ட ஏற்பாடுகள், இலங்கையின் புராதன தமிழ் அரசுகளது ஆள்புல எல்லைகள் அகற்றப்பட்டு, மத்தியப்படுத்தப்பட்ட அரசின் உருவாக்கத்தை மேலும் வலுப்படுத்திச் சென்றமையாகும். ஆனால் 1948 ஆம் ஆண்டிலிருந்தே இந்த ஆள்புல எல்லைகள் பற்றி தமிழ் அரசியல் தலைவர்கள் பேசிவந்திருக்கிறார்கள். முன்னாள் வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சி.சுந்தரலிங்கம் அங்கம் வகித்த அடங்காத் தமிழர் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆங்கிலேய ஆட்சியில் இடம்பெற்ற சட்டத் தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே போன்று, சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வி.குமாரசாமி ஐக்கிய நாடுகள் சபை மூலமாக நமது எல்லைகளை நிர்ணயம் செய்து, தமிழ், சிங்கள தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்து கொள்வோம் என்று குரல் கொடுத்தார். சமஷ்டிக் கோரிக்கையும் அதனைத் தொடர்ந்த வட்டுக்கோட்டைத் தீர்மானமும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குரிமையைக் கபளீகரம் செய்யச் சட்டம் இயற்றிய உடனேயே தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறிய தந்தை செல்வநாயகமும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்து, இலங்கைத் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்து வைத்தனர். 1952ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை முதன்முறையாக எதிர்கொண்ட இக்கட்சி, 1956ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசியல் ஆதரவினைப்பெற்று, இன்றுவரை சமஸ்டிக்கோரிக்கைக்கு உயிரூட்டி வருகின்றது.

1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு 2/3 பெரும்பான்மையை வழங்கியது. பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி நடைமுறையிலிருந்த சோல்பரி அரசியல் அமைப்பை மாற்றி, 1972 மே 22 இல் புதிய இலங்கை அரசியல் யாப்பினைப் பிரகடனம் செய்தது. புதிய அரசியல் சட்டத்தின் வரைபு நிலைக் கூட்டங்களில் தமிழர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தோற்கடிக்கப்படவே, தமிழ் அரசியற் கட்சிகள் அரசமைப்பு அங்குரார்ப்பணச் சபையிலிருந்து வெளியேறின. மாற்றுத் திட்டத்துடன் அரசியற் செயற்பாட்டில் தீவிரங் காட்டின. தமிழர் அரசியல் புதிய வடிவம் பெறலானது.

1948 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற சகல பொதுத் தேர்தல்களிலும் சமஷ்டி முறையிலான அரசியல் சட்ட ஆட்சி முறையினைக் கோரிநின்ற தமிழரசுக்கட்சி, வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாராளுமன்ற ஆசனங்களில் பெரும்பான்மை பெற்று, தமிழ்த் தேசிய இனத்தின் தலைமையினைப் பேணி வந்துள்ளது.

பாராளுமன்ற வழிமுறையிலான அரசியற் செயற்பாடுகளின் பெறுமதியினையும் தமிழ்த் தேசிய இனத்தின் சட்ட உரிமைக் கோரிக்கைகளின் வலிமையையும் உணராது, அவை அரசினால் உதாசீனம் செய்ய்யப்பட்டன. இவையே ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழரசினை அடைவதற்கான வழிமுறைகள் தீவிரங் கொண்டன. ஐக்கிய நாடுகள் சபையின் 1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், 'மனிதன் இறுதி ஆயுதமாக கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்ய நிர்ப்பந்திக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், சட்ட ஆட்சி மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது அத்தியாவசியமானது என்று வலியுறுத்தியுள்ளது. ஆனால், இலங்கைச் சட்ட ஆட்சியாளர்கள் சட்ட ஆட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மாறாக, பலமான இராணுவத்தின்மூலம் போர் யுக்திகளையே கையாண்டனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளும் தமிழர்களுக்கு போதிய நிவாரணத்தைப் பெற்றுத் தரவில்லை.

இத்தகைய அரசியற் பின்னணியில் இலங்கையின் தேசிய இனங்களதும் சிறுபான்மையினதும் சட்ட அந்தஸ்தினை நோக்கும்போது பின்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன.

1. தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள், பெரும்பான்மையினரால் கட்டுப்படுத்தப்படுகின்ற அரசாங்கங்களின் அடக்குமுறைக்கு உட்பட்டனவாகவே வாழ்ந்து வருவதாக உணரத் தலைப்பட்டுள்ளனர்.

2. கடந்த 76 வருட கால அரசியலும் ஆட்சிமுறையும் பௌத்த சிங்கள மேலாதிக்கம் நிறுவனமயப்படுத்தப்பட்டு வந்திருப்பதை உறுதி செய்கிறது.

3.இவர்கள் மேலாதிக்கம் செலுத்தும் அரசு தமிழ்த் தேசிய இனத்தின்மீதும், சிறுபான்மைச் சமூகங்கள்மீதும் செலுத்துகின்ற அதிகாரமும் ஒடுக்குமுறைகளும் பழைய குடியேற்ற ஆட்சித் தன்மையையே தெளிவாகப் பிரதிபலிக்கின்றது என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்,
சட்டத்தரணி

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் நவால்னியின் கொலையும் அது ஏற்படுத்திய தாக்கங்களும்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகளாவிய அரசியலின் முக்கியத்துவம் புவிசார் அரசியல் கோட்பாட்டிற்கு உரியதாகவே காணப்படுகிறது. அத்தகைய புவிசார் அரசியல் கோட்பாட்டை உருவாக்கிய இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப்பகுதி ரஷ்யாவை தனித்துவமான உலகளாவிய மையமாக அடையாளம் கண்டிருந்தது. அதன் முக்கியத்துவம் என்றுமே அருகியதாக கருத முடியாத தன் விளைவே புவிசார் அரசியலுக்கு உரிய முக்கியத்துவமாக உள்ளது. அது மட்டுமன்றி ரஷ்யாவானது மூடியவடிவத்தையும் சர்வாதிகார ஆட்சியையும் ஐரோப்பாவுக்கான நெருக்கடியையும் வழங்கும் தேசமாக நிலவுகிறது. மகாபீட்டர் காலம் முதல் (1672_1725) அதற்கான இயல்புகளில் அதிக மாற்றம் கண்டதாக தெரியவில்லை. ஜார் நிக்கலஸ்ன் ஆட்சியும் விளாடிமிர் புடின் ஆட்சியும் அதிக வேறுபாடுடையதாக கருதமுடியாதளவுக்கு ரஷ்யாவின ஆட்சி காணப்படுகிறது. இக்கட்டுரையும் ரஷ்ய எதிர்க்கட்சியின் தலைவராக இருந்து பின்னர் சிறையில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்ட அலெக்ஸி நவால்னி பற்றிய தேடலாக உள்ளது.

உலகம் முழுவதும் அதிகம் அறியப்பட்ட ரஷ்யர்களின் பெயர்ப் பட்டியலில் முதன்மை பெறுபவர் அலெக்ஸி நவால்னி என்பது குறிப்பிடத்தக்கதாகும். ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவராக அடையாளம் காணமுன்னர் மனித உரிமை சட்டத்தரணியாகவும், ஊழல் எதிர்ப்புவாதியாகவும் அடையாளம் காணப்பட்டவர். Alexei Anatolyevich Navalny,(1976_2024) தண்டனை காலனியில் சிறைவைக்கப்பட்டு 16.02.2024 அன்று இறந்ததாக ரஷ்யா அறிவித்தது. ரஷ்யாவின் எதிர்காலம் எனும் அரசியல் கட்சியை நிறுவி புட்டின் அரசாங்கத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராட்டம் நடாத்தியவர். பலதடவை அவர் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டதுடன் கொல்வதற்கு பல முயற்சிகள் புட்டினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு. தற்போது கூட புட்டினது நடவடிக்கையினாலேயே நவால்னி கொல்லப்பட்டதாக நவால்னியின் மனைவி யூலியா குற்றச்சாட்டை முன்வைத்தள்ளார். அவரது மரணம் கொலை எனவும் படுகொலை எனவும் மேற்கு ஊடகங்கள் கூறி வருகின்றன. 2020 இல் கொல்லத் திட்டமிட்ட போதும் ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டு நவால்னி பாதுகாக்கப்பட்டார். அதன் பின்பே நாட்டுக்குள் வருகைதந்த போது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிறையில் அடைக்கப்பட்டார். நவால்னியின் மரணம் சர்சைக்குரியாதாக இருப்பதுடன் அவரது உடல் மறைக்கப்பட்டுள்ளதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

யூலியா நேரடியாகவே ரஷ்ய ஜனாதிபதிக்கு நவால்னி கொல்லப்பட்டத்தில் தொடர்புள்ளதாக தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட காணொளியொன்றில் சுதந்திர ரஷ்யாவுக்காக போராடப் போவதாக உறுதிமொழி செய்துள்ளார். தொடர்ந்து தாய்நாட்டுக்காக போராடப் போவதாகவும் நவால்னி விட்டுச் சென்ற நடவடிக்கைகளை தொடரப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார். யூலியாவின் எண்ணத்தை வரவேற்கும் உலகம் லெனினின் மனைவியான கிறுப்ஸ்ஹாயாவுக்கு நிகழ்ந்ததையும் நினைவு கொள்வது அவசியமானது. நீண்ட போராட்டத்தை நடாத்தியது மட்டுமல்ல ஒரு புலமைத் தளத்தில் முதலாளியத்திற்கு எதிராக கோட்பாட்டு அடிப்படையிலான எண்ணத்தை உருவாக்கியதுடன் நீண்ட தலைமறைவுக்கும் அயல் நாடுகளில் மறைந்திருந்தும் ரஷ்யாவை ஜார் ஆட்சியிலிருந்து மீட்டெடுத்ததுடன் சமவுடமையை கட்டியெழுப்பும் போராட்டத்திலும் ஈடுபட்டார். ஆனால் அவரது மரணம் ரஷ்யாவை ஸ்டாலின் சர்வாதிகாரத்திற்கு கொண்டு சென்றதுடன் அனைத்துவகை சுதந்திரத்தையும் இல்லாமல் செய்திருந்தமை தெரிந்ததே. அத்தகைய புரட்சியாளனின் மனைவியின் இறுதிக்காலம் ஸ்டாலினால் அதிகம் துயரமானதாகவே அமைந்திருந்தது. ஸ்டாலினதும் அவரது சகாக்களதும் நெருக்கடியினாலேயே அவரது மரணம் நிகழ்ந்ததாகக்கூட வரலாறு பதிவு செய்துள்ளது. இத்தகைய இயல்பு ரஷ்யாவுக்கு மட்டுமானதல்ல. ஏனைய நாடுகளின் புரட்சியாளர்களது மரணத்திற்கு பின்னான மனைவிகளினது நிலைமை மோசமானதாகவே அமைந்துள்ளது. அதுவே நவால்னியினது யூலியாவுக்கும் நிகழ வாய்ப்புள்ளது. ஆனால் ரஷ்யாவின் அரசியல் முழுவதும் ஏன் இத்தகைய சர்வாதிகாரிகளது எழுச்சி சாத்தியமாகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று, ரஷ்யாவின் இயற்கையினது கட்டமைப்பு அத்தகைய இருப்பை தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. உலக வரலாற்றிலேயே அதிக நிலத்தினைக் கொண்ட தேசமாக அமைந்தாலும் பாலைவனமும் பனிப்பொழிவும் அதிகமுள்ள நிலம் என்பது கவனத்தில் கொள்ள



வேண்டியது. ஆயிரக்கணக்கான மொழிப்பிரிவுகள் காணப்படும் பல் தேசிய இருப்பைக் கொண்ட நாடு ரஷ்யா. அதனால் ரஷ்யாவின் மரபுகளும் பண்பாட்டம்சங்களும் பழங்குடிக் கலாசாரத்தினால் வடிவமைக்கப்பட்டது. அதனை ஐரோப்பா போன்றோ அமெரிக்கா போன்றே கணித்துக் கொள்ள முடியாது. அதன் மரபு தனித்துவமானது. அதிலிருந்தே ஆட்சியும் அதிகாரமும் தோற்றம் பெற்றன. ஐரோப்பா அல்லது அமெரிக்கா போன்று குடியேறிகள் தேசமல்ல ரஷ்யா. அது மட்டுமன்றி அதன் பண்பாட்டுக்குள் ஆசிய மரபும் ஐரோப்பிய மரபும் கலந்துள்ளது. அதனாலேயே அது ஐரோ ஆசியக் கண்டத்து நாடாக கருதப்படுகிறது. அதனால் அது ஆசியாவுடனும் ஐரோப்பாவுடனும் இயங்கும் திறனைக் கொண்டது. இதுவே அதன் ஆட்சி அ டக்குமுறையானதாக நகர்கிறது. அந்த தேசத்து மக்களது இயல்புக்கு அமைவாக ஆட்சிகளும் அதிகார வடிவங்களும் கட்டமைக்கப்படுகின்றன. அதனால் அந்த மக்கள் அத்தகைய ஆட்சியை அங்கீகரிக்கின்றனர்.

இரண்டு, ரஷ்யாவின் புவிசார் அரசியல் சர்வாதிகாரத்தை நோக்கிய ஆட்சியை அங்கீகரிக்கிறதாகவே தெரிகிறது. காரணம் மேற்கு ஐரோப்பாவால் அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் விழுங்கப்படாது ரஷ்யாவை பாதுகாக்கும் ஆட்சியாளனை சர்வாதிகாரியாகினும் ரஷ்ய மக்கள் ஏற்கத் தயாராக உள்ளனர். அதனையே புட்டின் மேற்கொள்வதாக ரஷ்ய மக்களில் அனேகமானவர்கள் கருதுகின்றனர். அதனால் தவிர்க்க முடியாது ஆட்சிக்கு எதிரான சக்திகளை தோற்கடிப்பதில் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் செய்முறைகளை அங்கீகரிக்கும் நிலை காணப்படுகிறது. அனைத்து ஏகாதிபத்திய அரசுகளுக்கும் சர்வாதிகாரமே பிரதான கொள்கையாக உள்ளது. அந்தவகைக்குள்ளேயே ரஷ்ய ஆட்சியாளர்கள் மேற்கு ஐரோப்பாவையும் விட அமெரிக்க எதிர்ப்புவாதியாக இருந்தால் அவர்களது ஆட்சியை ரஷ்ய மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதுவே புட்டினது இருப்புக்கான அடிப்படையாகும். அமெரிக்காவுடன் சமாதானமாக பயணிக்க முயன்றமிகையில் கோர்பச்சேவ்வுக்கு நிகழ்ந்ததையோ சோவியத் யூனியனுக்கு நிகழ்ந்ததையோ ரஷ்ய மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

மூன்று, நவால்னி முழுமையாக மேற்குலகத்தின் நலன்களை நோக்கியே நகர்ந்திருந்தார். அவருக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் அமெரிக்காவும் மேற்கும் ஆதரவுகரம் நீட்டியதுடன் ரஷ்யாவுக்கும் புட்டினுக்கும் எதிராக பிரசாரம் செய்தது. அதனை ஒரு அரசியலாக மேற்குலகம் மேற்கொண்டது. மேற்கினது எண்ணம் முழுவதும் உலக வரைபடத்தில் ரஷ்யா என்ற அரசு மிகப்பலவீனமான துண்டு துண்டாக மேலும் உடைக்கப்பட வேண்டிய பகுதி என்பதாகும். அதனையும் கடந்து ஏகப் பெருவல்லரசாக மேற்கு நாடுகளே இருத்தல் வேண்டும் என்பதாகும். அந்த நாடுகளது ஏகாதிபத்திய முகத்தை காஸாவில் கண்டு கொள்ளலாம். அதனைவிட ஒரு புதிய உதாரணம் தேவையில்லை. ஏறக்குறைய நவால்னி அத்தகைய ஏகாதிபத்தியத்திற்கு கூலியாளாக ரஷ்யாவில் செயல்பட்டார் என்பதை நிராகரிக்க முடியாது. இதன் நோக்கம் ரஷ்ய மக்களது விடுதலையல்ல மாறாக அமெரிக்காவினதும் மேற்கினதும் நலன்களை நிறைவு செய்ய ரஷ்யாவில் முயன்றார் என்ற விமர்சனம் ரஷ்ய மக்களிடமே உண்டு.

நான்கு, நவால்னி ஒரு புரட்சியாளனாக விளங்கினாரா என்ற கேள்வி அனைத்துத் தரப்பிடமும் உண்டு. காரணம் புரட்சியின் எல்லையை தரிசித்த தேசம் ரஷ்யா என்பதை மறுக்க முடியாது. லெனின் அத்தகைய எல்லையை தந்தவர். அவரது ஜார் ஆட்சிக்கு எதிரான புரட்சி என்பது தெளிவான சித்தாந்தத்துடன் கட்டமைக்கப்பட்டிருந்தது. இலகுவில் அத்தகைய வரலாற்றை மறந்துவிட முடியாது. புரட்சிக்கான வரலாற்றையே லெனின் வரைந்திருந்தார். அவர் முதலாளித்துவத்தையும் அதன் வளர்ச்சிக்கட்டமான ஏகாதிபத்தியத்தையும் எதிர் கொள்ள அறிவு ரீதியிலும் போராட்ட ரீதியிலும் தயாரானார். அதற்கான கருத்துநிலையையும் வழிமுறைகளையும் ரஷ்ய மக்களிடம் ஏற்படுத்த விளைந்தார். அதன் கூட்டுப்பலமே ரஷ்யப் புரட்சியாகும். அவருடன் நவால்னி எந்த அடிப்படையிலும் ஒப்பிடக் கூடியவராக கண்டுகொள்ள முடியாது. இதனாலேயே நவால்னி மேற்குலகத்தின் கூலியாகச் செயல்பட்டார் என்பதை பதிவு செய்ய வேண்டியுள்ளது. இது புட்டினுக்கு கிடைத்த வாய்ப்பாகவே தெரிகிறது. புட்டின் உலக அரசியலில் அதிக போட்டியாளனாகவும் மேற்குக்கு சவாலான ஆட்சியாளனாகவும் கணிப்பிடப்படுகிறார். அது மட்டுமல்ல ரஷ்யாவின் பொருளாதாரத்தை நிமிர்த்தியதுடன் கீழைத்தேச நாடுகளது பொருளாதாரத்தை திசைதிருப்பியவராகவும் கணிப்பிடப்படுகிறார். மேற்குலகம் அதிகம் புட்டினை விமர்சனம் செய்தாலும் மேற்கு நாடுகளின் புலமையாளர்கள் புட்டினது எண்ணத்தை பாராட்டத்தவறவில்லை. அதனால் நவால்னி போன்றவர்கள் புட்டினுக்கு நிகரானவராக எழுச்சி பெறுவது கடினமானதாகவே தெரிகிறது.

எனவே நவால்னி படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பது ரஷ்ய மக்களுக்கும் தெரிந்தவிடயம். உலகத்தைப் போன்று அந்த மக்களும் அதனைப் பார்க்கிறார்கள். அதற்காக மேற்குலகம் கோருவது போல் புட்டினுக்கு எதிரான புரட்சியாக பார்க்க முடியுமா என்பதில் அவர்களுக்கு உடன்பாடு இருப்பதாக தெரியவில்லை. இதனையும் ரஷ்ய மக்கள் கடந்து செல்வார்கள் என்பதே அவர்களது வெளிப்படாகத் தெரிகிறது. இது புரட்சிவாதத்திற்கான யுகமுமல்ல. ரஷ்யாவுக்கு சர்வாதிகாரம் ஒரு பொருட்டான விடயமுமல்ல.

# எதிரும் புதிருமான போராட்டத்தில் இலங்கை–இந்திய மீனவர்கள்!

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தொப்புள்கொடி உறவுகள் இருப்பதாகக் கூறப்பட்டு வந்தாலும், ஒரு விடயத்தில் அதாவது மீன்பிடி விவகாரத்தில் இரு நாட்டுக்கும் இடையிலான முரண்பாட்டை இன்னுமே தீர்க்க முடியாதுள்ளது.**





## இந்திய மீனவர்களின் அத்துமீறல் தீவிரமடைவதால் கடும் சீற்றத்தில் யாழ். கடற்றொழிலாளர்கள்!

இந்த விவகாரம் இராஜதந்திர ரீதியில் அணுகப்பட வேண்டியதாக இருந்தாலும், இதில் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பது என்னவோ இரு நாட்டையும் சேர்ந்த மீனவர்களேயாவர். இதற்குத் தீர்வு காணப்பது பற்றி இராஜதந்திர மட்டத்தில் அவ்வப்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதும் பின்னர் அவை கைவிடப்படுவதுமாக இருந்தாலும், மீன்பிடியை வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

மீனவர் விவகாரம் அவ்வப்போது சூடு பிடிப்பதும் பின்னர் அப்படியே தணிந்து போவதும் மாறி மாறி ஏற்படும் நிகழ்வுகளாகியுள்ளன.

இந்த நிலையில், மீனவர் விவகாரம் அதாவது இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடபகுதி மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் செய்த அதேநேரம், இலங்கைக் கடற்படையினரால் தமது மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லை மீறும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடின் கடலில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாமல் போகும் என இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாணம் மருதடி சந்தி வீதியில் ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள துணை உயர்ஸ்தானிகர் அலுவலகம் வரை இடம்பெற்றது. 'இந்திய அரசே எமது கடல் வளத்தை சூறையாடாதே எம்மையும் வாழ விடு' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு பேரணி இடம்பெற்றது.

கண்டனப் பேரணியில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியதுடன், பிரதிநிதிகள் சிலர் சென்று துணை உயர்ஸ்தானிகரைச் சந்தித்தனர். இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கையின் வடக்கு கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுத்து, வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுமாறு கோரிக்கை விடுத்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன உபதலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் குறிப்பிட்டார்.

'இந்திய இழுவைப் படகுகளால் சாகும் நிலைக்கு வந்துள்ளோம். இது தொடர்ந்தும் போராட்டமாகத்தான் மாறப்போகிறது. எனவே ஒரு சில நாட்களில் முடிவு தரவேண்டும். தராத பட்சத்தில் தொடர் போராட்டம் ஒன்று நடக்கும். கடலில் அசம்பாவிதங்களும் நடக்கும்' என அவர் எச்சரித்திருந்தார்.

இந்திய துணை உயர்ஸ்தானிகரிடம் தமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திய கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் கையளித்தனர். அத்துமீறி, நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் கடற்படையினர் அசமந்தப் போக்கில் இருப்பதாகவும் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் அதிருப்தி வெளியிட்டார்.

கைதுகள் தொடரப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே அத்துமீறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்பது அவருடைய கருத்தாக இருந்தது.

அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இலங்கைக் கரைக்கு மிகவும் அருகில் வந்து மீன்பிடியில் ஈடுபடுவதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அது மாத்திரமன்றி பெரும் எண்ணிக்கையிலான படகுகள் ஒரே நேரத்தில் அத்துமீறி நுழைவதால் இலங்கை மீனவர்களின் வலைகள் பல சேதமாக்கப்பட்டுச் செல்வதாகவும், இதனால் பல்வேறு பொருளாதார இழப்புக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வடபகுதி மீனவர்களைப் பொறுத்தவரையில் 2009ஆம் ஆண்டு வரை யுத்தம் காரணமாக கடற்றொழிலுக்குப் பெருமளவு செல்ல முடியாத சூழல் இருந்தது. இதன் பின்னர் படிப்படியாக தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கிய அவர்கள், தொடர்ந்தும் இடம்பெறும் அத்துமீறிய இந்திய மீன்பிடிப் படகுகளால் அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். இது மாத்திரமன்றி கொரோனா தொற்று, அதன் பின்னரான பொருளாதார நெருக்கடிகளால் பல்வேறு இன்னல்களைச் சந்தித்துள்ள மீனவர்கள், இதுபோன்ற இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எல்லைதாண்டி நுழையும் மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து வருகின்றபோதும், மேலிடத்திலிருந்து அவர்களுக்கு உறுதியான கட்டளைகள் வழங்கப்படுகின்றதா என்ற கேள்வியும் காணப்படுகிறது. இவ்விவகாரம் இராஜதந்திர ரீதியில் பிரச்சினையை உருவாக்கலாம் என்பதால் அரசாங்கத்தின் அரசியல் தரப்பிலிருந்த உறுதியான கட்டளைகள் கடற்படையினருக்குப் பிறப்பிக்கப்படுகின்றனவா என்பதும் பிரச்சினைக்குரியதே.

உண்மையிலேயே எல்லைதாண்டிய இந்திய மீனவர்களின் செயற்பாடுகள் கடற்றொழிலை வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான மீனவர்களின் பிரச்சினையே தவிர, கடற்படையினருக்கு எதிரான பிரச்சினை அல்ல என்ற களயதார்த்தம் உண்மையில் தமிழகத்தில் உள்ளவர்களுக்குப் புரிய வைக்கப்பட வேண்டும். இலங்கை இக்கட்டான சூழ்நிலைகளில் இருக்கும்போது ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டும் நாடு இந்தியா என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இருந்தபோதும் அந்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் இந்தச் செயற்பாடு இலங்கையின் அப்பாவி மீனவர்களையே பாதிக்கிறது.

**மற்றொரு நாட்டின் கடல் எல்லைக்குள் பிரவேசிப்பது சர்வதேச சட்டத்தின்படி குற்றமென்பதை தமிழக மீனவர்களுக்குப் புரியவைக்க வேண்டியது அங்குள்ள அரசியல்வாதிகளின் கடமை!**



இலங்கை மீனவர்களின் கவலைகள் இவ்விதமிருக்க, இலங்கைக் கடற்படையினரால் தமது மீனவர்கள் கைதுசெய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 3 நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதுடன், இந்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதாகவும், இதற்குநீதி கிடைக்கவில்லையென்றும் கூறியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சருக்கும் கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. இதனிடையே தமிழ்நாட்டு மீனவர்கள் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழக மீனவர்களைப் பொறுத்த வரையில் 'பொட்டம் ட்ரோலிங்' முறையில் மேற்கொண்ட மீன்பிடி காரணமாக அவர்களின் கடல் வளம் அழிவடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் எல்லைதாண்டிய மீன்பிடி விவகாரம் குறித்து நல்லாட்சி அரசாங்கத்தில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக்கையிலான படகுகளில் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவது தொடர்பில் செய்மதிகள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இந்திய மத்திய அரசுக்குக் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்விடயத்தில் தமது தரப்பில் தவறு இருப்பதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

அது மாத்திரமன்றி, இலங்கை இந்திய மீனவர் விவகாரம் என்பது இந்தியாவின் தேர்தல் காலத்தில் பயன்படுத்தப்படும் ஒரு துரும்புச் சீட்டாக அமைந்திருப்பதையும் கடந்த காலங்களில் காணமுடிந்தது. இந்தியாவுக்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் மாதங்களில் நடைபெறவிருப்பதால் மீனவர்கள் விவகாரம் தற்பொழுது அரசியல் அரங்கத்தில் அதிகம் பேசப்படுகிறது. இதனை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு இதற்கு நிரந்தர தீர்வை வழங்க இரு நாடுகளும் முன்வர வேண்டும்.

பி.ஹர்ஷன்...✍

# இஸ்ரேல்–ஹமாஸ் யுத்தநிறுத்த கோரிக்கையை செல்லுபடியற்றதாக்கும் அமெரிக்க வீட்டோ!





## 4 மாதங்களில் 3 தடவை பயன்படுத்தப்பட்டுள்ள வீட்டோஅதிகாரம்!

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் பிரேரணை கடந்த செவ்வாய்க்கிழமை (20 ஆம் திகதி) செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்பிரேரணையை வலுவற்றதாக்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் அல்ஜீரியா கொண்டு வந்த இப்பிரேரணைக்கு 13 நாடுகள் ஆதரவாகவும் அமெரிக்கா எதிராகவும் வாக்களித்தன. பிரித்தானியா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறப்படவிருந்த இப்பிரேணைக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியது அமெரிக்கா.

அமெரிக்காவின் இச்செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு, உலகளாவிய ரீதியில் பெரும் பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

காஸா மீது இஸ்ரேல் யுத்தத்தைத் தொடங்கியது முதல் மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி இற்றைவரையும் மூன்று தடவை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த அனைத்து பிரேரணைகளுக்கு எதிராகவும் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.

அதாவது கடந்த ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட மனிதாபிமான யுத்தநிறுத்தத்தையும் மனிதாபிமான உதவிகளை தங்குதடையின்றி அனுப்பி வைப்பதையும் வலியுறுத்தி அழைப்பு விடுத்த பிரேரணை, அதன் பின்னர் டிசம்பர் 08 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட மனிதாபிமான யுத்தநிறுத்தக் கோரிக்கை பிரேரணை என்பன ஏற்கனவே அமெரிக்க வீட்டோ அதிகாரத்தினால் செல்லுபடியற்றதாக்கப்பட்டவையாகும்.

அத்தோடு ஐ.நா பொதுசபையில் ஒக்டோபர் 27 திகதியும், டிசம்பர் 12 ஆம் திகதியும் கொண்டு வரப்பட்ட மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானத்திற்கு எதிராகவும் அமெரிக்கா வாக்களித்தது.

ஹமாஸ் கடந்த வருடம் (2023) ஒக்டோபர் மாதம் இஸ்ரேலினுள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து காஸா மீதான யுத்தத்தை இஸ்ரேல் ஆரம்பித்தது. குடிநீர், மின்சாரம், உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் என்பன காஸாவுக்குள் கொண்டு செல்லப்படுவதற்கு தடை விதித்த இஸ்ரேல் வான், தரை, கடல் ஆகிய மூன்று மார்க்கங்களின் ஊடாகவும் இப்போரை ஆரம்பித்தது.

இவ்வாறு தொடங்கிய இப்போர், 136 நாட்களையும் கடந்து நீடித்து வருகின்ற சூழலில், இற்றைவரையும் காஸாவில் 29 ஆயிரம் பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர். அத்தோடு 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். காஸாவில் 85 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற முகாம்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ளனர். அங்கு உணவு, குடிநீர், மருந்துப் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது.

இஸ்ரேலின் ஹரம் அபு சலம் நுழைவாயில் ஊடாக காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்லப்படுவதற்கு இஸ்ரேலியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். யுத்தம் நீடிப்பதால் ரபா எல்லை வழியாக மனிதாபிமான உதவிகள் காஸாவுக்குள் அனுப்பி வைக்கப்படுவதிலும் சீரின்மை ஏற்பட்டுள்ளது.

வடக்கு காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத சூழல் காணப்படுவதால் ஐ.நா. உலக உணவுத்திட்டம் அப்பிரதேசத்திற்கான மனிதாபிமான உதவித் திட்டங்களை நிறுத்தியுள்ளது. மனிதாபிமான உதவிகளை காஸா மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு யுத்தம் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது. இதனை உலக உணவுத்திட்டம், ஐ.நா. மனிதாபிமான நிவாரண அமைப்பு, யூ.என். ஆர்.டப்ளியு.ஏ உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்நிலையில் 18 மனிதாபிமான உதவி நிறுவனங்களின் தலைவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில், தண்ணீர் உட்பட காஸாவில் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக எச்சரித்துள்ளனர். உணவு, குடிநீர், மருந்து பற்றாக்குறை என்பன காஸாவில் பெரும் பிரச்சினையாகியுள்ளன. மக்கள் பட்டினிக்கும் வறுமைக்கும் முகம்கொடுத்துள்ளனர்.

காஸாவின் இம்மனிதாபிமான நெருக்கடி நிலை உலகின் கவனத்தையே ஈர்த்துள்ளது. அதனால் இப்போரை நிறுத்தி மனிதாபிமான உதவிகளைத் தங்குதடையின்றி காஸாவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெறுகின்றன. இஸ்ரேலிய மக்களும் கூட யுத்தத்தை நிறுத்தி பணயக்கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த யுத்தம் காரணமாக 14 இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள ரபாவுக்கு யுத்தத்தை விரிவுபடுத்தப் போவதாக சில தினங்களுக்கு முன்னர் இஸ்ரேல் அறிவித்ததோடு, ரபாவில் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் நூறு பேர் முதல் நாளிலேயே கொல்லப்பட்டனர். இடம்பெயர்ந்துள்ள மக்கள் செறிவாகத் தங்கியுள்ள பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அந்த நிலையில் ரபா மீது யுத்தம் முன்னெடுக்கப்படக் கூடாது என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இவ்வாறான சூழலில் காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் இப்பிரேரணையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு அல்ஜீரியா கொண்டு வந்தது. அதனையே அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து வலுவற்றதாக்கியுள்ளது.

முழுஉலகமும் காஸா மீதான யுத்தத்தை நிறுத்த வலியுறுத்தியும் அவற்றைக் கண்டுகொள்ளாத இஸ்ரேல், யுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதிலேயே குறியாக உள்ளது.

ஆனால் இஸ்ரேல் முன்னெடுக்கும் யுத்தத்தின் கடுமை, அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், அழிவுகள் குறித்து அமெரிக்கா அறியாததல்ல. அப்படியிருக்கையில் காஸா மீதான யுத்தத்தை நிறுத்த வலியுறுத்தும் பிரேரணையை அமெரிக்கா வீட்டோ மூலம் செல்லுபடியற்றதாக்கியது ஏன்? என்ற கேள்வி மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இந்நடவடிக்கை யுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க இஸ்ரேலுக்கு அளிக்கப்பட்ட சமிக்ஞையாகவே அமையுமென சர்வதேச ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் காஸா மீதான யுத்தத்தை நிறுத்த கோரும் பிரேரணை நிறைவேற்றப்படுவதை எதிர்க்கும் அதே அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகளுடன் இணைந்து இஸ்ரேல்_ ஹமாஸுக்கு இடையில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கிறது. இதன் நிமித்தம் மத்திய புலனாய்வு முகவரகத்தின் (சி.ஐ.ஏ) பணிப்பாளர் அமெரிக்க தரப்பில் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி வருகின்றார். இவ்வாரத்தின் நடுப்பகுதியில் எகிப்தில் நடைபெற்ற காஸா யுத்தநிறுத்தக் கலந்துரையாடல்களில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மத்திய கிழக்குக்கான விசேட பிரதிநிதி பிரட் மெக்குர்க் கலந்து கொண்டிருந்தார்.

இவை மாத்திரமல்லாமல் காஸா மீதான யுத்தத்தில் சிவிலியன்கள் பாதிக்கப்பட இடமளிக்கக்கூடாது என அடிக்கடி இஸ்ரேலை வலியுறுத்தும் அமெரிக்கா, சுதந்திரப் பலஸ்தீனை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் கூட முன்னெடுத்து வருகின்றது.

அதேநேரம், காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி யெமனின் ஹூதிக் கிளர்ச்சியாளர்கள் முன்னெடுக்கும் தாக்குதல்களை கட்டுப்படுத்தவும் அமெரிக்கா நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறவில்லை. இவை இவ்வாறிருக்க, இஸ்ரேலுக்கு தேவையான ஆயுதத் தளபாடங்களையும் நிதியுதவிகளையும் தாராளமாக வழங்கக்கூடிய நாடாகவும் இருக்கிறது அமெரிக்கா. அமெரிக்காவின் இச்செயற்பாடுகள் மக்களுக்கு ஆச்சரியமானதாகவும் புரியாத புதிராகவும் உள்ளது.

இவ்வாறான நிலையில் இந்த யுத்தநிறுத்த கோரிக்கைப் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்பு சபையில் மூன்றாவது தடவையாகவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கியுள்ளமைக்கு உலகின் பல நாடுகளும் ஆட்சேபனைகளையும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளன.

அதேநேரம் சீனாவின் ஐ.நா. வுக்கான பிரதிநிதி ஜான் ஜுங், இப்பிரேரணையை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்படியற்றதாக்கியதன் ஊடாக தவறான செய்தி வழங்கப்பட்டிருக்கிறது. காஸாவின் நிலை மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. காஸா போர் நிறுத்தத்திற்கு ஆட்சேபனை தெரிவிப்பது, தொடர் படுகொலைகளுக்கு பச்சைவிளக்கு கொடுப்பதில் இருந்து வேறுபட்டதல்ல' என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய பிரதிநிதி, 'அமெரிக்கா வீட்டோவை பாவித்தமை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் வரலாற்றில் மற்றொரு கறுப்பு பக்கம் என்றும் பலஸ்தீனியர்களை அவர்களது பிரதேசங்களில் இருந்து வெளியேற்றி இஸ்ரேல் மனிதாபிமானமற்ற திட்டங்களை நிறைவேற்றவும் வகை செய்துள்ளது என்றுள்ளார். அத்தோடு பிரான்ஸ், சவுதி அரேபியா, கட்டார் உள்ளிட்ட பல நாடுகளும் அமெரிக்கா இப்பிரேரணைக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியமைக்கு ஆட்சேபனைகளையும் கவலைகளையும் வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் அமெரிக்காவின் ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ்கிரீன்ஃபீல்ட், 'உடனடி போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுப்பது, ஹமாஸ் இடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகளை தடுக்கலாம்' என்றும், முக்கியமான பேச்சுவார்த்தைகளை ஆபத்தில் ஆழ்த்தும் ஒரு தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்க முடியாது' என்றும் கூறியுள்ளார்.



மர்லின் மரிக்கார்...✍



**மனிதாபிமான யுத்தநிறுத்தமே காஸா மக்களின் அவலத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழி!**

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

# தேர்தலை அடிப்படையாக வைத்து கட்டவிழ்த்து விடப்படும் புரளிகள்!

## உறுதியான அறிவிப்பு வெளியானதையடுத்து அரசியல் கட்சிகள் அனைத்தும் பரபரப்புடன் ஆயத்தநிலையில்!

**இலங்கையில் அரசியல் ஊகங்கள் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பரபரப்புகளுக்குப் பஞ்சமில்லை. அதுவும் இவ்வருடம் தேர்தல் ஆண்டு என்பதால் பல்வேறு விதமான ஊகங்கள் முன்வைக்கப்படுவதுடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாளுக்குநாள் புதுப்புது ஊகங்கள் முன்வைக்கப்படுகின்றன.**

அரசியலமைப்பின்படி இவ்வருடம் ஒக்டோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டி இருக்கின்ற போதும், தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும், அதுவே தற்போதைய ஜனாதிபதிக்கு சாதகமாக இருக்கும் என்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஊகங்கள் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும், அவ்வாறு செய்வதன் ஊடாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது பாராளுமன்றத்தின் ஊடாக மீண்டும் ஜனாதிபதி தனது பதவியில் நீடிக்கவிருப்பதாகவும் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால் அதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அவையெல்லாம் புரளியைக் கிளப்புகின்ற செய்திகள்தான் என்பதில் சந்தேகமில்லை. இதனால் அது குறித்த பேச்சுக்கள் முடிவுக்கு வந்து தற்போது அரசியல் கட்சிகள் தம்மைத் தேர்தலுக்குத் தயார்படுத்தத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான பின்னணியிலேயே ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற பேச்சு தற்போது மீண்டும் எழுந்துள்ளது. அண்மையில் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையென்றும், சிவில் சமூகங்களை முன்னிலைப்படுத்தி தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்வதாகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவருடைய இந்தக் கருத்துக்கு அமைய அவ்வாறு செய்ய முடியுமா என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஆராயத் தொடங்கியுள்ளன. தேர்தலை ஒத்திவைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்ட வரலாறு இலங்கைக்கு ஏற்கனவே இருப்பதால், அவ்வாறானதொரு முயற்சி மேற்கொள்ளப்படலாமா என்பது அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்படும் சந்தேகமாகும்.

இருந்தபோதும், அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றபோதிலும், நடைமுறையில் அதற்கான சாத்தியம் குறைவென்றே கூற வேண்டும்.

மறுபக்கத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதன் ஊடாக ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற கருத்தும் நிலவியது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றபோதும், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஓர் உத்தியாக இதனைப் பயன்படுத்துவதற்கு அவர்களின் ஒத்துழைப்பு எந்தளவுக்கு இருக்கும் எனக் கூறமுடியாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாயினும் மூன்றில் இரண்டு பாராளுமன்ற பெரும்பான்மையுடன், சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். எனவே, தேர்தலை ஒத்திவைப்பதற்கான உத்தியாக இதனைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன.

இதுபோன்று மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலானது அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைய இவ்வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு கடந்த வாரம் அறிவித்திருந்தது.

ஜனாதிபதித் தேர்லை நடத்துவதற்கான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியும் என்றும் ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.





அதேநேரம், பொதுத்தேர்தல் அடுத்தவருடம் நடத்தப்படும் என்றும், 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் அத்தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்திருந்தது. அது மாத்திரமன்றி, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய எந்தவொரு தேவையும் அரசாங்கத்துக்குக் கிடையாது என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். தேர்தலை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் தயாராக இல்லையென்பதாலேயே இவ்வாறான செய்திகளைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை வீணாகக் குழப்பி வருவதாக அவர் கூறியிருந்ததுடன், முடிந்தால் தேர்தலை எதிர்கொண்டு காட்டுமாறும் அவர் சவால் விடுத்தார்.

### தேர்தலுக்கான ஆயத்தங்களும் குழப்பங்களும்:

தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்று வந்தாலும், தேர்தலொன்றுக்கான ஆயத்தப்படுத்தல்களில் கட்சிகள் இறங்கியிருப்பதையும் காணமுடிகிறது. தேர்தலை அடிப்படையாகக் கொண்ட கூட்டணி அமைப்பது தொடர்பில் பெரும்பாலான கட்சிகள் ஆரம்பகட்டக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன.

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உருவெடுத்துள்ள உட்கட்சிப் பூசல்!

கூட்டணி குறித்த பேச்சுக்கள் ஒருபுறம் இருக்கையில், தேர்தலை அடிப்படையாகக் கொண்டு ஒரு சில கட்சிகளுக்குள் உள்முரண்பாடுகளும் வலுப்பெற்றுள்ளன. குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு வலுவடைந்திருப்பதைக் காணமுடிகிறது. கட்சியின் தலைமைத்துவத்துக்கும், கட்சியின் தவிசாளருக்கும் இடையிலான முரண்பாடு நீதிமன்றம் வரை சென்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் உள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தன்னைக் குறித்த பதவியிலிருந்து நீக்குவதற்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவொன்றைப் பெற்றுள்ளார்.

தேர்தல் நடைபெறவிருப்பதால் கட்சித் தாவல்கள் அதிகரித்துள்ளன. இந்த வரிசையில் கோட்டாபய ராஜபக்ஷவின் விசுவாசியாகவிருந்த முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார். இவரை குறித்த கட்சியில் இணைத்தமைக்கு எதிராக அக்கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா போர்க்கொடி தூக்கியிருந்தார்.

கட்சியின் தவிசாளர் பதவியில் இருக்கும் தனக்குக் கூடத் தெரியாமல் தயா ரத்னாயக்க இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், இவ்வாறான நபர்களை இணைப்பது கட்சியைப் பலவீனப்படுத்தும் என்றும் அவர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இது தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் சிலரும் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இருந்தபோதும், கட்சியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமேதாச தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். கட்சியின் உள்ளக விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படுவது தொடர்பிலும் அவர் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.



இவ்வாறான பின்னணியில் தன்னை குறித்த கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கிவிடலாம் என்ற அச்சம் காரணமாக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவில் எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, தேசிய இணைப்பாளர் திஸ்ஸ அத்தனாயக்க, பொருளாளர் ஹர்ஷ த சில்வா ஆகியோரும் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் அதற்கு இடைக்காலத்தடை விதித்துள்ளது. இந்த விவகாரம் தற்பொழுது கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் ஒரு சில விடயங்களில் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதாகவும், கட்சியின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்பதில்லையென்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பிரதான எதிர்க்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு எதிர்காலத்தில் மென்மேலும் அதிகரிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்திருந்தார்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேறுவதற்கான எந்த நோக்கமும் இல்லையென பொன்சேகா முன்னர் கூறியிருந்தார்.

இது விடயம் தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்திருந்த ஜே.வி.பியின் முக்கியஸ்தரும், தொழிற்சங்கத் தலைவருமான வசந்த சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியே தற்பொழுது மக்களுக்கு ஆதரவாக இருக்கும் ஒரேயொரு கட்சியென்றும், மக்களுடன் நிற்கும் கட்சி என்ற அடிப்படையில் பல்வேறு தரப்பினர் தம்முடன் இணைந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இது பற்றி சரத் பொன்சேகாவிடமிருந்து எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் வெளியாகவில்லை.

### தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம்:

தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தென்னிலங்கைக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டிருப்பது போன்று, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பம் மேலும் தீவிரமடைந்துள்ளது. கட்சியின் தலைமைத்துவத்துக்குப் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் ஒற்றுமையைக் குலைப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அக்கட்சியின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. இந்த மாநாட்டைத் தொடர்ந்தும் நடத்தவிடாமல் நீதிமன்றத்தின் உதவி நாடப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலும் சுமந்திரன் எம்.பி இருப்பதாக கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி காணப்படும் சந்தர்ப்பத்தில் அக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த முரண்பாடு எதிர்த்தரப்புக்கு சாதகமாக அமைந்துவிடும் என்பதை அந்தக் கட்சிக்காரர்கள் புரிந்து கொள்ளவில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக இணைந்து தமிழ் மக்களுக்கான பேரம்பேசும் சக்தியாக உருவாவதை விடுத்து தமக்கிடையிலான அதிகாரப் போட்டிகளுக்குள் சிக்குண்டு ஒற்றுமையிழந்து நிற்கின்றன. தேர்தல் நெருங்க நெருங்க கட்சிகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் கட்சிக்குள்ளான இதுபோன்ற மோதல்கள் அதிகரிக்கலாம் என்பதே ஊகமாக உள்ளது.

# நாற்பதும் நமக்கே என்ற நம்பிக்கையுடன் களம் இறங்கும் தமிழக அரசியல் கட்சிகள்

இந்தியா ஒரு நோக்கு
வாராந்த அலசல் 07
நந்தவனம் சந்திரசேகரன்



இந்தியாவில் மக்களவைத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் அனைத்துக் கட்சிகளும் இறங்கியிருக்கும் நிலையில் தமிழ்நாட்டிலும் தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் 39 தொகுதிகளும் புதுச்சேரியில் ஒரு தொகுதி உட்பட நாற்பது தொகுதிகளும் தமக்கே என்று அனைத்துக் கட்சிகளும் நம்பிக்கையோடு தேர்தலை சந்திக்க தயாராகி வருகின்றன. தி.மு.க கூட்டணியில் எந்தக் குழப்பமும் இல்லாமல் தேர்தல் பணிகள் தொடங்கி விட்டனர். தொகுதிப் பங்கீடுகூட கூட்டணி கட்சிகளிடையே சுமுகமான முடிவுகளே எட்டப்பட்டு தேர்தல் பரப்புரைக் கூட்டங்களையும் நடத்தத் தொடங்கிவிட்டனர்.

நாற்பது தொகுதிகளிலும் தி.மு.க கூட்டணியே வெற்றி பெற வேண்டும் என்ற தீர்மானத்துடன் கட்சியின் அனைத்து முன்னணித் தலைவர்களும் பணியாற்றத் தொடங்கிவிட்டனர். தி.மு.க கூட்டணியே அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று தற்போதைய தமிழக அரசியல் சூழலும் தி.மு.க.வுக்கு சாதமாக இருக்கிறது. இதுவே நீடிக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாது. தேர்தல் நேரத்தில் நிலைமை மாறலாம். அதையும் கவனத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு தி.மு.க.வுக்கு இருக்கிறது.

அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில் கூட்டணி பலமாக இல்லாமல் சிதைந்து போய்க்கிடக்கிறது என்பதே தற்போதைய நிலவரம். ஏற்கனவே கூட்டணியில் இருந்த கட்சிகள் தற்போது அ.தி.மு.க.வோடு கூட்டணி வைத்துக் கொள்ள தயக்கம் காட்டி வருகின்றன. பா.ஜ.க.வோடு இனி கூட்டணி இல்லை என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திலிருந்தே அ.தி.மு.க.வுக்கு இறங்குமுகமாகத் தான் இருக்கிறது.

அ.தி.மு.க.விலிருந்து ஒ.பன்னீர்செல்வத்தை நீக்கிய பின்பு அ.தி.மு.க. தொண்டர்களிடையே யார் பக்கம் நிற்பது என்ற குழப்பம் நீடித்து வருகிறது. கோடிக்கணக்கான தொண்டர்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று இரண்டு பக்கமுமே கூறி வருகிறது. ஆனால், தொண்டர்கள் குழப்பத்தில் தான் இருக்கிறார்கள் என்று அ.தி.மு.க. தலைவர்கள் உணரவில்லை. அ. தி.மு.க. கட்சியினரிடையே சரியான ஒற்றுமையில்லாததால். மக்கள் மத்தியில் மெல்ல மெல்ல தன் செல்வாக்கை இழந்து வருகிறது என்பதும் உண்மையே.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக செல்வ பெருந்தகை அறிவிக்கப்பட்டதிலிருந்து கட்சிக்குள் கொஞ்சம் குழப்பம் நீடிக்கிறது. தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக 5 ஆண்டுகளாக நீடித்து வந்த கே .எஸ் . அழகிரி தேர்தல் நேரத்தில் மாற்றப்பட மாட்டார் என்றே எதிர்பார்க்கப்பட்டது . ஆனால், காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைமை அவரை மாற்றிவிட்டு, புதிய தலைவராக செல்வ



பெருந்தகையை நியமனம் செய்துள்ளது. மக்களவை தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் ஏற்கனவே தலைவராக இருந்த, கே.எஸ். அழகிரியை நீக்கிவிட்டு செல்வ பெருந்தகைக்கு தலைவர் பொறுப்பு வழங்கியது கட்சியில் உள்ள ஒரு சிலருக்கு பிடிக்கவில்லை. குறிப்பாக, விளவங் காடு தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் விஜயதாரணி. காங்கிரஸ் தலைமைக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளார். பா.ஜ.க.வில் இவர் இணையலாம் என்ற தகவலும் பரபரப்பாகி வருகிறது, ஆனால், பா.ஜ.க.வோடு இணைந்து அவர் மீண்டும் போட்டியிட்டால் வெற்றி பெறுவது சந்தேகமே என்று காங்கிரஸ் கட்சியினர் கூறி வருகின்றனர்.

இதுபோல கட்சிமாற்றத்திற்கு தயாராக இருப்பவர்களை பா.ஜ.க.வும் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ள தயாராகவே இருக்கிறது. ஏனென்றால் தமிழ்நாட்டில் பா.ஜ.க நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்ற கனவோடு தேர்தல் களத்தில் போராடி வருகிறது. நாற்பதும் நமக்கே என்பது பா.ஜ.க.வுக்கு கனவாக மட்டுமே இருக்கும் என்பது வேறு விடயம், பா.ஜ.க.வோடு அ.தி.மு.க.வை இணைத்து விட வேண்டும் என்று பல முயற்சிகள் மேற்கொண்டும், அது முடியாமல் போனதால் பா.ஜ.க.வால் தமிழ்நாட்டில் வெற்றி பெற முடியாது என்பதே உண்மை. தி.மு.க. கூட்டணியில் இருக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன் கூட்டணியில் இருந்தாலும், சில முரண்பாடும் இருப்பதாக கருத்துத் தெரிவித்துள்ளார். மக்களவைத் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கக்கூடிய சக்தியாக இருக்கவேண்டும், என தி.மு.க. கணக்குப் போடுவதில் தவறில்லை ஆனால், கூட்டணிக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டியதேவையிருக்கிறது.

கூட்டணிக் கட்சிகளின் பலம் தி.மு.க.வுக்கு மேலும் அரணாகத்தான் இருக்கும். குறிப்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு தொகுதி ஒதுக்குவது தேசத்தின் இராணுவத்துறைக்குச் செலவிடுவது போன்றது என்று தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையின்போது குறிப்பிட்டிருக்கிறார். எங்களை எந்தளவுக்கு அரவணைத்துக் கொள்கிறார்களோ அந்தளவுக்கு தி.மு.க. கூட்டணிக்கு பலம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

2021 சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்த அ.தி.மு.க கூட்டணி தற்போது சிதறிக் கிடக்கிறது. அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பா.ம.க தற்போது வெளியேறிவிட்டது. அது ஏன் வெளியேறியது, எப்போது வெளியேறியது என்று யாருக்கும் தெரியது. அதே நேரத்தில் பா.ம.க., பா.ஜ.க.வுடன் இணைந்து போட்டியிடவும் வாய்ப்பு இருக்கிறது.

அ.தி.மு.க.வோடு கூட்டணி வைத்துக் கொள்ள விரும்பாத மற்ற கட்சிகளை எல்லாம் இணைத்து பா.ஜ.க. தலைமையில் கூட்டணி அமைக்கலாம். அதற்கும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகள் தான் இங்கே கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்பது வழக்கம். ஒரு சில தேர்தல்களில் புதிய கூட்டணிகள் அமைத்தும் வெற்றி பெற முடியவில்லை. இன்றைய சூழலில் தி.மு.க கூட்டணி மட்டுமே பலமாக இருக்கிறது. வெற்றி வாய்ப்பும் இவர்களுக்கே அதிகமாக இருக்கிறது. திரைப்பட நடிகர்களின் கட்சிகளான விஜயகாந்தின் தே.மு.தி.க, கமல்ஹாசனின் மக்கள் நீதிமையம், சீமானின் நாம் தமிழர், சரக்குமாரின் சமத்துவ மக்கள் கட்சி, தற்போது புதிதாக அரசியலில் கால்பதிக்கும் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் இவை எல்லாம் பெயரளவில் கட்சிகளாக செயற்படலாம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்கு இன்னும் நீண்ட காலம் போராட வேண்டும். தேர்தல் களத்தில் இவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளலாம்.

இந்திய அரசியலில் ஆட்சிக்கு யார் வரவேண்டும் என்று நீர்மானிக்கும் சக்தியாக, தமிழகம் இருப்பதால் தேசியக் கட்சிகளும் தமிழகத்தின் மீது அதிக கவனம் செலுத்தி வருகின்றன. நாற்பதும் யாருக்கு என்ற எதிர்பார்ப்புடன் தமிழ்நாட்டு மக்களும் காத்திருக்கின்றனர்.



## மோட்டார் சைக்கிளில் இருந்து கொண்டு டி56 துப்பாக்கியால்

# "விஜயகுமாரதுங்கவை இரண்டு முறை சுட்டேன்"

## அனைத்தையும் போட்டுடைத்த லயனல்

**அடையாள அணிவகுப்புக்காக லயனல் உள்ளிட்டவர்கள் ஹொரணை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் அவர்கள் ஆஜர்படுத்தப்படாமல் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டனர். மீண்டும் திரும்பி வரும் போது அவர்கள் பயணித்த வேனை, ஹொரணை பாணந்துறை வீதியின் பொல்கொட பாலத்திற்கு அருகில் நிறுத்திய சிலர், சிறைச்சாலை அதிகாரிகள் இருவருக்குக் கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி, லயனல் உள்ளிட்ட தரப்பினரை மீட்டுக் கொண்டு தப்பிச் சென்றனர். அது 1987ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் திகதியாகும்.**

மீட்கப்பட்டதன் பின்னர் லயனல் மஹரகமை பிரதேசத்தில் அமைந்துள்ள கராஜ் ஒன்றில் பணியாற்றுவதைப் போல அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தான். மஹரகமையில் தங்கியிருந்த காலத்தில், லயனல் கட்சி கலந்துரையாடல்கள் போன்றவற்றிலும் கலந்து கொண்டான்.

அந்நாட்களில் லயனல் தன்னை முழுமையாகவே கட்சிக்காக அர்ப்பணித்திருந்தான். லயனல் தங்க வைக்கப்பட்டிருந்ததும் கட்சியினால் வழங்கப்பட்ட வீடு மற்றும் அறைகளிலாகும்.

இந்த நேரத்தில்தான் பாணந்துறை பகுதியிலுள்ள இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த லயனல் அடங்கிய ஒரு குழுவினருக்கு அழைப்பு வந்தது. அதன் போது குறித்த முகாமின் வரைபடத்தைச் சுட்டிக்காட்டி, தாக்குதல் திட்டத்தை ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சாந்த பண்டார விவரித்தார். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளராக இருந்த சாந்த பண்டார, பல்கலைக்கழக மாணவர் நீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் ஜே.வி. பியின் மத்திய குழு உறுப்பினராக அந்தக் காலப் பகுதியில் முன்னேறியிருந்தார். சாந்த பண்டாரவே திட்டம் தொடர்பில் தனக்கு விளக்குவார் என லயனலிடம் கூறியது ஹேரத் எனப்படும் டார்சன் வீரசிங்கவாகும். இராணுவ முகாமுக்குள் நுழைந்து, இராணுவ அதிகாரிகளைக் கைது செய்து, அங்கிருந்து ஆயுதங்களை வெளியே கொண்டுவருவது தொடர்பில் குழுவினருக்கு விளக்கமளித்த சாந்த பண்டார, நாட்டில் தோன்றியிருக்கும் நிலைமைகள் குறித்து நீண்ட நேரம் குழுவினருக்கு அறிவுறுத்தினான். அனைத்து அறிவுரைகளையும் கூறிய சாந்த பண்டார, தனது மோட்டார் சைக்கிளில் ஏறி வெளியேறிச் சென்றான். மூன்று குழுக்களாக வாதுவ இராணுவ முகாமைத் தாக்கச் சென்றவர்களுள் ஒரு குழுவினர் பொலிஸாரிடம் சிக்கியதையடுத்து அவர்களது அந்த முயற்சி தடைப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் லயனலின் தங்குமிடமாக இருந்தது, தெல்கந்த சந்தியிலிருந்து உடஹமுல்ல வீதியில் சுமார் நூறு மீற்றர் தொலைவில் அமைந்திருந்த வீடொன்றேயாகும். தோல்வியில் முடிந்த தாக்குதல் முயற்சியின் பின்னர் லயனல் தான் தங்கியிருந்த தெல்கந்த சந்தியில் உள்ள அறைக்கு வந்தான். அவனின் 'இமீடியட் பொஸ்' ஆக இருந்தது சரத்தாகும். மறுநாள் காலை பத்து மணியளவில் லயனலைத் தேடி அறைக்கு வந்தான் சரத். முந்தைய நாள் நடந்த சம்பவத்தைப் பற்றி லயனலிடம் சரத் கேட்டறிந்து கொண்டான். இரவில் லயனலின் அறைக்குத் மீண்டும் வந்த சரத், ஒரு குழுவினர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டதால் உடனடியாக அறையை விட்டு வெளியேறுமாறு கூறினான். தனது உடமைகளை ஒரு பையில் போட்டுக்கொண்ட லயனல், சரத்துடன் சேர்ந்து மோட்டார் சைக்கிளிலேயே பிலியந்தலை எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் அமைந்துள்ள கட்சிக்குரிய வீட்டுக்குச் சென்றான்.

ஜகத், களுத்துறை சுசில் எனும் டில்வின் சில்வா உள்ளிட்ட தரப்பினரே அன்றைய தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

பிலியந்தலையில் குழுவினர் தங்கியிருந்த போது கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்த லொகு சரத் இன்னொருவருடன் வந்து, தான் கொழும்பு பிரதேசத்திலிருந்து மாற்றலாகிச் செல்வதாகவும், அவனுடன் வந்திருந்த ஜயந்த கொழும்பு மாவட்டத்தைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் கூறினான். ஜயந்த 28 வயதையுடைய, ஐந்தரை அடி உயரத்தைக் கொண்ட, நீளமான முகத்தைக் கொண்ட மெலிந்த நபராகும். அவரது தலைமுடி குட்டையாக வெட்டப்பட்டு, ஒரு பக்கமாக வாரப்பட்டிருந்தது. பேசும்போது தலைமுடி நெற்றியில் விழும். நீண்ட கால்சட்டை மற்றும் சட்டை அணியும் அவர் காலணிகள் அணிபவராகும். பிக்குகள் எடுத்துச் செல்வது போன்ற குடை ஒன்றை எப்போதும் எடுத்துச் செல்வது ஜயந்தவின் வழக்கமாகும்.



லயனல் ரணசிங்க தனது வீட்டில்



படுகொலை செய்வதற்காக சென்றபோது...



1987 ஏப்ரல் 12 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்..

ஜயந்த என்ற பெயரில் தனது சாட்சியத்தில் லயனல் விபரித்தது லலித் விஜேரத்னவைப் பற்றியாகும். அரவிந்த, கபில மற்றும் ஜயந்த ஆகிய ஏனைய பெயர்களால் அழைக்கப்படும் அவன், பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் பயில்பவனாகும். வெள்ளை அறிக்கைக்கு எதிரான போராட்டம் உள்ளிட்ட அந்த காலகட்டத்தில் இடம் பெற்ற அனைத்து மாணவர் போராட்டத்திலும் தீவிரமாக அவன் ஈடுபட்டிருந்தான். மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உதலாகம ஆணைக்குழு லலித் விஜேரத்னவின் மாணவர் அந்தஸ்தையும் நீக்கியது. பின்னர் மாணவர் இயக்கத்திற்காக தன்னை முழு நேரமாக அர்ப்பணித்த லலித், சோசலிச மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் பதவி வகித்தார்.

ஒருநாள் அவர்கள் பிலியந்தலை சென்ட்மிச்சேல் ஹோட்டலில் சந்தித்தனர். பானங்களை அருந்திக் கொண்டு அவர்கள் சென்ட்மிச்சேல் ஹோட்டலின் புல்வெளியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். லயனலிடமும், ஹேரத்திடமும் வேலை ஒன்றை ஒப்படைக்க வேண்டியுள்ளதாகக் கூறிய ஜயந்த, "விஜயகுமாரதுங்கவை ஒழிக்க வேண்டும்...." எனக் கூறினான். "விஜயகுமாரதுங்க இந்திய சமாதான ஒப்பந்தத்திற்குச் சார்பாகச் செயற்படுகின்றார். மாகாண சபை முறைக்கும் அவர் சார்பாகச் செயற்படுகின்றார். அதற்காக அவர் நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் கூட்டங்களை நடத்தி விடயங்களை மக்களுக்கு கூறுகின்றார். அவருக்குள்ள பிரபலத்தின் காரணமாக இளைஞர்கள் அவரது கூட்டங்களில் அதிகளில் கலந்து கொள்கின்றனர். அதைக் கண்டு வங்குரோத்து அடைந்து போயுள்ள பழைய இடதுசாரிக் கட்சிகள் அவருடன் சேர்ந்து முன்னணி ஒன்றை உருவாக்கியுள்ளன. இந்திய சமாதான ஒப்பந்தம் மற்றும் மாகாண சபை முறைகளுக்கு ஜே.வி.பி. எதிரானது. நாம் மாகாண சபை சட்ட மூலத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடுகிறோம். விஜய குமாரதுங்கவின் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் புளொட் குழுக்களுடன் இணைந்து ஆயுதப் பயிற்சியைப் பெறுகின்றது. விஜயவின் முன்னணியின் பாதுகாப்பிற்காக, அவர்கள் எங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள். இது தொடர்பில் விஜயவுக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் அவைகளைக் கேட்காமல் செயற்படுகின்றார். அவருக்கு இறுதி எச்சரிக்கையும் கூட விடுக்கப்பட்டுள்ளது... எனவே அவரை ஒழிக்க வேண்டும்....." என ஜயந்தவின் விளக்கத்திற்குப் பிறகு அசோக பேசினான்.

டார்சனையும் லயனலையும் நாளை நான்கு மணிக்கு கிருலப்பனை நூலகத்திற்கு அருகில் உள்ள பஸ் நிலையத்திற்கு வரச் சொன்னான் அசோக.

பேசிக் கொள்ளப்பட்டதன் பிரகாரம் லயனலும் டார்சனும் கிருலப்பனை பிரதேசத்தை வந்தடைந்தனர். அங்கு அவர்களை அசோகனும் மற்றொரு நபரும் சந்தித்தனர். விஜய குமாரதுங்க தொடர்பான விபரங்கள் அந்த நபருக்கு தெரியும் எனவும், விஜயவின் வீடு உள்ளிட்ட விபரங்களை லயனல் மற்றும் டார்சன் ஆகியோருக்கு விளங்கப்படுத்துவதற்கே அவன் வந்துள்ளதாகவும் கூறிய அசோக, அவர்கள் இருவரிடமும் வேலைகளை ஒப்படைத்து விட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

கிருலப்பனை நாரஹேன்பிட்டி வீதியூடாக, கிருலப்பனை பொலிஸ் நிலையத்தைக் கடந்து, வீதியோரத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமையும் கடந்து, விஜயவின் வீட்டை, லயனல் மற்றும் டார்சன் ஆகியோருக்கு குறித்த நபர் காட்டினர். விஜயவின் வீட்டின் கேட் பிரதான வீதியின் அருகில் அல்லாமல், இராணுவ முகாமின் பக்கத்திலேயே இருந்தது. அந்த கேட் பெரியதொரு கேட் என்பதையும், தள்ளித் திறக்கும் வகையில் உள்ளதையும் லயனல் அவதானித்தான். வீட்டைக் கடந்து சென்ற மூவரும் வீதியின் மறுபக்கத்துக்கு மாறி, அருகிலுள்ள கடையில் அமர்ந்து தேநீர் அருந்தினர். தேநீர் அருந்திவிட்டு, அந்தக் கடைக்கு முன்னால் இருந்த கால்வாய்க்கு அருகில் செல்லும் வீதியில் அவர்கள் பயணித்தது விஜயவின் தாயின் வீட்டுக்குச் செல்லும் வீதியை லயனலுக்கும், டார்சனுக்கும் காட்டுவதற்காகும். தினமும் மாலை ஆறு அல்லது ஆறு முப்பது மணியளவில் விஜய தனது தாயைப் பார்ப்பதற்காக அந்த வீதியில் வாகனத்தில் செல்வது வழக்கம் என லயனலிடம் விளக்கிய குறித்த புது நபர், திட்டத்துக்கு அந்தச் சந்தர்ப்பம் முக்கியம் என்று சொல்லாமல் வலியுறுத்தினார்.

லயனல் விஜய குமாரதுங்கவை ஒருமுறை ஹொரணை பொதுச் சந்தைக்கருகில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து பார்த்திருந்தான்.

பல மாலை நேரங்களை இலக்கைத் தேடி கழித்த போதிலும், இருவராலும் விஜயவைக் கண்டு கொள்ள முடியாமல் போனதால் காலை நேரத்தில் அந்த இடத்திற்குச் செல்லுமாறு அசோக அவர்களுக்கு ஆலோசனை வழங்கினான். ஒரு நாள், இருவரும் அங்கிருந்தபோது, கிருலப்பனை பக்கத்திலிருந்து நீல நிற காரைச் செலுத்திக் கொண்டு வந்த விஜய, காரை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு வீட்டுக்குச் செல்தை லயனல் கண்டான். காற்சட்டை அணிந்து, சேர்ட்டை மேலே போட்டுக் கொண்டு விஜய இருந்ததை லயனல் கண்டான். "வீட்டுக்கு முன்னால் வெளியில் வைத்தாவது வேலையை முடிக்க வேண்டும்..." என லயனலிடம் அசோக கூறியது, லயனல் விஜயவைப் பார்த்த சந்தர்ப்பத்தைப் பற்றி அசோகவிடம் விபரித்த போதாகும். வீட்டுக்கு அருகிலேயே இராணுவ முகாம் ஒன்று இருப்பதால் ஆபத்து இருப்பதாக லயனல் கூறிய போது, அசோகவின் பதிலாக இருந்தது, "முகாமில் உள்ளவர்கள் வருவதற்குள் வேலையை முடியுங்கள்..." என்பதுதாகும்.

சில நாட்களின் பின்னர் வந்த அசோக, "விஜயவின் வீட்டுக்கு எதிரே கடை ஒன்றுள்ளது. வேலையைச் செய்வதற்கு நான் அந்தக் கடையை எடுத்துத் தருகிறேன்..." என்று லயனலிடம் கூறினான். ஏற்கனவே அந்தக் கடையை தான் பார்த்துள்ளதாகவும், அந்தக் கடையை வாடகைக்கு எடுத்ததன் பின்னர், கடையை பழுது பார்ப்பது போன்று அங்கிருந்து அங்கு துப்பாக்கியை வைத்துக் கொண்டு வேலையை முடிக்குமாறு அசோக ஆலோசனை வழங்கியது, வேலையை இன்னும் இலகுவாகச் செய்து முடிப்பதற்காகும்.



விஜயகுமாரதுங்க சுடப்பட்ட போது அவரது வீட்டின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டட்சன் ரக பிக் அப் வாகனம்..

இந்த கலந்துரையாடலுக்கு அடுத்த நாள், அதாவது பெப்ரவரி 15ம் திகதி, லயனலும் டார்சனும் காலை சுமார் எட்டு முப்பது மணியளவில் பாலவின் கராஜுக்குச் சென்றனர். அப்போது, அசோக, பால, ஸ்ரீகாந்த உள்ளிட்ட கராஜில் வேலை பார்க்கும் சிலரும் அங்கிருந்தனர். பேசி முடிந்த பின்னர் லயனலையும் டார்சனையும் நூலகத்திற்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் உள்ள ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்ற பால, "வேலை முடிந்ததும் துப்பாக்கியை இங்கே வைத்து விடுங்கள்" என்று அவர்களிடம் கூறிவிட்டு, அங்கிருந்த இளைஞனிடம் அவர்கள் இருவரையும் அறிமுகப் படுத்தினான். "இவர்கள் இருவரும் ஒரு பேக்கை கொண்டு வந்து தருவார்கள். அதை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்..." எனக் கூறிய பால, அந்த இளைஞனுக்கும் விடயத்தைப் புரிய வைத்து விட்டு, திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு இடம் கொடுத்தான். அதற்கு எதிரே உள்ள வீட்டிற்கு லயனல் உள்ளிட்டவர்களுடன் சென்ற பால, வேலை முடிந்து மோட்டார் சைக்கிளை நிறுத்தும் இடம் இதுதான் என அவ்விடத்தைக் காட்டினான். அப்போது அவ் வீட்டில், சிமென்ட் நடைபாதையின் மீது சிவப்பு நிற ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை லயனல் கண்டான்.

பதினைந்தாம் திகதி மாலை லயனலும், அசோகவும் விஜயவின் வீட்டுக்கு எதிரே உள்ள கடையை வாடகைக்கு எடுப்பதற்காக கடைக்கு அருகிலேயே இருக்கும் உரிமையாளரின் வீட்டுக்குச் சென்றனர். அவருக்குப் பணத்தைக் கொடுத்து கடையை வாடகைக்குப் பெற்றுக் கொண்டனர். அன்றிரவு, லயனல் தம்பேவின் வீட்டிற்குச் சென்றது வேலையை அவசரமாக முடிப்பது தொடர்பில் பேசுவதற்காகும். அசோகவும் வீட்டிற்கு வந்தான். "பாலவின் கராஜில் துப்பாக்கி இருக்கிறது... பால அதை தம்பியின் வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுப்பான்..." என அசோக கூறினான். கடையை சரி செய்வது போன்று தாம் நடந்து கொள்வதால் வாள், சுத்தியல் மற்றும் பலகை போன்றவற்றை வாங்குவதற்காக பணம் தேவை என லயனல் கூறிய போது, வாள் மற்றும் சுத்தியலை டெரன்ஸ் பாஸிடம் வாங்கிக் கொள்ளுமாறு கூறி பலகை வாங்குவதற்காக முன்னூறு ரூபாய் பணத்தை அசோக லயனலிடம் வழங்க மறக்கவில்லை.



சுடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்

பதினாறாம் திகதி காலை மலர்ந்தது. காலையிலேயே டெரன்ஸ் பாஸின் வீட்டுக்குச் சென்ற லயனல் ஒரு வாள் மற்றும் ஒரு சுத்தியல் என்பவற்றை அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டான். நடக்கப் போவது எதனையும் அறியாத டெரன்ஸ் லயனல் கேட்ட உபகரணங்களை வழங்கியது அவை உரிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என நினைத்தாகும். பின்னர் தயாசன் டெய்லர் கடைக்கு அருகில் டார்ஸானை சந்தித்த லயனல், பிலியந்தலையிலிருந்து, கொழும்பு நோக்கிப் பயணிக்கும் பஸ்ஸில் ஏறி பாமன்கடை சந்தியில் இறங்கினான். கிருலப்பனை நூலகத்தில் லயனல் அமர்ந்திருந்ததோடு, டார்சன் மோட்டார் சைக்கிளுடன் வந்ததன் பின்னர் இருவரும் வாடகைக்குப் பெறப்பட்ட கடையின் உரிமையாளரின் வீட்டிற்குச் சென்றனர்.

நேரம் காலை பத்து, பத்தரை மணியைப் போல இருக்கும். வாடகைக்குப் பெறப்பட்ட கடையிலிருந்து வெளியேறிச் சென்ற இருவரும், கிருலப்பனை வீதிக்கு வந்தது, பாலவின் கராஜ்க்குச் செல்லும் நோக்கிலாகும். மோட்டார் சைக்கிளில் ஏறிய லயனல், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற டார்சனிடம் தான் பாலவின் கராஜிற்குச் சென்று துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வரும் வரைக்கும் மோட்டார் சைக்கிளில் சிறிது நேரம் சுற்றிவிட்டு வருமாறு கூறினான். அதனடிப்படையில் உள் வீதிக்கருகில் இறங்கிய லயனல், தனியாக பாலவின் கராஜிற்குச் சென்றான். பால, ஸ்ரீகாந்த மற்றும் மற்றொரு நபரும் கராஜில் இருந்தோடு, கராஜில் இருந்த துப்பாக்கி மற்றும் கிரனைட் அடங்கிய கறுப்பு நிற பேக்கை அருகில் ஒரு இடத்தில் வைக்க வேண்டும் என லயனல் பாலவிடம் கூறினான்.

லயனலும், பாலவும் அந்த பேக்கை எடுத்துக் கொண்டு தம்பியின் வீட்டுக்குச் சென்ற போது அங்கு தம்பியின் தாயே இருந்துள்ளார்.

"இவர் வந்தால் இந்த பேக்கை அவரிடம் கொடுங்கள்" என தம்பியின் தாயிடம் லயனலை அறிமுகப் படுத்தி வைத்த பால, அந்த பேக்கை அவளிடம் கொடுத்தான். ஒரே இலக்கை நோக்கிச் செயற்படும் இருவரும் இரு வேறு பாதைகளில் புறப்பட்டனர். பால மீண்டும் கராஜுக்குச் சென்றபோது, லயனல் விஜயின் வீட்டுக்கு எதிரே வாடகைக்குப் பெறப்பட்ட இடத்தின் உரிமையாளரது வீட்டுக்கு அருகில் சென்றான். அந்நேரம் டார்சன் மோட்டார் சைக்களில் அங்கு வந்து காத்திருந்தான். அந்தநேரம் காலை சுமார் 11.30 இருக்கும்.

கடையின் உரிமையாளர் வரும் வரைக்கும் சுமார் முப்பது நிமிடங்களில் இருவரும் அவ்விடத்தில் காத்திருந்த போது, அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறியது. விஜயகுமாரதுங்கவுக்கு இருந்த பிரபலத்தினால் நாட்டில் உள்ள அனைவருக்கும் அவரைப் பார்ப்பது வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாக இருந்தது. அவரைப் பார்ப்பதற்காக மாத்திரம் பல நாட்கள் காத்திருந்து அவர் வருகிறார் எனக் கூறப்படும் இடங்களில் ரசிகர்கள் கூடியிருப்பது வழக்கமான ஒரு நிகழ்வாகியிருந்தது. இந்த நாள் விஜயவின் வரவை எதிர்பார்த்து நாட்கள், வாரங்கள், மாதங்களாக காத்திருந்த லயனலுக்கு, வீதியின் மறுபுறத்தில் விஜய காரைத் தானே ஓட்டிச் செல்வதைக் காணக்கிடைத்தது. லயனல் மற்றும் டார்சனுக்கு விஜய இருவருக்கு மட்டுமே தெரிந்தது அந்தநாள் நாட்டுக்கே மறக்கமுடியாத நாளாகப் போகின்றது என்றும் அதற்கு இன்னும் சில நிமிடங்கள் மாத்திரமே இருந்தது என்றும். சூரியன் உதிக்கும் நேரம் கவனமாக இருக்க வேண்டிய நேரம் என்பது கிராமப்புற நம்பிக்கையாகும். இது போன்ற நேரத்தில் காயம் ஏற்பட்டாலும் இரத்தப்போக்கை நிறுத்துவது சிரமம் என்பது கிராம மக்கள் நம்பிக்கை. இப்போது வந்திருப்பதும் அவ்வாறான ஒரு நேரமாகும். லயனல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலத்தில் அந்த நேரத்தைப் பற்றி பின்வருமாறு விபரித்திருந்தான்.

தான் வந்த காரை வீட்டின் முன்னால் உள்ள மரத்திற்கு அருகில் நிறுத்திய விஜய, காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் சென்றார். வீட்டுக்குள் நுழையும் கேட்டுக்கு முன்னால் வெள்ளை நிற டபள் கெப் வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

"விஜய குமாரதுங்க வந்துவிட்டார்..."

டார்சன் லயனிடம் கூறும் போதே, லயனல் அவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"விஜே இப்போது வீட்டிலிருந்து மீண்டும் வெளியே வருவார்..... அப்போது செய்வோமாமா..."லயனலிடம் டார்சன் கேட்டான்.

துப்பாக்கியுடனான பையை கொண்டு செல்வதும், அதனை நீண்ட நேரம் சைக்கிளில் வைத்திருப்பதன் ஆபத்து தொடர்பிலும் லயனல் டார்சனிடம் வினவினான். பையை எடுத்து வந்து அதனை மோட்டார் சைக்கிளில் வைத்து, மோட்டார் சைக்கிளை கடை அமைந்துள்ள தோட்டத்தில் நிறுத்திவிட்டு இலக்கு வரும்வரைக்கும் காத்திருப்பது சிறந்தது என்பதே டார்சனின் கருத்தாக இருந்தது.

இருவரும் பேக் வைக்கப்பட்டிருந்த தம்பியின் வீட்டிற்கு சென்று அங்கிருந்த பெண்ணிடம் பையை பெற்றுக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறினர். துப்பாக்கியை வைக்குமாறு கூறப்பட்ட வீடான சமந்தவின் வீட்டுக்கு இருவரும் சென்றது மீதி வேலைகளுக்குத் தயாராவதற்காகும். இருவரும் சமந்தவின் அறைக்குள் சென்றபோது, சமந்தவும் அறையில் இருந்தான். லயனல் துப்பாக்கியை கட்டிலில் வைத்து துப்பாக்கியை லோட் செய்ய ஆரம்பித்தான். இதையெல்லாம் சமந்த பார்த்துக் கொண்டிருக்கும் போது டார்சன் வீதியில் மோட்டார் சைக்கிளில் இருந்தான்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் லயனல் கதையின் உச்சக்கட்டத்தை விவரித்துக் கொண்டிருந்தபோது, அதன் பணிப்பாளர் சந்திரா ஜயவர்த்தன லயனலிடம் சில கேள்விகளைக் கேட்டார்.

**கேள்வி :** அந்த வீட்டிலிருந்த நபர், நீங்கள் விஜயகுமாரதுங்கவைத் துப்பாக்கியால் சுடப் போவதை அறிந்திருந்தாரா....?

**பதில் :** நாம் விஜயவை சுடப் போவதைப் பற்றி நான் அவரிடம் சொல்லவில்லை. அவர் அதைப் பற்றி அறிந்திருந்தாரா என எனக்குத் தெரியாது.

**கேள்வி :** அன்றைய தினம் விஜயகுமாரதுங்க மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் போவதை பால அறிந்திருந்தானா....?

**பதில் :** ஆம். அதை பால அறிந்திருந்தான்.

ஏனைய கேள்விகளுக்குப் பதில் கூறிய லயனல், மீண்டும் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் லயனல் கூறியதை அவ்வாறே தருகிறோம்.

"நாம் பையை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் கடைக்கு அருகில் சென்றோம். தோட்டத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கொண்டு வந்த பேக்கையும் அதிலேயே வைத்துவிட்டு நாம் வீதிக்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தோம். சுமார் ஐந்து அல்லது ஆறு நிமிடங்கள் அளவில் நாம் வீதியில் நின்றிருந்த போது விஜயகுமாரதுங்க வீட்டுக்கு வெளியே வருவதை நாம் அவதானித்தோம்.... அவர் தனியாகவே வெளியே வந்து வீட்டு கேட்டின் அருகில் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். உடனே ஹேரத்தும் (டார்சன் வீரசிங்க) நானும் மோட்டார் சைக்கிளில் ஏறினோம்.... நான் பையை மடியில் வைத்துக்கொண்டு ஜிப்பை திறந்தேன். துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு விஜய குமாரதுங்க நின்றிருந்த இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில் வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். விஜயகுமாரதுங்க தனது வீட்டின் கேட்டுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார். அவரது கையில் ஒரு கோப்பு இருந்தது. அவர் அவ்விடத்தில் நின்ற ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். நான் மோட்டார் சைக்கிளில் இருந்து கொண்டு டி 56 துப்பாக்கியால் விஜயகுமாரதுங்கவின் பின்புறமாக இரண்டு முறை சுட்டேன். அவர் எனக்கு முதுகைக் காட்டிவாறே நின்றிருந்தார்.

அந்த இரண்டு துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து அவர் கீழே விழுந்தார். நான் பைக்கை விட்டு இறங்கி அவ்விடத்திற்குச் சென்று அவரது தலையில் பல முறை துப்பாக்கியால் சுட்டேன். நான் மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கி வந்ததும் விஜய குமாரதுங்கவுடன் பேசிக் கொண்டிருந்த நபர் வீட்டுக்குள் ஓடினார். நான் அவர் மீதும் சுட்டேன். அவர் வீட்டுக்குள் ஓடினார். வீதியில் டபள் கெப் வாகனம் நின்றிருந்தது. அந்த வாகனத்தின் பின்னால் ஒருவர் அமர்ந்திருந்தார். நான் அத்திசையில் துப்பாக்கியால் சுட்டேன். ஹேரத் மோட்டார் சைக்கிளை கிருலப்பனைப் பக்கம் திருப்பி நின்று கொண்டிருந்தான். நான் விஜயகுமாரதுங்கவின் கையிலிருந்த பைலை எடுத்து அதனுள் என்ன இருந்தது எனப் பார்த்தேன். அதனுள்ளிருந்த சில தாள்கள் கீழே விழுந்தன. அந்நேரத்தில் துப்பாக்கியை எடுத்து வந்த பை கீழே விழுந்து கிடந்தது. நான் பைலை கீழே போட்டுவிட்டு, கீழே கிடந்த பையை எடுத்து அதனுள் துப்பாக்கியைப் போட்டு மறைத்துக் கொண்டு ஓடிச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டேன். மோட்டார் சைக்கிள் பொல்ஹேன் கொட வீதியில் சென்றது.

அந்நேரத்தில் நாரஹேன்பிட்ட திசையிலிருந்து பஸ் ஒன்று வந்து கொண்டிருந்தது. நாம் பொல்ஹேன்கொட வீதியில் நேராகச் சென்று மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைக்குமாறு கூறப்பட்டிருந்த வீட்டில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். ஹேரத் மோட்டார் சைக்கிளில் இருந்த போது நான் துப்பாக்கியை வைக்குமாறு பணிக்கப்பட்ட வீட்டுக்குச் சென்றேன். பால ஏற்கனவே அறிமுகஞ் செய்து வைத்த நபர் அங்கிருந்தார். அந்த வீட்டின் அறை ஒன்றுக்குள் சென்று பால எனக்கு அறிமுகப்படுத்திய நபரின் முன்னால் துப்பாக்கியை அன்லோட் செய்தேன். அப்போது எனது ட சேர்ட்டில் இரத்தக் கறை இருந்ததை அவதானித்தேன்.

ஓசித அத்தநாயக்க
தமிழில் : எம். எஸ். முஸப்பிர்

# திருகோணமலையில் கோலாகலமாக நடைபெற்ற 10ஆவது தேசிய சாரணர் ஜம்போரி

## இலங்கையின் தலைமை சாரணர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்






சாரணர் இயக்கம் 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ரொபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பாவல் என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சாரணர் இயக்கத்தின் செயற்பாடுகளைக் கண்ட இளம் யுவதிகளும் இந்தச் செயற்பாடுகளில் விருப்பத்தைத் தெரிவித்ததால் 1909ஆம் ஆண்டில் அம்மையார் பேடன் பாவல் பெண்களுக்கான சாரணர் இயக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

பேடன் பாவலின் மகளான செல்வி எக்னஸ் பேடன் பாவலிடம் அதன் அடுத்த கட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டன. எக்னஸ் பேடன் பாவலினால் பெண் சாரணர்களுக்கான Girl Guiding என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

பெண்களினதும், யுவதிகளினதும் ஆற்றல்களை கூடியளவில் மேம்படுத்தி அவர்கள் உலகில் பொறுப்புள்ள பிரஜைகளாக ஆக்குவதே இதன் நோக்காகும்.



உலகில் அதிக இளைஞர்கள் கைகோர்த்துள்ள இயக்கமாக சாரணர் இயக்கத்தைக் குறிப்பிட முடியும். தற்போது சுமார் 174 நாடுகளில் வியாபித்துள்ள இந்த இயக்கத்தில் சுமார் 570 இலட்சம் பிள்ளைகள் இணைந்துள்ளனர். இவ்வாறான பெரும் இயக்கத்தை ஆரம்பித்த பேடன் பாவல் 1857ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி இங்கிலாந்தின் லண்டனில் பிறந்தார். அவரது தந்தை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகும். சிறியவனான பேடன் மூன்று வயதாக இருக்கும் போது அவரது தந்தை மரணித்தார்.

பேடன் பாவல் சிறு வயதிலிருந்தே தனது சகோதரனுடன் இணைந்து ஆறுகள், ஓடைகளில் படகுகளில் பயணிப்பதற்கும், முகாம்களை அமைத்து குதூகலமாக இருப்பதற்கும் ஆர்வத்தைக் காட்டினார். 13ஆவது வயதில் புலமைப் பரிசில் பெற்ற சாட்டர் ஹவுஸ் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு ஒரு சிறந்த நடிகராகவும் ஆனார். அத்துடன் பாடசாலை கால்பந்தாட்டக் குழுவிலும், வாத்திய இசைக் குழுவிலும் மிளிரக் கூடியவராகவும் ஆனார். 19ஆவது வயதில் இராணுவத்தில் லெப்டினன் ஒருவராக நியமனம் பெற்ற அவர் இந்தியாவில் பத்து வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

சாரணர் இயக்கம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது 1912ஆம் ஆண்டிலாகும். பேடன் பாவலின் நண்பராக இருந்த பிரபல பொறியியலாளரான எப். ஜீ. ஸ்டீவன்ஸ் இதற்காகச் செயற்பட்டார். தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள மாத்தளை கிறிஸ்துவ வித்தியாலயத்தின் அதிபர் டீ. அல்பிரட் ஜயசிங்கவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விளக்கமளித்தார். அதற்குப் பிறகு சில நாட்களில் இலங்கையின் முதலாவது சாரணர் குழு உருவாக்கப்பட்டது. நான்கு சிங்கள மாணவர்களும், இரண்டு தமிழ் மாணவர்களும், ஒரு முஸ்லிம் மற்றும் பறங்கி மாணவர்களும் அந்த குழுவில் அடங்கியிருந்தார்கள். அந்த குழு இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்தது. கழுகு மற்றும் சிங்கம் என அவற்றுக்குப் பெயரிடப்பட்டது. ஆர். பி. கொட்டுவேகெதர, தம்போ நடராஜா, ஏ. எம். ஹமீட், ஜோன் கருணாரத்ன, பீட்டர் போலின், ஆர். பி. கபுவத்தை, எம். ஸஹாப்தீன் மற்றும் பீட்டர் குணதிலக ஆகியோர் முதலாவது சாரணர் இயக்கத்தின் அங்கத்தவர்களாயினர்.




அதன் பின்னர் 1913ஆம் ஆண்டு கண்டி தர்மராஜவிலும், 1914ஆம் ஆண்டு காலி மஹிந்தவிலும், 1914ஆம் ஆண்டு முதலாவது கொழும்பு குழு காலி முகத்திடலில் அமைந்துள்ள கிறிஸ்து தேவாலயத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆளுநரின் குழு என்றும் அழைக்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு இடம்பெற்ற 8 ஆவது உலக சாரணர் ஜம்போரி ஐரோப்பாவிற்கு வெளியில் இடம்பெற்ற முதலாவது உலக சாரணர் ஜம்போரியாகும். அதேபோன்று இலங்கையில் முதலாவது சாரணர் இயக்க ஜம்போரி 1952ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்றது. அதேபோன்று 1962ஆம் ஆண்டு இலங்கை சாரணர் இயக்கத்தின் பொன்விழா ஜம்போரி கொழும்பில் இடம்பெற்றதோடு, இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற 9 ஆவது சாரணர் ஜம்போரி 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் தலைமை சாரணர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 10ஆவது தேசிய சாரணர் ஜம்போரியை பெப்ரவரி 21ஆம் திகதியன்று திருகோணமலையில் ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை மற்றும் 28 நாடுகளைச் சேர்ந்த 11,500 சாரணர்களின் பங்குபற்றுதலுடன் தேசிய சாரணர் ஜம்போரி திருகோணமலையில் பெப்ரவரி 26ஆம் திகதிவரை நடைபெற்றது. ஜம்போரியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலம் இலங்கையின் விரைவான அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை வலியுறுத்தினார். சாதி மற்றும் மதத் தடைகளைத் தாண்டி நிகழ்வின் உள்ளடக்கிய தன்மையை அவர் வலியுறுத்தினார். மேலும் பொதுவான இலக்குகளை அடைவதில் தேசிய ஒற்றுமையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

பொறுப்புள்ள குடிமக்களை வளர்ப்பதில் அதன் பங்கை அங்கீகரித்து, சாரணர் சங்கத்தை விரிவுபடுத்துவதற்கான ஆதரவை ஜனாதிபதி வழங்குவதாக உறுதியளித்தார்.



களுதாவளை ஏழுமுக காளியம்மன் தேவஸ்தானத்தில் இருந்து நேற்று முன்தினம் 23ஆம் திகதி காலை அம்பிகை அடியார்கள் பறவைக் காவடி எடுத்து மாத்தளை பிரதான வீதி வழியாக சென்று ராஜ வீதி வழியாக மீண்டும் மாத்தளை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தை வந்தடைந்தனர். தீ மிதிப்பு , கற்பூர சட்டி எடுத்தல் என்பனவற்றைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்றன. அடியார்களின் நலன் கருதி முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் தண்ணீர்ப் பந்தல்கள் மூலம் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.




# மட்/மம/பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய மாணவர்களுக்கான புத்தகப் பைகள்



மட்/மம/பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் இவ்வாண்டு முதலாம் தரத்தில் புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களை வரவேற்கும் தேசிய நிகழ்வு இம்மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பாடசாலை அதிபர் மொகிதீன் சனசமூக நிலைய நிருவாகத்திடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கோறளைப்பற்று பிரதேச சபையின் சனசமூக உத்தியோகத்தர்கள் ஏ.ஹாரூனின் வழிகாட்டலில் துரிதமாகச் செயற்பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் முகமாக இம்முறை தரம் 1 புதிய கல்வி ஆண்டில் கல்வியை ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான பாடசாலை பைகளை மொகிதீன் சனசமூக நிலைய நிருவாகத்தினர்களான தலைவர் ஏ.ஜி.அஸ்லம், செயலாளர் எஸ்.ஐ.எம்.நிப்ராஸ், பொருளாளர் பிஸ்தாமி ரவூப், நிருவாக உறுப்பினர் டி.கே.அனீம் ஆகியோரின் பங்களிப்புடன் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மத்திய கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.அஹ்சாப்பும் , ஏனைய அதிதிகளாக அந்நூர் தேசிய பாடசாலையின் அதிபர் எச்.எம். தாஹிர், ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் எம்.ஆப்தீன், நூரியா ஜும்ஆ பள்ளிவாயல் தலைவர் எஸ்.எம்.எம்.ஹுசைன், மொகைதீன் தைக்கா பள்ளிவாசல் தலைவர் எம்.பி.எம்.ரொஷான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மொகிதீன் சனசமூக நிலையம் பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் கல்வி, கலாசார, சமூகச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# லேக்ஹவுஸ் நிறுவனரின் 138ஆவது பிறந்தநாள் நிகழ்வு






லேக்ஹவுஸ் நிறுவனர் டி.ஆர். விஜயவர்தனவின் 138 ஆவது பிறந்தநாள் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி இரவு மற்றும் 22ஆம் திகதி பகல் நிகழ்வுகளாக லேக்ஹவுஸ் வளாகத்தில் இடம்பெற்றது. கடந்த 21ம் திகதி முழு இரவும் தர்ம போதனைகள் இடம்பெற்றன.

21ஆம் திகதி இடம்பெற்ற பிரித் நிகழ்வில் மகா சங்கத்தினர், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், லேக் ஹவுஸ் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், லேக் ஹவுஸிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், லேக் ஹவுஸ் பௌத்த சங்கத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பணியாளர்கள் ஊர்வலமாக லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு வருகை தந்தனர். லேக் ஹவுஸ் நிறுவனத்தின் வாசலில் தலைவரினால் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தவிடம் கலசம் கையளிக்கப்பட்டது. லேக்ஹவுஸில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கண்கவர் பிரித் மண்டபத்தில் கலசத்தை வைத்த பின்னர் அமைச்சர் வழிபட்டார்.

பிரித் மண்டபத்தைச் சுற்றியிருந்த மின்விளக்குகளை ஏற்றும் நிகழ்வு லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், நடவடிக்கைப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல மற்றும் மேலதிக பொது முகாமையாளர் விராஜித் பொயிஸ் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டது. பிரித் ஓத முன்னர் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர், விஜய பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் விஜயவர்தன ஆகியோரால் டீ. ஆர். விஜயவர்தனவின் புகைப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. முழு இரவும் தர்ம போதனையின் பின்னர் மறுநாள் (22) பகல் 25 பேரைக் கொண்ட மகா சங்கத்தினரின் சமய நிகழ்வு இடம்பெற்றதோடு, இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர்கள், லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், நிறுவனச் செயலாளர் சட்டத்தரணி திருமதி சுதர்ஷி பிரசங்க உள்ளிட்ட பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# மலையக மக்களின் விடிவெள்ளியாய் 'பாரத் – லங்கா' வீட்டுத் திட்டம்



“சொல் அல்ல செயல்” என்பதே இளம் அரசியல் தலைவரான அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அரசியல் அஸ்திரமாக – உயிர் நாடியாக இருந்துவருகின்றது. இதனை மென்மேலும் உறுதிப்படுத்தும் வகையில் மற்றுமொரு புரட்சிகரமான அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்து, மலையக மறுமலர்ச்சிக்கான பயணத்தை மேலும் துரிதப்படுத்தியுள்ளார் என்றே கூற வேண்டும்.

**மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளின் பிரகாரம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது.**

ஆம், 2017 இல் அறிவிக்கப்பட்டிருந்தாலும் இதுவரையில் இழுபறியில் இருந்து வந்த இந்தியாவின் நிதி உதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள ‘பாரத் லங்கா’ 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மலையகம் வந்திருந்தபோது, மலையக மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டம்பற்றி அறிவித்தார். அதன்போது இருந்த பொருளாதார சூழ்நிலை இலங்கையில் தற்போது இல்லை. உலக சந்தையிலும் கட்டுமான பொருட்களின் விலைகள் எகிறியுள்ளன. இதனால் அன்று ஒரு வீட்டுக்கு ரூ 9 முதல் 10 லட்சம் வரை மதிப்பிடப்பட்டிருந்தாலும் தற்போது செலவு இரட்டிப்பாகியுள்ளது. இந் நிலையில் இது தொடர்பில் இந்



தியாவுடன் பேச்சு நடத்தி, அதற்கான தொகையையும் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பாரத் லங்கா 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

இந்திய அரசின் நிதி உதவியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஒருங்கிணைப்பின்கீழ் இதற்கான பிரதான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவும் பங்கேற்றிருந்தார்.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, காலி, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 45 தோட்டங்களில் வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

7 பேர்ச்சஸா, 10 பேர்ச்சஸா?

எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் வீடமைப்பு திட்டத்தை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னரைப்போல வீடுகளை மட்டும் நிர்மாணித்துவிட்டு, நீர், மின்சாரம், வீதி உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்காமல் விடாது, சகலவிதமான உட்கட்டமைப்பு வசதிகளுடனும்தான் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படும். அதுமட்டுமல்ல வீடுகளை வழங்கும்போது சட்டபூர்வமான காணி உரித்தும் வழங்கப்படும்.

10 பேர்ச்சஸ் காணி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது, வீடுகளை அமைப்பதற்கு காணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஜனாதிபதியும் 10 பேர்ச்சஸ் என அறிவித்துவிட்டார். இருந்தும் 7 பேர்ச்சஸ் எனவும் புரளி கிளப்பி விடப்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான வீட்டுத்திட்ட அறிவிப்பை இந்தியா விடுத்த நிலையில், அப்போதைய அமைச்சர் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்திய அரசுடன் பேச்சு நடத்தி, அதில் 4 ஆயிரம் வீடுகளை மலையகத்துக்காக பெற்றெடுத்தார்.

இதற்கமைய வடக்கு, கிழக்கில் முதல் இரு கட்டங்களாக 46 ஆயிரம் வீடுகளையும், மூன்றாம் கட்டமாக மலையகத்தில் 4 ஆயிரம் வீடுகளையும் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பமானது. அந்த 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தைக்கூட உட்கட்டமைப்பு வசதிகளுடன் நிறைவுசெய்து கொடுத்தது அமைச்சர் ஜீவன் தொண்டமான் தான் என்பதை கூறியாக வேண்டும்.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளின் பிரகாரம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. இதன்ஓர் அங்கமாக மலையக பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையும் விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

ஒரு இளம் அரசியல் தலைவராக குறுகிய காலப்பகுதிக்குள் அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் , அபிவிருத்தி திட்டங்கள், உரிமை அரசியல் என்பன மக்கள் மனங்களில் அவருக்கான ஆதரவு அலையை பெருக்கியுள்ளது.

இலங்கை வாழ் மக்கள் முறைமை மாற்றத்தை கோருகின்றனர். அந்த முறைமை மாற்றத்துக்குள் ‘சொல்லுக்கு செயல் வடிவம் என்பதும்’ பிரதானமாகும். ஆக சொல்லுக்கு செயல் வடிவம் கொடுக்கும் ஜீவனின் அரசியல் இன்று பல்வேறு மட்டங்களிலும் பேசப்படுகின்றது.

**க.கிஷாந்தன்**
ஊடக செயலாளர்
நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சு



யாழ்ப்பாணம் சங்கானை மெதடிஸ்த மிசன் பாடசாலையின் கால்கோள் விழாவின்போது பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பாடசாலையில் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி உற்சாகப்படுத்தினார்.

# பெண்கள் மீதான பாலியல் சீண்டல்களை வளைத்துப் பிடிக்கும் பொலிசார்

‘பெண்கள் பணிந்து போவார்கள், பொறுத்துக் கொள்வார்கள் என்ற ஆண்களிடம் காணப்படும் எண்ணமே பாலியல் சீண்டல்கள் தொடர்வதற்கான காரணம். உண்மையைச் சொன்னால், தமக்கு எதிரான சுரண்டல்களை பெண்களே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். பெண்கள் டயானா கமகேயை முன்மாதிரி பெண்ணாகக் கொள்ளலாம்’



**பெண்கள் நெருப்பாக மாறும்வரை சீண்டல்கள் தொடரவே செய்யும்!**

இந்நாட்டின் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், கொள்கை வெறியுடன் தற்போது நாட்டில் நடத்தி வரும் ஒரு நடவடிக்கைதான் ‘யுக்திய’ அதாவது நீதி. இதற்கு பாராட்டுகள் ஒருபக்கமிருக்க, அவருக்கு எதிராக கடும் விமர்சனங்களும் கூடவே இந் நடவடிக்கையை நிறுத்தும்படி அழுத்தங்களும் காணப்படுகின்றன. இவை எதையும் பொருட்படுத்தாமல், தான் ஜூன் மாதம்வரை போதைப்பொருள் பாவனைக்கு எதிரான ‘யுக்திய’ நடவடிக்கையை முன்னெடுத்து செல்வேன் என்ற மாறா உறுதியுடன் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது. இந்த யுக்தியவின் மற்றொரு பகுதிதான், பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களை ஒழித்துக்கட்டுவதாகும்.

இதன் அடிப்படையில்தான் கடந்த ஏழாம் திகதி புதிய நடவடிக்கை ஒன்றை அமைச்சர் ஆரம்பித்தார். நாட்டின் பொதுப் போக்குவரத்தான ரயில் மற்றும் பஸ்களில் பயணிக்கும் பெண்கள் மற்றும் சிறுவர், சிறுமியர், மாணவிகள் மீது நடத்தப்படும் பாலியல் ரீதியான அத்துமீறல்களை கண்காணிக்கும் திட்டமே இதுவாகும். பஸ் மற்றும் ரயில்களில் பயணிக்கும் பெண்கள் மீது சன நெரிசலைப் பயன்படுத்தி ஆண்களால் மேற்கொள்ளப்படும் வக்கிர பாலியல் சேஷ்டைகள் ஒன்றும் பெண்களுக்கு புதியவை அல்ல.

இலங்கையில் தனியார் வசமிருந்த பயணிகள் பஸ் போக்குவரத்தை ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க 1957ஆம் ஆண்டு அரசுடமையாக்கினார். பயணிகள் பஸ்சேவை ஒரு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அவர் கொள்கையாக இருந்தது. அதன்படி, 1958 ஜனவரி முதலாம் திகதி இ.பொ.ச. ஆரம்பிக்கப்பட்டது. குறித்த நேரத்தில், நேர சூசிகையின் பிரகாரம் பஸ்கள் இயங்கும். நாடெங்கும் ஒரே மாதிரியான பஸ்கட்டணம் என்பது மக்களை மகிழ்ச்சிப்படுத்தியது. மக்கள் பெருவாரியாக பஸ்களை பயன்படுத்தத் தொடங்கினர். அமர்ந்துதான் பயணிக்க வேண்டும் என்ற நிலை மாறி நெருக்கியடித்துக் கொண்டு பயணிக்கும் வழக்கம் ஆரம்பமானது. பெண் பஸ் பயணிகளை பாலியல் ரீதியாக சீண்டுவதும் அன்றைக்கு ஆரம்பித்த ஒன்றுதான்.

பொதுப்போக்குவரத்தில் நிம்மதியாகப் பயணிக்க முடியவில்லை என்ற பெண்களின் ஆதங்கம் அரை நூற்றாண்டைக் கடந்த பின்னர், இப்போதுதான் அரசு அதற்கு காது கொடுத்திருக்கிறது. காலை ஏழு மணிமுதல் 10 மணிவரையும் மாலை 5 மணிமுதல் ஏழு மணிவரையில் பஸ் மற்றும் ரயில்களில் கூட்டம் அலைமோதுவது வழக்கம். பெரும்பாலான பாலியல் சீண்டல்கள் இச் சந்தர்ப்பத்திலேயே நிகழ்கின்றன. நின்று கொண்டு பயணிக்கும் பெண்களை, நெரிசலையும் பஸ்சின் ஆட்டத்தையும் பயன்படுத்தி பின்புறமாக உராய்வது, இடுப்பில் கைவைத்து வருடுவது. மார்பகங்களை வருடுவது, பெண்கள் கூச்சத்தாலும், பயத்தாலும் செய்வதறியாது தவிப்பதை அவர்களின் சம்மதமாக எடுத்துக் கொண்டு மென்மேலும் முன்னேறி எல்லைகளைக் கடப்பது என்பதே பாலியல் வன்முறையாக அறியப்படுகின்றது.

பாலியல் சீண்டல்கள் பஸ், ரயில்களில் நடக்கும்போது அதை வேறொருவர் கவனித்தால் அவர் அது பற்றி உரத்த குரலில் தன் அதிருப்தியை வெளிப்படுத்துவதும் வழக்கம். அமர்ந்திருக்கும் ஆண், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எழுந்து இடமளிப்பதன் மூலம் அபயக்கரம் நீட்டுவதும் நடக்கிறது. சீண்டலைக் கவனிக்கும் ஒரு பெண், இந்த ஆண்களால் பஸ்சில் கூட நிம்மதியாக பயணிக்க முடியவில்லையே என சத்தமிட்டு அப்பெண்ணை இக்கட்டில் இருந்து காப்பாற்றுவதும் உண்டு. தைரியசாலிகளான பெண்கள் தன்னை இடித்துக் கொண்டு நிற்கும் ஆணை முறைத்துப் பார்ப்பது, குரலெடுத்து திட்டுவது சில சமயம் செருப்பைக் கழற்றி அடிக்க முனைவது என களத்தில் இறங்கி விடுகிறார்கள். பாலியல் சீண்டல்களை ஆண்கள் மேற்கொண்டாலும் பெண்களை இக்கட்டில் இருந்து காப்பாற்றுவது பெரும்பாலும் ஆண்கள்தான்.

ஒரு பெண் தான் வயதுக்கு வந்த காலத்தில் இருந்து 55,60 வயது வரை, உடற்கட்டைப் பொருத்ததாக, பாலியல் ரீதியான சீண்டல்களையும், நெருக்கடிகளையும் சந்திக்கத்தான் செய்கிறார். இது உலகம் முழுவதுக்கும் பொதுவானது. ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பின் கீழ் பெண்கள் பலவீனமானவர்கள் என அறியப்படுவதால் அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பல வழிகள், உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெண் என்பவள் ஆணின் தேவைகளை நிறைவேற்றித் தருபவள் என்ற பார்வை எழுபது ஆண்டுகளை பின்நோக்கிப் பார்த்தாலேயே, வேறெங்கும் போக வேண்டாம், நம் குடும்ப மற்றும் சமூக அமைப்புகளிலேயே இது நீடிப்பதை அவதானிக்க முடியும்.

மாதவிடாய் காலத்தில் பெண்கள் மங்கள நிகழ்வுகளில், வழிபாடுகளில் கலந்து கொள்ளக் கூடாது, விதவைகள் மங்கள நிகழ்ச்சிகளில் முன்னணி வகிக்கக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் இன்றளவும் உள்ளன. பெண்களுக்கு மரியாதையும், முதலிடம் தருவதாகக் காட்டிக் கொள்ளும் ஆண்கள் உள்ளூர பெண்களை போகப் பொருளாகக் கருதுகிறார்கள் என்பது பொதுவான விஷயம். இதை மேலும் ஆராயப் போனால் இனப்பெருக்கத்தை மையப்படுத்தி இயங்கும் இயற்கை சக்தியின் தன்மைகளில் ஒன்றாக இந்த இனக் கவர்ச்சியை நாம் கருத வேண்டியிருக்கும்.

ஒரு காலத்தில் பெண்களை பூட்டி வைத்ததற்கு காரணமே, சம்பந்தப்பட்டவர்களைத் தவிர வேறு எவருமே இச்சித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். இன்று கல்வியில் எந்த அளவுக்கும் பயணிக்கவும், தொழில்களைத் தேடிக் கொண்டு சொந்தக் காலில் நிற்கவும் பெண்களால் முடியும். பூட்டிய கதவைத் திறந்து வெளியே வந்தப் பெண்கள் தற்போது குடும்பத்தின் மத்தியிலும், அலுவலகங்களிலும், பொது வெளியிலும், பஸ், ரயில் பயணங்களின் போதும், நெரிசலான இடங்களிலும் பாலியல் ரீதியான பிரச்சினைகளையும் சீண்டல்களையும் சந்தித்து வருகிறார்கள். இந்நாட்டின் அரசுகள் இதைக் கண்டு கொண்டதில்லை. இப்போதுதான அரசின் பார்வை இந்தப் பக்கமாகத் திரும்பி இருக்கிறது.

முன்னர் Nymphomaniac என்ற ஒரு ஆங்கிலப் பதம் சில பெண்களிடம் இருக்கக்கூடிய அதீத பாலியல் கிளர்ச்சியை சுட்டுவதாக பயன்பாட்டில் இருந்தது. நமது ஆண்களும் கலகலப்பாக பழகக்கூடிய பெண்களை, இவள் ஒரு ‘நிம்ப்’ என அடையாளப்படுத்துவார்கள். பல பெண்கள் தமது இயல்பான கலகலப்பு மனப்பான்மையை வீட்டிலேயே மூட்டை கட்டி வைத்துவிட்டு தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருப்பதற்கான காரணம் ஆண்களின் இந்த தவறான பார்வையே. அதே சமயம் அந்த பாலியல் வேட்கை கொண்ட ஆண்களைக் குறிக்கும் ‘சட்ரோமேனியா’ (Satyromaniac) என்ற பதம் என்றைக்குமே பொதுபயன்பாட்டில் இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இப் பதங்கள் நீக்கப்பட்டு அதீத பாலியல் இச்சை உடையவர்கள் (Hyper Sexual behavior) என்ற பதம் இரு பாலாளர்களையும் குறிப்பதாக பயன்பாட்டில் உள்ளது.

பொது போக்குவரதத்தில் பெண்களுக்கு எதிரான இச் சீண்டல்களை இந்தப் பின்னணியிலேயே நோக்க வேண்டும். இந் நெருக்கடியில் இருந்து தமக்கு விடுதலை வேண்டும் என்பது பெண்களின் நீண்டகால ஆதங்கம். இதற்கும் முடிவு கட்டியாக வேண்டும் என அமைச்சர் டிரான் அலஸ் கருதியதன் விளைவாகவே, ‘யுக்திய’ வின் ஒரு பகுதியாக பொலிசார் பஸ் மற்றும் ரயில்களைக் கண்காணிக்கத் தொடங்கினர்.

ஆரம்பிக்கப்பட்ட பெப்ரவரி ஏழாம் திகதி நாடெங்கும் 234 குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு ஆரம்பமானது. இதுவரை கையும் களவுமான அகப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் மன்னிப்பு கேட்டு, அபராதத்தொகை செலுத்தி வெளியே வந்துவிடலாம் தான். ஆனால், இவர் பஸ்சில் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு கைதானவர் என்ற களங்கம் அவரை நீண்ட காலமாக துரத்தி வரும் என்பதுதான் பெரிய தண்டனை. நுவரெலியா பகுதியில் பஸ்சில் பயணித்த சாதாரண பெண் உடை அணிந்த பொலிஸ் மீதே ஒரு 42 வயதுக்காரர் நெருங்கி சில்மிஷம் செய்யப்போக, அவர் கைது செய்யப்பட்டு நுவரெலிய நீதிமன்றத்தால் 22ஆம் திகதிவரை காவலில் வைக்கப்பட்ட செய்தி வைரலானது.

இச் சீண்டல்களில் ஈடுபடுவோரில் பலர் திருமணமாகி குழந்தை குட்டி என சம்சாரி வாழ்க்கை நடத்துபவர்கள். இச் சீண்டல்கள் பரவலாக இடம் பெறுவதற்கு, பெண்கள் பொறுத்துக் கொள்வார்கள், எதிர்வினையாற்ற மாட்டார்கள் என்ற எண்ணமே காரணம். எனினும் பொலிசாரை பஸ்களில் பயணிக்கச் செய்வதன் மூலம் பொதுப் போக்குவரத்து சீண்டல்களை முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியாது. அரசு பஸ்களில் பெரும்பாலான பயணிகள் டிக்கட் வாங்கிக் கொண்டு பயணிப்பதற்கான பிரதான காரணம், இடை நடுவில் பரிசோதகர்மார் பஸ்சில் ஏறி டிக்கட் கேட்டால் அது மானக்கேடாகி விடுமே என்ற முன்ஜாக்கிரதை உணர்வே.

தினமும் இலட்சக்கணக்கான மக்கள் பயணிக்கும் பஸ்களைக் கண்காணித்து சீண்டல்காரர்களை வளைத்துப் பிடிப்பது சாதாரண வேலை அல்ல. நீண்ட காலத்துக்கு இது சாத்தியப்படாது. ஆனால் ஒரு பயப் பிராந்தியை, அகப்பட்டால் மானக்கேடாகிவிடுமே என்ற அச்ச உணர்வை, உருவாக்க இது உதவும்.

முன்னர் பஸ்களில் தாராளமாக புகை பிடிப்பார்கள். புகை பிடிக்காத ஆண்களும் பெண்களும் சகித்துக் கொண்டிருந்தார்கள். என்றைக்கு பெண்கள் வெளிப்படையாக எதிர்த்து, புகைத்தால் கீழே இறங்கு! என சத்தமிட ஆரம்பித்தார்களோ அன்று முதலே பஸ்களில் புகைப்பது முடிவுக்கு வந்தது. பொது போக்குவரத்தில் தொடரும் பாலியல் சீண்டல்களை பொலிஸ் தலையீட்டால் அல்ல; பெண்கள் நேரடியாக தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதன் மூலம் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வரலாம்.

ஆணுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலமே பாலியல் சீண்டல்களில் இருந்து மகளிருக்கு விடுதலை கிட்டும்.

(20 ஆம் பக்க பார்க்க)

**– அருள் சத்தியநாதன்**



தெஹிவளை, மவுன்ட் ரோயல் சர்வதேச பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம் தெஹிவளை, பள்ளிடோர மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் சிக்கந்தர் முஹித்தீன் தலைமையில் தெஹிவளை பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி லலித் அத்தநாயக்க பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் குவைத் தூதரகத்தின் முன்னாள் பொதுசனத் தொடர்பு அதிகாரி முஹிதீன் பாவா மாணவர் ஹம்தான் மின்ஸாருக்கு சின்னம் சூட்டுவதையும், சின்னம் சூட்டப்பட்ட மாணவ, மாணவியர் அதிபர் உள்ளிட்ட அதிதிகளுடன் குழுவாக படத்தில் காணலாம்.




## மாற்றத்தில் மனதிருக்கும்

ஆதவனின் ஒளியில் அனலிருக்கும்
பாதகனின் பார்வையில் பகையிருக்கும்
நாதனின் நகைப்பில் நலமிருக்கும்
மாதவனின் மனதில் மகிழ்ச்சியிருக்கும்

தீரனின் தீரத்தில் திகிழிருக்கும்
கயவனின் கருத்தில் கபடமிருக்கும்
மாயவனின் மாண்பில் மகிமையிருக்கும்
அயலவனின் அன்பில் அருமையிருக்கும்

மங்கையின் மனதில் மகிழ்ச்சியிருக்கும்
தங்கையின் தயவில் தகைமையிருங்கும்
பங்காளியின் பார்வையில் பகைமையிருக்கும்
சிக்காளியின் சிரிப்பில் சிறுமையிருக்கும்

வஞ்சகனின் வாழ்வில் வஞ்சினமிருக்கும்
கஞ்சனின் கடமையில் கருமையிருக்கும்
நோஞ்சனின் நெஞ்சில் நோயிருக்கும்
குஞ்சானின் குடும்பத்தில் குற்றமிருக்கும்

குடியானவனின் கோபத்தில் கொள்கையிருக்கும்
நடிப்பவனின் நாடகத்தில் நளினமிருக்கும்
படிப்பவனின் பாடத்தில் பாசமிருக்கும்
கொடியவனின் கொள்கையில் கொடுமையிருக்கும்

பணம் பாசத்தில் பகையிருக்கும்
மணம் வாசத்தில் மகிழ்ச்சியிருக்கும்
கனம் பண்ணினால் கௌரவமிருக்கும்
தினம் உண்பதனால் திகைப்பிருக்கும்

பிள்ளை பிறந்ததினால் பிணைப்பிருக்கும்
உள்ளம் உயர்ந்ததினால் உண்மையிருக்கும்
கள்ளக் காதலால் கவலையிருக்கும்
பள்ளப் படுகுழியில் பாம்பிருக்கும்

பெற்றோரின் பெயரில் பெருமையிருக்கும்
உற்றோரின் உள்ளத்தில் உண்மையிருக்கும்
கற்றோரின் கல்வியில் கருணையிருக்கும்
மாற்றோரின் மாற்றத்தில் மறதியிருக்கும்

உடப்பூர் வீரசொக்கன்

## மனம் விட்டு பேச



மனம் விட்டு பேச
யார் வேண்டும்
கேட்கிறார்கள்

யார் யாரெல்லாமோ
உறவின் வடிவங்களில்
சுற்றிவர இருக்கவே
செய்கிறார்கள்
ஆனாலும் நான் நினைத்த
வடிவில் அல்ல

யாருமே வேண்டியதில்லை
மனம் இருக்கும்
வகையில் நீங்கள்
இருக்கவிட்டிருந்தால்

நானோ மனக்கதவை
அடைத்து
அதன் திறப்பை
தூர எறிந்து
கன நாள் ஆகிறது

இமையி...

## சம்பிரதாயங்கள்

பிறகு சந்திப்போம்
இன்னுமொரு நாள் பேசுவோம்
திரும்பவும் வருவேன்

உன்னை காயப்படுத்தியிருந்தால்
உன்னை கோபப்படுத்தியிருந்தால்
உனக்கதிக நம்பிக்கைகள்
தந்திருந்தால்
உன்னை சங்கடப்படுத்தியிருந்தால்
என்னை மன்னித்துக்கொள்

உன்னை எனக்குப் பிடிக்கும்
உன்னை நான் மிகவும்
நேசிக்கிறேன்
உன்னை நான் என்
நினைவில் வைத்திருப்பேன்
என் பிரார்த்தனைகளில்
நீயும் இருப்பாய் உன் மீதான
என் அக்கறைகள்
எப்போதும் குறையாது
நீ எனக்காக வருத்தப்படாதே

இறுதியாக
நீ என்னிடம் ஏதாவது
சொல்ல விரும்புகிறாயா ?

விடைபெறுதலில்
இப்படியாக இத்தனை
சம்பிரதாயங்கள் இருக்கையில்

நீயோ
நமக்கிடையில்
ஒளிர்ந்து கொண்டிருந்த
ஒரு பச்சை விளக்கினை
எது வித
முன்னறிவிப்புகளுமின்றி
அணைத்திருக்கிறாய்

ஒரு பெருஞ் சுமையை
வலிதாங்காமல்
படாரென கீழே போட்டு
உடைப்பதைப்போல்!!

ஷிபானா அஸீம்



## எனக்குள்ளே என்னை தொலைத்துவிட்டேன்

எனக்குள்ளே என்னை
தொலைத்துவிட்டேன்,
நீண்ட நாட்களாக....
முகம் இருந்தும் தேடுகின்றேன்
உருவம் இல்லாமல்....
தொலைத்தது நானல்ல,
ஆனாலும்
தொலைக்கப்பட்டு விட்டேன்....
கேள்வி கேட்டால்,
பதில் புன்னகை மட்டுமே...
புன்னகைக்குள்
புதைக்கப்பட்ட என்னை
தேடுகிறேன் சில வேளை
நானாக இருந்து....
உன் அன்பு எங்கே..?
தொலைத்து விட்டேன்...
உன் அறிவு எங்கே..?
தொலைத்து விட்டேன்.
உன் ஆணவம் எங்கே..?
தொலைத்து விட்டேன்.
உன் கோபம் எங்கே...?
தொலைத்து விட்டேன்.
உன் உடை எங்கே..?
தொலைத்து விட்டேன்.
உன் நடை எங்கே..?
தொலைத்து விட்டேன்.
இப்படி அனைத்தையும் தொலைத்து,
எனக்குள் என்னை நானே தேடுகிறேன்.
என்னை நானே கண்டாலும்
இச் சமூகத்தில் வாழ மறுக்கின்றான்
எனக்குள் இருக்கும் நான்....
நடிப்பு அரங்கத்தில்
நானும் ஒரு நடிகனே..
நான் ஏற்ற பாத்திரம்
எனக்குப் பொருந்தா விட்டாலும்,
சமூகத்திற்கு நன்றாகவே
பொருந்துகின்றது....
என்னை போன்றே
ஒவ்வொருவரும் தம்மை
தாமே தேடுகின்றார்கள்...
இன்று அல்ல பல நாட்களாக.

இனியவன்
சங்கானை



## காதலர் தினம் ஆயிரம் வரலாம்

அன்பால் இணைந்து
பாசத்துடன்
மகிழ்ச்சியாக வாழ்வதே
இரு மனங்களின்
காதலின் தத்துவம்

நிலா வரும் போது
நட்சத்திரம் தேவையில்லை.
நீ வரும் போது
ஒளி தேவையில்லை

உன் வருகையின் அசைவு
என் இதயத்தின் ஓரத்தில்
தென்றலாய் வீசுகின்றதே

வருடத்தில் ஒருமுறை
காதலர் தினம் வந்தாலும்
நீ எனக்கு ஒவ்வொரு
நொடியும் காதலியே

ஆயிரம் இதய மலர்களைக்
கொடுத்தாலும் உன்
புன்னகையும் எனக்கு
காதலர் தினமாகவே
வலம் வருகிறது.

உலகமே நினைத்தாலும்
உன்மையான அன்பை
கொடுக்க முடியாது
உன் அன்பைத் தவிர

காதலர் தினம் ஆயிரம்
வரலாம் ஆனால்
உன் அன்பு தினம்
எனக்கு என்றும்
காதலர் தினமே.

சத்தார் எம். ஜாவித்



## ஒரு அறைகூவல்

தங்கமான அரிவை ஆயினும்
தக்ககாலம் வதுவை ஆகிட
அங்கமணி இன்றியே வீணாய்
அல்லலுறும் இழிவைக் கேளாய்

சிங்கநாதம் செய்தே தோழா
சிந்தையோடு எய்வோம் வாராய்
மங்கையர்கள் மன்றல் புரிந்தே
மகிழ்வோடு வாழ்தல் நிலைக்க

பங்கமான எண்ணம் களைந்து
பகலவன் கண்ட பனிபோல்
அங்கமணி அறவே ஒழித்தால்
அகிலம் நம்மை வாழ்த்துமே

சம்மாந்துறை ஏ.ஆர்.ஏ.கபூர்



## பள்ளிக்கூடம்



அள்ளி அள்ளி அறிவினை
அமுதாய் ஊட்டும்
நிலையமாய்
பள்ளிக்கூடம்
என்றுமே
பலரும்
போற்றத்திகழுது

பாட்டும் கதையும்
படிக்கலாம்
பயிர்கள் வளர்க்கப்
படிக்கலாம்
வாட்டம் இன்றி
செயற்படவே
உடற்பயிற்சி கற்கலாம்

கணித சமயப் பாடங்கள்
கவலும் சூழற் கல்வியும்
பணிகள் செய்த
அரசர் வாழ்வும்
படித்து மகிழ்வு
அடையலாம்

அன்பு நிறைந்த
ஆசான்கள்
அரவணைக்கும்
நண்பர்கள்
இன்பமாக
கற்றல் செய்ய
இனிமை சூழ்
பள்ளிதான்

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

## எரியும் நெருப்பு

நிலவொளியில் எங்கள் காதல்
வானை எட்டித் தொடுகிறது
நட்சத்திரங்களின் நடனம்,
இரவின் மெல்லிசை,
இனிமையான மென்மையான
அவளின் அரவணைப்பு
எல்லாச் சங்கதிகளும்
சடுதியாகச் சரணடைகின்றன.

அந்தி அணைப்பின் சாயலில்
எங்கள் இதயங்கள்
பிணைக்கப்படுகின்றன
மென்மையான
கருணையான காற்று
இரகசியங்களை
வெளிப்படுத்திக்
கிசுகிசுக்கின்றது
ஒவ்வொரு கதையிலும்
புதியதோர்
உணர்ச்சிப் பிரளயம்.

அவள் கண்கள்
நட்சத்திரங்களைப் போல
இரவை ஒளிரச்
செய்கின்றன
அன்பின் முடிவில்லாமை
ஆன்மாவை வழிநடாத்துகிறது.

கனவுகளின் பள்ளத்தாக்குகள்
ஆசைகளின்
சிகரங்கள் வழியாக
எங்கள் காதல்
பிரகாசமாய் எரிகிறது
என்றென்றும்
எரியும் நெருப்பாக!

எஸ்.ஏ. கப்பார்



## உண்மைக்கு வேலியாகு

உழைத்தவர்கள்
ஊருக்கு மறைத்து விட்டால்
பகல் படுத்து விடும்.

படித்தவர்கள்
பாமரனை
மடக்கி வைத்தால்
வெயிலும் குளிராகிவிடும்.

வீரங் கொண்டோர்
வீண் வாதம் வைத்தால்
புஷ்பங்கள்
முட்களாகி விடும்.

உழைப்போரை பசி
ருசி பார்த்தால்
ஆலையும்
அருகம் புல்லாகி விடும்.

பாலை வன உள்ளங்களே!
எரியாத விறகுகளே!
காஞ்சிலை மர வாசிகளே!
நெஞ்சை
பஞ்சாக்குங்களே!
நன்மைக்கு
நீருற்றாகுங்களே!

ஆட்டுக்கு
அருகம் புல்லாய்
ஆய்வாளருக்கு
ஆதார அடுக்குகளாய்
படிப்பாளிக்கு
வாசிப்பு கைவிளக்காய்
பலாப் பிசின்களே!
விடத்தை முட்களே!
தேன்
மொழி பெயர்ப்பாகுங்களே!

மூதூர் றிஸ்வின்

## நினைவுகளில் வாழ்பவர்கள்



நினைவுகளில் வாழ்கின்றவர்
நினைவுகளாகவே வாழ்கின்றார்
நினைவுகள் நிஜமாகுமென
நினைத்திருந்து வாழ்கின்றனர்

நினைவாகிப் போனவர்கள் மீண்டும்
நினைவுகளில் வந்து செல்கின்றனர்.
நினைவுகளை தந்து சென்றவர்கள்
நினைவுகளில் நாம் இல்லை.

இணுவில் வாகீசன்



## பூங்காற்றிலே உன் சுவாசம்

வீசிடும் தென்றலுடன்
பேசிடும் உன்னினைவு
காய்ந்திடும் நிலவுடன்
தேய்ந்திடும் என்னிளமை
உன் மடிசாய்ந்தே
கதைத்திட ஆயிரமிருக்கு
என் சோடியாகிட
அழைக்கிறேன் துயரமிழந்து

என்னை வாழவைக்கும்
உயிரும் நீயல்லவா..?
பூங்காற்றிலே உன்
சுவாசம் மேன்மையல்லவா..?

சிந்திடும் புன்னகையில்
துளிர்க்கிறேன் காதலனாய்
நீந்திடும் கனவில்
களிக்கிறேன் ஆவலாய்

கைகோர்த்திடு பெண்ணே
தொட்டிடுவோம் விண்ணை
மையலாகிடு என்னில்
வென்றிடலாம் உலகை..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்
ஏறாவூர்

# NDB கடனட்டையுடன் காதலர் மாத சலுகைகள்




இந்த காதலர் தினம் அமைந்துள்ள பெப்ரவரி மாதத்தில் NDB வங்கி பல தனிப்பட்ட சலுகைகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது. கடனட்டை வைத்திருப்பவர்கள் சிறந்த சேமிப்புகள் மற்றும் அழகான அனுபவங்களில் அனுபவித்திட இதுவே சரியான நேரம். பெப்ரவரி 1 முதல் பெப்ரவரி 29 வரை கிடைத்திடும் இந்த சிறப்புச் சலுகைகள், அன்பானவர்களுடன் அன்பளிப்பு மற்றும் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியை பகிர்ந்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

NDB கடனட்டை வைத்திருப்பவர்கள் காதலர் தின பொருட்கள் கொள்வனவு செய்வதில் ஆடம்பரத்தை பேணுவதுடன், பல்வேறு வகையான பொருட்களில் 25% வரை சேமித்து மகிழ்ந்திடலாம். நாகரீகமான ஆடைகள் மற்றும் நேர்த்தியான நகைகள் முதல் காதல் இரவு உணவுகள், நவநாகரீக சன்கிளாஸ்கள், மறக்கமுடியாத பயண அனுபவங்கள், அழகான காலணிகள் மற்றும் இன்னமும் பல பொருட்களுக்கு, NDB கடனட்டை வைத்திருப்பவர்கள் தள்ளுபடிகள் மற்றும் சலுகைகளை பெற்றிடலாம்.

இந்த சலுகைகளுடன் இன்னுமொரு மகிழ்ச்சிகரமான செய்தி, கடனட்டை உரிமையாளர்கள் இந்த குறிப்பிட்ட சலுகை காலத்தில் ரூபா 25,000 அல்லது அதற்கு அதிகமாக தங்கள் NDB கடனட்டைகளை பயன்படுத்தினால் திரைப்படம் ஒன்றுக்கான இரண்டு டிக்கெட்டுகளை வெல்லும் வாய்ப்பு உள்ளது.

NDB வங்கி பலதரப்பட்ட விற்பனையாளர்களுடன் கூட்டு சேர்வதில் பெருமை கொள்கிறது.அதன் கடனட்டை வைத்திருப்பவர்கள் சிறந்த சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை பெற்றிடுவதை உறுதிசெய்கிறது.இந்த கூட்டுச்செயற்பாடு, அதன் மதிப்புமிக்க கடனட்டை உரிமையாளர்களுக்கு இணையற்ற பலன்களை வழங்குவது NDBயின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

# Kantar Lighthouse 2023 அறிவுப்பகிர்வு நிகழ்வு

KANTAR ஸ்ரீ லங்கா தனது வருடாந்த அறிவு பகிர்வு நிகழ்வான KANTAR LIGHT HOUSE 2023 ஐ, சினமன் லேக்சைட் ஹோட்டலின் கிங்ஸ் கோர்ட்டில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையின் இளம் தலைமுறையினர், Gen Z பராயத்தினர் தொடர்பில் உள்ளார்ந்த தகவல்களை பகிர்ந்து கொண்டு, வர்த்தக நாமங்கள் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் ஒட்டு மொத்த வியாபார கட்டமைப்புகளில் நிலவும் முக்கிய போக்குகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டிருந்தது.

இந்த மாநாட்டில் இலங்கையில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள பல்வேறு வர்த்தக நாமங்களின் முன்னணி தலைமைச் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர். Kantar APAC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி லியுங் சியொங் தாய், Kantar தெற்காசியா, உள்ளார்ந்த தகவல் பிரிவின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் தீபேந்தர் ரானா மற்றும் Kantar தெற்காசியாவின் நிறைவேற்றுக்குழு ஆகியோர் நிகழ்வின் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், Kantar ஸ்ரீ லங்காவின் தலைமை அதிகாரி ஹிமாலி மதுரசிங்க




குறிப்பிடுகையில், மக்களின் தற்போது நிலவும் மன நிலையை புரிந்து கொண்டு செயலாற்றுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கியிருந்தார்.

அண்மைய வருடங்களில் தனிநபர்கள் எதிர்கொண்டிருந்த பல்வேறு அனுபவங்கள் தொடர்பில் அவர் குறிப்பிட்டதுடன், நடத்தைகளில் எவ்வாறு அவை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்பது பற்றியும் கூறினார். “

# சுகாதாரக் கல்வியின் முன்னோடியான IIHS நிறுவனத்தினால் புதிய பாடநெறிகள் அறிமுகம்

தெற்காசிய பிராந்தியத்தின் சுகாதாரக் கல்வியின் முன்னோடியான International Institute of Health Sciences (IIHS) தாதியர் சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய ஏராளமான பாடநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம், Nursing, Biomedical Science, Physiotherapy, Health Administration, Digital Health, Radiography, Optometry, Pharmacy, Nutrition and Health, Sports and Exercise Science, Paramedic science, Psychology, Education போன்ற பல்வேறு துறைகளுக்குரிய சான்றிதழ் பாடநெறி, உயர் சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் முதுமானி பட்டப்படிப்பு ஆகியவற்றை IIHS நிறுவனம் வழங்குகின்றது.



உயர் தரப் பரீட்சைக்கு எந்த பிரிவில் தோற்றி இருந்தாலும் மேற்படி பாடநெறிகளை கற்க முடியுமென்பதோடு, சாதாரணத் தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் அடிப்படை பாடநெறியை பூர்த்தி செய்து மேற்படி பாடநெறிகளை கற்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி பாடநெறிகளின் பெறுமதியில் 15 இல் ஒரு மடங்கை விட குறைவான கட்டணத்தில் IIHS நிறுவனத்தினூடாக மேற்படி பாடநெறிகளை கற்க முடியும். ஐக்கிய இராச்சியத்தின் (Coventry) கொவென்ட்ரீ பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்படி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இலங்கையில் கழிவு முகாமைத்துவ செயன்முறையில் புரட்சி செய்துள்ள Lumala

மூன்று தசாப்த காலத்துக்கு அதிகமான நிலைபேறான அர்ப்பணிப்புடன் இயங்கும் Lumala என பலராலும் அறியப்படும் சிட்டி சைக்கிள் இன்டஸ்ட்ரீஸ் மெனுபக்ஷரிங் (பிரைவட்) லிமிடெட், இலங்கையின் சைக்கிள் துறையில் சூழலுக்கு நட்பான புத்தாக்கமான செயற்பாடுகளில் தொடர்ச்சியாக தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. நிறுவனத்தின் பரந்தளவு தயாரிப்புகளில் Lumala இன் அர்ப்பணிப்பு வெளிப்படுவதாக அமைந்திருப்பதுடன், சாகச அனுபவத்தை நாடுவோருக்கான மவுன்டன் சைக்கிள்கள் முதல் தினசரி நகர்களில் பயணிப்பதற்கு உகந்த சாதாரண சைக்கிள்கள் வரை தன்வசம் கொண்டுள்ளது.

இலங்கையர்கள் மத்தியில் சூழல்சார் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், செயற்திறனுடனான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கவும் Lumala தன்னை அர்ப்பணித்துள்ளது. புத்தாக்கமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும் Lumala, சர்வதேச நிலைபேறாண்மை எனும் பரந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிக்கும் சூழலுக்கு நட்பான தீர்வுகளை வடிவமைப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த அர்ப்பணிப்பானது, ஸ்மார்ட் போக்குவரத்து தீர்வுகளில் Lumala வின் தலைமைத்துவத்தை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளதுடன், சூழல் வழிநடத்தலில் எமது ஈடுபாட்டையும் உறுதி செய்துள்ளது.




புத்தாக்கம் மற்றும் சூழல் வழிநடத்துதலுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டாக Eco Hauler இன் அறிமுகம் அமைந்துள்ளது. இந்த புதிய ebike cart இனூடாக, இலங்கையில் சுமார் நாளாந்த பிளாஸ்ரிக் கழிவு உற்பத்தி சுமார் 938 மெட்ரிக் டொன்களாக காணப்படும் நிலையில், வெறும் 4 சதவீதம் மட்டுமே மீள்சுழற்சிக்குட்படுத்தப்படும் நிலையில், கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவசர பிரச்சினைகளுக்கு தீர்வு காண எதிர்பார்க்கப்படுகின்றது.

# 13.5% பங்கிலாபத்தை பிரகடனம் செய்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர் சிறப்பு மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள் போன்றவற்றுக்கான அர்ப்பணிப்பின் பிரகாரம், 2023 நிதியாண்டுக்காக 13.5% தொகையை காப்புறுதிதாரர் பங்கிலாபமாக பிரகடனம் செய்துள்ளது. 2023ஆம் ஆண்டுக்காக ஆரம்பத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த பங்கிலாபப் பெறுமதியான 10% என்பதை விட, நிறுவனம் நிதிசார் உறுதித்தன்மை மற்றும் மீட்சி ஆகியவற்றை வெளிப்படுத்தி இயங்கி, 13.5% எனும் உயர் தொகையை பங்கிலாபமாக அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் உறுதியான செயற்பாடுகளை வெளிப்படுத்துவது மாத்திரமன்றி, வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தமது பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்கான நிலையை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், “மிகச் சிறந்த பங்கிலாப வீதத்தை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைவதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட தொகையை கடந்துள்ளோம். எமது பங்காளர்களுக்கு உயர் பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் எமது அர்ப்பணிப்புக்கான தெளிவான எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த தசாப்த காலப்பகுதியில் பிரகடனம் செய்யப்பட்ட அதியுயர் பங்கிலாப வீதமாக இது அமைந்துள்ளது. அதனூடாக, வெளியக சவால்களுக்கு முகங்கொடுத்த போதிலும், கடந்த காலங்களில் எமது தொடர்ச்சியான வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.” என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “மேலும் இந்த குறிப்பிடத்தக்களவு பங்கிலாப செலுத்தல் என்பது, எமது வாடிக்கையாளர்களின் ஆயுள் நிதியத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்குவதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 64,510 மில்லயனாக உயர்ந்திருந்தது..” என்றார்.

# Radisson Hotel Colombo மற்றும் Radisson Blu Resort Galleக்கு தரச்சான்றிதழ்



Radisson Blu Resort Galle மற்றும் Radisson Hotel Colombo ஆகிய ஹோட்டல்களுக்கு சிறந்த பாதுகாப்பு கொண்ட ஹோட்டல்கள் என்ற சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. சுவீடனை தளமாகக் கொண்ட சர்வதேச சான்றிதழ் நிறுவனமான Safehotels Alliance AB இதனை வழங்கியுள்ளது. உலகளவிலான ஹோட்டல்கள் மற்றும் மாநாட்டு மண்டபங்களுக்கு “The Global Hotel Security Standard” சான்றளிக்கின்றது. விருந்தினர்களது பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியவற்றில் இந்த இரண்டு ஹோட்டல்கள் வெளிப்படுத்தும் அர்ப்பணிப்பையே இந்த பாராட்டு உறுதிப்படுத்துகின்றது.

அத்துடன் Radisson Blu Resort Galle மற்றும் Radisson Hotel Colombo ஆகியவை இலங்கையின் முதல் இரண்டு ஹோட்டல்களாக Safehotels சான்றிதழை பெற்றுள்ளமையின் மூலம், இலங்கையின் விருந்தோம்பல் துறைக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

Radisson Hotel Colombo மற்றும் Radisson Blu Resort Galle ஆகியன சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் வகையிலான அபாயமற்ற தன்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயற்படுத்தியதையே, இப்பெறுமதியான அந்தஸ்தை கைப்பற்றியுள்ளதன் ஊடாக உறுதியாகியுள்ளது.

இரண்டு ஹோட்டல்களும் Safe Hotels Alliance AB ஊடாக அபாயமின்மை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் ஆகியவற்றை கடுமையான மதிப்பீடுகள், தணிக்கைகள் மற்றும் சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளன. நெருக்கடி முகாமைத்துவம், தீ பாதுகாப்பு மற்றும் அவசர கால பதிலளிப்பு உள்ளிட்ட நடைமுறைகளும் இதில் உள்ளடங்கும்.

பிரீமியம் தரத்திலான சான்றிதழ் பெறுவது தொடர்பாக Radisson Blu Resort Galle பொது முகாமையாளர் மொன்டி ஆரியரத்ன கருத்து தெரிவிக்கையில் “இந்த குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இலங்கையில் முன்னோடியாக இருப்பது தொடர்பில் மகிழ்ச்சியாக உள்ளது.” எனக் குறிப்பிட்டார்.

# இலங்கையில் முதற்தடவையாக நடைபெறவுள்ள லெஜன்ட்ஸ் கிரிக்கட் வெற்றிக் கிண்ண தொடர்



கிரிக்கட்டில் சிகரம்தொட்டு லெஜன்ட்களாக வர்ணிக்கப்படும் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களை முதற்தடவையாக இலங்கையில் ஒன்றாக களம்காணச்செய்யும் லெஜன்ட்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடர் மார்ச் எட்டாம் திகதி கண்டியில் உள்ள பள்ளேகல மைதானத்தில் ஆரம்பமாகிறது. இந்த சுற்றுத்தொடருக்குரிய போட்டிகள் தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும். இந்தச் சுற்றுத்தொடர் கடந்த ஆண்டு டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டு சிறப்பாக நடந்து முடிந்தது. இம்முறை வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக் கொள்வதற்காக, நட்சத்திரங்களாகத் திகழ்ந்து ஓய்வுபெற்ற கிரிக்கட் வீரர்கள் ஏழு அணிகளாக களமிறங்குகிறார்கள்.

இந்த சுற்றுத்தொடர் LCT T20 League Pvt Limited நிறுவனத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பாகிஸ்தான், இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நட்சத்திர வீரர்கள் ஏழு அணிகளில் இடம்பெறுவார்கள். இந்தத் தகவல்கள் வீரர்களை அணிகளாக பிரித்து, வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடரின் ஜெர்சியை வெளியிடும் வைபவத்தில் வெளியிடப்பட்டன.

கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் வைபவம் நடைபெற்றது. முன்னாள் கிரிக்கட் வீரர் பர்வீஸ் மஹ்ரூப் அணிகளுக்கு வீரர்களை பிரித்தொதுக்கும் நடைமுறையை வழிநடத்தினார். இதில் சமிந்த வாஸ், திஸர பெரேரா ஆகியோரும் இணைந்திருந்தார்கள். ஏழுஅணிகளாக பிரித்து ஒதுக்கப்பட்ட வீரர்களில் யுவராஜ்சிங், கிரிஸ்கெயில், சுரேஷ்ரெய்னா, பென்டங்க், ரொஸ் ரெயிலர், ஜொஹான் போத்தா, ஹர்பஜன் சிங், ஷஹீட்அப்ரிடி, கம்ரான் அக்மல், சனத் ஜயசூரிய, மிஸ்பா உல்ஹக், அம்பாட் டிராயுடு, ட்வெயின் ப்ராவோ, திஸர பெரேரா, இம்ரான் தாஹிர் ஆகியோரும் அடங்குகிறார்கள்.

# 'இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக' செலிங்கோ லைஃப் தெரிவு

செலிங்கோ லைஃப் 2023 ஆம் ஆண்டில் வேர்ல்ட் ஃபைனான்ஸால் ‘இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம்’ எனத் தெரிவுசெய்யப்பட்டது. தொடர்ந்து 10ஆவது ஆண்டாக இந்த விரும்பத்தக்க விருது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செலிங்கோ லைஃப் இலங்கையின் “ஆண்டின் சிறந்த வர்த்தக நாமமாக” தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால் (SLIM) தெரிவுசெய்யப்பட்ட சில வாரங்களுக்குப் பின்னர், 2023 ஆம் ஆண்டை நாட்டின் ஆயுள் காப்புறுதிச் சந்தையில் சர்வதேச மற்றும் உள்ளூர் பாராட்டுக்குரிய ஆண்டாக்கியது. இலங்கையில் இந்த விருதை தொடர்ச்சியாக வென்ற ஒரேயொரு ஆயுள் காப்புறுதி நிறுவனம் செலிங்கோ லைஃப் ஆகும்.



மாஸ்மியூச்சுவல் (அமெரிக்கா), அவிவா (யுகே), கனடா லைஃப் (கனடா), டிஏஎல் (அவுஸ்திரேலியா), சுவிஸ் லைஃப் (சுவிட்சர்லாந்து), சிஎன்பி அஷ்யூரன்ஸ் (பிரான்ஸ்), சைனா லைஃப் இன்சூரன்ஸ் குரூப் (சீனா) மற்றும் மேக்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் (இந்தியா), போன்றன அந்தந்த நாடுகளில் உள்ள சிறந்த ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களாக 2023 ஆம் ஆண்டு சஞ்சிகையின் விருதுகளில் பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தகது.

போன்ற உலகளாவிய ஜாம்பவான்களின் உயர்ந்த நிறுவனங்களில் செலிங்கோ லைஃப் நிறுவனத்திற்கு World Finance விருது வழங்கியுள்ளது.

## மஞ்சரி சிறுகதை

# வறுமையில் மலர்ந்த புஷ்பம்



சஜானி திருமணச் சோலைக்குள் நுழைந்து ஏழு வருடங்களில் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அவளது கணவன் ஒரு கூலித் தொழிலாளி. காட்டுக்குச் சென்று விறகெடுத்து விற்று வாழ்வைக் கழித்தனர்.

ஒரு நாள் ....

பொலிஸ் சுற்றி வளைப்பில் சஜானியின் கணவன் அகப்பட்டுக் கொண்டார். விறகு வண்டிலுடன் பொ லிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். விறகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இரண்டாயிரம் ரூபாய் ரொக்கப்பணத்துடன் விடுதலை செய்யப்பட்டார்.

அன்றிலிருந்து காட்டுக்கு விறகெடுக்கச் செல்வது தடை செய்யப்பட்டது. பிள்ளைகளின் பசியைப் போக்க ஏதாவதொரு தொழிலைச் செய்தாக வேண்டும் எனும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்.

அருகிலுள்ள கடலுக்குச் சென்று மீன் பிடித்தாவது தன் வாழ்வைக் கடத்த வேண்டுமென எண்ணினார். எங்கும் மயான அமைதி. அனைவரும் அயர்ந்து தூங்கும் நடுச்சாமத்தில் குளிரையும் பொருட்படுத்தாது, வலையுடன் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருவதை வாடிக்கையாகக் கொண்டார்.

வழமை போல அன்றும் கடலுக்குச் சென்றார். வலையில் சொற்ப மீன்களே பிடிபட்டன. கடலின் நடுவே தோணி கவிழ்ந்தது தத்தளித்தார். காப்பாற்றுமாறு கத்தினார். உதவிக்கு யாருமே வரல்ல.

நீருக்குள்ள எதுவுமே செய்ய முடியாத நிலை. மூச்சுத் திணறியது. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை. தன்னால் இயலுமானவரை ஓதினார். காலை இழுத்துக் கொண்டு யாரோ செல்வது போலிருந்தது. அப்போதே.. தன் கால் முதலையின் வாய்க்குள் அகப்பட்டிருப்பதை உணர்ந்தார். எங்கிருந்தோ.. தைரியம் பிறந்தது. முதலையுடன் போராடினார். தோணியின் சவலினால் முதலையின் தலையிலடித்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

மெது மெதுவாக நீச்சலடித்துக் கண்ணா மரங்களுக்குள் கரையொதுங்கினார். இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. தான் அணிந்திருந்த சேட்டைக் கிழித்துக் காலை இறுகக் கட்டினார். எழுந்து நடக்க முடியாது திண்டாடினார். அம் முதலை மீண்டும் தன்னை நோக்கி வருவதை அவதானித்தார். காலை இழுத்து.. இழுத்துக் கண்ணா மரத்துக்குள் மறைந்து கொண்டார். தலை சுற்றியது...! உலகமே இருண்டது. கை, கால்கள் நடுங்கின. அக்கம் பக்கத்தில் யாருமில்லை. என்ன நடந்ததென்றே தெரியாது. கண் விழித்துப் பார்த்த போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை உணர்ந்தார். அழுத கண்ணும், சிந்திய மூக்குமாகக் குடும்பத்தார் புடை சூழ்ந்திருந்தனர்.

நடந்த சம்பவங்களை ஒன்று விடாமல் கூறினார். முதலையின் வாயில் அகப்பட்டுத் தப்பிய சரித்திரமே கிடையாது. இறைவன் காப்பாத்திட்டான் என்றனர். சத்திர சிகிச்சையின் போது முதலையின் வாய்ப்பட்ட கால் அகற்றப்பட்டது. ஒரு காலை இழந்து தொழிலுக்குச் செல்ல முடியாது, சிறகொடிந்த பறவையாக வீட்டிலிருந்தார்.

ஆறு பிள்ளைகளுக்கும், உணவு வேண்டும்.ஒ ரு நாள் உண்டால், மறுநாள் உண்பதற்கு உணவில்லை. பிள்ளைகள் பசியால் துடித்தனர். அவர்களின் பரிதாபத்தைப் பார்க்க முடியாது. வீடு வீடாகச் சென்று கூலி வேலை செய்தாள் மனைவி. அவர்களது வீட்டில் மிஞ்சும் உணவுகளைக் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் கொடுத்தாள்.

ஒரு நாள்....

குழந்தை பசியால் கதறியழுதது. கொடுப்பதற்கு வீட்டில் எதுவுமே இல்லை. தேத்தண்ணிச் சாயத்தை ஊற்றிக் கொடுத்தாள். அதற்குச் சீனி போட வழியுமில்லை. வாங்குவதற்குக் காசுமில்லை. தேநீரைக் குடித்த குழந்தை வாந்தியெடுத்தது. இச் சம்பவம் சஜானியின் உள்ளத்தை உருக்கியது. கண்ணீர் சிந்தினாள்.

இனியும் கஷ்டத்தை அனுபவிக்க ஏலாது. ஒரு முடிவுக்கு வந்தாள். வெளி நாடு செல்வதற்கு ஆயத்தமானாள். மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியரிடம் சென்றாள்.

அவளைப் பரிசோதித்த மருத்துவருக்கு பிள்ளைப் பாக்கியம் இல்லாத்தால், சஜானியின் பிள்ளையைத் தத்தெடுக்கச் சம்மதித்தனர்.

சஜானி யோசித்தாள்....

தன்னிடமிருந்து கஷ்டப்படுவதை விட, வைத்தியரிடம் வளர்வது எவ்வளவோ மேல். நேரத்துக்குச் சாப்பாடு கிடைக்கும். நன்றாகப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். தனது மகளை மகாராணியாகக் கற்பனை செய்தாள். மறு நாள் சஜானி குழந்தையை வைத்தியரிடம் ஒப்படைத்தாள். பெத்த மனம் கலங்கியது. பிள்ளைகள் தங்கையைக் கேட்டு அழுதனர். அவள் எதனையும் பொருட்படுத்த வில்லை.

என்ன பொம்பள இவள்..? கல் மனசுக்காரி. பெத்த புள்ளைய விற்க எப்படி மனம் வந்தது..? வறுமையில யாரும் வாழலையா..? வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தால் கேட்கவும் வேணுமா..? அக்கம் பக்கத்தவர் வாயில் வந்தபடி ஏசத் தொடங்கினர். சஜானி பித்துப் பிடித்தவள் போல அலைந்தாள். வைத்தியரிடம் சென்று தன் குழந்தையைத் தருமாறு கெஞ்சி மன்றாடினாள். நான் வெளிநாடு போகல்ல.. எனது குழந்தையைத் தாங்க..! விம்மி.. விம்மி.. அழுதாள்.

குழந்தையைக் கொடுக்க வைத்தியர் விரும்பவில்லை. இன்னும் இரட்டிப்பு மடங்கு பணம் தருவதாகக் கூறினர். சஜானி எதற்கும் அசையவில்லை. எனக்குக் குழந்தை வேணும். எனது குழந்தையைப் பிரிந்து என்னால இருக்க முடியவில்லை. எங்க வீட்டுக்கு வந்து பாருங்க. மையத்து வீடு போல உள்ளது. அடுத்தவரின் ஏச்சுப் பேச்சைக் கேட்க முடியல. நிலத்தில் புரண்டு.. புரண்டு அழுதாள். அவள் வேதனையைப் புரிந்து கொண்டு குழந்தையைச் சஜானியிடம் ஒப்படைத்தனர். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். வைத்தியத் தம்பதியினருக்கோ குழந்தையைக் கொடுத்த சோகத்தில் ஆனால் இப்போது சஜானியின் வீடு கலகலப்பாக மாறியது. வெளிநாடு செல்லும் பயணத்தைக் கை விட்டாள். என்ன கஷ்டம் நேர்ந்தாலும் குழந்தையை வளர்ப்பதாக திடசங்கற்பம் பூண்டாள். பிள்ளைகளைக் கணவனின் பாதுகாப்பில் விட்டு விட்டுக் கூலித் தொழிலுக்காகச் சென்றாள்.

அங்கே.. சஜானியை ஒரு அடிமையாகவே பயன்படுத்தினர். அவள் எதையும் கண்டு கொள்வதில்லை.

அவர்கள் சொல்லும் வேலைகளையெல்லாம் செய்தாள். மாலை ஆறு மணிக்கே வீடு போய்ச் சேர்வாள். தினமும் தன் உதிரத்தைச் சாறாகப் பிழிந்தாள். யார் கண்பட்டதோ. வேலை முடிந்து வீடு வந்தவளால் எழுந்திருக்க முடியல. ஆ... ஊ.. என அனுங்கினாள். உடல் நெருப்பாகக் கொதித்தது. படுத்த படுக்கையானாள்.

குழந்தைகளுக்கு விளங்கப் போகிறதா.? ம்மா.. பசிக்குது..! எழும்புங்க. சாப்பாடு தாங்க ..! கடைசி மகள் அழுதாள். மற்றவர்கள் பசியை அடக்கிக் கொண்டு பொறுமையாக இருந்தனர்.

சஜானி, மூத்த மகன் நாசிரை அழைத்து மாமாவிடம் ஆயிரம் ரூபா வாங்கி வர அனுப்பி வைத்தாள்.

மாமா.. உம்மாக்கு ரெண்டு நாள் சரியான காய்ச்சல். படுத்த படுக்கையாக இருக்காங்க. ஆயிரம் ரூபா காசு தரட்டாம். தருவாங்கலாம் என்றான், காய்ச்சலெண்டா... ஆசுப்பத்திரிக்குப் போறது தானே..? ஏதோ ஒலகத்தில ஒங்கம்மாக்கு மட்டுமே காச்சல் வந்தாப் போல சொல்றாய். நீங்களா ஓழச்சி தந்தீங்க..? சம்பளம் எடுத்தா வந்திரிவீங்க. எப்பிடித் திருப்பித் தருவீங்க..? மாமியின் ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சை ரணமாக்கியது.

மாமா விருப்பமில்லாமல் ஐநூறு ரூபாவைத் தூக்கிக் கொடுத்தார். இவ்வளவு கதைகளையும் கேட்டபின்னும் இக்காசு தேவைதானா..? ஒரு முறை வீட்டு நிலைமையினையும், சகோதரர்களின் பசிக் கொடுமையினையும் நினைத்துப் பார்த்தான். என்ன தம்பி யோசிக்கிறீங்க..? இந்தக் காசை வாங்குவது கௌரவக் குறைச்சலோ..? ஐநூறு ரூபாவை நீட்டினார். என்ன செய்வது..! விருப்பமில்லாமல் வாங்கிச் செல்லும் போது மாமாவின் பிள்ளைகள் நாஸீரை ஓட.. ஓட விரட்டினர். அவனையறியாமலே....வாங்கிய காசையும் தூக்கி வீசிவிட்டுக் கதறிக் கொண்டு ஓடினான். மாமாவும், மாமியும் கைதட்டிச் சிரித்தனர். உம்மா... பட்டினி கிடந்து செத்தாலும், மாமாக்கிட்ட எதுவும் கேட்டு அனுப்பாதீங்கம்மா. நடந்த விடயங்களைக் கூறி அழுதான். இறைவா..! யாருக்கும் இவ்வறுமையைக் கொடுத்திடாதே...! அடுத்தவரிடம் கையேந்த வைத்திராதே..! தாயின் அறிவுரைகள் பிள்ளைகளின் மனதில் ஆழமாக வேரூன்றின.

அன்றிலிருந்து... எவ்வளவு பசியானலும் யாரிடமும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டார்கள்..

எல்லாமே நேற்று நடந்தது போலிருந்தது. வறுமை கல்விக்குத் தடையில்லை. சஜானியின் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். நாஸிர் பல்கலைக் கழகம் தெரிவானான். பல கஷ்டங்களுக்கு மத்தியில் படித்து முடித்தான். ஊரில் நாஸிர் உயர்வாகப் பேசப்பட்டான். போட்டி போட்டுக் கொண்டு மாப்பிள்ளை கேட்கத் தொடங்கினர்.

நாஸிரின் மாமா தன் மகளுக்கு மாப்பிள்ளை கேட்டு, நாஸிரின் வீடே கதியெனத் தஞ்சம் புகுந்தார்.

பழைய சம்பவங்களை நினைவூட்டி ஒரேயடியாக மறுத்துவிட்டான். என்னைப் போல வறுமையில் வாடிய பெண்ணைத்தான் திருமணம் செய்வேன் எனக் கூறி, மாமாவின் பதிலை எதிர்பாராது விறுவிறு என நடந்தான்.

**ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்**
**கிண்ணியா**

# பெண்ணில் பூத்த பெருவனத்தில் கேட்கும் பெண்களின் கவிதைக் குரல்கள்

தமிழ்நாட்டின் வளரி எழுத்துக்கூடம் பதிப்பகத்தின் புதிய நூலாக 15 நாடுகளைச் சேர்ந்த 123 தமிழ்ப் பெண்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பாக வெளிவந்துள்ளது, பெண்ணில் பூத்த பெருவனம்.

ஒரு பிரதியை இக்காலகட்டத்தில் வாசிக்கும் என் போன்ற வாசகனுக்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன.

முதல் கேள்வி இப்பிரதியில் உலகின் எந்தப் பகுதியினைச் சேர்ந்தவர்களின் குரல் ஒலிக்கிறது? அதாவது மேலைத்தேய சமூகத்தின் குரலா? கீழைத்தேய சமூகத்தின் குரலா? என்பதுதான்.

இரண்டாவது கேள்வி இப்பிரதியில் ஒலிப்பது ஆணின் குரலா? பெண்ணின் குரலா? அல்லது சிறுவர்களின் குரலா? திருநங்கைகளின் குரலா? என்பதுதான்.

இத்தொகுப்பில் கீழைத்தேய நாடுகளில் வசிக்கும் தமிழ்ப் பெண்களின் குரலும், கல்வி, தொழில் நிமித்தம் மேலைத்தேய சமூகத்தில் வாழும் கீழைத்தேய சமூகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களின் குரலும்,

புலம்பெயர்வின் காரணமாக மேலைத்தேய நாடுகளில் வாழும் கீழைத்தேய தமிழ்ப் பெண்களின் குரலும்,

இத்தொகுப்பில் அடங்கிய கவிதைகளில் ஒலிக்கின்றன.

ஒட்டு மொத்தமாக நாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்துடன் உலகின் பல பாகங்களில் வாழும் கீழைத்தேய தமிழ்க் கலாசார மயப்பட்ட தமிழ் பெண்களின் குரல்கள் ஒலிக்கும் கவிதைகள் இத்தொகுப்பில் இடம் பிடித்திருக்கின்றன,

2

ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணினம் பூரண விடுதலை பெறவில்லை என்பது நடைமுறையில் நாம் அறிந்த உண்மை.

அந்த வகையில் பெண் விடுதலை சம்பந்தமான ஆணாதிக்கத்திற்கு எதிராக ஒலிக்கும் குரல்கள் இத்தொகுதியில் கேட்கின்றன. அக்குரல்கள் சில கவிதைகளில் உரத்த நிலையிலும், சில கவிதைகளில் அடங்கிய நிலையிலும் ஒலிக்கின்றன. அவற்றில் ஆணாதிக்கத்திற்கு எதிராக உரத்த குரல்கள் ஒலிக்கும் கவிதைகளில், தமிழ் மொழியில் ஆணாதிக்கத்தை இனங்கண்டு பெண்ணினம் தன் உடலைக் கொண்டாடும் சொல்லாடல்களைப் பயன்படுத்தி ஆணாதிக்கத்துக்கு எதிராக ஒரு கலகத் தன்மையுடன் வெளிப்படுகின்றன. அதேவேளை ஆணாதிக்கத்திற்கு எதிராக அடக்கிய குரலில் வெளிப்படும் கவிதைகளில் ஆணாதிக்கத்திற்கு சார்பான சொல்லாடல்களைப் பயன்படுத்தி (கற்பு, அழகி போன்ற சொல்லாடல்கள்) ஆணாதிக்கத்திற்கு அடங்கிய நிலையில் வெளிப்படும் கவிதைகளும் காணப்படுகின்றன. பின்காலனிய சூழலில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக பெண்கள், ஒடுக்கப்பட்ட சமூகங்கள் போன்றவை மட்டுமல்ல திருநங்கைகளும் உள்ளனர். அந்த வகையில் திருநங்கைகள் பற்றியோ, அவர்தம் உடல் சார்ந்த திருநங்கைகளின் குரல்கள் கேட்கும் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்று இருக்கின்றன. உதாரணத்திற்கு துச்சமான, பிழைகள் கொண்ட கவிதைப் பிரதிகளைச் சொல்லலாம்.




**ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணினம் பூரண விடுதலை பெறவில்லை என்பது நடைமுறையில் நாம் அறிந்த உண்மை. அந்த வகையில் பெண் விடுதலை சம்பந்தமான ஆணாதிக்கத்திற்கு எதிராக ஒலிக்கும் குரல்கள் இத்தொகுதியில் கேட்கின்றன.**

பெண்களின் அந்தரங்க உணர்ச்சிகளை உணர்வுகளைப் பற்றிப் பேசுகின்ற கவிதைகளும் இருப்பது நல்ல விடயம்தான்.

ஜாதி அரசியலைச் சாடுகின்ற, அதனால் பாதிக்கப்படுகின்ற பெண்களின் நிலையையும்,

பெண்கள் மீதான பாலியல் வன்முறையைப் பற்றிச் சொல்லுகின்ற கவிதைப் பிரதிகளும் இத்தொகுதியில் உண்டு.

3

செய்திகள், கவிதைகள் ஆகாது, அறிக்கைகளும்தான். நவீன கவிதையின் தன்மை சொற்சிக்கனம்தான். ஆனால் குறைந்த சொற்கள் மட்டும் ஒரு பிரதியை ஒரு சிறந்த கவிதை ஆக்காது. தமிழில் எழுதப்படும் கவிதைகள் எல்லாம் தமிழ் அகராதியில் உள்ள சொற்களைக் கொண்டுதான் எழுதப்படுகின்றன. ஆனால் எந்தச் சொல்லை எந்த இடத்தில் வைத்தால், ஒரு கவிதைப் படைப்பாளி தன் பிரதியில் வெளிப்படுத்த நினைக்கின்ற அனுபவம் வாசகரிடம் தாக்கபூர்வமாகச் சேருகின்றதோ, அப்பிரதியே சிறந்த கவிதையாகிறது. இந்தச் சூட்சுமத்தைக் கவிதை படைப்பாளிகள் புரிந்து கொண்டால், அவர்களிடம் நல்ல கவிதைப் பிரதிகள் வரும். என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் பெண்ணில் பூத்த பெருவனம் எனும் இத்தொகுப்பில் அமைந்துள்ள பிரதிகள் இருக்கின்றன.

**மேமன்கவி**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 110




திரு/திருமதி.செல்வி ......................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ......................................
......................................
......................................

..................... ......................................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 110
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 110

### இடமிருந்து வலம்

1. பலர் ஒன்றாக இணைந்து ஏற்படுத்தும் உறவு
4. வெற்றி இழப்பு
7. இதுவும் ஒரு பறவைதான் . இரவில் இரை தேடும் .
9. வீட்டு வளர்ப்புப் பிராணி
10. பழங்காலத்தில் சிற்றரசர்கள் பேரரசர்களுக்குச் செலுத்திய வரி
12. பயிரிடப்படாமல் கிடக்கும் வெற்று நிலம்
14. தண்டனை பெற்று சிறையில் இருப்பவர்
15. செயலின் விளைவு (திரும்பியுள்ளது)
16. குழந்தை
18. பற்றும் பிரியமும் அன்பு என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
20. பெண் திரும்பிவிட்டாள்
21. ஒரு காட்டு மிருகம் (குழம்பியுள்ளது)
23. வித்தியாசமான நிலையில் ஏற்படும் வியப்பு(குழம்பியுள்ளது)
25. சௌகரியம் (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1, பின்னால் நடக்கப்போகும் ஒரு நிகழ்வை சரிபார்க்கும் நிகழ்வு
2. ஒரு நீர்நிலை (தலைகீழ்)
3. மகன்
5. பெரும் மரம் தலைகீழாகக் கிடக்கின்றது.
6. சிறையிலிருந்து வெளியேறிய நிலை
8. மனத்துணிவு
11. அரச நிதியியல் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் (குழம்பியுள்ளது)
13. மங்களகரமான நிகழ்வுகளுக்கு இது அவசியம்
17. பழுப்பதற்கு முந்திய நிலை (தலைகீழ்)
19. சேறு
20. பிரதியுபகாரம்
22. தன்னுரிமை இழந்த பணியாள் குழம்பிவிட்டார்.
23. வஞ்சக ஏற்பாடு அல்லது மறைமுகத் திட்டம்
24. கணிதத்தில் வரும் கழித்தல் குறியீடு (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 109

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. அலட்சியம்
7. உறி
8. மலர்
9. யார்
10. கன்னடம்
12.புள்
13. தனம்
15. அக்கா
16. சமரசம்
18. மாசு
20. மதம்
21. அரவம்
23. கர்வம்

**மேலிருந்து கீழ்**

1, அறியாமை
2. உலர்
3. சிலம்பு
4. யமன்
5. தர்க்கம்
6. வதனம்
11. அடமானம்
14. தாமதம்
15. காரம்
16. சமர்
17. கரம்
19. சுவடு
22. அணை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 109

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம்.ஏ. அத்தாஸ்,**<br>141/1 குமாரதுங்க மாவத்தை,<br>மாத்தறை. | **மயன் சுப்பிரமணியம்**<br>இல 7, பாடசாலை வீதி,<br>ஜயந்திபுரம்,<br>மட்டக்களப்பு | **என். சிவசீலன்**<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி. |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எச்.சீ.என். ஹம்தா,** 411, அளுத் வீதி, வெலிகம.
2. **எம்.ஏ. முஹன்னித்** அட்டாளைச்சேனை
3. **எம்.எம்.சஷாத்** மருதமுனை
4. **என்.கே. வேணி** பலாங்கொடை
5. **என்.லயாஶ்ரீ** மட்டக்களப்பு
6. **ஏ.எஸ். ஏ.எம். லியாவுத்தீன்** பேருவளை
7. **கோபிநாத் ஜெரீஷ்** கல்முனை
8. **ஏ.டபிள்யூ.எம். நியாஸ்** மாவனெல்ல.
9. **எஸ். கனகரெட்ணம்** திருகோணமலை
10. **எச்.எம்.எம்.லெப்பை** பதுளை

# பிள்ளைகளை ஒருவரோடொருவர் ஒப்பிடுவது அவர்களுக்கு நாம் செய்யும் ஒரு வன்முறை!

## ஓர் உளவியல் ஆய்வு

ஒப்பீடு என்பதற்கு ஒன்றை இன்னொன்றுடன் ஒப்பிடுதல் அல்லது இன்னொருவரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்தல் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். இந்த ஒப்பீடானது இருபுறமும் கூரான ஒரு கத்திக்கு நிகரானது. அது அழிவிற்கும் பயன்படும் ஆக்கத்திற்கும் வழி வகுக்கும்.

நாம் கற்கும் பலவிடயங்கள் பிறரை பார்த்து தெரிந்து கொள்வதுதான். பிறரின் நடை உடை பாவனைகளைக் கூர்ந்து நோக்கி தானும் அதுபோல செய்வதை VICARIOUS LEARNINIG என்கிறது உளவியல். நம் தாய் தந்தையிடமிருந்து நாம் கற்றவை அனைத்தையும் இவ்விதம்தான் கற்றோம். அம்மாவின் சமையல், அப்பாவின் உடல் மொழி, அண்ணனின் நாகரிக உடை, தாத்தாவின் கம்பீரம், சினிமா நடிகரின் 'பஞ்ச்' வசனம், குடும்ப கௌரவம், சாதி உணர்வு என அனைத்தையும் இப்படித்தான் கற்றுக் கொள்கிறோம்.

கேட்டுப்படித்த பாடங்கள் மறக்கும். ஆனால் பார்த்து படித்த பாடங்கள் நிலைக்கும். இதுதான் விதம் விதமான பல ஒப்பீடுகளை எதிர்பார்ப்புகளாக்கி நம்மீது திணிக்கிறது. பிறருடன் கூடிவாழுகின்ற சமூகத்தில், பிறரை விட நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணம் தான் இதற்கு விதை. இதுதான் நமது அனைத்து சமூக நடத்தைகளுக்கும் காரணி. இது நமது சுயபுத்தியை, அல்லது சுய சிந்தனையை மழுங்கடித்து பொதுப் புத்தியை நம் மீது திணிக்கிறது.

"என்ஜினியரிங் படிப்பாவது படிக்காமல் எப்படி? ஏ.எல். பாஸ் பண்றானோ இல்லையோ.. பேசாம பிரைவேட் கேம்பஸ் ஒண்டில படிக்கவை !"

"நம்ம வீட்டு வேலைக்காரனின் மகன் இம்முறை என்ஜினியரிங்ல எடுபட்டிருக்கான். அவனோட நம்ம வீட்டுப் பிள்ளைகள் வாசிற்றியில போய் 'ஆட்ஸ்' வகுப்பில் சேருவது நல்லாவா இருக்கும்?"

"முடியுதோ இல்லியோ, வங்கியில லோன் போட்டாவது ஒரு காரை வாங்கு! நமக்கு அதுதான் கௌரவம்"

"பொண்டாட்டிக்கு 10 பவுண்லை யாவது தாலிக்கொடி போடாட்டி, என்ன பிஸ்னஸ் பண்ணி, என்ன பிரயோசனம்?''

"உன் வயது தானே அவனுக்கும்? அவன் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கிறான்... உன்னால முடியாதா? வெட்கக்கேடு!'' இவைகளெல்லாம் நாம் தினமும் கேட்கும் ஒப்பீடு செய்யும் உரையாடல்கள்.

ஒரு பாடசாலையில் நடந்த "சமாதானமும் சகவாழ்வும்" என்ற தலைப்பிலான செயலமர்வில் ஒரு வளப்பகிர்வாளனாக நான் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஒரு கட்டத்தில் 'பிள்ளைகளை ஒப்பீடு செய்வது அவர்களுக்கு நாம் செய்யும் ஒரு வன்முறை' என்றேன். அப்போது அருகில் இருந்த ஓர் ஆசிரியை "ஒரு பிள்ளையை உருவாக்க இன்னொரு பிள்ளையை உதாரணம் காட்டுவது எவ்வளவு பெரிய தவறா?" என்று கேட்டார். நான் சொன்னேன் "உதாரணம் காட்டுவது தவறில்லை



என்றால் உங்கள் பிள்ளை உங்களிடம் வந்து, அம்மா நீங்கள் ஏன் உங்கள் தங்கையை போல் பெரிய படிப்பு படித்து உயர்ந்த உத்தியோகம் பார்க்கவில்லை என்று கேட்டால் அதனை ஊக்கம் என்று எடுத்துக் கொள்வீர்களா அல்லது உங்கள் கணவரிடம் வந்து உங்கள் வயது தானே பக்கத்து வீட்டு மாமாவுக்கும் அவர் மாதிரி நீங்கள் ஏன் நாலு மாடி வீடு கட்டி நாலு கார்களும் வைத்திருக்கவில்லை என்று கேட்டால் ஏற்றுக் கொள்வாரா?" என்று கேட்டேன். அதற்கு பதில் அளிக்க முடியாமல் தடுமாறிய அந்த ஆசிரியை பின்னால் என் கருத்தை ஏற்றுக்கொண்டார்.

உயர்வோ தாழ்வோ, தத்தம் வாழ்க்கையில் ஒரு நிலைக்கு வந்துவிட்ட பெரியவர்களாலேயே இதையெல்லாம் ஜீரணிக்க முடியவில்லை என்றால், தத்தமது வருங்காலம் பற்றிய பயம் கொண்ட இளவயதினர் இந்த ஒப்பீடுகளால் எவ்வளவு தூரம் உருக்குலைந்து போவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சமூகத்துடன் இணைந்து வாழ்வது வேறு, நமக்கு ஒப்புதல் இல்லாத விடயங்களில் கூட சமூக ஒப்பீடுகள் காரணமாக போலி வாழ்க்கை வாழ்வது என்பது வேறு.

கூட்டத்தோடு செல்வது ஆதிகாலத்தில் ஒரு பாதுகாப்பை அளித்தது.

இதனால் நாடோடிகளாய் திரிந்த காலத்தில் கூட்டம் செய்வதை அப்படியே செய்வது ஒரு பாதுகாப்பு உணர்வைத் தந்தது. தனித்துவ நடத்தை அபாயத்தைத் தருவதாகவும் பார்க்கப்பட்டது. இந்த ஆதி மனித மனோபாவம்தான் சமூகம் செய்வதை அப்படியே நம்மையும் செய்ய வைக்கிறது. இதனால் எல்லோரும் சரியென்று சொல்வதை நம்புகிறோம். எல்லோரும் செய்வதை நாமும் செய்தால் பிரச்சினை இல்லயென நினைக்கிறோம்.

ஆனால் சாய்ந்தால் சாய்கிறபக்கம் சாய்கிற இந்த செம்மறியாட்டு மனோபாவத்தையும் தாண்டி யோசித்தவர்கள்தான் பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தியவர்கள். அவர்களே தங்கள் நடத்தைகளால் மக்கள் கூட்டத்தை தங்கள் பின்னே இழுத்தவர்கள்.

உலகம் தட்டை இல்லை என்று சொன்னவர் முதல், சந்திரனில் கால் பதித்தவர் வரை சமூக ஒப்பீடுகளையும் எதிர்பார்ப்புகளையும் கடந்து வந்தவர்கள்தான். எந்தப் பிள்ளையானது வகுப்பில் 10 ஆம் பிள்ளையாக வந்தால் அவனது பின்னேர விளையாட்டுகளை நிறுத்துவது முதல், கல்யாணமான மறுமாதமே ஒரு 'விசேடமும்' இல்லையா? என்று அக்கறையாக விசாரிப்பது வரை அனைத்தும் சமூகம் எதிர்பார்க்கும் நிர்பந்தங்களில்தான் நடக்கின்றன. வீட்டில்ஏதும்நன்மையோதீமையோ எது நடந்தாலும் நாலு பேருக்கு பதில் சொல்ல வேண்டுமே என்று யோசிப்பது இதனாற்றான்.

ஆனால் ஊக்கமும் உத்வேகமும் கொண்டவர்கள் சமூக ஒப்பீடுகளில் முடங்கி விட மாட்டார்கள் அதையும் மீறிச்செயற்பட்டு வெற்றி பெறுவார்கள்.

அதாவது "இதுதான் எமது சூழலின் பொது விதி, இதுதான் நமது பரம்பரை வழக்கம், எல்லோரும் இப்படித்தான் செய்தார்கள்.

இன்னமும் செய்கிறார்கள் மாறி அல்லது மீறிச்செய்தால் பிரச்சினை வரும்" என்பதையும் கடந்து சுயமாக யோசித்து செயல்படுவார்கள்.

அதிலும் தமிழ்ச்சினிமா அடிக்கடி தேங்கிப்போவதெல்லாம் இந்த ஒப்பிட்டுச் சூத்திரத்தினுள் (FORMULA) சிக்கிக் கொள்ளும்போதெல்லாம் தான்.

சில மசாலாப் படங்கள் சில நாட்கள் தொடர்ந்தாற் போல் ஓடினால் எல்லோரும் அவற்றையே தயாரிப்பார்கள். சில நகைச்சுவைப்படங்கள் ஓடினால் எல்லோரும் அவற்றியே தயாரித்து ரசிகர்களை சிரிப்பாய்ச்சிரிக்க வைப்பார்கள். டப்பிங் படங்கள் கொடிகட்டிப்பறந்த காலங்களில் எல்லாப்படங்களையுமே டப்பிங் பண்ணி கல்லாவைக் காலியாக்குவார்கள், ஒப்பீட்டுக்கு பிரத்தியட்சமான உதாரணம் இதுதான். ஆனால் இந்தச்சூழலில் சிக்காமல் சுயமாக தைரியமாக தயாரிக்கப்படும் நல்ல படங்கள்தான் அடுத்த சூத்திரத்தைத் தோற்றுவிக்க வைக்கும்,

தன்னம்பிக்கையில்லாதவர்கள் பிறரது செய்கைகளை கண்மூடித்தனமாக அப்படியே பின்பற்றுவார்கள். சுயசிந்தனை கொண்டவர்கள் வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் பிறரிடம் பாடங்கள் பயின்றாலும் தங்கள் வழியில் நடப்பார்கள்.

"எங்கள் பற்பசையைப் பாவிக்காவிட்டால் முத்துப்போன்ற உங்கள் பற்களின் கதி அதோகதிதான்!" என்றும், "எங்களது கைலாசபர்வத அபூர்வ மூலிகைகளாலான தைலத்தைத் தடவாவிட்டால், உங்கள் பளபளப்பான கூந்தல் உதிர்வதை, கைலையில் வாழும் அந்தக்கைலாசநாதனாலும் தடுக்கமுடியாது!" என்றும், "நடிகை அமலா பாலுக்கும் உங்களுக்கும் அழகுக்கு அழகு சேர்ப்பது எமது சந்தன சோப் ஒன்றே!" என்றும் நாளாந்தம் நம்மைப் பயமுறுத்தும் தொலைக்காட்சி, வானொலி, மற்றும் பத்திரிகை விளம்பரங்களின் பின்னால் உள்ள வியாபார தந்திரம் தெரியாமல் மக்கள் ஏமாந்துபோகிறார்கள்.

எனவே, உங்கள் வாழ்க்கையை நீங்களே முடிவு செய்யுங்கள். பிறரைப் பாருங்கள், ஆனால் இறுதிமுடிவு எடுப்பது உங்கள் கையில் இருக்கட்டும்! அதனை நீங்களே முடிவு செய்யுங்கள். இதனால் எதிர்காலத்தில் யார் மீதும் வருத்தப்படும் தேவை இருக்காது.

உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் சொல்ல வேண்டிய 'பஞ்ச்' வசனம் ஒன்றே ஒன்றுதான். அதாவது "உங்கள் வாழ்க்கை எப்போதும் உங்கள் கைகளில்!" என்பதே

**எஸ். ஜோன்ராஜன்**

# காதல் கடிதம்



நீ நிலவு!
நான் மேகம்!
எத்தனை காலம்
அலைந்த போதும் உன்னை
அடையமுடியவில்லை...
_
நீ கடல்!
நான் அலை!
ஓயாத என் ஓட்டத்தால்
ஒரு கணமேனும்
உன் மடியில் தலைசாய்த்து
உன்னிடம் என் கதையைச்
சொல்ல முடியவில்லை..
_
நீ கனி!
நான் இலை!
பரவசத்தில் உன்னைப்
பார்க்க வருகிறவர்கள்
என்னை
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.
_
நீ மலர்!
நான் காற்று!
உன்னை
வருடிக்கொடுக்கவருகிறேன்
நான் தகராறு செய்வதாகத்
தவறாகச் சொல்கிறார்கள்.
_
நீ வெண்மணி!
நான் கருவிழி!
உன் நிறத்திற்குக் கிடைக்கும்
மரியாதை
என்நிறத்திற்குக்கி டைப்ப
தில்லை.
_
நீ தோப்பு!
நான் குயில்!
நீ இல்லையென்றால்
என் கீதங்கள் எப்படி
அரங்கேறும்?

நீ பாடல்வரி!
நான் இசை!
கேட்பவர்கள் எல்லோரும்
உன்னைத்தானே முணுமுணுக்கி
றார்கள்.
_
நீ கவிதை!
நான் காகிதம்!
வா!
தாளில் வந்து
தழுவிக்கொள்!
படிக்க வருகிறவர்களுக்கு
பரவசம் அளிப்போம்...!

**கவிஞர்.எஸ்.ரபீக்.**

# பொது அறிவு வினா விடை தொகுப்பு மாணவர்கள் வாசிக்க வேண்டிய நூல்




ஏ.எல் அப்துல் சலாம் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர், உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்ற ஓய்வுப்பெற்ற ஆசிரியராவார். கல்வித்துறையில் தனது தொழில்சார் நுட்பங்களை இலக்கிய புலத்திற்குள்ளும் இணைத்து ஆக்கங்களைப் படைகிறார்.இவரது அறிவோம் ஆயிரம் என்ற பொது அறிவு வினா விடை தொகுப்பானது காலத்தேவையை நிறைவேற்றத்தக்கதாகும். இந்நூல் பொதறிவுப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு பயனுடையதெனலாம். பள்ளி மாணவர் முதல் பல்கலைக்கழ மாணவர்வரை சகலரும் பயன்பெறுமாறும் பூகோளமயமாக்கலுடன் இணைத்துத் தொகுத்திருப்பது, பல பாடங்களில் ஆசியரின் திறனாய்வு நுட்பங்களையும் காட்டுகின்றது. இது படிப்பவர்களின் கல்வி, அறிவுத் தேடல்களுக்கும் ஆய்வுப் பணிகளுக்கும் உதவும். இந்நூலின்1000 வினாக்களையும் விடைகளையும் ஒரே வாசிப்பில் வாசித்து முடிக்கும் மனப்போக்குக்கு ஏற்றாற் போல வினாக்கள் தொகுத்திப்பது சிறப்பானதாகும். அழகிய பொருள் செறிந்த முன்னட்டைப் படமும், மேமன்கவியின் நூலாசியர் பற்றிய சுருக்கமான அறிமுகமும் ' அறிவோம் ஆயிரம்' தொகுப்பைச் சிறப்புற வைக்கிறது. இந்நூல் மாணவர்களின் வாசிப்புக்கும் பொதறிவுக்கும் நல்லது.

**தீன்**

# இல்வாழ்வில் இணைய காத்திருப்போருக்கு சவாலாகும் செவ்வாய் தோஷம்!

ஒரு பெண்ணின் சாதகத்தில் இலக்கினத்திலிருந்து எண்ணி வரும் ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்தை வைத்தே அவளின் திருமணம் நிச்சயம் செய்யப்படுகிறது. அச்சாதகத்தில் எட்டாமிடம் மாங்கல்ய ஸ்தானத்தையும் இரண்டாமிடம் குடும்ப ஸ்தானத்தையும் குறிப்பதாகும். சாதகங்களில் இல்வாழ்க்கையைக் குறிக்கும் களத்திரகாரகனாக சுக்கிரன் குறிக்கப்படுகிறான். ஒரு பெண் அவள் எப்படிப்பட்ட அழகியாயிருந்தாலும் சரி, எத்தகைய உயர் பதவியில் அமர்ந்திருந்தாலும் சரி அவளது பிறந்த சாதகத்தில் சுக்கிரன் சனியுடன் சேர்க்கை பெற்றோ அன்றேல் பார்வை பெற்றோ இருந்தால் அவளுக்குத் தாமதமாகத்தான் திருமணம் நடைபெறுகிறது.

அது போல களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தை சனி நோக்கினாலும் திருமணம் தாமதமாகவே நடைபெறுகிறது. இவ்விதம் சனி நோக்குவதைவிடப் பிரச்சினை சனி ஏழாமிடத்தில் இருப்பதால் வருகிறது. அதாவது இன, மத, குலபேதம் கடந்து ஓர் அந்நியர் மேல் காதல் ஏற்பட்டு கல்யாணம் நடக்கிறது. சுருங்கச் சொன்னால் தீய கிரகங்களில் முதன்மையான தான சனி, இலக்கினம் எனப்படும் முதலாம் வீட்டிலோ அல்லது ஐந்தாமிடம் எனப்படும் திரிகோணத்திலோ அல்லது பத்தாமிடம் எனப்படும் கேந்திர வீட்டிலோ அமையப் பெற்றிருந்தாலும் காலங் கடந்து தான் திருமணப்பாக்கியம் கை கூடுகிறது.

அதிலும் ஏழாமிடத்தில் செவ்வாய் எனும் தீக்கோள் அமர்ந்திருந்து மற்றொரு தீக்கோளான சனியின் ஏழாம் பார்வையால் நேரடியாகவோ அல்லது கொள்ளிப் பார்வையெனப்படும் மூன்றாம் பார்வையாலோ பார்க்கப்பட்டால், எவ்வளவுதான் முயற்சியெடுத்தாலும் திருமணமென்பது முயற்கொம்பாகவே இருக்கிறது.

மேலும் ஏழாமிடத்தில் வக்கிரம் (Retrograde) பெற்ற கிரகங்கள் இடம்பெற்றிருந்தாலும் அல்லது வக்கிரம் பெற்ற கிரகங்கள் ஏழாம் வீட்டைப் பார்வை செய்தாலும் தாமதமாகத்தான் திருமணம் நடைபெறுகிறது. வக்கிரம் என்றால் ஒரு கிரகம் தான் வழக்கமாக முன்னோக்கி நகருகிற நிலையிலிருந்து பின்னோக்கி நகருதல். சூரியன் சந்திரன் தவிர மற்றக் கிரகங்கள் எல்லாவற்றிற்கும் இந்த வக்கிரகதியுண்டு. குடும்பத்தானம் எனப்படும் இரண்டாம் வீட்டுக்குரிய கிரகம் இவ்விதம் வக்கிரம் பெற்று 12 இல் மறையப் பெற்று தீய கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ பெற்றால் என்னதான் முயன்றாலும் 30 வயதுக்கு மேல்தான் திருமணம் நடைபெறுகிறது. ஏழாமிடத்தில் ராகு இருந்தாலும் அல்லது சனி வீற்றிருந்தாலும் மணவாழ்வு அமைய மிகுந்த காலதாமதமாகிறது. செவ்வாய் இராகுவுடன் இணைந்து ஏழாமிடத்தில் அமையப் பெற்றால் அது கடுமையான தோஷத்தைக் கொடுக் கும். அந்த ஏழாமிடம் செவ்வாய்க்கு ஆட்சி வீடாகவோ உச்சம் பெறும் வீடாகவோ இல்லாமலிருந்தால் இந்தத் தோஷத்தின் அளவு அதிகப்படும். அத்துடன் அத்தகைய அமைப்பைத் தன் சாதகத்தில் கொண்ட பெண் பாலுறவில் எளிதில் திருப்தியடைய முடியாத ஒருவளாயிருப்பாளாம்.

களத்திரகாரகன் சுக்கிரன் களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்தில் தீய கிரகங்களின் சேர்க்கை பெற்றிருந்தால் திருமணப் பாக்கியத்தை



சுமார் 40 வயது வரை தாமதப்படுத்துவார். அதுபோல் ஏழாமிடம் துலாமாக அமைந்து அதில் உச்சம் பெற்றிருக்கும் சனி, திருமணத்தை மிகவும் தாமதப்படுத்துவார். இத்தகைய கிரக அமைப்பினைக் கொண்ட பலர் 50 வயது கடந்தும் தனிமரமாக நின்றிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். சிலர் தம்மை விட பல வயதுகள் மூத்த ஆணுக்கோ பெண்ணுக்கோ வாழ்க்கைப் படுகின்றனர்.

நீண்ட நாள் தனிமையில் விரக்தியடைந்து நெறி பிறழ்ந்து நடக்கும் நிலைக்கு அக்கிரக அமைப்பு சிலரை ஆளாக்கியும் உள்ளது. இந்த அமைப்புக் காரணமாக நிச்சயிக்கப்பட்ட சில கல்யாணங்கள் கூட மணமேடையில் வைத்து குலைந்து போகும் வாய்ப்புண்டு. களத்திரஸ்தானாதிபதி அட்டமத்தில் மறையப் பெற்றோ அல்லது அட்டமாதிபதியின் சாரத்தில் மறையப் பெற்றோ இருக்கக் காணப்பட்டால் மணவாழ்க்கையானது எட்டாக் கனியாகவே இருக்கும். எந்த ராசியில் இருப்பினும் இராகுவினதும் அதற்கு ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவினதும் பிடிக்குள் இதர கிரகங்கள் அடைபடுவதை கால சர்ப்பயோகம் என்பர். இந்த யோகத்தை தன் சாதகத்தை கொண்டுள்ள பெண்ணுக்கும் மிகவும் காலம் கடந்தே திருமணம் நடைபெறுகிறது. இந்த அசுபயோகம் சாதகத்திலுள்ள பெண்ணை எளிதில் அடையாளம் காணலாம். நெடுகிலும் கோயில் குளமென்று திரிவாள். காப்புக் கட்டுதல், உபவாசம் என்று வருடம் முழுக்க விரதமிருந்து உடலை வருத்துவாள். அவள் தேகமும் ஒட்டியுலர்ந்து எதிர்பாலாரை ஈர்க்கக் கூடிய அங்கப் பொலிவுகள் குறைந்து காணப்படும். இனி செவ்வாய் தோஷம் எவ்விதம் திருமணத்தடையை ஏற்படுத்துகிறது என்பதையும் சாதகப் பொருத்தம் சரியாக அமையாத விடத்து அது எப்படி ஓர் ஆண் அல்லது ஒரு பெண்ணினது தாம்பத்திய வாழ்வைக் குலைத்து வைதவ்யக் கோலம் கொள்ள வைக்கிறது என்பதையும் பார்ப்போம்.

திருமணம் என்னும் போது ஒருவரது சாதகத்தில் செவ்வாயின் நிலையை அவதானித்து, அது தோஷமற்றது எனக் கண்ட பின்னரே இதரநிலைகளை ஆராய்ந்து பொருத்தம் காண்பர்.

ஆணிலோ, பெண்ணிலோ செவ்வாய், தோஷமான இடங்களில் நிற்பதாகத் தெரிந்தால் அதற்கு இணையான தோஷமுள்ள ஆணினதோ, பெண்ணினதோ சாதகத்தைத் தான் தேர்ந்தெடுப்பர். அதை விடுத்து சுயலாபத்திற்காக சொத்து, சுகம், சாதி, அந்தஸ்துக்காக தோசமுள்ள சாதகத்துடன் செவ்வாய் தோஷமற்ற மற்றொரு சாதகத்தை பொருத்தி கல்யாணம் நடந்தால் சொற்ப காலத்தில் இறப்பு, இழப்பு என்ற விபரிதங்கள் நடைபெறுகின்றன. திருமணம் தடையாகி வாட்டும் ஒரு செவ்வாய்தோஷப் பெண்ணுக்கு கிரக சாந்தி செய்தல், வாழை மரத்திற்குக் கட்டி வைத்து தோஷம் கழித்தல் போன்ற சடங்குகளை தங்கள் மனத்திருப்திக்காக நடத்தி விட்டு பின்னர் நடைபெற்ற எத்தனையோ செவ்வாய் தோஷக்காரர்களின் கல்யாணங்கள் நாளடைவில் பால் பொங்கி வருகையிலே பானை உடைவது போல பாதியிலே பாழாய்ப் போனதெல்லாம் எனக்கு கண்கண்ட அனுபவங்கள்.

திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர்; ஒருவனுக்கு ஒருத்தி என்ற எங்கள் சமூக கலாசாரம் வேண்டுமானால் ஆண்டாண்டு கால ஆய்வுகளின் பின்னே எமது ஆன்றோர்கள் கணித்து, அனுபவத்திலும் கண்டறிந்து வெளிப்படுத்திய சோதிட உண்மைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியம்.

தோஷமுள்ள ஒரு சாதகிக்கு அவ்வாறே தோஷமுள்ள ஒரு சாதகனின் சாதகமே பொருத்தமானது. இராசிச் சக்கரத்தில் இல்லாவிடினும் நவாம்ச சக்கரத்திலாவது சாதகத்திற்குச் சாதகம் தோஷம் சமமாக இருக்க வேண்டும்.

செவ்வாய் தோஷத்திற்குள்ள சிறப்பு யாதெனில் அத்தோஷமுள்ள பெண்ணானவள் அதிக அழகைக் கொண்டிருப்பாள். பார்க்கும் எந்த ஆணும் ஆசைப்படும் வண்ணம் உருவப் பொலிவுகளைக் கொண்டிருப்பாள். இத்தனை இலாவணியங்களுக்கு மத்தியில் எந்த ஆணும் எளிதில் அவளை அணுகிவிடாதபடியான ஓர் ஆண்மையின் கம்பீரம் அவளது தோற்றத்தில் மிளிரும்.

ஆனால் தோஷமென்ற பெயரில் அத்தனை சௌந்தரியங்களும் காட்டிலெறித்த நிலாப் போல பயனற்றுப் போவதையோ விட்டில்களை எரிக்க அழகாகச் சுடர்விடும் தங்கக் குத்து விளக்குப் போல மோகம், ஆசை மற்றும் காதலின் பெயரால் தனக்கு வாழ்க்கைத் துணையாக வந்து வாய்க்கும் எந்த ஆணையும் அவளது தோஷத் தின் கடுமை பலியெடுக்காமல் இருப்பதையோ தடுக்க வேண்டுமானால் அவளது தோஷத்திற்குத் தோஷம் சமமாக்கப்பட வேண்டும். அதாவது சமமான தோஷமுள்ள ஒரு மணவாளனே அவளுக்கு வாழ்க்கைப் பட வேண்டும். இந்தச் செவ்வாய் தோஷத்தின் கடுமையின் பிரகாரம் அதனை வரிசைப்படுத்தினால் அது 7 இல் செவ்வாய் 8 இல் செவ்வாய், 2 இல் செவ்வாய், 4 இல் செவ்வாய், 12 இல் செவ்வாய்,

(19ஆம் பக்கம் பார்க்க)

**திருவோணம்**

## இல்வாழ்வில் இணைய காத்திருப்போருக்கு... (18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கினச் செவ்வாய் என்று வரும் இவைகளை விட சந்திரனுக்கு 7 இல் செவ்வாய், சுக்கிரனுக்கு 7 இல் என்பனவும் தோஷமாகக் கருதப்படுவதாக மந்திரேசுவரர் என்ற சோதிட மேதை 'பலதீபிகை' என்ற தமது ஜோதிடக் கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கு மூன்று பார்வைகளுண்டு. முதலாவது தானிருக்கும் இடத்திலிருந்து 4 ஆவது இராசியை பூரணமாக நோக்குதல்.

அவ்விதமானால் அது இலக்கினத்திலிருந்து ஏழாமிடமான களத்திரஸ்தானமாக இருக்கும். அடுத்தது 7 ஆம் இடமான களத்திரத்தானத்தை நோக்குதல். அப்படியாயின் அதன் இருப்பிடம் உதய லக்கினமாக இருக்கும். மூன்றாவதாக 8 ஆம் வீடாகிய மாங்கல்ய ஸ்தானத்தை நோக்குதல். அப்போது அதன் இருப்பிடம் இலக்கினத்துக்கு இரண்டாம் வீடாகிய குடும்பத்தானமாக அமையும்.

இலக்கினத்திலிருக்கும் செவ்வாய் களத்திர வீட்டை நேரடியாகவும் மாங்கல்ய வீட்டை தீவிரமாகவும் நோக்குவதால் அவ்விதம் சாதகத்தில் அமைந்த பெண்ணுக்கோ, ஆணுக்கோ தனது வாழ்க்கைத் துணையை இழக்க வேண்டியேற்படும். இரண்டாம் வீடாகிய குடும்பத்தானத்திலிருந்து செவ்வாய் மாங்கல்ய வீட்டை நேரடியாக திருஷ்டி செய்வதால் அவ்விதம் அமைந்த ஆண் பெண்களுக்கு தோஷத்திற்குத் தோஷம் சமனாக்கப்படாத நிலையில் துணையை எவ்விதமோ பிரிய வேண்டிய நிலை ஏற்படும்.

சுகஸ்தானமாகிய 4ஆம் இடத்துச் செவ்வாய் நாலாம் பார்வையாக 7 ஆம் வீட்டை பூரணமாக நோக்குவதால் தார நஷ்டம் ஏற்படுகிறது. எட்டாமிடத்துச் செவ்வாய், மாங்கல்ய ஸ்தானத்திலிருந்து குடும்ப ஸ்தானத்தை (2ஆம் வீடு) நேரடியாக நோக் கினால் குடும்ப நாசம் பண்ணி விடும். 12ஆம் வீடு விரய வீடு. செலவு வீடு. சாவைச் சொல்லும் வீடு. இங்கிருக்கும் செவ்வாய் களத்திர வீட்டை தீவிர மாக நோக்குவதால் அத்தகைய பேருக்கு தாரத்திற்குக் கொள்ளி வைக்கும் நிலையேற்படுகிறது.

சோதிடத்தில் சூரியன் உயிராகவும் சந்திரன் உடலாகவும் கொள்ளப்படுகின்றனர். சந்திரனாகிய உடலை செவ்வாய் ஏழாமிடத்தில் நின்று சமநோக்காய் நோக்கும் போது அது இரு கிரகங்களுக்கும் ஆட்சி, ஆச்சம், ஒருவர்க்கொருவர் பரிவர்த்தனம் போன்ற நிலைகள் இல்லையென்றால். அதுவும் இவைகள் ஒன்றையொன்று திருஷ்டிக்கும் நிலையில் தோஷமாகி குடும்ப வாழ்வைப் பாதிக்கிறது. அது போன்றதொரு தோஷந்தான் கல்யாணகாரகனான சுக்கிரனுக்கு ஏழில் செவ்வாய் சஞ்சரிப்பதாலும் வருகிறது. ஒரு சாதகத்தில் செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்திருப்பதோ ஒருவருக்கொருவர் சமநோக்கில் சஞ்சரிப்பதோ தோஷம். குடும்ப வாழ்க்கைக்கு இது உதவாது.

இச்சேர்க்கையிலும் சம நோக்கிலும் ஒழுக்கக் குறைபாடு அதிகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அதுபோன்றது ஒன்றுதான் செவ்வாய்க்குச் சுக்கிரன் ஏழாமிடத்தில் சஞ்சரிப்பதும். இதனாலும் குடும்பத்தில் தார நஷ்டமோ, பிரிவினையோ ஏற்படுவதாக பலதீபிகை சொல்கிறது. அதேசமயம் பெண்ணின் சாதகத்திலுள்ள செவ்வாய்க்கு ஆணின் சாதகத்திலுள்ள சுக்கிரன் ஒரு கேந்திரமோ, கோணமோ பெற்று அமர்ந்திருக்கக் காணப்பட்டால் அந்த ஆண், பெண் இணைப்பில் பாலுறவில் திருப்திகண்டு நெடு நாள் ஒன்றி வாழும் தன்மையை அது குறிக்குமாம். அதனாற்றான் மணப் பொருத்தங்களில் இவ்வித அமைப்பு ஊன்றிக் கவனிக்கப்படுகிறது.

இவ்விதம் உள்ளிருந்தே உருவழிக்கும் கொடியதான செவ்வாய் தோஷத்தை பல்வேறு கூறுகளாக தத்தம் சாதகங்களில் கொண்டுள்ள அன்பர்களுக்கு ஆசுவாசமளிக்கக் கூடிய செய்தியொன்றும் சோதிடத்தில் உள்ளது.

அதாவது இலக்கினமாகவோ இரண்டாம் வீடாகிய குடும்பத்தானமாகவோ 4ஆம் வீடாகிய சுகஸ்தானமாகவோ, 7ஆம் வீடாகிய களத்திரஸ்தானமாகவோ, 8ஆம் வீடாகிய மாங்கல்ய ஸ்தானமாகவோ, அன்றேல் விரயஸ்தானமாகிய 12ஆம் வீடாகவோ அமைந்து செவ்வாயின் சொந்த வீடுகளான மேடமோ, விருச்சிகமோ அல்லது செவ்வாயின் உச்ச வீடான மகரமோ மேற்சொன்ன வீடுகளில் ஒன்றாக வந்து, அதில் செவ்வாய் இருந்தால் அது தோஷமாக கணிக்கப்பட மாட்டாது.

ஏனென்றால் அவை செவ்வாய்க்கு ஆதிபத்தியமான வீடுகள் என்பதால் அதில் சஞ்சரிக்கும் செவ்வாய் தீமை செய்யாதென்பது சோதிட விதி.

அதுபோல மேற்சொன்ன மேடமும், விருச்சிகமும் மகரமும் 2, 4, 7, 8, 12 ஆகிய வீடுகளில் ஒன்றாக அமைந்து, அது செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் தோஷம் கிடையாது.

என்னதான் கொடூரமாக உலவினாலும் தத்தம் சொந்த வீடுகளுக்கு எந்தக் கிரகமும் தீமை செய்வதில்லை.

# ஜப்பானில் தொழில் பெற்றுத்தருவதாக கூறி பண மோசடி செய்த பெண் கைது

ஜப்பானில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 100 கோடி ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பெண் ஒருவரை எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கடுவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவருக்கே இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஜப்பானில் வேலை பெற்றுத்தருவதாக கூறி 250 க்கும் மேற்பட்டவர்களிடம் பண மோசடி செய்த இப்பெண், நீர்கொழும்பு சிலாபம் வீதியை அண்டி அமைந்துள்ள வீடொன்றில் தலைமறைவாகியிருந்த போது நேற்று முன்தினம் (23) பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இப்பெண் பண மோசடி செய்துவிட்டு அநுராதபுரம் , புத்தளம், குருநாகலில் தலைமறைவாகியிருந்தமை தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக விசேட விசாரணைப் பிரிவுக்கு 180 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இச்சந்தேகநபருக்கு எதிராக மஹர நீதவான் நீதிமன்றத்தால் 36 பிடியாணைகளும் கடுவெல நீதவான் நீதிமன்றத்தால் 11 பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் கூறினர்.


**மூடப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்**

சுகாதார அமைச்சு

**இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC) இற்கு**

**CHILLER SYSTEM INCLUDING PIPING AND BUILDING AUTOMATION WITH BILLING SYSTEM ஐ வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், இயக்குதலுக்கான விலைமனு அழைப்பு**

**ஒப்பந்த இலக்கம் - SPMC/MM/04/2024**

2024 மார்ச் 04ம் திகதி 14.00 மணிக்கு மூடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்படி பெறுகைக்கான மூடப்படும் திகதியானது,

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சார்பாக பெறுகைக் குழுவினால் இப்பெறுகையின் மூடப்படும் திகதி 2024 மார்ச் 18 ஆம் திகதி வரை பிற்போடப்படுகிறது.

கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பிப்பதன் பேரில் வேலை நாட்களில் 2024 மார்ச் 15 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கீழேயுள்ள முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், பிரதி பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பம்.

அ.ம.கூ இன் கணக்குப் பிரிவிற்கு காசாக இலங்கை ரூபா 76,000.00 மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் செலுத்துதல்.

**தலைவர் - பெறுகைக் குழு,
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,
இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த,
கந்தவல எஸ்டேட், இரத்மலானை.**

**தொலைபேசி : 2635353/2637574/2623298**
**பெக்ஸ் : 2634771/2626621**
**இணையதளம் : www.spmc.gov.lk**



**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை**

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் – 2024**

**கேள்வி அறிவித்தல்**

2024ம் ஆண்டிற்காக சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் முகமாக பதிவுசெய்த நிறுவனங்களில் இருந்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கீழ்க்காணும் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

I. இலங்கையில் வியாபார பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் சுத்திகரிப்புச் சேவை வழங்கும் நிறுவனமாக 03 வருடத்திற்கு முன் பதிவு செய்த நிறுவனமாக இருத்தல்.

II. சுத்திகரிப்பு சேவை வழங்குதல் சம்பந்தமாக குறைந்தபட்ச 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றின் வருடாந்த பெறுமதி கீழ்க்காணுமாறு அமைதல் வேண்டும். சேவை அனுபவம் மற்றும் வருடாந்த பெறுமதி குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கிய கடிதத்துடன் சேவை வழங்கிய நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட கடிதத்தின் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

1. அரச நிறுவனங்கள் — வருடாந்த பெறுமதி ரூ.500,000.00

III. கிட்டிய வருடத்திற்காக தமது வியாபார பதிவுப் பெயரின் கீழ் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் சார்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் சகல ஊழியர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி/ ஊழியர் பொறுப்பு நிதியிலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் சீ அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். (2021 - 2022 வருடத்திற்கு மட்டும்)

IV. கிட்டிய மதிப்பீட்டு வருடத்திற்காக சுத்திகரிப்பு நிறுவனத்தின் பெயரில் வெட் வரி/ வருமான வரி செலுத்தியுள்ளதாக எழுத்துமூலசான்று மூலம் உறுதி செய்தல் வேண்டும். (விப கம்பனியாக கம்பனி பெயரிலும், தனிநபர்/ கூட்டு வியாபார நிறுவனம் உட்பட கூட்டு வியாபாரிகளின் பெயரிலும், கிட்டிய வருடத்திற்கான வருமான வரி/ வெட் வரி செலுத்தி உள்ளதாக எழுத்து மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (2021 - 2022 வருடத்திற்கு மட்டும்)

V. ரூ.300,000.00 பெறுமதியான வங்கிப் பிணையொன்று அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிதி நிறுவனத்திலிருந்து/ காப்புறுதி நிறுவனத்திலிருந்து தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயருக்கு எழுதப்பட்ட கேள்விகள் ஏற்று கொள்ளல் முடிவடைந்த தினம் முதல் 120 நாள் காலத்திற்கு செல்லுபடியாகுமாறு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையெனில் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியின் இலக்கம் 78088835 கணக்கில் மேற்படி பெறுமதிக்கு சமமான தொகையை வைப்புச் செய்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் காசாளர் பிரிவில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் இரண்டாம் பிரதியை அதற்காக சமர்ப்பிக்க முடியும்.

02. கேள்வி விண்ணப்பங்கள் 2024.02.26 முதல் 2024.03.13 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இல. 130, WAD ராமநாயக்க மாவத்த, கொழும்பு - 02 முகவரியில் உள்ள இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன கட்டிடத்தின் 02ம் மாடியில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்கு இலக்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ.1500.00 கட்டணத்தை தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயரில் உள்ள இலங்கை வங்கியின் 78088835 கணக்கிற்கு வரவு வைத்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் காசாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. வியாபார பதிவுச் சான்றிதழ்
2. கீழ்க்காணுமாரு பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட (பொது 170 மாதிரியில்) பெறுமதி சான்றிதழ்
3. 03 வருட அனுபவம் பற்றிய சான்றிதழ்
4. பொது ஒப்பந்த சட்டத்தின் 8ம் பிரிவின் கீழான பதிவுச் சான்றிதழ்

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.03.14 பி.ப.2.00 இற்கு முன்பு தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, பெறுகைக் குழு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, (இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம் - 02ம் மாடி) இல. 130, WAD ராமநாயக்க மாவத்த, கொழும்பு - 02 (தொ.பே.0112303157) என்ற முகவரிக்கு, பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்பலாம் அல்லது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மேற்படி முகவரியில் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “2024ம் ஆணடிற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல்” என்று குறிபபிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு, வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2024.03.14 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தின் ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

06. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெறுகைக் குழு,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை,
(இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன கட்டிடம் - 02ம் மாடி)
இலக்கம் - 130,
W.A.D. ராமநாயக்க மாவத்த,
கொழும்பு - 02**



**மூடப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்**

சுகாதார அமைச்சு

**இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC)**

**இரத்மலானையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் (SPMC) உத்தேச மருந்துக் களஞ்சியத்திற்கான விலைமனுக்கள் அழைப்பு**

**ஒப்பந்த இலக்கம் - SPMC/MM/05/2024**

2024 மார்ச் 04ம் திகதி 14.00 மணிக்கு மூடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்படி பெறுகைக்கான மூடப்படும் திகதியானது,

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சார்பாக பெறுகைக் குழுவினால் இப்பெறுகையின் மூடப்படும் திகதி 2024 மார்ச் 11 ஆம் திகதி வரை பிற்போடப்படுகிறது.

கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பிப்பதன் பேரில் வேலை நாட்களில் 2024 மார்ச் 08 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கீழேயுள்ள முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், பிரதி பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பம்.

அ.ம.கூ இன் கணக்குப் பிரிவிற்கு காசாக இலங்கை ரூபா 40,000.00 மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் செலுத்துதல்.

**தலைவர் - பெறுகைக் குழு,
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,
இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த,
கந்தவல எஸ்டேட், இரத்மலானை.**

**தொலைபேசி : 2635353/2637574/2623298**
**பெக்ஸ் : 2634771/2626621**
**இணையதளம் : www.spmc.gov.lk**



**மக்கள் வங்கி**

**விலைமனுவிற்கான அழைப்பு**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக 980 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான மக்கள் வங்கி அலுவலக அபிவிருத்திக்கான உத்தேசிக்கப்பட்ட உள்ளக வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பொறியியல் சேவை திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. வேலைத்தளமானது கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, 374 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. இந்த வேலையானது மக்கள் வங்கியின் அலுவலக அபிவிருத்திக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளக வேலையான நிருமாணம், வழங்கல், installation and/or placing in position, பூர்த்தி செய்தல், பரீட்சித்தல் மற்றும் செயற்பட வைத்தல், ஒப்படைத்தல் மற்றும் பராமரிப்பு (தளபாடம், பிரித்தடுப்புக்கள், சுவர் மற்றும் சீலிங் பலகைகள், மின்னியல் வேலைகள் இன்னும் பலவும்). உள்ளக வேலைகளானது அலுவலக கட்டிடத்தின் மூன்று தரைகீழ் மட்டங்களில் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும் - தரை மட்டம், 1 ஆம் மட்டத்திலிருந்து 22 ஆம் மட்டம் வரை மற்றும் இடைநிலை மட்டம் ஆகியனவாகும். அலுவலக கட்டிடத்தின் மொத்த தரைப்பரப்பானது 17,922 சதுர மீட்டராகும்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 273 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்த வழங்கலை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   நிர்மாணத் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் தளபாடம் மற்றும் உள்ளக வேலைகளுக்கான துறையில் எஸ்பி1 தரத்திற்காக பதிவு பெற்றிருத்தல்.
5. ஒப்பந்த வழங்கலின் தகைமையானது பின்வரும் தகைமைத் தேவைப்படுத்தல்களை அடக்குகின்றது.
   - கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது ஒரு பில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் (1,000,000,000.00 இ.ரூபா)
   - பிரதான ஒப்பந்தக்காரராக ஒரு ஒப்பந்தத்தை நிகரான தன்மையில் ஆகக் குறைந்த பெறுமதியாக எழுநூற்றைம்பது இலங்கை ரூபாவில் (750,000,000.00 இல.ரூ.) சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல், அத்துடன்
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த பெறுமதி முன்னூற்றி இருபத்தேழு மில்லியன் இலங்கை ரூபாவிற்கு (327,000,000. இல.ரூ.) குறையாமலிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையக 6 ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்கள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112473206. தொலைநகல்: 0112341591) 2024 பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 18 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
7. 2024 பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 18 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 60,000.00 இல. ரூபாவை (அறுபதினாயிரம் இல. ரூ.) மாத்திரம் செலுத்திய பின்னர், மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. 2024 மார்ச் 19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் **“Proposed Interior Work for People’s Bank Office Development at No. 374 Dr, Colvin R De Silva Mawatha, Colombo-2"** என குறிப்பிடப்பட்டு மக்கள் வங்கியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர், பொறியியல் சேவைகள் திணைக்களம், 6 ஆம் மாடி, மக்கள் வங்கி, இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 13 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கி நீங்கலாக) மாத்திரம் பெறப்பட்டதும் 2024 செப்டம்பர் 10 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதும் பத்து மில்லியன் இலங்கை ரூபாவிலுள்ள (10,000,000.00 இல.ரூபா) விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையலுவலகத்தின் 6 ஆம் மாடியில் 2024 மார்ச் 07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர் - கட்டிட பொறியியல் சேவைகள்,
பொறியியல் சேவைகள் திணைக்களம்,
6 ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையலுவலக கட்டிடம்,
இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு-02.**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation

# வாரபலன்

26.02.2023 - 02.03.2024



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

கோபத்தை கட்டுப்படுத்துவது அவசியம். மதிப்பும், மரியாதையும் கூடும். மனதுக்கு பிடிக்காத இடத்திற்கு சென்று வரவேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள், அலைச்சல்கள் இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பார்கள். குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம் கவனம் தேவை. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம். ஆயுதம், நெருப்பு ஆகியவற்றை கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது. பெண்கள் புத்திக் கூர்மையுடன் செயற்பட்டு காரியங்களை வெற்றி கரமாக செய்து முடிப்பர். மாணவர்கள் கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் இலாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். விவசாயம், ரியல்எஸ்டேட் தொழில் இலாபம் தரும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கையில் கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். குடும்பத்தினருடன் விருந்து நிகழ்ச்சிக்கு சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்குக் காணப்படும். பெண்களுக்கு செயல்திறன் கூடும். கூடுதல் மதிப்பெண் பெற மாணவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று காலதாமதம் ஆகலாம். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்தியோகத்தர்கள் முன்னேற்றம் காண்பர். வேலை பற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவும் இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வாழ்க்கைத் துணை, குழந்தைகளை அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியத்தை செய்து முடிக்க காலதாமதம் ஏற்படும். திட்டமிட்டு செயல்படுவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். மாணவர்களுக்கு எதிர்காலம் பற்றிய திட்டங்கள் மனதில் தோன்றும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எண்ணங்களையும் கருத்துக்களையும் மாற்றிக்கொள்வது அவசியம். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கப்பெறுவர். பிரச்சினைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும். எதிலும் திட்ட மிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான நிலை காணப்படும். பிள்ளைகளுக்காக கூடுதல் நேரம் செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். மாணவர்கள் ஆசிரியர்களின் ஆதரவுடன் படித்து தேர்வில் வெற்றி பெறுவர்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடிதப் போக்குவரத்து அனுகூலமான பலனைத் தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். கடிதப் போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசிப் பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக் கொருவர் பேசிச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். குழந்தைகளுடன் நிதானமாகப் பேசி அவர்களுக்கு எதையும் புரிய வைப்பது நல்லது. பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியைப் பற்றிய பயம் நீங்கும். குழப்பம் இல்லாத தெளிவான மனதுடன் பாடங்களை படித்து வெற்றி பெறுவார்கள்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2ஆம் பாதம்)**

புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். சிலர் புதிய வேலைக்கு முயற்சி செய்வார்கள். அது கிடைப்பது தாமதமாகலாம். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத் துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். உறவினர் வருகை இருக்கும். அனுபவ பூர்வமான அறிவுத் திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். பெண்களது செயல்களுக்கு மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர் கூறியபடி செயல்படுவது கல்வியில் வெற்றி பெற உதவும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எதையும் எதிர்த்து நின்று சமாளிப்பீர்கள். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதியை தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே பாசம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சேரும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்களிடம் அன்பு அதிகரிக்கும். பெண்கள் எந்த ஒரு செயலைச் செய்யும் முன்பும் அதில் இருக்கும் நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்த்த பின் அதில் ஈடுபடுவது நல்லது. மாணவர்கள் எதையும் அவசரமாக செய்யாமல் யோசித்து செயல்படுவது நல்லது.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சலால் எதிர்பாராத செலவும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பெண்கள் மனத்தடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. மாணவர்கள் கவனத் தடுமாற்றம் இல்லாமல் பாடங்களை படிப்பது நன்மை தரும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எந்த ஒரு வேலையையும் நுணுக்கமாக செய்து முடிப்பீர்கள். பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். பிள்ளைகளின் மீது கவனம் தேவை. பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும் படியான சூழ்நிலை உண்டாகும். வெளியூர் பயணம் செல்ல நேரலாம். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் குறிக்கோளுடன் செயல்படுவர்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை எத்தனை குறுக்கீடுகள் வந்தாலும் சமாளித்து செய்து முடிப்பீர்கள். சூரியன் சஞ்சாரம் பணவரத்தை தரும். நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியங்கள் நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். புத்தியை உபயோகித்து வியாபாரத்தில் புதுமையை செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவி குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களால் மனவருத்தம் உண்டாகும்படியான சம்பவம் நேரலாம் கவனம் தேவை. பெண்கள் அடுத்தவர் பேசுவதை காதில் வாங்காமல் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நன்மை தரும்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

தன்னம்பிக்கை கொண்டு சொந்த முயற்சியால் வெற்றிபெறுவீர்கள். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்தியோகத்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கலாம். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. விருந்தினர்கள் வருகை உண்டு. பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்கள் விளையாட்டுகளில் கவனம் செலுத்துவதுடன், கல்வியிலும் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 25

# அரங்கின் கவனத்தை வென்ற ஸ்ரீபிரசாந்தனது உரை

இலங்கை மண்ணின் பூர்வீகத்தவரான தமிழரான தனிநாயகம் அடிகளாரின் அயராத முயற்சியின் பயனாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்ற எண்ணக்கரு உருவாக்கம் பல தடைகளையும் தாண்டிய நிலையில் நிலைபெற்று வருகிறது. 1974ஆம் ஆண்டில் இலங்கையில் இடம் பெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஏற்படுத்திய தாக்கம் இனப்பிரச்சினைக்குள் எத்தனை வன்மத்தை தோற்றுவித்திருக்கிறது என்பதை அறிவோம். அம் மாநாடு இடம்பெற்று ஐம்பது வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடும் நிறைவுற்றிருக்கின்றது. இந்நிலையில் இன, மொழி ரீதியிலான பாதிப்பு நிலையை தமிழும், தமிழர்களும் அனுபவித்த துயர் நிலைகளை இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இலக்கிய வடிவங்களில் கவிதை இலக்கியமே சமூக நிலையில் நெருங்கிய தொடர்பை கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையே. அந்த வகையிலான இலக்கியம் பற்றியதாகவே பேராசிரியர் பிரசாந்தனின் சிறப்புரை "இலங்கைத் தமிழ்க் கவிதைகளின் தனித்துவ அம்சங்கள்" எனும் தலைப்பில் அமைந்திருந்தது. உலக அரங்கில் இலங்கை தமிழர்களின் வரலாறு, வாழ்வியலை தெளிவான எடுத்துரைப்புடன் விளக்கிய அவரது உரை அரங்கின் கவனத்தை வென்றதாக அமைந்தது.

இலங்கைத் தமிழ்க் கவிதை எனும் பெரிய பரப்புக்குள் இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட தமிழ்ப் படைப்பாளர்களதும், முஸ்லிம் படைப்பாளர்களதும், மலையகத் தமிழ்ப் படைப்பாளர்களதும் கவிதைகள் பொதுவாக நோக்கப்படுகின்றன. இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்த போரானது இலங்கைக் கவிதையின் தன்மையில் மாறுபாட்டை ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட இருபதாம் நூற்றாண்டின் பின்னிரு தசாப்தங்களிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்திலும் வந்தவை, போர் பாடியவையாக அதாவது போர்க்கால இலக்கியங்களாக பெரிதும் தோற்றம் கொண்டன. முன்பு சிறியளவில் வெளிவந்தனவாம் எனினும், களமாடும் போராளிகள் பலரதும் படைப்புக்கள் கணிசமான அளவு தன்மை மாற்றங்களுடன் வெளிவரத் தொடங்கின. இப் போர்க்கள இலக்கியங்கள் அல்லது போரியல் இலக்கியங்கள் தமிழுக்குப் புதிய சுவை வழங்கின. வேவு பார்க்கச் சென்ற போராளியின் நிலை, களத்தில் சேவையாற்றும் போராளி வைத்தியரின் மனவுணர்வு முதலியன குறித்ததான இப் போர்க்கள இலக்கியங்கள் ஒட்டுமொத்தத் தமிழ்ப் புலத்திலும் புதிய வரவுகளாயின.

பின், 2007/ 2009 களில் வன்னிப் பெருங்காட்டுப் பகுதியில் நிகழ்ந்த உக்கிர யுத்தமும், அதனாலான உரிமை மீறல்களும், மனிதப் பேரவலங்களும், முன்னர் இலங்கை காணாதவை. அதன் தொடர்ச்சியில், தமிழ் பேசும் மக்கள் வாழ்வில் பல மாற்றங்களையும் பாதிப்புகளையும் தந்த நெடிய போராட்டம் முடிவுக்கு வந்து, மக்களின் மனங்களில் வெறுமையை விதைத்தது. எனவே, யுத்தத்தின் கொடூர அழிவுகளின் சாட்சிகளாக, போராட்ட வீறுணர்ச்சிக் கோஷங்களாக திகழ்ந்து வந்த இலக்கியங்கள், போர் குறித்த விரக்தியையும் தமிழர் எதிர்காலம் குறித்த வெறுமையையும் தாங்கலாயின. இவ்வாறு, விரக்தி, வெறுமை, அங்கவீனமான மானுடரின் அவலங்கள், காணாமல் போனோர் குறித்த நீண்ட பெருமூச்சு முதலிய தன்மைகளை, புதிய எடுபொருள்களாகக் கொண்ட படைப்புகள் போருக்குப் பிந்திய இலக்கியங்களாக வரத்தொடங்கின. வந்துகொண்டுள்ளன.

பொதுவாக துவக்குகளின் சன்ன ஒலிகளுக்கும் தணிக்கைகளுக்கும் இடையே பிறந்த கடந்த நூற்றாண்டின் நிறைவு கால இலக்கியங்களோ, எல்லாவற்றையும் உள்ளபடி பேச முடியாது தத்தளித்தன. முன்னைய படைப்பாளிகளால் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே பிரச்சினைகளை அலச முடிந்தது. கடந்து போக முனைந்தவர்களது வாழ்வு முடிந்து போனது. யுத்தம் முடிந்து விட்டதெனச் சொல்லப்படுகிற இற்றைக் காலப்பகுதியும் அச்சத்தின் நிழலுக்குள்ளாகத்தான் விடிகிறது. எனினும், தற்பொழுது காணப்பெறும் சற்றே பயமற்ற சூழல், எதைப்பற்றியுமான நூல்களின் வருகையை ஊக்கப்படுத்தியுள்ளது. இதனால், போர்க் கால கட்டத்தில் இடம்பெற்ற 'பலரறியா" விடயங்கள் பலவும் இன்று இலக்கிய முலாம் பூசப்பெற்று வணிக சந்தையை வந்தடைந்துள்ளன.

போராட்டக் குழுக்களின் ஆயுதங்கள் மௌனித்தமை, இப் பேசாப் பொருள்களைப் பேசும் இலக்கியங்களின் வெளிவருகைக்கு இன்னொரு காரணம் எனலாம். போராளிக் குழுக்களின் அடக்கு முறைகளை, உள்முரண்பாடுகளை, பயமின்றித் துணிந்து பேசும்தன்மை, மாற்றுக் குழுக்களைச் சார்ந்தவர்களின் படைப்புகளில் மட்டுமல்ல, ஒரே குழுவில் இயங்கியவர்களது எழுத்துக்களிலும் தோன்றலாயின. கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலமாக முளைகொண்ட ஒற்றைப்படைத் தன்மையி





லிருந்து மாறுபட்ட பல்பரிமாணப் படைப்புகள் சூல் கொண்ட காலம் இப் புதிய நூற்றாண்டுக் காலமே எனலாம். போரின் நேரடிப் பங்காளிகளாக விளங்கி யுத்தப் பரணி தந்தவர்களிடம், போர் பற்றிய பார்வை மாற்றம் நிகழ்ந்தபின் பிறந்த இலக்கியங்கள் இன்று பலராலும் விரும்பி வாசிக்கப்படுகின்றன. கருத்து முரண் அல்லது சுய விமரிசனமாகும் இவ்வெழுத்துக்கள், பய எல்லை தாண்டி, சகலதையும் சகல தரப்பாரையும் விமர்சிக்கும் துணிவு பெற்றுப் பிறக்கின்றமை உண்மையில் ஒரு புதிய மாற்றந்தான்.

இனி, போர் பற்றிய படைப்புகளை விடுத்து, பொதுவாக சமூக வாழ்வியல் குறித்த இலக்கியங்களது பொருண்மையை நோக்கினால், அங்கும் புதுப் போக்கைச் சந்திக்க முடிகிறது. அற எல்லைக்குள் புனிதங்களாகவும் உயர்வுகளாகவும் பேணப்பட்டு வந்த – வரும் விடயங்களைத் தகர்த்தெறிந்து, அனைத்தையும் பாடலாம் என்ற அடிப்படையில் படைப்புகள் பலவும் வெளிவரத் தொடங்கியுள்ளன. நீண்ட நெடுங்காலமாக, மறைவாகப் பேசப்பட்டு வந்த அல்லது பேசாமலே விடப்பட்ட விடயங்களை, வாசக மனங்களுக்கு அதிர்ச்சி ஊட்டும் வகையில் பச்சையாகச் சொல்லி நகர்வனவாக இவை தோற்றங்கொண்டன. மரபிலக்கிய சமூகத்தில் வரம்புகளாக விளங்கிய புனித எல்லைகளை, பாடுபொருள் ரீதியிலும் வெளிப்பாட்டு முறையிலும் கடக்கும் இத்தன்மையதான படைப்புகளிற் சில, மூன்றாம் பாலினம், தன்னினச் சேர்க்கை முதலிய பொருண்மைகளையும் சொல்லி நகர்கின்றன.

முன்பு தாயகம் பிரிந்த ஏக்கத்தில் உழன்ற மலையக இலக்கியத்தோடு வந்தடைந்த புலம்பெயர் அனுபவம், பின் பிறநாடு சென்றோராலே தனித்த இலக்கிய வகைமையானது. இவ் இலக்கியம், புதிய இளம் படைப்பாளர்கள் வேர் விட்ட தேசங்களின் முதல், கருப் பொருள்களைக் காட்டத் தொடங்கியுள்ளது. இதனால், தமிழ் இலக்கியமானது தமிழக, ஈழ எல்லை கடந்து 'உலக" அனுபவம் தருவதாகத் தன்னை உயர்த்தியுள்ளது.

அடுத்து, பின் நவீனக் கோட்பாட்டின் ஓரளவிலான தாக்கத்தினாலும் தமிழ்ச் சிற்றிதழ்களின் பரிச்சயத்தாலும் வடிவச் சிதைவான இலக்கியங்கள் தோற்றங் கொள்ளத் தொடங்கியமையையும் சுட்டுதல் தகும். யாப்பை மீறினாலும், ஒரே சட்டகத்துள் அடங்கி, கிட்டத்தட்ட ஒன்றின் பிரதிகளோ என எண்ணத்தக்கபடி இருபதின் கடைக்கூறுக் கவிதைகள் தோன்றின. ஆனால், புதிய நூற்றாண்டில், எழுத்துக்களின் சிதறுண்ட தன்மையை கவிதை உள்ளடங்கலாக ஈழத்து இலக்கியம் அனுபவித்தது. காப்பிய எல்லை கடக்கும் சிறு காப்பியங்கள், பதிகமல்லாத பதிகங்கள் தோன்றின. கவிதை உரைநடைக் கலப்பு இலக்கியப் பிரதிகள் எழுந்தன.

அடுத்து இலக்கியங்களில் தன்மைவேறுபாடு பற்றிய புதிய அம்சம் ஒன்றை நோக்குவது பயனுடையதாகும். அது, சமூக வலைத்தளங்களில் இலக்கிய விளைச்சல் பெருகியமையால் ஏற்பட்ட மாற்றம் எனலாம். முன்புவரை பத்திரிகை, இதழ் முதலிய அச்சு ஊடகங்களிலே, குறிப்பிட்ட எழுத்தாளர்கள் மட்டும் எழுதினர். அவர்கள் எழுத்துக்கள் குறித்த ஆசிரியர் பீட வலையமைப்பைக் கடந்துதான் பிரசுரமாகும். எனவே, பெரும்பாலும் வரையறைக்குள் அமைந்த எழுத்துக்கள்தாம் பிரசுரமாகி வந்தன. ஆனால் புதிய நூற்றாண்டு இவ்வெல்லைகளைத் தகர்த்துவிட்டது. எல்லோரும் முகநூல்களில் பதிவேற்றம் செய்யலாயினர். அதாவது படைப்பாளியே சமூக வெளியில் பிரசுரகர்த்தாவும் ஆகிறார். தமது அனுபவங்களை தமது தளங்களிலேயே பலரும் பதிவிடுகிறபோது. தத்தமக்குள் இருந்த இலக்கியவாதிகளைச் சிலராவது அடையாளங் கண்டனர். இதனால், புதிய சமூகத்தள எழுத்தாளர்கள் உருவாகியதோடு, பெரிதும், தனிமனித வாழ்வியலோடு நெருக்கமான சுய அனுபவப் பதிவுகள் இலக்கியங்களாயின.

சுப வீரபாண்டியனது தமிழ்க் கவிதைகள் தொடர்பான பொதுவான பார்வையை அரங்கு செவிமடுத்த நிலையில் அதன் தொடர்ச்சி நிலையில் இலங்கை கவிஞர்களின் எண்ண உணர்வை தக்கவாறு எடுத்துரைத்தமை சிறப்பம்சமாகியது. இலங்கை கவிதைகளின் தனித்துவ அம்சங்கள் தொடர்பில் பல்லின கலாசார அம்சங்களையும் உள்ளடக்கிய அவரது உரை மேலும் உயிர்ப்புள்ளதாக அமைந்தமை கவனிக்கத்தக்கது. அவ்வாறே தமிழ்ச் சூழலில் நவீனத்துவம் (பதிப்புச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கு ) எனும் தலைப்பி



லான ஸ்ரீ பிரசாந்தனது ஆய்வுரையும் மாநாட்டின் கவனத்தை வென்றதாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த தலைப்பில் அமைந்த ஆய்வுரை பின்வரும் சாராம்த்தைக் கொண்டதாக அமைந்தது.

மரபுநிலைப்பட்ட அறிவுச் செயற்பாடுகள் தொடர்ந்து வந்த தமிழ் அறிவுப் புலத்தில், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் காலனிய ஆட்சியின் காரணமாக நவீனத்துவ சிந்தனை அறிமுகமாயிற்று. இதேவேளை நிறுவனமயப்பட்ட கல்வி, ஆங்கில வழிக் கல்வி முதலியவற்றால் கல்விச் செயற்பாடுகளும் மாற்றங் கண்டன. மாற்றங்கண்ட இக் கல்விச் சூழலில், அச்சுவாகனமேறிய நூற் பதிப்புகள் முதன்மை இடம் பெறலாயின. இதனால் அச்சு அல்லது பதிப்புச் செயற்பாடு மிகமுக்கியமான அறிவுப்பணியாக மேற்கிளம்பியது. தமிழில் முதல் அச்சுநூல் 'கிறிஸ்து வணக்கம்" எனும் பெயரில் பதினாறாம் நூற்றாண்டில் கோண்ஸால்வஸ் எனும் பாதிரியாரால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்நூல் வெளியிடப்பட்டு கிட்டத்தட்ட 3 நூற்றாண்டுகாலமாக, அச்சுரிமை சுதேசிகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் கிறித்துவமதப் பரப்புகைக்கு அவசியமான நூல்கள் மட்டும் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப்பட்டு வந்தன. ஆனால், 1835 ஆம் ஆண்டில் கவனர் ஜெனரலால் ஆலோசனைச் சபையில் விதிக்கப்பட்ட அச்சுச் சட்டம் இந்நிலைமையை மாற்றியது. சுதேசிகளும் அச்சுக்கூடங்களை அமைக்கலாம் எனும் நிலைமை தோன்றிய பின்பே, ஓலைச் சுவடிகளாக இருந்த பழந்தமிழ் நூல்கள் பல, அச்சுப் பிரதிகளாக வெளிவந்தன.

இக்காலகட்டத்தில், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர், வீராசாமி செட்டியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் முதலிய தமிழறிஞர்கள் ஓலைச்சுவடிகளை அச்சில் பதிப்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். அச்சியந்திரப் பாவனை தமிழ்ச்சூழலுக்கு அறிமுகமாகிய இக்காலகட்டத்திலேதான் நவீனத்துவச் சிந்தனைகளும் கீழை நாடுகளில் பரவியமையால், தவிர்க்க இயலாதபடி நூலாக்கச் செயற்பாடுகளிலும் நவீனத்துவ சிந்தனையின் பாதிப்பு வெளிப்படலாயிற்று. இதுவரை கற்றோர் குழாத்தினருக்காக மட்டும் தயாரிக்கப்பட்ட ஏட்டுச்சுவடிகளின் பாவனை குறைய, கற்றோர்க்கன்றி மற்றோர்க்கும் பயன்படும் வகையிலான நூற்பிரதிகள் அதிகளவில் வெளிவரலாயின. சாதாரண கல்வியறிவுயுடைவர்களும் படித்துப் பயனடைதல் வேண்டும் என்பதற்காக பத்திய ரூபமாக அதாவது செய்யுள் வடிவில் இருந்த நூல்கள் கத்திய ரூபமாக – உரைநடையில் வெளியிடப்பட்டன என உரை தொடர்ந்தது.

பயணம் தொடரும்...



# படித்ததும் பகர்வதும்

180





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

**சிறுவரைப் பாதுகாப்போம்!**



இலங்கையில், அண்மைய காலத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2023ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 10,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) தெரிவித்துள்ளது. அத்துடன், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2,242 முறைப்பாடுகளும், சிறுவர் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் 472 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 404 முறைப்பாடுகளும், சிறுமிகள் துஷ்பிரயோகம் தொடர்பில் 51 முறைப்பாடுகளும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் 06 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவ் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக முறைபாடுகளை விட 2023 ஆம் ஆண்டு அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளது எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது. இவை தவிர முறைபாடுகள் செய்யப்படாதவற்றின் தொகை இன்னும் அதிக அளவில் இருக்கலாம்.

இன்றைய உலகில் சமூக ஊடகங்களின் வளர்ச்சியும், இணையத்தளங்களின் உலா வருவதற்கான இலகுவான வாய்ப்புகளும் மனித எண்ணங்களை மாசுபடுத்தி அவர்களின் ஒழுக்க விழுமியங்களில் செய்துள்ள பாதிப்புகளே இச் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு காரணமாக இருப்பதாக சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று சிறுவர் சிறுமிகளுக்கான பாதுகாப்பு என்பது எல்லா விதத்திலும் கேள்விக் குறியாக இருப்பதை வேதனையோடு நோக்க வேண்டியுள்ளது. படிக்கச் செல்கின்ற சிறுவர்கள் ஆசிரியர், அதிபர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படும் அதிர்ச்சியான செய்திகளும், பொருட்கள் வாங்கச் செல்லும் சிறுவர்கள் கடை வியாபாரிகளினாலும், வாகனங்களில் பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் வாகனச் சாரதிகள் மற்றும் நடத்துனர்களாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுவது பற்றிய செய்திகளும் பல திசைகளிலிருந்தும் பல வடிவங்களில் வெளிவந்து கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இவை மட்டுமன்றி வீடுகளிலே தனித்து இருக்கின்ற சிறுவர்கள் அவர்களது உறவினர்களாலேயே துஷ்பிரயோகமாகும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துக் காணப்படுவதையும் மறுக்க முடியாதுள்ளது. இவற்றை நோக்கும் போது சிறுவர்களுக்கான பாதுகாப்பு எல்லா இடங்களிலும் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது எனத் துணிந்து கூறலாம். இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி சிறுவர் பாதுகாப்புக்காக செய்ய வேண்டிய வழிமுறைகள் எவை என உறுதியாக கூற முடியாதிருப்பதும் துரதிர்ஷ்ட நிலையாகும்.

ஒவ்வொருவரும் வாழ்வியல் ஒழுக்க நெறிமுறைகளை உறுதியான உள்ளத்துடன் சரியாக கடைப்பிடிப்பதன் மூலமும், சன்மார்க்க நெறிமுறைகளை சரியாக, முறையாக பின்பற்றுவதன் மூலமும் இவற்றில் நல்ல மாற்றங்களை கொண்டு வர முடியும் என்பதை மறுக்க இயலாது. அத்துடன் ஒவ்வொரு பெற்றோரும், பாதுகாவலரும் தமது பிள்ளைகளான சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பொருத்தமான, சரியான, முறையான நடவடிக்கைகளை முன் எச்சரிக்கையோடு செய்துகொள்ள வேண்டியது அவசரமும், அவசியமுமான பணியாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்களை தமது கண்காணிப்பில் வைத்திருப்பதே மிகச் சிறந்தது எனலாம்.

சிறுவர்கள் நமது சொத்துக்கள், அவர்கள் குடும்பங்களினதும் சமுதாயத்தினதும் வளங்கள், அவர்கள்தாம் நாளைய தலைவர்கள். அவர்களைப் பாதுகாப்பதும் அவர்கள் நாளைய நல்லவர்களாக உருவாக வழியமைப்பதும், அவர்கள் எந்தவிதத்திலும் துஷ்பிரயோகமாவதை தவிர்ப்பதும் ஒவ்வொருவர் மீதுமுள்ள பாரிய பொறுப்பும், கடமையுமாகும்.

## நெஞ்சுக்கு நீதி

**சிறுவர்கள் உலகில் எல்லோருக்கும் உயர்ந்த சொத்துக்கள்**
**சிறுமையாய் துஷ்பிரயோகம் செய்வதுதாம் கொடுமைகள்**
**கருத்தோடு காத்திடுவோம் அவர்களின் சிறப்பு உரிமைகள்**
**உருவாகும் உலகினில் உயர் எதிர்காலம் உணருங்கள்**

## அந்த நாள் ஞாபகம்!

**சவூதி அரேபியாவுக்கு நிதியுதவி வழங்கிய இலங்கை முஸ்லிம்கள்!**



இன்று உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக சவூதி அரேபியா திகழ்கிறது. இலங்கையின் தேவைகளுக்கும், அபிவிருத்திக்கும் பல்வேறு வழிகளில் பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறது. ஆனால் இற்றைக்கு சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், சவூதி அரேபியா வறுமையில் சிக்குண்ட போது, அதன் வறுமை நிவாரண நிதிக்காக இலங்கையிலிருந்து நிதி திரட்டி அனுப்பப்பட்டுள்ளது என்பது பலரும் அறியாத விடயமாகும். சகோதரர் ஹாபிஸ் இஸ்ஸதீன் இது பற்றி செய்துள்ள வரலாற்றுப் பதிவு உங்களுக்காக இங்கே:

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் பழைய குறிப்புப் புத்தகம் ஒன்று என் கைக்கு கிடைத்தது. அது எப்படி என்னிடம் வந்தது என்பது நினைவில் இல்லை. 1945ஆம் ஆண்டு காலப் பகுதியில் மைப் பேனாவால் எழுதப்பட்டிருந்த அந்த மொனிட்டர் அப்பியாசக் கொப்பியில் 'மக்கா மதீனா பஞ்ச நிவாரண நிதி சேகரிப்பு' எனத் தலைப்பிடப்பட்டு இருந்தது. அடுத்து வந்த பக்கங்களில் அந்த நிவாரண நிதிக்கு நன்கொடை அளித்தவர்களின் பெயர் விபரம் எழுதப்பட்டிருந்து. 50 சதம், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என ஒவ்வொருவரும் அன்பளிப்புச் செய்த தொகை குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் கவனமாக எடுத்து வைத்திருந்த அந்த குறிப்புப் புத்தகத்தை இப்போது தேடிக் கொள்ள முடியவில்லை. அது பழைய பேப்பர் காரனிடம் போய்ச் சேர்ந்து விட்டதோ தெரியாது. அதற்குப் பல வருடங்களின் பின்னர் தான் இங்கே தரப்பட்டப்பட்டுள்ள 30.04.1945 என திகதியிடப்பட்ட பத்திரத்தை வாசிக்கக் கிடைத்தது. அதிலிருந்து இந்த விடயம் தொடர்பான முழு விபரத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது.

1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப்போர் நடந்தது. இக்காலப் பகுதியில் ஹஜ்ஜுக்கு வெளிநாட்டவர்கள் செல்வது தடைப்பட்டது. ஹஜ் யாத்திரிகர்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தங்கியிருந்த மக்காவாசிகளும் மதீனாவாசிகளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானார்கள். அப்பகுதிகளில் பஞ்சம் நிலவத் தொடங்கியது.

இந்த நிலையில்தான் கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்கள் 'மக்கா மதீனா பஞ்ச நிவாரணக் கமிட்டி' என்ற பெயரில் அமைப்பொன்றை ஏற்படுத்தி நிவாரண நிதி சேகரிக்கத் தொடங்கியுள்ளனர். இந்த குழு டொக்டர் எம். ஸீ. எம் கலீல் (இலங்கை முஸ்லிம் லீக் தலைவர்) தலைமையில் செயல்பட்டிருக்கிறது. அக்காலத்தில் அவர் இராஜாங்க சபையின் உறுப்பினர். இக்குழுவின் செயலாளராக பீ. எஸ். அப்துல் காதிர் என்பவர் இருந்துள்ளார். கொழும்பு உட்பட 86 ஊர்களில் இந்த நிதி சேகரிப்பு நடந்திருக்கிறது.

மொத்தம் 71,832 ரூபா 81 சதம் சேகரிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக 50,000/ ரூபாவும் அதனை அடுத்து 20,000/ ரூபாவும் என மொத்தம் 70,000/ ரூபாய் கொழும்பில் இருந்த Eastern Bank ஊடாக Telegraphic Transfer மூலம் சவூதி மன்னர் அப்துல் அஸீஸ் இப்னு சுவூதுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி தெரிவித்து பதில் தந்தியும் மன்னரிடமிருந்து வந்துள்ளது.

குறிப்பிட்ட அந்த வருடத்தில் ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 3 ரூபாவாக இருந்திருக்கிறது. அதன்படி பார்த்தால் சுமார் 23,300 டொலருக்கு சமமான பணத்தை அன்று இலங்கை முஸ்லிம்கள் சவூதி அரேபியாவுக்கு நன்கொடையாக அனுப்பி வைத்துள்ளனர்.

இங்கே தரப்பட்டுள்ள, குறித்த அந்தப் பத்திரத்தில் எழுதப்பட்டிருப்பதாவது:

30 – 4 _ 45

சென்ற 4, 5 வருடங்களாக யுத்தத்தினால் ஜனங்கள் ஹஜ்ஜுக்கு போதிய அளவில் போகவில்லை. இதனால் ஹிஜாஸில் குறிப்பாய் மக்கா மதீனா நகர சுற்றுப்புறங்களில் வசிக்கும் ஹஜ் கால வரும்படியை எதிர்பார்த்து வாழக்கூடிய அரபிகளுக்கு கஷ்டமேற்பட்டு பஞ்ச நிலமை ஏற்பட்டிருப்பதாக நாமும் அறிந்து நமது முயற்சியின் பேரில் கொழும்பில் "மக்கா மதீனா பஞ்ச நிவாரண கமிட்டி" என்ற பேரால் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி பணம் வசூல் செய்தோம். மொத்தம் ரூ 71,832/81 வசூலானது. கொழும்பு உட்பட 86 ஊர்களில் நிதி சேகரித்து அனுப்பியிருந்தனர். மாட்சிமிக்க சுல்தான் அப்துல் அஸீஸ் இப்னு சுவூது மன்னருக்கு முதன்முறையாக ரூ 50,000/ மும் இரண்டாம் முறையாக ரூ 20,000/மும், ஆக 70,000/ கொழும்பு ஈஸ்டர்ன் பேங்க் மூலமாக T. T. அனுப்பிக் கொடுத்தோம். ஒப்புக்கொண்டு நன்றி பாராட்டி தந்தி அனுப்பியிருந்தார்கள்.

கமிட்டிக்குத் தலைவர் ஜனாப் Dr M. C. M. கலீல் M. S. C.
காரியதரிசி ஜனாப் P. S. அப்துல் காதிர்
ஆபீஸ் 163, 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

## நொறுக்குத் தீனி

**பணக்கார பிச்சைக்காரர்?!**



உலகின் மிகவும் பணக்கார பிச்சைக்காரர் இந்தியாவின் பொருளாதார தலைநகரமான மும்பையில் வாழ்ந்து வருகிறார். இவரது பெயர் பரத் ஜெயின். இவர் யாசகம் செய்தாலும், திருமணம் செய்து கொண்டு குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறார். அவருக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர்.

தன்னால் சரியாகப் படிக்க முடியாவிட்டாலும், தன்னுடைய குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக, இரண்டு பேரையும் கான்வென்ட்டில் சேர்த்து படிக்க வைத்திருக்கிறார். அத்தோடு மும்பையில் மிகவும் பணக்காரர்கள் வசிக்கக்கூடிய பரேல் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் பரத் ஜெயின் தனது குடும்பத்தோடு வசித்து வருகிறார். இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் அவருக்கு இரண்டு வீடுகள் இருக்கின்றனவாம்.

மும்பைக்கு அருகிலுள்ள தானே என்ற இடத்தில் இரண்டு கடைகளை விலைக்கு வாங்கி, வாடகைக்கு விட்டிருக்கிறார். இதில் மாதம் 30,000 ரூபாய்க்கு மேல் வாடகை கிடைக்கிறது. இது தவிர தினமும் 10 முதல் 12 மணி நேரம் இவர் யாசகம் செய்கிறார். இதன் மூலம் தினமும் 2,000 முதல் 2,500 ரூபாவாக மாதம் 60,000 முதல் 70,000 ரூபாய்கள் வரை வருமானம் (சுமார் 2 லட்சம் இலங்கை ரூபா) கிடைக்கிறதாம். பரத் ஜெயினின் நிகர சொத்து மதிப்பு 7.5 கோடி இந்திய ரூபாய் எனவும் (சுமார் 28 கோடி இலங்கை ரூபா) என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்போது இவரது குடும்பம் மிகவும் நன்றாக வசதியுடன் வாழ்வதால், பிச்சை எடுப்பதை விட்டுவிடும்படி அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர். ஆனால், அதைத் தன்னால் கைவிட முடியாது என்று திட்ட வட்டமாக மறுத்துவிட்டாராம் பரத் ஜெயின். மும்பையில் மக்கள் அதிகமாகக் கூடும் சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம், ஆசாத் மைதானம் போன்ற இடங்களில்தான் பரத் ஜெயின் அன்றாடம் பிச்சை எடுத்து வருகிறாராம்.

## வாசித்ததில் வசீகரித்தது

**தந்தைபோல் யார் உள்ளார் இவ்வுலகில்.?**

தந்தைக்கு முன்பு குரலை உயர்த்தாதீர்! அவ்வாறு செய்தால் இறைவன் உங்களை தாழ்த்தி விடுவான்.

தந்தையின் கண்டிப்பை பொறுத்து கொள்ளுங்கள்! அதனால் உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.

தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்! அதனால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு மரியாதை செய்வார்கள்.

தந்தை சொல்வதை கவனமாகக் கேளுங்கள்! ஏனென்றால் பிறர் நமக்கு ஏதும் சொல்லும் நிலைமை வரக் கூடாது.தந்தைக்கு முன்பு உங்கள் பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள்! அதனால் இறைவன் அதிகரித்த மக்கள் பார்வையில் உங்களுக்கு உயர்ந்த கண்ணியம் அளிப்பான்.

தந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் நமக்கு தெளிவான ஒரு புத்தகம் ஆகும். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பாடமாக எண்ணி பயன் அடைந்து கொள்ளுங்கள்.

தந்தை என்பவர், அனைவரையும் விட, மிகச் சிறந்த முறையில், நமக்கு நன்மை செய்யக் கூடியவர். மிகவும் அழகாக முறையில் நமக்கு பாதுகாப்பு தரக் கூடியவர் ஆவார்.

முகம் தெரியாத யாருக்கெல்லாமோ நாம் மரியாதை செய்கிறோம். நம்மை ஆதரவோடு கொஞ்சி வளர்த்த தந்தைக்கு அதிகமாக மரியாதை செய்வோம்.

தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளில், எந்தவித குறையும் வைத்து விட வேண்டாம்.

தாய், தன் பிள்ளை பத்திரமாக இருக்க வேண்டும் என்று மார்பில் அணைத்துக் கொள்வாள்.

ஆனால் தந்தை, தான் பார்க்காத உலகத்தையும் தன் பிள்ளை பார்க்க வேண்டும் என்று தன் தோலின் மேல் தூக்கி 'நான் பார்க்காத உலகத்தை நீ பார்' என்று புதியதை எல்லாம் காட்டுவார்.

தந்தை உம் அருகில் இருக்கும்போது சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தந்தையை போல் உண்மையான நண்பன் இந்த உலகத்தில் யாரும் இல்லை. புரிந்து கொள்ளுங்கள்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




# மேலும் விரிந்துதான் செல்கிறதே மர்மத்திரை! நாலும் தெரிந்தவர்கள் சேர்வார்களா கரை!

சிந்துஜன் பரபரப்படைவதைப் பார்த்ததும்,
சிரஞ்சீவிக்கு வியப்பாகவே இருந்தது

"இல்லை சிந்துஜா, நீ, பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஒருவர் வீட்டில் இருந்து பாய்ந்தோடுவதும், சப்பாத்தைக் காணமலாக்குவதும் ஒருவரைக் கைது செய்யக்கூடிய குற்றமல்ல. அதேபோல் செல்வராகவனைக் கொலை செய்தது துர்காதான் என்று எவராது சொன்னால்"

"அவன் கழுத்தைப் பிடித்துத் திருகி விடுவேன்!" சிரஞ்சீவி சொல்லிமுடிப்பதற்குள்,

சிந்துஜன் பாய்ந்து சொன்னான்!

"இல்லை, நான் அப்படிச் செய்யமாட்டேன். அவனுடைய அறியாமையை நினைத்து அவனுக்காக அனுதாபப்படுவேன்!" சிரித்துக் கொண்டே சொன்னார் சிரஞ்சீவி.

அதேநேரம்,

சிரஞ்சீவியின் பெயருக்கு வந்திருந்த அஞ்சல் ஒன்றைக் கொண்டு வந்து, அவரிடம் கொடுத்தான்,

வீட்டின் வேலைக்காரன் ஒருவன்.

"ஆச்சரியம், சிந்துஜன் மிகவும் ஆச்சரியம், எவருக்கும் கிடைக்காத ஒரு வரப்பிரசாதம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த மர்மக் கொலைகாரனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது" அஞ்சலைப் பார்த்தபடியே,

மகிழ்ச்சியுடன் சொன்னார் சிரஞ்சீவி.

"உண்மையிலேயே நீங்கள் வித்தியாசமான ஆள்தான் மாமா, இந்த மாதிரியான ஆபத்தான விளையாட்டுக்களில் ஈடுபடுவதில்தான் நீங்கள் இன்பம் காண்கிறீர்கள், இல்லையா மாமா?"

"உண்மைதான்டா மருமகனே! உங்களைப் போன்றவர்கள் விளையாடி மகிழ்வதற்கு பலவிதமான விளையாட்டுகள் இருக்கின்றன. ஆனால் ஓரளவு வயதாகிவிட்ட எனக்கு இந்த மாதிரி துப்பறியும் வேலைகளில் ஈடுபட்டு அதில் இருக்கும் மர்மங்களை கண்டு பிடிப்பது தானே பொழுது போக்கு!"

இரண்டு மணி அளவில் இருவரும் வீட்டுக்குச் செல்லும் வழியில்,

சொலமனைச் சந்தித்தார்கள்,

"என்ன சொலமன் கஜுமரத்தைப் பார்த்தீர்களா?"

"ஆமாம், என்னைத் தாக்கியவர்கள் தான் செல்வராகவனைக் கொலை செய்திருக்கவேண்டும்! என்னைத் தாக்கியதைப் போலத்தான் அவனையும் தாக்கி இருக்க வேண்டும். அதன் பிறகு தான் அங்கு கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும்!

"அது சரிதான், ஆனால் மரத்தின் கிளை மீது ஏன் கொண்டு வந்து போட வேண்டும்?"

"அதைப் பற்றித்தான் எனக்கும் யோசனையாக இருக்கிறது!"

"துப்பாக்கியால் சுட்டபிறகு தான் மரத்தில் கொண்டு வந்து போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"ம்.. சத்தியமாக அப்படித்தான் இருக்கவேண்டும்!" சிந்திக்காமலேயே படாரென்று பதில் சொன்னார் சொலமன்!

"நீங்கள் அப்படி முடிவு செய்வதாக இருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் சொலமன்!"

சிரஞ்சீவி இப்படிச் சொன்னதும்,

அவரை வியப்புடன் பார்த்தார் சொலமன்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"இல்லை சொலமன், செல்வராகனுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் துப்பாக்கிச் சூடு, கஜு மரத்தின் கிளையின் கீழிருந்து மேற்கொள்ளப்பட்ட சூடு! அவர் நெற்றியின் வழியாக உள்ளே சென்றிருக்கும் துப்பாக்கி ரவை பின்பக்கமாக வெளியேறி மரத்தின் சில பகுதிகளையும் பிய்த்துக்கொண்டு சென்றிருக்கிறது!"

அவர் சொன்னதைக் கேட்டு விட்டு, அவருடைய கண்டுபிடிப்பை எண்ணி எல்லோரும் வியப்படைந்தார்கள்!

"ம்.. நீங்கள் என்றால் அற்புதமான ஒரு மனிதர்தான் சிரஞ்சீவி. அதனால் தான் பொலிசில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் இந்த கொலைகாரனை கண்டுபிடிக்கும் பொறுப்பை பொலிஸ் மாஅதிபர் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார். நான் அந்த தோமஸை சந்தித்து துர்காவைப்பற்றி விசாரித்தேன்.

"அவர் மிகவும் கோபத்துடன் இருப்பது போல் தெரிகிறது!"

"அதுசரி, இந்த தோமஸை இதற்கு முன்பு எப்போதாவது நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா?"

"ஞாபகமில்லை, அவரை இன்று சந்தித்தபோது அவர்மீது எனக்கு கொஞ்சம் சந்தேகம் வந்தது. ஆனாலும் நிச்சயப்படுத்தி எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. சரி சிரஞ்சீவி எனக்கு கொஞ்சம் அவசரமான வேலை இருக்கிறது. நான் அப்புறமாக வந்து உங்களை சந்திக்கிறேன்!" என்று சொல்லி,

அவர் விடை பெற்றார்,

அதேநேரம்,

தன்னை சந்திக்க வந்திருந்த பத்திரிகையாளரிடம் செல்வராகவனின் கொலை சம்பந்தமான தகவல்களைத் தெரிவித்தார்.

ஆனாலும்,

சில முக்கியமான தகவல்களை மறைத்தே,

அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் சொன்னார்!

இது,

சிந்துஜனுக்கு பெரும் வியப்பாக இருந்தது!

அதேபோல்,



அன்று வெளியான பத்திரிகைகளில் ஒன்றைப் பார்த்துவிட்டு,

"ம். இந்த பத்திரிகையில் வெளிவந்திருக்கும் சில தகவல்களில் உண்மை இருக்கிறது அற்புதம்!"

"அற்புதமா! அதற்கு என்ன காரணம் மாமா?"

"அதற்கு என்ன காரணம் என்று இன்று இரவு சொல்லுகிறேன்!"

சொல்லியபடியே மெல்ல ஊர்ந்து சென்ற சிரஞ்சீவி,

செல்வராகவனின் கடிதங்களையும், புத்தகங்களையும் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்த போது,

தலைமைக் காரியாலயத்தில் இருந்து அவருக்கு சிறிய பார்சல் ஒன்று வந்திருந்தது.

சிந்துஜனின் சிகரட் கேசுடன் ஒரு கடிதமும் அதில் இருந்தது!

அதை பிரித்துப் பார்த்தார் சிரஞ்சீவி.

அதில்,

இப்படி எழுதப்பட்டிருந்தது.

"நீங்கள் அனுப்பிய சிகரட் கேஸில்,

பல கைரேகை அடையாளங்கள் பதிவாகி இருக்கின்றன. அதில் ஒன்று தெய்வேந்திரன் என்பவருடையது. 1980 மார்ச் 10ஆம் திகதி முதல் ஏழு வருடங்களுக்கு சிறைத்தண்டனை பெற்றவர். செய்த குற்றம் கள்ளக் கையொழுத்திட்டது, ஏமாற்றியது! 1987ஆம் ஆண்டு முதல் மீண்டும் மூன்று வருடங்களுக்கு தண்டனை பெற்றுள்ளார். செய்த குற்றம், கள்ளக் காசோலைகளை மாற்றியது! இந்த வழக்குகளை கொண்டு நடத்தியவர் செல்வராகவன்!

இதைப் படித்துவிட்டு,

சிரஞ்சீவியும், சிந்துஜனும்,

வியப்புடன்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்,

"ம்.. நான் நினைத்து சரியாகத்தான் இருக்கிறது.தோமஸ் வெளிநாட்டில் கழித்த காலம்தான் அது!"

பொறாமையாலும், குரோதத்தாலும் மனிதர்கள் ஆடும் நாடகத்தைப் பார்க்க முடியாமல்,

நாணமிகுதியினால்,

அடிவானத்தில் சென்று மறைந்து கொண்டான்,

ஆதவன்!

புதுமையான,

பயங்கரமான பல சம்பவங்கள் நடைபெற்று,

இருபத்தினாலு மணி நேரங்கள் கடந்து சென்ற பிறகு,

தள்ளாடிய படியே நடந்து வந்த சொலமன்,

சிரஞ்சீவியின் எதிரில் இருந்த நாற்காலியில்,

சோர்வுடன் அமர்ந்து கொண்டார்!

"தெரிந்த இடங்களில் எல்லாம் விசாரித்துப் பார்த்து விட்டேன். துர்காவைப் பற்றி எந்த விதமான தகவலும் இல்லை!" அவருடைய வார்த்தைகளில்,

சோகம் சோடி போட்டது.

"நீங்கள் துர்காவைப் பற்றி இவ்வளவு அக்கறைப்படுவது கொஞ்சம் ஓவராக இல்லையா சொலமன்!" அமைதியாகக் கேட்டார் சிரஞ்சீவி.

"தப்புக் கணக்குப் போடுகிறீர்கள் சிரஞ்சீவி!"

அவள் ஒரு கன்னிப் பெண். பல ஆபத்துக்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண். இப்போது கூட எந்த ஆபத்தான சூழ்நிலையில் அவள் இருக்கிறாள் என்பது தெரியவில்லை. அடுத்த ஆபத்து அவளை நோக்கிப் பாயாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை! உங்கள் இருவரையும் அவள் நன்றாகக் கவனித்தாள்தானே, நீங்கள் இப்படிப் பேசுவது எனக்கு கவலையாக இருக்கிறது!" படபடவென்று,

வார்த்தைகளை அள்ளிக் கொட்டினார்!

"நீங்கள் இப்படியெல்லாம் பதற்றப்படக் கூடாது சொலமன். நீங்கள் சொன்னதைப்பற்றியெல்லாம் நானும் ஆழமாக யோசித்தேன்!"

"அப்போ துர்கா எங்கே?"

"இதற்கான பதிலை நான் உங்களுக்கு பிறகு தருகிறேன். அதற்கு முன்பு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. இந்த தோமஸின் மீது உங்களுக்கு துளி கூட சந்தேகம் வரவில்லையா?"

சிரஞ்சீவி இப்படிக் கேட்டதும்,

சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கிய சொலமன்,

சோர்வுடன்,

இல்லை என்பதைப் போல் தலையை ஆட்டினார்!

"சரி, நீங்கள் தெய்வேந்திரனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"தெய்வேந்திரன்" என்ற பெயரைக் கேட்டதும்,

அவர் முகத்தில்,

திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது,

தொடரும்...

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 103

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| | 06 | 07 | 08 | | |
| 09 | | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | | | 17 |
| | 18 | | 19 | 20 | |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ..............................................................
வகுப்பு ..............................................................
தொலைபேசி இல ..............................................................
பாடசாலை பெயர் ..............................................................
வதிவிட முகவரி ..............................................................
..............................................................
.............................. ..............................................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கிளியின் ஒலிமரபு பேசும். அதுபோன்று இப்பறவையின் ஒலிமரபும் 'பேசும்' எனப்படும்.
(3) கமுகு, தென்னை போன்றவற்றின் இளமை மரபுச்சொல்.
(6) விவசாயத்தை இப்பெயரிலும் கூறலாம்.
(10) நாம் எமது அன்றாட வாழ்வில் பேண வேண்டியது இது. தூய்மை என்றும் கூறலாம். (தலைகீழான சொல்)
(14) அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருங்கல் உபகரணம். சமையலில் பயன்படுத்தப்படும் பொருட்களை அரைத்துக் கொள்வதற்கு அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட இந்த உபகரணம் தற்காலத்தில் பாவனையில் இருந்து அருகி விட்டது.
(19) நிறமொன்றின் பெயர் இது. துறவிகள் அணிகின்ற ஆடையின் நிறம்.
(21) மணலும் மணல் சார்ந்த இடமுமான நிலப்பகுதி. (தலைகீழான சொல்)
(23) பூவின் இதழ் இது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(2) ஆழ்ந்த உறக்கத்தின் போது வருவது...உறக்கம் கலைந்ததும் இதுவும் கலைந்து விடும். (தலைகீழான சொல்)
(3) இளைய சகோதரனைக் குறிக்கின்ற சொல். (தலைகீழான சொல்)
(7) எகிப்தில் உள்ள பிரமிட்டுகளின் உள்ளே பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள மனித உடல்களை இப்பெயரில்தான் குறிப்பிடுகின்றனர்.
(9) கடலோரம் ஓயாமல் அடித்துக் கொண்டேயிருப்பது. (தலைகீழான சொல்)
(13) பலாப்பழத்தின் உள்ளீடு இது.
(15) இது மென்று உண்ணும் உணவல்ல. அருந்துவதற்கான திரவநிலையிலுள்ள உணவு. (தலைகீழான சொல்)
(19) தென்மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் ஒன்று இது.
(20) அக்காலத்தில் வேட்டையாடுவதற்கும், போர் புரிவதற்கும் பயன்படுத்தப்பட்ட ஆயுதம். அம்பு இருந்தால்தான் பயன்படுத்தலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 102

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தீவு 03. சென்னை 07. மிடி
10. பேன் 12. தெரு 17. இல்லம் 23. பச்சை

**மேலிருந்து கீழ்**

01. தீமை 03. செடி 05. தென்னை 07. மின்னல்
12. குரு 14. தம்பி 20. இசை 21 பனை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 101

### பாராட்டு பெறுவோர்

1. **டப்.ஏ. தனீசா மெதும்லி**
தரம் 09, புருலப்பிட்டி மகா வித்தியாலயம், மினுவாங்கொடை.

2. **எம்.ஆர். முஹம்மத் இஸ்ஹாக்**
தரம் 03C, றோயல் கல்லூரி, இல. 44/421, இந்திர ஜோதி மாவத்தை, இரத்மலானை.

3. **எம்.என். அப்ல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம், இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

4. **அகீல் முஜீப்**
தரம் 04, கசாலியா மத்திய கல்லூரி, அட்டுலுகம, பண்டாரகம.

5. **தி. மனுஜன்**
தரம் 07V, கமு/ விபுலானந்தா மத்திய கல்லூரி, இல. 186, திருமால் முக வீதி, காரைதீவு 07.

6. **ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம், இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

7. **எம்.எம்.எப். ஹசீனா**
தரம் 07, முஸ்லிம் பாலிகா ம. வித்தியாலயம், இல. 142/1, ஒகடபொல, கஹடவிட்ட.

8. **கு. துவாகரன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி, இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 103
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



இல்வாழ்க்கை : அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவ தெவன்?

*தெளிவுரை :*
ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன?

# பிறர் துன்பத்தில் இன்பம் காணல்

ஒரு மன்னன் முரசறிவித்தான்.

தான் காணாத பழத்தை எவன் கொண்டு வருகிறானோ அவனுக்கு, தன் இராஜ்யத்தில் பாதி தருவதாக மன்னர் ஒருவர் முரசறிவித்துள்ளான். அத்தோடு மன்னன் அறியாத பழத்தைக் கொண்டு வந்தால், கொண்டு வந்தவன் வாயிலேயே அப் பழத்தைத் திணிப்பதாகவும் கூறினான்.

அதைகேட்ட அனைவரும் ஒவ்வொருவராக வாழைப்பழம். மாம்பழம், அன்னாசி பழங்கள் என கொண்டு வந்தனர்.

இதன் போது மன்னன், அன்னாசி பழத்தைக் கொண்டு வந்தவனின் வாயில் திணிக்கும் போது, இரத்தம் வந்துவிட்டது. அதையும் பொருட்படுத்தாமல் அவன் சிரித்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ட மன்னன், 'இரத்தம் வடிகிறதே ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டான்.

மன்னவா! வெளியில் ஒருவன் பலாப்பழத்தோடு நிற்கிறான். அவன் படப் போகும் துன்பத்தை எண்ணிப் பார்தேன், சிரிப்பு வந்து விட்டது என்றான். நாம் பிறரின் துன்பத்தில் இன்பமடைவது நன்மையான விடயமல்ல பிள்ளைகளே.

சாரணா கையூம்



## இவ்வார மழலை



எஸ். ஜனஹாசினி
சதீஸ்குமார் – சிந்துஜா

சிறுவர் சித்திரங்கள்



சம்ரா ஸப்வான்
தரம் - 09, பிரய்ட்ன் சர்வதேச பாடசாலை, காலி.

# பூனையின் இரகசியங்கள்

பூனைக்கு இனிப்பான எந்த உணவின் சுவையும் தெரியாது. மனிதர்களால் 5 அல்லது அதற்கு மேற்பட்ட சுவைகளை உணரமுடியும். ஆனால், பூனைகளால் இனிப்புச்சுவையை மட்டும் உணர முடியாது. வீட்டுப்பூனை மட்டுமல்ல, காடுகளில் வாழும் பூனைகள் அனைத்துக்கும் இது பொருந்தும். சராசரியாக பூனைகள் ஒரு நாளில் 70 சதவீதத்தை தூங்கியே கழிக்கின்றன. பொதுவாக பூனைகள், ஒரு உணவை மூன்று முறை ருசித்து சோதனை பார்த்த பின் நான்காவது முறை நம்பிக்கையுடன் அதனை உண்ணும். பூனைகள் தனது உள்ளங்கால் வழியாக வியர்வையை வெளியேற்றுகின்றன. அவற்றின் சிறுநீர் இருட்டில்



ஒளிரும் தன்மை கொண்டது. பெண் பூனைகள் பொதுவாக வலது கால் பழக்கமுடையவை. மேலும் ஆண் பூனை இடது கால் பழக்கம் கொண்டவையாக இருக்கும்.

பூனைகளுக்கு காலர் எலும்புகள் என்று சொல்லக்கூடிய கழுத்திற்கும் தோலுக்கும் இடையேயான எலும்புகள் கிடையாது.

பெண் பூனைகள் மோலி அல்லது ராணி என்று அழைக்கப்படும். பூனைகளால் கடல் நீரை குடிக்க முடியும். அதன் சிறுநீரகங்கள் உப்பை வடிகட்டும் அளவிற்கு திறன் கொண்டவை. பாலூட்டிகள் மற்றும் பறவைகளைச் சேர்ந்த 33 இனம் பூனைகளால் அழிந்துள்ளது. மிகவும் அதிகமாக வேட்டையாடக் கூடிய 100 இனங்களில் பூனையும் ஒன்று.



## உப்பு நீரை அருந்தாத டொல்பின்களும்

கடலிலேயே வாழ்ந்தாலும் டொல்பின்கள் கடல் நீரைப் பருகுவதில்லை. கடலின் உப்பு நீரை அருந்தினால் டொல்பின்களின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு அவை இறக்க நேரிடும். தங்களுக்குத் தேவையான நீரை அவை உண்ணும் உணவிலிருந்தே எடுத்துக்கொள்கின்றன.

## காக்காவும் நரியாரும்

வள்ளியம்மைப் பாட்டி
வடைசுட்டு விற்பாள்
பாட்டி சுட்ட வடையை
தினம் ருசித்துத் தின்னும் காகம்!

பாட்டி தந்த வடையொன்றை
தின்னச் சென்ற காகத்தை
குள்ள நரியும் கண்டது
தந்திரமொன்று செய்தது!

காக்கை அக்கா நீ பாடு
காது குளிர நான் கேட்பேன்
இனிமையான உன் குரலோசை
கேட்டு ரொம்ப நாளாச்சே!

என்றே நரியும் சொன்னதால்
நன்றே நினைத்த காக்கையது
வடையைக் காலில் வைத்துக் கொண்டே
கா... கா... வென்றே பாடியது!

ஏய்க்க நினைத்த நரியாரோ
ஏமாறித்தான் போனாராம்
புத்தியான காக்கையது
புகழுக்கெல்லாம் மயங்காதாம்!

அஸ்மா பாரிஸ்
மள்வானை



## ஆற்றுக்குதிரையான நீர்யானை



நீர்யானை எவ்வாறு ஆற்றுக்குதிரையானது? *Hippopotamus* என்ற வார்த்தை *Hippo* மற்றும் *potunus* என்ற இரண்டு கிரேக்க வார்த்தைகளில் இருந்து உருவாக்கப்பட்டது. *Hippo* என்றால் குதிரை என்றும் *potunus* என்றால் ஆறு என்றும் அர்த்தம். நீர்யானைகளில் பால் பிங்க் கலரில் இருக்கும். பாலில் கலந்திருக்கும் இரண்டு அமிலங்களினால் இந்த நிறமாற்றம் ஏற்படுகிறது.

*Hipposudoric* என்ற சிவப்பு நிற அமிலமும் *Norhipposudoric* என்ற ஒரஞ்சு வண்ண அமிலமும் ஒன்று சேர்ந்து பிங்க் கலரைத் தருகின்றன. இவ்விரண்டு அமிலங்களும், நீர்யானைகளின் உடலில் நுண்ணுயிர்கள் வளர்வதிலிருந்து தடுப்பது மட்டுமல்லாமல், சூரிய ஒளியிலிருந்தும் அவற்றைக் காக்கின்றன.

# விசித்தரமான அரசர்கள்



### ஜூலியஸ் சீசர்

ரோமானியப் பேரரசரான இவர் தன்னுடைய குதிரைகளை மிகவும் நேசித்தார். அதில் இன்சிடேடஸ் என்ற குதிரையை மிகவும் நேசித்தார். சீசர் தனது குதிரைக்கு என தனி பளிங்கு மாளிகையைக் கட்டி அதனைப் பராமரிக்க தனி மேலாளரை நியமித்துள்ளார்.

### கின் ஷி ஹுவாங்



இவர் சீனாவின் முதல் பேரரசர். சீன தேசத்தில் கின் ஆட்சியை இவரே நிறுவியவராவார். இவர் சிறந்த பேரரசராக இருந்தாலும் சில சமயங்களில் முட்டாள் தனமாக நடந்துக் கொண்டுள்ளார். மரணமடையாமல் இருப்பதற்கான வழிகளைக் கூறும் புராணக் கதைகளை முழுமையாக நம்பினார். தானும் மரணமில்லாத வாழ்வை வாழ ஆசைப்பட்டார். கதையின் படி கடலுக்குள் சாகாவரம் பெற்றவர்களால் உருவாக்கப்பட்ட மூன்று ஆவி மலைகளைத் தேடி வரும்படி அடிக்கடி வீரர்களை அனுப்பி வைத்தார். ஆனால் வீரர்கள் எங்கோ இருந்து சில மூலிகைகளைக் கொண்டு வந்தனர். அதனை சாகாவரம் தரும் மருந்தென எண்ணி அதனைப் பயன்படுத்தி மூலிகைப் பானம் செய்யுமாறு கட்டளையிட்டார். ஆனால் நியமிக்கப்பட்ட மூலிகைப் பானத்தில் பாதரசம் கலந்த காரணத்தால் அந்தப் பானமே அவரது உயிரைப் பறித்தும் விட்டது.

கு. அவினாஷ்
வத்தளை

# ஆச்சரியமான தகவல்கள்

1. உலகின் முதல் தத்துவஞானியான சாக்ரடீஸ் தான் கூறிய உபதேசங்கள் எவற்றையும் எழுதி வைக்கவில்லை. அவரது தலைசிறந்த சீடரான தத்துவஞானி பிளேட்டோவின் குறிப்புகள் மூலமே அவரது அறிவுத் திறனை அறிய முடிகின்றது.

2. மாபெரும் சர்வாதிகாரியான ஹிட்லர் ஒரு சைவ உணவு பிரியராவார். உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதை அவர் வெறுத்தார். யூதர்களை கொன்றுக் குவித்த ஹிட்லரின் சமையல்காரர் ஒரு யூதர்.

3. எகிப்திய அரசி கிளியோபட்ரா தனது அரசவை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கும் போது ஒரு போலித் தாடியை அணிந்து கொள்வாராம். எகிப்திய மன்னர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு பணிபுரிய அவர்களது பணியாட்களையும் கொன்று அவர்களுடன் பிரமிட்டுக்குள் புதைத்து விடுவார்கள்.

4. லியானாடோ டாவின்சி ஒரு கையால் படம் வரைந்துக் கொண்டே இன்னொரு கையால் எழுதக் கூடிய திறன் பெற்றவர். அவர் வரைந்த மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது. கத்தரிக்கோல் இவரால் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

5. புகழ்பெற்ற விஞ்ஞானியான ஐசக் நியூட்டன் இரு முறை இங்கிலாந்து பாராளுமன்றத்தின் அங்கத்தினராக பணியாற்றி உள்ளார். அவர் அங்கு செலவழித்த இரு வருடங்களிலும் ஒரு முறையைத் தவிர வாய் திறந்து பேசவேயில்லை. அப்படி அவர் என்ன பேசினார் என்றால் அரங்கத்தில் இருந்த ஒருவரிடம் ஜன்னலைத் திறக்குமாறு கூறினார். அவ்வளவு தான்.

6. உலகையே மிரள வைத்த மாவீரர்களான அலெக்சாண்டர், நெப்போலியன் மற்றும் செங்கிஸ்கான் அதோடு சர்வாதிகாரிகளான ஹிட்லர், பெனிடோ முசோலினி ஆகிய அனைவரும் பூனைகளுக்கு பயப்படும் *Ailurophobia* என்ற மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள்.

7. 1182 - 1227 ஆண்டுகளில் மொங்கோலிய நாட்டில் வாழ்ந்த பேரரசர் செய்கிஸ்கானுக்கு கணக்கிலடங்காத குழந்தைகள் இருந்தனர். இன்று ஒவ்வொரு 200 பேரில் ஒருவர் செங்கிஸ்கானின் நேரடித் தலைமுறையாக இருக்கக் கூடும் என விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

கு. அவினாஷ் - வத்தளை

# விளையாட்டு

# ஹசரங்க எனும் இலங்கையின் கபில் தேவ்



அபூதாபியில் 2021 ஒக்டோபர் மாதம், டி20 உலகக் கிண்ண போட்டியில் அயர்லாந்தை எதிர்கொண்ட இலங்கை அணி முதல் இரண்டு ஓவர்களுக்குள்ளேயே மூன்று விக்கெட்டுகளை இழந்தது. பானுக்க ராஜபக்ஷ, தசுன் ஷானக்க மற்றும் சாமிக்க கருணாரத்ன இன்னும் களமிறங்கி இருக்கவில்லை.

அப்போதே எதிர்பாராத வகையில் வனிந்து ஹசரங்க முன்கூட்டியே துடுப்பை எடுத்து மைதானம் வந்தார். இலங்கைக்கு அதிர்ச்சி கொடுக்கக் காத்திருந்த அயர்லாந்தை தனியாளாக விளாசித் தள்ளினார். முகம் கொடுத்த முதல் ஏழு பந்துகளையுமே அவர் நிதானமாக ஆடினார். பின்னர் எக்ஸ்ட்ரா கவர் திசையில் பந்தை தள்ளிவிட்டு ஓட்டங்களை பெற ஆரம்பித்த ஹசரங்கவை கட்டுப்படுத்த முடியாமல்போனது.

அந்தப் போட்டியில் அவர் 47 பந்துகளில் ஒன்பது பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 71 ஓட்டங்களை பெற இலங்கை 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றியீட்டியது.

கடந்த 2023 ஒகஸ்ட் மாதத்தில் ஹசரங்க தலைமையிலான கண்டி அணி தடுமாற்றம் கண்டிருந்தது. லங்கா பிரீமியர் லீக்கில் கண்டி அணிக்கு ஹசரங்க 2022 இல் தலைவராக ஒப்பந்தமானார். அது தனிப்பட்ட முறையில் அவரது ஆளுமைக்கான சவாலாக இருந்தது. எனினும் கண்டி அணி முதல் மூன்று போட்டியில் இரண்டில் தோற்றிருந்தது.

நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணிக்கு எதிராக 118 ஓட்டங்களை துரத்தியபோதும் அணியில் அதிரடி மாற்றம் கொண்டுவரப்பட்டது. துடுப்பாட்டத்தில் ஹசரங்க உயர்வு பெற்றார். முதல் வரிசையில் அவர் களமிறங்கும்போது கண்டி அணி 6 ஓவர்களில் 31 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஹசரங்க ஆட்டமிழக்காது 22 பந்துகளில் 52 ஓட்டங்களை பெற அந்த அணி 13 ஓவர்களிலேயே இலக்கை எட்டிவிட்டது.

அடுத்த போட்டியில் 5 ஆவது வரிசையில் வந்த ஹசரங்க 27 பந்துகளில் 64 ஓட்டங்களை பெற கண்டி மொத்தம் 203 ஓட்டங்களை விளாசியது. பின்னர் நடந்த கொலம்போ ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கண்டி பவர்பிளேயில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் ஹசரங்க 21 பந்துகளில் 40 ஓட்டங்களை விளாச 10 ஓவர்கள் முடிவில் 70 ஓட்டங்களை பெற்றது. எனினும் கண்டி வெற்றி இலக்கை எட்டுவதை 10 ஓட்டங்களால் தவறவிட்டபோதும் ஹசரங்க எதிரணிக்கு சவால் கொடுத்தார்.

கடைசியாக கட்டாயம் வெல்ல வேண்டிய இரண்டாவது தகுதிகாண் போட்டியில் காலில் உபாதைக்கு முகம்கொடுத்தபோது ஹசரங்க தனது அணிக்காக 30 பந்துகளில் 48 ஓட்டங்களை விளாசியதோடு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அணியின் வெற்றியை உறுதி செய்தார்.




தொடர் முடிவில் ஹசரங்க மொத்தமாக 279 ஓட்டங்களையும் 19 விக்கெட்டுகளையும் பெற்றார். அதாவது அந்தத் தொடரில் அதிக விக்கெட் மற்றும் அதிக ஓட்டங்கள் என்று இரண்டிலும் முதலிடத்தைப் பெற்றார். இதில் 189.79 ஓட்ட வேகத்தை பதிவு செய்தார்.

எனினும் லங்கா பிரீமியர் லீக்கில் அவர் பெற்ற காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டி ஏற்பட்டதோடு கடந்த ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணம் உட்பட பல மாதங்கள் கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டி ஏற்பட்டது.

பின்னர் கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி எட்டு ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. இப்போது ஹசரங்க இலங்கை டி20 அணித் தலைவர். துடுப்பெடுத்தாட வந்த அவர் முதல் பந்தை மாத்திரமே தடுத்தாடினார். அடுத்த பந்தை பெயின்ட் திசையில் பௌண்டரிக்கு விளாசினார். பின்னர் எக்ஸ்ட்ரா கவரில் பந்தை தூக்கி அடித்தார்.

விக்கெட்டில் இருந்து சற்று விலகி போதுமான இடம் எடுத்து களத்தடுப்பாளர்கள் இல்லாத திசையில் பௌண்டரிகள் விளாசுவது வனிந்துவுக்கு பழகிப்போன ஒன்று. அந்தப் போட்டியில் அவர் அடித்த எழு பௌண்டரிகளில் ஆறு ஓப் பக்கமாக முன்னால் அல்லது பின் திசையில் இருந்தது.

ஹசரங்க 32 பந்துகளில் பெற்ற 67 ஓட்டங்களும் ஆட்டத்தை திசை திருப்பியது. இலங்கை அணியில் மேலும் மூன்று வீரர்களே இரட்டை இலக்கங்களை பெற்றார்கள். அதில் அதிகபட்சம் 25 ஓட்டங்கள். பின்னர் பந்துவீச வந்த ஹசரங்க 4 ஓவர்களுக்கும் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் த்ரில் வெற்றிபெற ஹசரங்கவின் பங்கு அதிகம்.

பெப்ரவரி 19ஆம் திகதி நடந்த 2ஆவது டி20 போட்டியிலும் ஹசரங்கவின் துடுப்பாட்டம் குறிப்பிடத்தக்கது. ஐந்தாவது வரிசையில் வந்த அவர் 9 பந்துகளுக்குத் தான் முகம்கொடுத்தார். ஆனால் ஒரு பௌண்டரி, இரண்டு சிக்ஸர்களுடன் 22 ஓட்டங்களை பெற்றார். அதுவே பின்னர் அஞ்சலோ மத்தியூஸ் வந்து அதிரடியாக ஓட்டங்களை பெற்று இலங்கை அணி 187 ஓட்டங்களை விளாச உதவியது.

ஹசரங்கவின் பந்துவீச்சு பற்றி கூறுவதற்கு ஒன்றுமில்லை. அது உலகத் தரம் வாய்ந்தது. ஆனால் அவரது துடுப்பாட்டம் தீர்க்கமானது. அதனை கச்சிதமாக பயன்படுத்தினால் பெருத்த லாபம் கிடைக்கும். உண்மையில் அவரால் பந்துவீச்சில் மத்திரமல்ல துடுப்பாட்டத்திலும் ஆட்டத்தை எந்த சந்தர்ப்பத்திலும் திசை திருப்ப முடியும்.

பந்துவீச்சில் நவீனகால லெக்ஸ் பின் சுழல் வீரர்கள் தட்டையாக மற்றும் வேகமாக பந்துவீசுவது போலல்ல ஹசரங்கவின் பாணி. அவர் பந்தை அதிகம் பறக்கவிட்டு விக்கெட்டுகளை சேகரிக்கிறார். இது அபாயகரமான உத்தியாக பார்க்க பட்டாலும் அது தான் ஹசரங்கவின் துருப்புச்சீட்டு.

துடுப்பாட்டத்தில் ஓப் திசையில் அவர் ஓட்டங்கள் பெற அதிக ஆர்வம் காட்டியபோதும் தனது மணிக்கட்டை பயன்படுத்தி பந்தை லெக் திசையில் செலுத்தி ஓட்டங்களை சேகரிக்கும் திறமையும் அவருக்கு உள்ளது.

இதில் குறிப்பிடத்தக்கது அணித் தலைமை என்பது அவருக்கு தயக்கத்தை தரவில்லை. கடந்த எல்.பி.எல் தொடரில் சோபித்ததும் ஆப்கானுக்கு எதிராக அதிரடி காட்டியதும் அணித் தலைவராகத் தான். அது அவர் சாதாரண வீரராக ஆடுவதை விடவும் ஒருபடி மேலாக உள்ளது.

தலைமைத்துவங்கள் மாறுபட்டிருக்கக் கூடும். இலங்கையை பொறுத்தவரை கடந்த காலங்களில் இவ்வாறான தலைமைகளை பார்த்திருக்கிறோம். போட்டியை சரியாக புரிந்து கையாள்வதில் அர்ஜுன ரணதுங்கவும் தந்திரங்கள் வகுப்பதில் மஹேல ஜயவர்தனவும் கைதேர்ந்தவர்கள். ஆனால் ஹசரங்கவின் தலைமைத்துவம் வித்தியாசமானது. அது சரியாக இந்திய முன்னாள் அணித் தலைவர் கபில் தேவுக்கு ஒப்பானது.

நேர்காணல்களில் அல்லது போட்டிக்குப் பின்னர் கேட்கப்படும் கேள்விகளில் ஹசரங்கவின் பதில்கள் சுருக்கமானதாகத்தான் இருக்கும். தோற்பதற்கு என்ன காரணம்? துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். வித்தியாசமாக ஏதாவது செய்திருக்க வேண்டுமா? ஆம், கடைசி ஓவர்களில் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது. எதில் முன்னேற்றங்கள் செய்திருக்க வேண்டும்? வீரர்கள் இன்னும் பெறுப்புடன் ஆட வேண்டும். இப்படித்தான் ஹசரங்கவின் பதில்கள் இருக்கும்.

ஆனால் ஆடுகளத்தில் அதிகம் உணர்ச்சிவசப்படுபவராக இருக்கிறார். விக்கெட்டுகளை வீழ்த்தும்போது அவரது கொண்டாட்டம் சலிப்பு ஏற்படுத்தாது. விக்கெட் வீழ்ந்தால் நிலத்துக்கும் வானத்துக்கும் துள்ளிக்குதிக்கும் அவர் ஏதாவது ஒரு செய்கையோடு கொண்டாட்டத்தை முடிப்பார்.

ஹசரங்கவின் பொறுப்புகள் இப்போது அதிகம், ஆனால் அது அவருக்கு சுமையாகத் தெரியவில்லை. அணியை வழி நடத்துவதில் அவரிடம் உறுதியான ஒரு திட்டம் இருக்கிறது. அணித் தலைமையை ஏற்ற குறுகிய காலத்திற்குள் அவர் உலகக் கிண்ணத்திற்கு தயாராக வேண்டி ஏற்பட்டிருக்கிறது. அதற்கான அணியை கட்டமைப்பதிலும் அவர் அதிக கரிசனை காட்டுவது தெரிகிறது.



# நடுவர்களும் மனிதர்களே

ஆப்கானிஸ்தனுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் தொடர்களை முழுமையாக வெற்றி பெற்று டி20 தொடரையும் 2–0 என கைப்பற்றி தொடரின் இறுதிப் போட்டியின் இறுதி நேரத்தில் ஒரு நோபோல் பிரச்சினைக்கு மத்தியில் இலங்கையின் தோல்வி நிகழ்ந்ததால் நடுவர்கள் மீது பழி விழுந்து விட்டது.

210 ஓட்ட இலக்கை துரத்திய இலங்கை அணி கடைசி மூன்று பந்துகளில் 11 ஓட்டங்களை எடுக்க இருந்தபோதே வபா மொமான்ட் வீசிய புல்டோஸ் பந்து துடுப்பெடுத்தாடிய கமிந்து மெண்டிஸின் இடுப்புக்கு மேலால் சென்றது. நடுவர்கள் அதனை கண்டும் காணாமலும் விட்டுவிட்டார்கள்.

கடைசியில் இரண்டு பந்துகளுக்கு 11 ஓட்டங்களாக மாறி கமிந்து கடைசி பந்தில் சிக்ஸர் அடித்தபோதும் அது வெற்றிக்குப் போதவில்லை. தோல்வி மேல் தோல்வியை சந்தித்த ஆப்கான் கடைசியில் ஒரு வெற்றியோடு ஊர் திரும்பியது.

உண்மையில் அந்த பந்துக்கு நோபோல் பிடித்திருந்தால் அடுத்த பந்து பிரீ ஹிட் கிடைத்திருக்கும், இலங்கைக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்திருக்கும். கெமராவில் பார்த்தால் ஐ.சி.சி. விதிகளின்படியும் இது நோபோல் தான். ஆனால் ஸ்கொயர் லெக் நடுவர் லைடன் ஹனிபல் நோபோல் பிடிக்கவில்லை. கமிந்து அதற்கு ரிவியு கேட்க முயன்றார், ஆனால் விதிப்படி இதற்கெல்லாம் ரிவியு கேட்க முடியாது. கோட்டுக்கு வெளியில் கால் செல்லும் நோபோலை சரி பார்க்க நடுவருக்கு அதிகாரம் இருந்தபோதும் இடுப்புக்கு மேலால் செல்லும் நோபோலை நடுவரால் மறுமுறை சரிபார்க்க முடியாது.

எனவே நடுவரும் மனிதனே என்று பார்த்தால் இந்த விடயத்தில் யார் மீது தப்பு செல்வது என்று கூற முடியாது. இதனை சாதரணமாக கடந்து போயிருக்கலாம் ஆனால் தவறு நிகழ்ந்த நேரம் இலங்கை வீரர்களின் கோபத்தைத் தூண்டிவிட்டது.

"இவ்வாறான விடயங்கள் சர்வதேச போட்டிகளில் நடைபெறக் கூடாது. (இடுப்புக்கு) நெருக்கமாக பந்து சென்றிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் அந்தப் பந்து உயரமாகச் சென்றது. இன்னும் சற்று உயரமாகச் சென்றிருந்தால் துடுப்பாட்ட வீரரின் தலையை தாக்கி இருக்கும்.

அதனை பார்க்க முடியாவிட்டால், அந்த நடுவர் சர்வதேச கிரிக்கெட்டுக்கு பொருத்தமாக இருக்க மாட்டார். அவர் வேறு வேலையை தேடுவது நன்றாக இருக்கும்" என்று போட்டிக்குப் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க குறிப்பிட்டார்.

போட்டி முடிந்த பின் நடுவர்களுடன் இலங்கை அணித் தலைவர் மற்றும் பயிற்சியாளர் வாக்குவாதப்பட்டது தெரிந்தது. அதனை அடுத்தே வனிந்து தனது கோபத்தை கொட்டினார்.

"அது நோபோல் தான் அதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. தவறு செய்திருந்தால் அவர் அதனை தாழ்மையுடன் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். எம்மால் அதனை ரிவுயு செய்ய முடியுமாக இருந்திருக்கும், ஆனால், ஐ.சி.சி. அதனை தவிர்த்திருக்கிறது. எமது துடுப்பாட்ட வீரர் ரிவியு செய்ய முயன்றார். கோட்டுக்கு வெளியில் செல்லும் காலை நாடுவரால் சரிபார்க்க முடியுமென்றால், இவ்வாறான நோபோல்களையும் பார்க்க முடியுமாக இருந்திருக்க வேண்டும். நடுவருக்கு உறுதியாக தெரியாவிட்டால் நடுவர் ரிவியு செய்ய முடியுமாக இருக்க வேண்டும். அவரது யோசனையில் என்ன இருந்தது என்று எனக்குத் தெரியவில்லை" என்கிறார் வனிந்து.




இந்த விடயத்தில் வனிந்துவின் இந்தப் பேச்சு மற்றும் நடத்தை அவரை வேறு ஒரு சர்ச்சைக்கு இழுத்துச் செல்லும் நெருக்கடியும் இருக்கிறது.

என்றாலும் இதனை நடுவரின் பார்வையில் இருந்து பார்க்க வேண்டும். நடுவர்களும் தவறு செய்வார்கள் என்ற பக்குவத்துடனேயே விளையாட்டை பார்க்க பழகிக் கொள்ள வேண்டும். ஸ்கொயர் லெக் நடுவராக இருந்த ஹனிபலும் கிட்டத்தட்ட கடந்த ஆறு ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட்டில் நடுவராக செயற்படுபவர், ஆனால் அந்தத் தருணம் அவருக்கு சரியாக அமையவில்லை.

"அது நடுவர் எடுக்க வேண்டிய முடிவாக இருந்தபோதும் நான் பந்தை கூட்டத்திற்கு மத்தியில் முழுமையாக தவறவிட்டேன். இந்த மைதானத்தில் பந்தை தவறவிடக் கூடும் என்பதை மக்கள் புரிந்துகொள்வதில்லை. அதுவே அங்கு நடந்தது. அதனை கண்டும் (நோபோல்) பிடிக்காமல் இருந்திருந்தால் நான் முட்டாளாக இருப்பேன். இது ஒரு உண்மையான தவறு. அனைத்து மின் விளக்குகள் மற்றும் பின்னணியில் அசையும் கொடிகளுக்கு மத்தியில் எனக்கு சற்று பார்வை தெளிவில்லாமல் இருந்தது. சில காரணங்களால் பந்தை தவற விட்டேன். அந்தப் பந்து தாழ்வாக சென்றதாக நான் நினைத்தேன்.

இந்தக் குழப்பம் நிகழ்ந்தது தவறான நேரத்தில். 39.4 ஓவர்கள் வரை எதுவும் நிகழவில்லை, எல்லாம் சரியாகத்தான் சென்றது. அணிக்கு மீட்சி பெறுவதற்கு நேரம் இல்லாதபோதே இது நிகழ்ந்தது. அது தீர்க்கமான கட்டம். இதனால் பிரீ ஹிட்டுடன் மேலதிக பந்தும் கிடைத்திருக்கும் என்று வாதிட முடியும். (வீடியோ) ரீப்ளே வரும் வரை மைதானத்தில் இருந்த யாருக்கும் அது தவறு என்று தெரியவில்லை. அதனைப் பார்த்த போது நான் அதிர்ச்சி அடைந்தேன். நான் அதனைத் தவறவிட்டேனா என்று என்னால் நம்ப முடியுவில்லை. அதில் இருந்து மீண்டு வர நான் இன்னும் முயன்று வருகிறேன்" என்று ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஹனிபல் கூறினார்.

மைதானத்தில் அப்போது இருந்த பிரதான நடுவர் ரவிந்திர விமலசிறிக்கும் கூட, நோபோல் பிடித்திருக்க முடியும். என்றாலும் அவராலும் உறுதியாக முடிவொன்றை எடுக்க முடியாமல் இருந்தது.

எஸ்.பிர்தௌஸ்...




# டயலொக் அனுசரணையில் மீண்டும் "நீலங்கள் சமர்"

அஷ்ரப் ஏ சமத்

கொழும்பு, றோயல் கல்லூரி மற்றும் கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான "நீலங்கள் சமர்" கிரிக்கெட் போட்டிக்கு இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, 19ஆவது முறையாகவும் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக செயற்படுகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான கௌரவ. டி. எஸ் சேனாநாயக்க ஞாபகார்த்த கிண்ணத்திற்கான மூன்று நாள் கிரிக்கெட் போட்டி கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி இதே மைதானத்தில் மார்ச் 16 ஆம் திகதி நடைபெறும்.

இந்த போட்டி தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் (21) நடைபெற்றபோதும் டயலொக் நிறுவனத்தால் அனுசரணைக்கான காசோலை வழங்கப்பட்டது.

145 ஆவது முறையாக நடத்தப்படும் இந்த கிரிக்கெட் சமர், Dialog Television ThePapare TV HD (அலைவரிசை இலக்கம் 126)இல் நேரலையாக ஒளிபரப்பப்படும். அத்துடன் ThePapare.com மற்றும் Dialog ViU App ஆகியவற்றில் நேரலை ஒளிபரப்பு செய்யப்படும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2024 பெப்ரவரி 25 ஞாயிற்றுக்கிழமை



# 100 வயதினரை இராணுவத்திற்கு அழைத்த அமெரிக்கா

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு சுமார் 14,000 பேருக்கு இராணுவ சேவைகளில் பதிவு செய்வதற்கு அவசர கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அவ்வாறு பதிவு செய்யாவிட்டால் அபராதம் மற்றும் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

என்றாலும் 1893 மற்றும் 1897 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பிறந்தவர்களுக்கே இராணுவ சேவைகளில் பதிவு செய்ய கோரப்பட்டது. அதாவது நூற்றாண்டுக்கு முன்னர் பிறந்த இவர்கள் இப்போது உயிருடன் இருப்பதற்கே சாத்தியம் குறைவு. அவர்களின் குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கே அந்தக் கடிதம் கிடைத்தது.

அதாவது 1993 மற்றும் 1997 இல் பிறந்தவர்களுக்கு பதில் நூற்றாண்டுக்கு முன் பிறந்தவர்கள் பட்டியலை குழப்பிக் கொண்டதாலேயே கணினியில் இந்தக் குழறுபடி ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் கடிதம் கிடைத்த பலருக்கும் கோபம்தான் வந்தது. ஏனென்றால் அந்தக் காலத்தில் பிறந்த தனது தாத்தா, அப்பா, சித்தாப்பக்கள் முதலாம் உலகப் போரில் சண்டையிட்டவர்கள் என்று சண்டைக்கு வந்துவிட்டார்கள்.

## பெருவில் ஒரு பயங்கரம்



பெரு நாட்டில் இராட்சத பாறை ஒன்று மலை உச்சியில் சரியாக நகர் ஒன்றை பார்த்தபடி இருந்தது.

இதனைப் பார்த்த இரு அமெரிக்க விஞ்ஞானிகள் அந்தப் பாறை நகரில் விழுந்து பெரும் அழிவை ஏற்படுத்தும் என்று ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையை பார்த்த அரசு அந்தக் கூற்றை வாபஸ் பெறும்படியும் இல்லாவிட்டால் சிறை அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்றும் எச்சரித்தது.

பயந்துபோன அந்த விஞ்ஞானிகள் நாட்டை விட்டே தப்பியோடினார்கள். இதனைப் பற்றி மூச்சு விடக்கூடாது என்று உள்ளூர் அதிகாரிகளுக்கு அரசு கண்டிப்பாக உத்தரவு போட்டது. எட்டு ஆண்டுகள் கழித்து, அன்காஷ் பூகம்கம் வெடித்தது. அந்தப் பாறை சரிந்து 20,000 பேர் வரை கொல்லப்பட்டார்கள்.

# தொப்பிக்கெல்லாம் கலவரமா!

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

எதற்கெல்லாம் கலவரம் செய்வதென்று விவஸ்தை இல்லையா? என்று கேட்கும் அளவுக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சாதாரண தொப்பி அணிவதற்குக் கூட அமெரிக்காவில் மிகப்பெரிய கலவரம் வெடித்திருக்கிறது.

கதையை கேட்டால் சிரிப்பாக வரும் ஆனால், 1922 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலே நியூயோர்க் நகரில் வெடித்த அந்த தொப்பிக் கவலவரத்தில் பலர் காயமடைந்து, பலரும் கைது செய்யப்பட்டனர்.



காலவரத்தை பற்றி கூறுவதற்கு முன், அணியும் ஆடையை தீர்மானிப்பது அவரவர் உரிமை என்ற சுதந்திர கோசங்கள் நூற்றாண்டுக்கு முன் அதுவும் அமெரிக்காவில் எடுபடாது.

அப்போது அமெரிக்காவில் வெப்ப காலங்களில் மாத்திரம்தான் வைக்கோல் தொப்பி அணிவார்கள். இலையுதிர் காலத்தில் அந்தத் தொப்பியை அணியக் கூடாது என்பது எழுதப்படாத சட்டம். அப்படி அணிந்தால் கேலிக்கு உள்ளாவார்கள்.

1922 செப்டெம்பரில் இளைஞர்கள் கூட்டம் ஒன்று இந்த மரபை மீறி வைக்கோல் தொப்பி அணிந்திருந்த கப்பல்துறை தொழிலாளர்களை கேலி செய்ய ஆரம்பித்தார்கள்.

அந்த தொழிலாளர்களும் சும்மா இருக்கவில்லை, கேலி செய்தவர்களுடன் மல்லுக்கு நின்றார்கள். இதனால் அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டது. மான்ஹட்டன் பாலத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

பொலிஸார் வந்து நிலைமைய கட்டுப்படுத்தினார்கள். சிலர் கைது செய்யப்பட்டார்கள்.

ஆனால் இத்தோடு வன்முறை நிற்கவில்லை.

அடுத்த நாள் தடிகளுடன் புறப்பட்ட இளைஞர் கூட்டங்கள் வைக்கோல் தொப்பி அணிந்தவர்களை தாக்க ஆரம்பித்தார்கள். மான்ஹட்டன் வீதிகளில் ஆயிரக் கணக்கால் இளைஞர்கள் இவ்வாறு கலவரத்தில் ஈடுபட்டார்கள்.

இதனால் சிலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதோடு பலரும் கைது செய்யப்பட்டார்கள். இவ்வாறு கலவரம் மூன்று நாட்கள் தொடர்ந்த நிலையிலேயே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

என்றாலும் இந்தக் கலவரம் அமெரிக்க கலாசாரத்தில் பெரும் தாக்கம் செலுத்தியது. குறிப்பிட்ட பருவத்திற்கு மாத்திரம் அணியும் தொப்பியாக இருந்த வைக்கோல் தொப்பி எந்தக் காலத்திலும் அணியும் தொப்பியாக படிப்படியாக மாறியது.

Google

YAHOO!

# கூகுளை வாங்க மறுத்த யாகூ

இணையதளம் என்றால் இப்போது கூகுள் என்றாகிவிட்டது. 2013 ஆம் ஆண்டு கூகுள் வெறுமனே ஐந்து நிமிடங்கள் முற்றாக செயலிழந்தது. அந்தக் காலப் பகுதியில் உலகில் இணையதளத்தை பயன்படுத்துவது 40 வீதம் குறைந்தது.

ஆனால் 1990களில் கூகுள் தேடுதளம் பத்தோடு பதினொன்றாக ஒரு இணையதளமாகவே இருந்தது. அப்போதெல்லாம் யாகூ தான் பிரபலம். 1998 இல் கூகுளின் லர்ரி பேஜ் மற்றும் செர்கி பிரின் இருவரும் ஸ்டான்போர்டில் தனது மேற்படிப்பை தொடரவே கரிசனை காட்டினார்கள்.

யாகூவை அணுகி தமது கூகுள் தேடுதளத்தை 1 மில்லியனுக்கு விற்பதாக விலைபேசினார்கள். ஆனால் யாகூவுக்கு ஆர்வமில்லை. தமது சொந்த இணையதளத்தை முன்னேற்றுவதில் கவனம் செலுத்திய யாகூ, கூகுளை வாங்க மறுத்தது.

இன்றாகும்போது கூகுளின் பெறுமதி 110 பில்லியன் டொலர். யாகூவின் பெறுமதி 30 பில்லியன் டொலர்கள் தான். யாகூ தனது பெரும்பான்மையான சேவைகளை வெரிசோனுக்கு விற்றிருக்கிறது.

கூகுள் விளம்பரத்தால் மாத்திரம் இன்று ஆண்டுகள் 20 பில்லியன் டொலர்களை வருவாயாக ஈட்டுகிறது.



நண்பர்: "உங்க ரசிகர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைஞ்சிட்டே வருதே!"
மிஸ்டர் x: "அதுக்கு நான் என்ன பண்ணணும்?"
நண்பர்: "படத்துல நடிக்கிறதைக் குறைச்சிக்குங்க!"



"என்னய்யா, ஒரு முட்டை விலை பத்து ரூபாயா?"
"இன்னிக்கு மிஸ்டர் x படம் தியேட்டர்ல ரிலீஸ்... அதான் டிமாண்ட் ஜாஸ்தி!"



"மிஸ்டர் x... ஹீரோயின் உங்களை ஷூவால அடிக்கிறா... ஒரு நாய் உங்க கால் மேல உச்சா போகுது... வில்லன் உங்களைப் புரட்டிப் புரட்டி எடுக்கிறான்!"
"என்னய்யா கதை இது?"
"நீங்கதானே ஸீனுக்கு ஸீன் ஜனங்க கை தட்டணும்னு சொன்னீங்க!"



"ஆனாலும், மிஸ்டர் x, மிஸ்டர் y ரெண்டு பேருக்கும் இந்த நிலைமை வந்திருக்கக் கூடாது!"
"ஏன்?"
"ரெண்டு பேரும் தங்களுக்கு 'ரசிகர்கள் தேவை'ன்னு பேப்பர்ல விளம்பரம் கொடுத்திருக்காங்க!"



மிஸ்டர் X: "100 கதை கேட்டுட்டேன்... எனக்கு எதுவும் செட் ஆகலை!"
நண்பர்: "இந்தக் 'கதை'தானே வேண்டாங்கறது!?"

கடவுள்: "பக்தா! உன் தவத்தை மெச்சினேன். என்ன வரம் வேண்டும்... கேள்!"
ரசிகன்: "எங்க வீட்ல இருந்து சொர்க்கத்துக்கு ரோடு போட்டுக் கொடுங்க சாமி!"
கடவுள்: "அது முடியாது. வேறு வரம் கேள்!"
ரசிகன்: "எங்க தலைவர் மிஸ்டர் y நடிச்சு, ரிலீஸ் ஆகப் போற படம் சூப்பர் ஹிட் ஆகணும்!"
கடவுள்: "சொர்க்கத்துக்கு சிமெண்ட் ரோடா... தார் ரோடா?"





"மிஸ்டர் x ஏன் கோபமா இருக்கார்?"
"எவனோ நடுராத்திரியில போன் பண்ணி, நீங்க வெறும் எக்ஸா, இல்ல பிபிள் எக்ஸா'ன்னு கேட்டானாம்!"



"எங்க ஊர்ல கப்பல் ரோட்ல போகும், ரயில் தண்ணியில போகும்... தெரியுமா?"
"விட்டா மிஸ்டர் y படம் ஆஸ்கருக்குப் போகுதுன்னு சொல்வீங்க போலிருக்கே!"



நிருபர்: "உங்க படத்தை எல்லாரும் குப்பைனு சொல்லுறாங்களே, எப்படி?"
மிஸ்டர் y: "டைட்டிலே அதான்!"

"மிஸ்டர் x நடிச்ச படத்துக்கு மக்கள் கமெண்ட் கிட்டு ரொம்ப கிண்டல் செய்றாங்க!"
"நேஷனல் அவார்டு கொடுக்கச் சொல்லியா?"
"அந்தப் படத்தை தேசியப் பேரழிவா அறிவிக்கச் சொல்லி!"



மிஸ்டர் y: "நான் நம்பர் ஒன் ஹீரோ ஆகிறவரைக்கும் பேச மாட்டேன்!"
டைரக்டர்: "அதுக்காக... டப்பிங்கைப் பேசாமல் இருந்தா எப்படி சார்?"



"என் அத்தா என்னை எம்.ஜி.ஆர். படத்துக்குக் கூட்டிட்டுப் போனா, ரஜினி படத்துக்குக் கூட்டிட்டுப் போனா, ஆனா... மிஸ்டர் x நடிச்ச படத்துக்கு மட்டும் கூட்டிட்டுப் போகலை!"
"ஏன்?"
"என்னை... வீட்டுக்கு நான் ஒரே புள்ளை!"



''தொடர்ந்து கிராமிய வேடங்களிலேயே நீங்க நடிக்கறதால, விவசாயிகள் சங்கத்துலயிருந்து... உங்களுக்கு...''
''விருது தரப்போறாங்களாமா?''
''ஊஹூம்... ரெண்டு 'எருது' தரப்போறாங்களாம்!''



''அவுட்டோர் ஷூட்டிங்னு சொல்லி டைரக்டர் ஏமாத்திட்டாரினியே... அப்படி என்ன செஞ்சார்?''
''ஒரு வீட்டோட வாசல்ல நிக்கவெச்சுட்டு இதுதான் 'அவுட் - டோர்' ஷூட்டார்!''



''விவசாயிகள்லாம் தலைவரை எதிர்த்துப் போராட்டம் பண்றாங்களே ஏன்?''
''பின்னே... நிறைய 'சாகுபடி' உதவுவோம்னு சொல்ல நினைச்சு வாய்தவறி நிறைய 'சாகும்படி' செய்ய உதவுவோம்னு உளறிட்டாரே...!''





''அந்த கிராமத்துல ஏதோ வித்தியாசமான அழகுப் போட்டி நடத்தறாங்களாமே...! என்னது?''
''யாரோட வயல்ல இருக்கற 'சோளக்கொல்லை பொம்மை' ரொம்ப அழகா இருக்குன்னுதான்!''

# காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன்















காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் "ஜின்னாஹ்வின் குறும்பாக்கள்' நூல் வெளியீட்டு விழா (2024.02.18) வெள்ளவத்தை தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

# விருதுகள் பல பெற்ற இளம் கவிஞர் விஜேகுமாரி



அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவையின் அனைத்து குழுக்களிலும் பங்குகொண்டு சர்வதேச கவியரங்குகளில் பங்குபற்றி அமெரிக்க முத்தமிழ் தொலைக் காட்சி விருது, புதுயுககவி விருது, முத்தமிழ் கவிசிற்பி விருது பெற்றுள்ளதோடு இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தினால் கலாவிபூசண விருதும் ஆன்மீக இசை நாடகம் பெருவிழாவிலே கவிச்சாரல் விருதும் கவிமொழி விருதும் பெற்றிருக்கிறேன்.

லெதன்டி எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட இளம் கவிஞர் விஜேகுமாரியாகிய நான், ரட்ணம் வள்ளியம்மா தம்பதிகளின் ஆறாவது பிள்ளை , நான் ஆரம்பக்கல்வியை லெதன்டி தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை கார்பெக்ஸ் தமிழ் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை கலைத்துறையில் ஹைலன்ஸ் கல்லூரியிலும் கற்றேன். கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை( ஆரம்பக்கல்வி) ஸ்ரீ பாத தேசிய கல்வியற் கல்லூரியில் நிறைவு செய்து ஆரம்பக்கல்வி ஆசிரியராக அட்டன் புளியாவத்தை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றுகிறேன். பேராதனை பல்கலைக்கழகத்திலே பட்டமேற்கல்வி டிப்ளோமா கல்வியை நிறைவு செய்துள்ளேன். கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டு கவிதை நூல் வெளியீட்டுக்கு தயாராகிக்கொண்டு இருக்கும் நான் இதுவரை அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவையின் அனைத்து குழுக்களிலும் பங்குகொண்டு சர்வதேச கவியரங்குகளில் பங்குபற்றி அமெரிக்க முத்தமிழ் தொலைக் காட்சி விருது, புதுயுககவி விருது, முத்தமிழ் கவிசிற்பி விருது பெற்றுள்ளதோடு இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தினால் கலாவிபூசண விருதும் ஆன்மீக இசை நாடகம் பெருவிழாவிலே கவிச்சாரல் விருதும் கவிமொழி விருதும் பெற்றிருக்கிறேன். இதற்காக என் பெற்றோருக்கும் தாய் தமிழுக்கும் தலைவணங்குவதோடு எனக்கு உறுதுணையாய் இருந்து உயர்வில் மகிழும் ஆண்டவன் கொடுத்த என் உயிரிலும் மேலான என் உடன் பிறப்புகளுக்கும் அருமை கணவருக்கும் என் அன்பின் பிள்ளைச் செல்வங்களுக்கும் உடன் இருந்து என் வெற்றிக்கு தோள் கொடுக்கும் அருமை தோழி தனுஜாவுக்கும் பிரபஞ்ச பேராற்றலை பெற வழிகாட்டும் மனிதவள மேம்பாட்டாளர் மதிப்பிற்குரிய நளினி ரட்ணராஜா அம்மணிக்கும் கலைத்துறைசார் உறவுகளுக்கும் என்னை அடையாளப்படுத்திய அமெரிக்க முத்தமிழ் இலக்கிய பேரவையின் நிறுவுனர் தாழை உதயநேசன் ஐயா , நெறியாளர் திருமதி திருமகள் ஸ்ரீ பத்மநாதன் அம்மணிளுக்கும் கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் விஜயராஜா அண்ணாவுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





# இலக்கியத் துறையில் உலாவரும் Dr. ஜலீலா முஸம்மில்



**கே : உங்களைப் பற்றி சிறு அறிமுகம் கூறுங்கள்**

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நான் கடந்த 15 வருடங்களாக வைத்திய அதிகாரியாக கடமை புரிந்து வருகிறேன். தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பணி புரிகிறேன். தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்கள் சேவை அனுபவம் உண்டு. சுமார் ஐந்து வருடங்களாக இலக்கியத் துறையில் பயணித்து வருகிறேன்.

**கே : உங்கள் இலக்கியப் பயணத்தின் ஆரம்பம் பற்றி கூறுங்கள்?**

சிறு பராயம் முதலே வாசிப்பிலே ஆர்வம். தமிழ் மொழியில் அப்படியொரு பற்று. வாசிப்போடு உறவு கொண்டிருந்ததாலேயே தமிழிலே விருப்பு வந்தது என்றால் அது மிகையாகாது. எனது தந்தை ஹயாத்து முஹம்மது அவர்கள் கணித ஆசிரியராக இருந்தபோதிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட தூண்டுகோலாக இருந்தவர் தந்தை என்று தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆயினும் கல்வி ரீதியான அடைவைப் பெற்றுக் கொண்ட பின் நண்பி ஒருவர் மூலம் புலன்கள் குழுமங்களில் எழுதத்தொடங்கினேன். இதுவே எனது இலக்கியப் பயணத்தின் ஆரம்பம் எனக்கொள்ளலாம்.



**கே : வைத்தியராக இருந்து கொண்டு இலக்கியப் பயணத்திலும் எப்படி உங்களல் பயணிக்க முடிகிறது?**

ஒரு பெண் என்ற ரீதியில் வேலைக்கு செல்லுதலும் குடும்பப் பொறுப்புகளும் இரட்டைச் சுமையாக அழுத்தினாலும் அதைத் திறம்பட செய்வதில் மிகவும் கவனம் எடுக்கிறேன். இவ்விடத்தில் நேர முகாமைத்துவம் என்பது மிக அத்தியாவசியமாகிறது. நேரத்தைச் சிக்கனப்படுத்தி செலவழிப்பதில் பெண்களின் பங்கு மகத்தானது. அந்த வகையில் எனக்கு மிகவும் பிடித்தமான எழுத்துத் துறையில் செலவழிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

எனது வேலைப்பழுவை அகற்றி உற்சாகம் தரும் விடயமாக இருக்கிறது. முன்கூட்டியே திட்டமிட்டு ஒவ்வொரு வேலைகளையும் செய்யும் பழக்கமே இலக்கியத்திலும் ,தொழிலிலும் சமாந்தரமாகப் பயணிப்பதற்கு உதவுகிறது. நேர முகாமைத்துவமே வெற்றிகளுக்கான அடிப்படை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

**கே :உங்கள் கவிதைகளின் கருப்பொருள் என்ன?**

எனது கவிதைகள் வாழ்வியலின் எல்லாக் கருப்பொருள்களையும் தொட்டுச் செல்கின்றன என்றே நினைக்கிறேன். உள்ளத்தில் ததும்பித் தேங்கி நிற்கும் உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தவே ஒவ்வொரு எழுத்தாளனும் எழுத்தாணி எடுக்கிறான்.மனதை வலிக்கச் செய்த, வலிந்து சிரிக்கச் செய்த,மௌனமாக அழச்செய்த,மொத்தமாய் மூடி வைத்த அத்தனை உள்ளக வெளியுலகக் காரணிகள் யாவும் எழுதுவதற்கு தூண்டுபவையாகவே அமைவன.

**கே : ஒரு எழுத்தாளர் தனக்குள் வளர்த்துக்–கொள்ள வேண்டிய பண்புகள் பற்றி கூறுங்கள்?**

நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பே ஒரு எழுத்தாளனின் மிகப்பெரிய சொத்து.எழுத்தை மிகவும் நேசித்து எழுதுபவராக இருக்க வேண்டும்.

வாசிப்பவரை, சிந்திக்க, எழுதத் தூண்டுபவராக இருக்க வேண்டும். நிறைய பயணங்கள் மேற்கொள்ள வேண்டும்.எல்லா அனுபவங்களையும் நாம் பெற முடியாது என்பதால் பிறரது அனுபவங்களை கேட்டறிந்து கொள்ள வேண்டும்.எதையும் பிற்போடாமல் எழுத வேண்டும்.

எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கத் தெரிய வேண்டும்.எழுத்தை வாசிக்கும் வாசகர்கள் இளைஞர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களை வழி நடாத்தும் பங்கு எழுத்துக்கு உண்டு.

**கே : உங்கள் கவிதை மற்றும் புத்தக வெளியீடுகள் பற்றி கூறுங்கள்**

எனது கன்னி வெளியீடு "சிறகு முளைத்த மீன்" கவிதை நூல் கடந்த வருடம் 2022 சென்னைப் புத்தகக் கண்காட்சியில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இரண்டாவது சுய வெளியீடு "தூரிகை வரையும் மின்மினிகள்" ஹைக்கூ கவிதை நூல் இவ்வருடம் இலங்கையில் வெளியீடு செய்யப் பட்டது.

இந்தியாவிலும், இலங்கையிலும் பல தொகுப்பு நூல்களில் எனது கவிதைகள் வெளியாகியுள்ளன.

**07 சான்றிதழ்கள் , விருதுகள் பற்றி கூறுங்கள்?**

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஏறாவூர் நகர பிரதேச செயலகம் நடாத்திய பிரதேச கலை இலக்கிய போட்டியில் பாடலாக்கம், செய்யுள், சிறுகதை போட்டி போன்றவற்றில் கடந்த இரு வருடங்களாக வெற்றிச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பிரதேசக் கலை இலக்கிய விழா மற்றும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் 2022 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கவிதை இலக்கியத்துக்காக "கலைத்தாரகை விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "இளங்கலைஞர் விருது2023"இல் கிடைத்தது.

தமிழ் நாடு கலை இலக்கிய மன்றங்களிலும் விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

**08 நீங்கள் ஒரு பெண்ணாக வாழ்வில் சந்தித்த சவால்கள்?**

ஒவ்வொரு பெண்ணிற்கும் வாழ்க்கை எனும் நாடகத்தில் நிறைய வேடங்கள் உண்டு. மகளாக, சகோதரியாக, மனைவியாக , தாயாக இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். கல்வியிலே தேர்ந்து வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்வது அவளது முதல் வெற்றி என்று சொல்லலாம். திருமணம் என்ற ஒன்றில் அவள் காலடி எடுத்து வைக்கும் போது அவளின் பொறுப்புக்களும் சுமைகளும் சவால்களும் இரண்டு மடங்காகி விடுகின்றன.ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை வருகின்ற எல்லா விடயங்களும் அவள் சந்திக்கின்ற எல்லாச் சூழ்நிலைகளும் சவால்கள்தான். அவை யாவற்றையும் முறியடித்து, செவ்வனே முடித்து வெற்றி பெறுவதுதான் அவளுடைய பிறப்பின் அதிசயம்.

அந்த வகையில் எனக்கு பெருமிதமே.

**கே :இலக்கியத்துறையில் பெண்கள் பயணிப்பது பற்றி இன்றைய சமுதாய கண்ணோட்டம் எப்படி உள்ளது?**

பெண் படைப்பாளுமைகளுக்கான களம் சமூகவெளியிலும் குடும்பச்சூழலிலும் போதியளவில் கொடுக்கப்படுகிறதா என்றால் என்னைப் பொறுத்தளவில் மிகக்குறைவு என்றே நினைக்கிறேன்.

எவ்வளவு திறமைகள் இருந்தாலும் திருமணத்தின் பின்னர் சில பெண்கள் முடங்கி விடுகின்றனர். ஆளுமை உள்ள பெண்கள் ஒரு நாளும் முடங்கி விடக்கூடாது. அவர்கள் முயற்சித்துக் கொண்டே இருக்க வேண்டும் .வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமகாலத்தில் பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு நிறைய சுதந்திரம் இருக்கிறது. எல்லைகளை உடைக்கத் தொடங்கியிருக்கும் பெண்கள் மீது விமர்சனங்கள் கிளம்புவது யதார்த்தமே.

திறமையான பெண்களை ஊக்கப்படுத்துங்கள். பெண்படைப்பாளினி எனும் பேதமில்லாமல் சகபடைப்பாளியாக பாருங்கள்.

**கே : ஒரு வைத்தியராக சமுதாயத்திற்கு நீங்கள் கூறவிரும்புவது?**

உயிர்களைக் காக்கும் வைத்தியம் என்பது ஒரு மகத்துவமான தொழில் ஆகும். வைத்தியத் துறையில் பணிபுரியும் ஒவ்வொருவரும்

மருத்துவ சேவையினை திறம்பட வழங்கினால் மக்கள் அனைவரும் நோயின்றி ஆரோக்கியமாக வாழ முடியும். வறுமையினால் நல்ல மருத்துவம் கிடைக்காமல் நம்முடைய நாட்டில் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். வைத்திய சேவைக்காக அதிக பணம் செலவழிக்க தேவையுமில்லை. அது சிறந்த இலவச வைத்திய சேவை எமது நாட்டில் இருக்கிறது. அதுவே எமது மக்களுக்கான வரப்பிரசாதம். அத்தோடு

மக்களுக்கு நோய்கள் வந்த பின்னர் வைத்தியசாலைக்கு வருவதனை விடவும் நோய் வராமல் தடுத்து ஆரோக்கியமாக இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதனை தெளிவுபடுத்த வேண்டும். நோய்கள் பற்றிய விழிப்புணர்வைத் தர வேண்டும்.

இவ்வாறு எம்மால் முடிந்த சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும்.

**கே : இறுதியாக ஏதேனும் கூற விரும்புகின்–றீர்களா??**

ஆம்.. இந்த நேர்காணல் செய்த இலக்கிய ஆர்வலரும் எழுத்தாளரும் கவிஞரும் ஆன மஜினா உமறுலெவ்வை அவர்களுக்கும் வாய்ப்பினை வழங்கிய இதழ் குழுவினருக்கும் எனது அகநிறை நன்றிகள் உரித்தாகட்டும்.





*மஜினா உமறுலெவ்வை*
**மாவடிப்பள்ளி.**



தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழித் துறை விரிவுரையாளரும் எழுத்தாளருமான கீதா கணேஷ்

# இலக்கியத்துறை ஈடுபாட்டிற்கு காரணம் வாசிப்பும் கேட்டலும் தேடலும்



**முதலில் உங்களைப் பற்றியும் உங்கள் ஊர், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக வாழ்வு பற்றியும் குறிப்பிடுங்கள்?**

கீதா கணேஷ் என்ற பெயரில் எழுதிவரும் நான், ஈழத்தின் வடக்கே அமைந்த தீவுப் பிரதேசமாகிய வேலணை மேற்கு சிற்பனை எனும் கிராமத்தில் பிறந்தேன். 1991 ஆம் ஆண்டு இடப்பெயர்வில் அங்கிருந்து புறப்பட்டு நாங்கள் பல்வேறு இடங்களில் வசித்து வந்தோம். எங்கள் குடும்பத்தில் மூன்று சகோதரிகளும் சகோதரனுமாக நாங்கள் ஐந்து பிள்ளைகள்;. தங்கை முகாமைத்துவப் பட்டதாரி, சகோதரர் பொறியியலாளர். எனது கணவர் கவாஸ்கர் கணக்காளராகப் பணிபுரிகின்றார். லோககீதா கணேசலிங்கம் எனது இயற்பெயராயினும் கீதா கணேஷ் என்ற பெயரிலேயே நான் திருமணத்தின் பின்னும் சிறுகதைகளை எழுதி வருகிறேன்.

நாங்கள் பாடசாலைக் காலத்திலேயே பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து, பின்னர் வவுனியாவில் எமது பாடசாலைக் கல்வியைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது. அதுவரை பல்வகைச் சூழலுக்குள் வாழவேண்டியிருந்தோம். வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் சாதாரண தரம் வரையான கல்வியையும் உயர்தரக் கல்வியை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியிலும் கற்றேன். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானேன்.

பாடசாலைக் கல்வி எனது இணை பாடவிதான செயற்பாடுகளுக்கு பல்வேறு வகையிலும் அடித்தளமிட்டது. அந்த அடித்தளம் பல்கலைக்கழக வாழ்விலும் தொடர்ந்தது. அதனாலேயே யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றேன். பல்கலைக்கழகக் கல்வி பல்வேறு மாணவர்களுடன் பழகுவதற்கான சூழலையும் பல்வேறு அனுபவங்களையும் பெற்றுத் தந்தது. பல்கலைக்கழக கல்வியின் பின்னர் பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிவதற்கான வாய்ப்பு கிடைத்தது. இங்கு பணிபுரிந்து கொண்டிருந்த சிறிது காலத்தில் இலங்கை ஆசிரியர் சேவைக்கு விண்ணப்பித்து ஆசிரியராகப் பணிபுரிந்தேன். பாணந்துறை அல் பஹ்றியா முஸ்லிம் வித்தியாலயத்திலேயே எனக்கு முதல் நியமனம் கிடைத்தது. பின்னர் அங்கிருந்து பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரிக்கு மாற்றலாகி கடமையாற்றினேன். அதன் பின்னர் 2017 இலிருந்து இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழித் துறையில் விரிவுரையாளராகப் பதவியேற்று தற்போது வரை அங்கு கடமையாற்றி வருகிறேன்.

**இலக்கியத் துறையில் ஆர்வம் ஏற்படக் காரணமாயமைந்த சூழலைக் குறிப்பிட முடியுமா?**

இலக்கியத்துறை ஈடுபாட்டிற்குக் காரணமாக வாசிப்பு அனுபவம், கேட்டல் மற்றும் அதனூடான தேடலும் பிரதான காரணங்களாக அமைந்தன. பாடசாலைக் காலத்திலிருந்தே வகுப்பறைச் சூழல் வாசிப்பிற்கான களமாக அமைந்தது. இலக்கியத் தேடலை ஆர்வப்படுத்தும் வகையிலான நூல்கள், பத்திரிகைகள் வாசிப்பதற்கான ஊடகங்கங்களாக அமைந்தன. தனியே சுயதேடல் மூலமான வாசிப்பு என்பதற்கப்பால் சில விடயங்களை செவிமடுத்தலின் ஊடாக நாங்கள் வாசித்த அந்த இலக்கியச் சுவையை அனுபவிக்க வேண்டும் என்ற உந்துதல் இலக்கியத்தின் மீதான நாட்டத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது.



குறிப்பாக எங்களுடைய அம்மா பல வகையான விடயங்களை வாசித்து அவற்றை எங்களோடு பகிர்ந்துகொள்வார். ஆன்மிகக் கருத்துக்களாயினும் சரி, இலக்கியக் கருத்துக்களாயினும் சரி தான் வாசித்தவற்றை எங்களோடு பகிர்ந்து கொள்ளும் போது அந்தவிடயத் தொற்றுதலுக்கப்பால் ஒரு தேடல், நானும் வாசித்து அறிய வேண்டும், பல விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தாகத்தை என்னுள் ஏற்படுத்தியது. அம்மா தான் வாசித்து அறிந்த விடயங்களை மிகச் சாதாரணமாகத் தான் எங்களுக்குக் கூறுவார். இதை நாங்கள் படிக்க வேண்டும் என்ற எந்தவிதமான திணிப்பும் அங்கு இருக்காது. பாடசாலையில் சென்றுதான் எல்லா விடயங்களையும் கற்க வேண்டும் என்ற எண்ணப்பாடுகளுக்கு அப்பால் அம்மாவின் வாசிப்புப் பகிர்வுதான் எனக்குள் தேடலை ஆரம்பித்தது.

உதாரணமாக நான் சிறுமியாக இருந்த போது அம்மா, அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதி படித்துக் கொண்டிருப்பார். அப்போது அந்தாதி என்ற இலக்கிய வடிவம் பற்றி அம்மா கூறி அந்த பதிகங்களைப் பாடுவார். அதன்பின் நான் பாடசாலையில் உயர்தரத்தில் இலக்கியம் கற்கும் போது அந்தாதி இலக்கிய வடிவம் பற்றி அம்மா கூறிய விளக்கமும் அபிராமிப்பபட்டரின் பதிக விளக்கமும் எனக்கு அப்படியே பதிந்துகொண்டன. இன்றுவரை நான் வியந்து கொள்ளும் விடயம் இதுதான். அம்மா மிகச் சாதாரணமாக எங்களுக்குள் ஏற்படுத்திய வாசிப்பும் தேடலும் பற்றித்தான். அம்மா சமையல் செய்துகொண்டோ இன்னொரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டோ சாதாரணமாகக் கூறுவார். அப்பா வாசிப்பதற்கேற்ற பழைய நூல்கள், பத்திரிகைகள் கிடைக்கும் போதெல்லாம் வீட்டிற்குக் கொண்டு வருவார். இன்னொன்று அவரது உரத்து வாசித்தலாலும் பல விடயங்கள் உள்வாங்கப்படும். அவர்களிடம் சாதாரணமாகக் காணப்பட்ட விடயங்கள் எமது நாளாந்த வாழ்விலும் பதிந்துவிட்டன. இத்தகைய சூழல் என்னை அறியாமலேயே என்னுள் இலக்கிய நாட்டத்தையும் தொடர்ந்து எழுத்தார்வத்தையும் தூண்டியது எனலாம். வாசிப்பும் தேடலும் எப்போதும் வாழ்க்கையில் கைவிட முடியாத சொத்துக்கள்.

**உங்களுக்கு மிகவும் பிடித்த சிறுகதையாசிரியர் யார்? என்ன காரணம்?**

இவர்தான் என தனி ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியாது. பல எழுத்தாளர்களைப் பிடிக்கும். சமூகம் சார்ந்து சிந்தித்து சமூகத்தின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் எழுத்தாளர்களின் படைப்புக்கள் எப்போதும் வாசகர் மனதிலிருந்து நீங்காதவை. அந்தவகையில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், வைத்தியலிங்கம், இலங்கையர் கோன், நந்தி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், தட்சாயினி போன்றவர்களின் சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்தவை.

**உங்களை நீங்கள் எப்போது ஒரு எழுத்தாளராக உணர்ந்தீர்கள்?**

இப்போதுவரை நான் எழுதும் போது ஒரு எழுத்தாளர் என்ற நிலையை உணர்வதை விடவும் என் சமூகத்தை எழுத்துக்களின் ஊடாக வாசித்த வாசகர்கள் எனது படைப்புக்கள் பற்றிய கருத்துப் பகிர்வின் ஒவ்வொரு தருணங்களிலும் எழுத்தாளராக உணர்வதோடு மேலும் பட்டை தீட்டிக் கொள்ள வேண்டும் என்று உணர்வேன்.



**சிறுகதைகள் மீதான ஆர்வம் எப்போது இருந்து ஆரம்பித்தது? உங்களது முதலாவது சிறுகதையை எழுதிய தருணம் எப்படியிருந்தது?**

பாடசாலைக் காலத்தில் இணை பாடவிதான செயற்பாடுகளுக்காக அவ்வப்போது எழுதியிருக்கிறேன். உயர்தரத்தில் கல்வி கற்கும் போது தமிழ்மொழித் தினப் போட்டியில் சிறுகதை ஆக்கப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றிருக்கிறேன். அப்போதுதான் என்னுள் இருக்கும் திறமையை நான் உணரக்கூடியதாக இருந்தது. பின்னர் பல்கலைக்கழகக் காலத்தில் எழுதிய தொலைபேசி என்ற கதை ஜீவநதி சஞ்சிகையில் முதன் முதலில் பிரசுரமாகியபோது எனக்கு அது பெருமகிழ்வாகவும், என் எழுத்துக்களில் நான் வாழும் சமூகத்தைக் காணுவது வேறுபட்ட அனுபவமாகவும் உணர்ந்தேன்.

**எழுத்துத் துறையில் பல்வேறு கூறுகள் இருக்கின்ற போதும் நீங்கள் சிறுகதை துறையைத் தேர்ந்தெடுத்தமைக்கான விசேட காரணம் என்ன?**

தமிழ் இலக்கியம் சார்ந்து கட்டுரைகளும் சில கவிதைகளும் எழுதியிருக்கிறேன். தான் சார்ந்த சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டவேண்டிய மன உந்துதல் எனக்குள் எழுந்தபோது அதற்கு எழுத்து சிறந்த கருவியாக இருப்பதை நான் உணர்ந்துகொண்டேன். அந்த எழுத்துத் துறைக்குள் பல்வகைமையான வெளிப்பாட்டு ஊடகங்கள் இருந்த போதிலும் சிறுகதையூடாக என் கருத்தை நிதர்சனமாக முன்வைப்பதற்கு ஏற்றதாக இருந்தது. விடயத்தை அலட்டல் இல்லாமல் இரசனை குன்றாது அதேநேரம் வாசகரின் நேரத்தை அதிகம் பிடித்துக் கொள்ளாமலும் வாசிப்பவர் மனதில் ஒரு நெருடல் ஒட்டிக்கொள்ளும் வகையிலும் இருப்பதற்கு சிறுகதை வடிவமே எனக்குப் பொருத்தமாகத் தெரிந்தது. ஆனால் சிறுகதைதான் தொடர்ந்து எழுதுவேன் என்றோ அதுமட்டுமே சிறந்த வடிவம் என்றோ கூறமுடியாது. காலம், வெளிப்படுத்தும் விடயத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றமடையலாம்.

**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

# இப்ராஹிம் எழுதிய முதல் தலைமுறை மனிதர்கள்







கடையநல்லூர் ஹிதாயத்துல் இஸ்லாம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் எழுத்தாளர் சேயன் இப்ராஹிம் எழுதிய முதல் தலைமுறை மனிதர்கள் நூல் வெளியீட்டு விழா இஸ்லாமிய இலக்கியக் கழகத் தலைவரும் முஸ்லிம் லீக் நகர தலைவருமான நல்லாசிரியர் கே எம் செய்யது மசூது தலைமையில் நடந்தது. பள்ளி நிர்வாகி ஏ ஜி செய்யது முகைதீன் கடையநல்லூர் பேட்டை ஜமாத் கமிட்டி தலைவர் எம் செய்யது இப்ராஹிம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நூல் ஆசிரியர் எழுத்தாளர் சேயன் இப்ராஹிம் அனைவரையும் வரவேற்று நூல் அறிமுக உரையாற்றினார். நல்லாசிரியர் கே எஸ் ரசூல் அகமது இப்ராஹிம் தொகுத்து வழங்கினார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் நெல்லை மஜீத் சென்னை சமரசம் இதழ் பொறுப்பாசிரியர் வி எஸ் முகமது அமீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை கீழக்கரை புகாரி ஆலிம் அரபிக் கல்லூரி முதல்வர் பி எஸ் செய்யது மசூது ஜமாலி ஆலிம் முதல் தலைமுறை மனிதர்கள் நூலை வெளியிட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நெல்லை மாவட்ட தலைவர் எல் கே எஸ் மீரான் முஹைதீன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு வாழ்த்தி பேசினார். சொக்கம்பட்டி பேராசிரியர் சுப்பையா பாண்டியன் சிறப்புரையாற்றினார். விழாவில் முஸ்லிம் லீக் தென்காசி மாவட்ட பொருளாளர் பிஏ செய்யது மசூது மாவட்ட முதன்மை துணைத் தலைவர் ஏ அப்துல் வகாப் மாவட்ட துணைச் செயலாளர் எஸ் ஏ ஹைதர் அலி கடையநல்லூர் நகர செயலாளர் ஆசிரியர் ஏகே முஸ்தபா மூத்த பத்திரிக்கையாளர் புளியங்குடி சாகுல் ஹமீது பைஜ்ல் அன்வார் அரபிக் கல்லூரி பேராசிரியர் எம் செய்யது இப்ராஹிம் ஆலிம் கடையநல்லூர் கே ஜே அப்துல்லா த.ம அப்துல்சமது எம்.ஏ முகமது கோயா வி ஏ எம் இக்பால், பி.ஏ பக்கீர் மைதீன் கடையநல்லூர் அதாயி இஸ்லாமிய பெண்கள் அரபிக் கல்லூரி முதல்வர் யாசீர் அலி ஆலிம் அதாயி உட்பட ஏராளமான பேர் பங்கேற்றனர்.





ரிஸ்வான் கானின் தலைமையில் இயங்கும் கொலன்னாவ கேகேபி விளையாட்டுக் கழகத்தின் அணிகளுக்கான சிநேகப்பூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் கம்பஹா தாவரவியல் பூங்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதில் ரவி தலைமைத் தாங்கிய கேகேபி கெப்பிட்டல் அணியும், எம். ரிஸ்வான் தலைமைத் தாங்கிய கேகேபி மாஸ்டர்ஸ் அணியும் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகின. இறுதிச் சுற்றில் மேலதிக ஐந்து ஓட்டங்களால் கேகேபி கெப்பிட்டல் அணி வெற்றி வாகை சூடியது. இரண்டாம் இடத்திற்கான கிண்ணத்தை மாஸ்டர்ஸ் அணி சுவீகரித்தது. சிறந்த துடுப்பாட்ட வீரராக எம். அரபாத்தும், பந்து வீச்சாளராக டி. தினுக்கவும் தெரிவாகினர்.



சங்கவி பிலிஸ் உரிமையாளர் சுரேஸ்



Rajendrakumar



Wishwakeerthi Udaya






Theepan Uma





ஊவா மாகாணத்தில் 31வருட காலமாக சிறப்பாக இயங்கி வருகின்ற பதுளை, பண்டாரவளை ஆக்கிமீடிஸ் சர்வதேச பாடசாலை, இல்லங்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற சுமார் 450 மாணவர்களை பாராட்டி அவர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவித்தது. இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர் BDDW கருணாரத்ன மற்றும் பிரதி அதிபர் திருமதி கௌரி பாக்கியராஜாவின் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக பண்டாரவளை வலயக்கல்வி பணிமனையின் பணிப்பாளர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

Senthooram செந்தூரம்





# சங்கரின் மகள் இரண்டாவது திருமண

தமிழ் சினிமாவின் பிரம்மாண்ட இயக்குனராக வலம் வருபவர் சங்கர். இவரது மூத்த மகளான ஐஸ்வர்யா கிரிக்கெட் வீரர் ரோஹித் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்த 6 மாதத்தில் ரோகித் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார். மேலும் அவர் மீது தொடர்ந்து அதிகப்படியான குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தது.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான ஐஸ்வர்யா அவரை விவாகரத்து செய்து பிரிந்தார். ஆனாலும் இது பற்றி சங்கர் தரப்பில் எந்த ஒரு விஷயமும் வெளியாகாமல் இருந்து வந்த நிலையில் தற்போது ஐஸ்வர்யாவிற்கு இரண்டாவது திருமணம் நடைபெற உள்ளது. இதனை நிச்சயதார்த்த புகைப்படத்தை வெளியிட்டு உறுதி செய்துள்ளார் அதிதி சங்கர்.

ஆமாம் தருண் கார்த்திகேயன் என்ற உதவி இயக்குனருக்கும் ஐஸ்வர்யாவுக்கும் திருமணம் நடைபெற உள்ளது. இவர்களது நிச்சயதார்த்த புகைப்படத்தை அதிதி சங்கர் தன்னுடைய இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பகிர்ந்துள்ளார். இதனைத் தொடர்ந்து பலரும் ஐஸ்வர்யாவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.





## ஏ.ஆர்.முருகதாஸ் படத்துக்காக சிவகார்த்திகேயன் பயிற்சி

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி இருக்கிறது. இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்தை ஸ்ரீ லக்ஷ்மி மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. அனிருத் இசை அமைக்கிறார். சிவகார்த்திகேயன் ஜோடியாக ருக்மணி வசந்த் நடிக்கிறார். சுதீப் எலமான் ஒளிப்பதிவு செய்கிறார். இதன் முதற்கட்டப் படப்பிடிப்பு சென்னையில் பூஜையுடன் தொடங்கியது. இதில் நடிக்கும் மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் விவரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் என்று படக்குழு தெரிவித்துள்ளது. இந்தப் படத்தில் இதுவரை திரையில் தோன்றாத பாத்திரத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கிறார். "இது கஜினி போன்ற பரபரப்பான ஆக்ஷன் படம். காதலுக்கும் முக்கியத்துவம் இருக்கும். நான் எழுதிய இயல்பான கதாநாயகி பாத்திரத்துக்கு ருக்மணி வசந்த் பொருத்தமாக இருந்தார். அவர் நடித்த கன்னட படங்களைப் பார்த்து அவரை தேர்வு செய்தோம். இந்தப் படத்தின் உடல் மொழிக்காக சிவகார்த்திகேயன் சிறப்புப் பயிற்சிப் பெற இருக்கிறார்" என்றார்.

# கலையரசன், சாண்டி நடிக்கும் 'ஹாட் ஸ்பாட்'

கலையரசன், சாண்டி மாஸ்டர், கவுரி கிஷன், ஆதித்யா பாஸ்கர், அம்மு அபிராமி, ஜனனி ஐயர், சுபாஷ், சோபியா உட்பட பலர் நடிக்கும் படம், 'ஹாட்ஸ்பாட்'. கேஜேபி டாக்கீஸ் மற்றும் 7 வாரியார் பிலிம்ஸ் நிறுவனங்கள் சார்பில் கேஜே பாலமணி மார்பன் மற்றும் சுரேஷ்குமார் தயாரிக்கின்றனர். சதீஷ் ரகுநாதன் வான் இசையமைக்கின்றனர். கோகுல் பினாய் ஒளிப்பதிவு செய்கிறார்.

திட்டம் இரண்டு, அடியே படங்களை இயக்கிய விக்னேஷ் கார்த்தி இயக்குகிறார். படம் பற்றி அவர் கூறும்போது, "நம் கண்முன் நடக்கும் பல விஷயங்களை நம் சவுகரியங்களுக்காகக் கண்டுகொள்ளாமல் கடந்து போய் கொண்டிருக்கிறோம். அதனால் ஏற்படும் பிரச்சினைகளைப் பேசும் படம் இது.

மக்களைச் சுற்றி நடக்கும் அரசியலைப் பற்றிய விஷயம்தான். அது என்ன என்பது இப்போதைக்கு சஸ்பென்ஸ். இதில் நான்கு வெவ்வேறு கதைகள் இருக்கின்றன. ஒரு கட்டத்தில் அவை ஒன்று சேர்வது போல இதன் திரைக்கதை அமைக்கப் பட்டுள்ளது. கலையரசன் சோபியா, அதித்யா கவுரி கிஷன், சாண்டி அம்மு அபிராமி, சுபாஷ் ஜனனி ஐயர் ஆகியோர் ஒவ்வொரு கதையில் நடித்துள்ளனர். இதுவரை பேசப்படாத விஷயங்களையும் இதில் வெளிப்படையாக, அழுத்தமாகப் பேசியிருக்கிறோம். அது அதிர்ச்சியாகவும் இருக்கலாம். படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. அடுத்த மாதம் வெளியாகும்" என்றார்.



# மீண்டும் நடிக்க வந்த கேப்டன் மகன் ஷண்முக பாண்டியன்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வளரும் வந்து பிறகு தேசிய முற்போக்கு கூட்டணி என்ற கட்சியின் மூலம் அரசியலிலும் சாதனை படைத்தவர் கேப்டன் விஜயகாந்த்.

இவரது மறைவு திரையுலகில் பெரும் பாதிப்பையும் இழப்பையும் ஏற்படுத்தியது. கேப்டன் விஜயகாந்தின் இளைய மகன் சண்முக பாண்டியன் மதுரை வீரன் என்ற படத்தின் மூலம் திரையுலகில் ஹீரோவாக அறிமுகமாக இருந்தார்.

தந்தையின் உடல்நிலை காரணமாக அவர் திரை உலகில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்த நிலையில் தற்போது மீண்டும் நடிக்க தொடங்கியுள்ளார். புதிய படத்திற்காக புதிய கெட்டப்பில் இருக்கும் புகைப்படம் ஒன்று இணையத்தில் வெளியாகி ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# இன்ப அதிர்ச்சி கொடுத்த நயன்



நடிகை நயன்தாரா சமூக வலைதளத்தில் ஒரே நாளில் இரண்டு விதமான வீடியோக்களை வெளியிட்டுள்ள நிலையில் அவை ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக உள்ளது.

லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா தற்போது 'டெஸ்ட்' மற்றும் 'மண்ணாங்கட்டி சின்ஸ் 1960' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். மேலும் அவ்வப்போது தனது குழந்தைகளுடன் இருக்கும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களையும் அவர் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு வரும் நிலையில் அவை இணையத்தில் வைரலாகும் என்பது தெரிந்ததே. இந்த நிலையில் காரில் கணவர் மற்றும் குழந்தைகளுடன் செல்லும் வீடியோ ஒன்றை நயன்தாரா தனது இன்ஸ்டாவில் வெளியிட்டுள்ளார். ஒரு குழந்தையை கணவர் விக்னேஷ் சிவன் தோளோடு வைத்திருக்கும் காட்சியும், இன்னொரு குழந்தையை நயன்தாரா தனது மார்போடு அணைத்து நெற்றியில் முத்தமிடும் காட்சிகள் வீடியோவில் உள்ளன.

இதனை அடுத்து இன்னொரு வீடியோவில் நயன்தாரா தனது தோழிகள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து எடுத்த வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந்த இந்த இரண்டு வீடியோக்களும் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ள நிலையில் அவை இரண்டும் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.





# வித்தைக்காரன்' படத்துக்காக மேஜிக் கற்ற சதீஷ்

ஒயிட் கார்பெட் பிலிம்ஸ் சார்பில், கே.விஜய் பாண்டி தயாரித்துள்ள படம், 'வித்தைக்காரன்'. அறிமுக இயக்குநர் வெங்கி இயக்கியுள்ளார். யுவ கார்த்திக் ஒளிப்பதிவு செய்துள்ளார். சதீஷ் நாயகனாக நடிக்கும் இதில் சிம்ரன் குப்தா, ஆனந்தராஜ், சுப்பிரமணிய சிவா உட்பட பலர் நடித்துள்ளனர். வரும் 23 ம் தேதி வெளியாகிறது. படம் பற்றி செய்தியாளர்களிடம் நடிகர் சதீஷ் கூறியதாவது: விமான நிலையத்தில் சிக்கி இருக்கும் ரூ.25 கோடி மதிப்புள்ள வைரத்தை மூன்று குழு கைப்பற்றத் திட்டமிடுகிறது. அது யாரிடம் சிக்கியது என்பது கதை. இதில் 2 வேடங்களில் நடித்துள்ளேன். ஒரு கேரக்டர் மேஜிக்மேன். இதற்காக ஒருவரிடம் மேஜிக் கற்றேன். இன்னொரு கேரக்டர் என்ன என்பது சஸ்பென்ஸ். முக்கியமான காட்சிகள் விமான நிலையத்தில் நடக்கின்றன. அந்தக் காட்சிகள் சென்னை மற்றும் கோவை விமான நிலையங்களில் படமாக்கப்பட்டது. நடிகர் விஜய் தான் இந்தப் படத்தை துவங்கி வைத்தார். என்னைச் சமீபத்தில் சந்தித்த போது 'கான்ஜூரிங் கண்ணப்பன்' பார்த்ததாகச் சொன்னார். அவர் பாராட்டியது மிகப்பெரிய சந்தோஷம். சிம்ரன் குப்தா தமிழே தெரியாமல், வசனங்களை மனப்பாடம் செய்து பேசினார். அனைவருக்கும் பிடிக்கும் விதமாக இந்தப் படம் இருக்கும். இவ்வாறு சதீஷ் கூறினார். படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

# வாணி போஜன் அரசியல் ஆசை

ஓ மை கடவுளே, லாக்கப், மிரள், பாயும் ஒளி நீ எனக்கு உட்பட சில படங்களில் நடித்திருப்பவர், வாணி போஜன். சின்னத்திரையில் இருந்து சினிமாவுக்கு வந்த இவர், ராதாமோகன் இயக்கத்தில் 'சட்னி சாம்பார்' வெப் தொடர் மற்றும் சில படங்களில் நடித்து வருகிறார். சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அவர், அரசியல் ஆசை தனக்கும் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, "சினிமாவில் மசாலா படங்களைப் பார்ப்பதை விட கருத்துள்ள படங்களைப் பார்ப்பதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. தற்போது சமூக கருத்துள்ள படம் ஒன்றில் நடித்து முடித்துள்ளேன். விரைவில் அது வெளியாகும். அரசியலுக்கு வருவது பற்றிக் கேட்கிறார்கள். நல்லது செய்ய விரும்பும் யாரும் அரசியலுக்கு வரலாம். செங்களம் என்ற வெப் தொடரில் நடிக்கும் போது, எனக்கும் அந்த ஆசை இருந்தது. இப்போதும் இருக்கிறது. அரசியலில் விஜய்க்கு வாய்ப்பு கொடுக்கலாம்" என்றார்.

# மலையாள நடிகர் ஷேன் நிகாம் தமிழில் அறிமுகம்

மலையாள நடிகர் ஷேன் நிகாம் தமிழில் அறிமுகமாகும் படம், 'மெட்ராஸ்காரன்'. இதில் ஐஸ்வர்யா தத்தா, நிஹாரிகா, கலையரசன், கருணாஸ் உட்பட பலர் நடிக்கின்றனர். எஸ்.ஆர். புரொடக்‌ஷன்ஸ் சார்பில் பி.ஜகதீஸ் தயாரிக்கிறார். சாம் சி. எஸ் இசை அமைக்கிறார். வாலி மோகன் தாஸ் இயக்குகிறார். இதன் தொடக்க விழா சென்னையில் நேற்று நடந்தது. படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

விழாவில், ஷேன் நிகாம் பேசும்போது, "சின்ன வயதில் இருந்தே அதிகமாக தமிழ் சினிமா பார்த்துதான் வளர்ந்தேன். கேரளாவில் தமிழ் ஹீரோக்களுக்கு அதிக ரசிகர்கள் உள்ளனர். அதே போல் தான் நானும். இந்தப் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாவது மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.

இயக்குநர் வாலி மோகன் தாஸ் பேசும்போது, "கதை சொன்ன 5 நிமிடத்தில் இந்தப்படத்தைத் தயாரிக்க தயாரிப்பாளர் ஒப்புக்கொண்டார். நடிகர் ஷேன் நிகாமை சந்தித்ததே மறக்க முடியாத அனுபவம். அவர் தமிழில் நடிக்க ஒப்புக்கொண்டதற்கு நன்றி" என்றார். இயக்குநர்கள் வசந்த் சாய், பொன் ராம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





# ஆடையில்லாமல் கூட நடிக்க தயார் அதுதான் சினிமா: 49 வயது நடிகை

ஒரு கதைக்கு பொருத்தமாக இருந்தால் எந்த விதமான ஆடையும் அணிந்து நடிக்க வேண்டும், ஆடையே இல்லாமல் நடிக்க வேண்டும் என்றாலும் ஒரு நடிகை தயாராக இருக்க வேண்டும், அதுதான் சினிமா' என்று 49 வயது நடிகை சமீபத்தில் அளித்த பேட்டியில் கூறி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெற்றோரின் பிரச்சினைகள் பிள்ளைகளின் மனநிலையில் பாதிப்பை தருகிறதா?

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்.

பழி உருவாக்காத பண்புடைய குழந்தைகளைப் பெற்றால் எழுகின்ற பிறப்புக்கு எல்லாம் தீயவை தீண்டாது.

அத்துடன் சில பெற்றோர் பிரிந்து வாழும் பொழுது பிள்ளைகள் தாயிடமே இருக்கிறார்கள். வெளி இடங்களில் செல்லும் நேரங்களில் தந்தையைப் பற்றிய விசாரணையில் பிள்ளைகளிடம் எரிந்து விழுதல் அவர்கள் மனதை பாதிக்கும் விடயமாக இருக்கிறது.



திருமணத்தின் முழுமை குழந்தைகள் மூலமாகவே பெற்றோருக்குக் கிடைக்கிறது. இதனால் குழந்தைகளை வளர்ப்பது கண்ணாடியை கையாள்வது போன்ற பக்குவத்துடன் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

அன்றைய நாட்களில் தந்தை வேலைக்கு செல்ல தாய் வீட்டிலிருந்து பிள்ளைகளை முழுக் கவனத்துடன் பார்த்துக்கொள்வார்கள். அத்துடன் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை என்பதால் தாய் வீட்டில் இல்லாதப் பொழுதுகளில் வீட்டிலுள்ள பெரியவர்கள் ஏனைய உறவினர்கள் கண்ணும் கருத்துமாய் பிள்ளைகளை கவனித்துக் கொள்வார்கள். இதனால் பிள்ளைகளின் மனநிலையும், பாதுகாப்பும் பலமானதாக இருந்தது.

இன்று தனிக் குடித்தனம், பெற்றோர் இருவரும் வேலைக்கு செல்லுதல் அதனால் ஏற்படும் தனிமை, பிள்ளைகளின் மீது திணிக்கப்படும் கல்வி சுமை, ஆரோக்கியம் இல்லா உணவுகள், உடற்பயிற்சி அற்ற உடல் என்பன உட்பட பெற்றோர்களின் பிரச்சினையும் அவர்களுக்குள் திணிக்கப் படுகிறது.

உதாரணமாக தாயும் தந்தையும் சண்டையிடும் போது "உனக்கு யார் வேணும்? அம்மாவா! அப்பாவா!"

"என் பேச்சு கேட்காத நீங்களும் உங்க பிள்ளைகளும் எப்படியோ போங்க " போன்ற உரையாடல்கள் பிள்ளைகளை தங்களுக்குள் தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு ஒருவரைப் பற்றி ஒருவர் சொல்லி கொடுத்தல் பிள்ளைகளை பாதிக்கும் விடயமாக அமைகின்றது. சில வேளைகளில் பிள்ளைகள் தவறு செய்யும் போது தாய் கண்டிக்க " நீ பிள்ளையை எப்போதும் ஏசிட்டு இருக்காத" என்று தந்தை அதை மறுத்து காப்பாற்றுவதும் தந்தை கண்டிக்க " நீங்க இருக்கிற கொஞ்ச நேரமும் பிள்ளைகள் மீது அன்பு இல்ல " என்று தாய் கூறுவதும் பல வீடுகளில் நடக்கும் பிரச்சனையாக இருக்கிறது.

பெற்றோர்களாய் மாறிவிடும் போது நம் சுகதுக்கங்களை பற்றி யோசிப்பதை விடுத்து பிள்ளைகள் மீதானா அக்கறை பெற்றோருக்கு வேண்டும். பிள்ளைகள் முன்னாள் சண்டை பிடிக்க உங்களையே நம்பி பிறந்த அந்த பிஞ்சுக்கள் மனத்தால் நொறுங்கி தனிமையை நாடுகிறார்கள். அத்துடன் கல்வியின் மீது நாட்டம் இல்லாமை,

சில வேளைகளில் தன்னை சுற்றியுள்ளவர்களிடம் சண்டைப் பிடித்தல், ஏதோ தடுமாற்றம், எல்லா விடயங்களுக்கும் எதிர்த்துப் பேசுதல், காரணமில்லா அமைதி அல்லது முரட்டு தனம் என்பன அவர்களின் மனநிலை பாதிப்பில் உருவாகிறது. குழந்தைகள் இல்லாமல் கண்ணீர் வடிக்கும் பலர் இருக்க. குழந்தைகள் இருக்கும் பெற்றோர் அதனைப் பற்றி சிந்திக்காமல்இருப்பது வருத்தமே! பிள்ளைகள் தங்கள் பிரச்சனையை தீர்த்துக் கொள்ள அல்லது ஆறுதல் தேட தவறான நண்பர்கள், தவறான பழக்க வழக்கம் என்பவற்றில் தங்களை நுழைத்து நிம்மதி காண்கிறார்கள் என்பது உண்மையே.

திருமண வயதிற்கு முன் காதல்,முறையற்ற திருமணம், பாலியல் உறவுகள் கற்பம், போதை என்பன சமூகத்தில் பெருகி இன்று இளம் சமூகத்தினர் அழிவை நோக்கி போகக் காரணம் பெற்றோர்களின் கண்காணிப்பு இல்லாமையே.

பெற்றோர்கள் தங்கள் பிரச்சினையை தீர்ப்பதற்கே நாட்டாமை இல்லாதபோது பிள்ளைகள் என்ன நிலையில் வாழ்கிறார்கள் என்பது எப்படி அவர்களுக்குத் தெரியப்போகிறது.

உங்கள் சண்டைகளை பிள்ளைகள் முன் வைத்துக்கொள்ளாதீர்கள்.

உங்கள் இருவருக்கு உள்ள மானப் பிரச்சினையை பிள்ளைகளிடம் சொல்லி நியாயம் தேடாதீர்கள். அவர்கள் தங்களை பெரியவர்களாக நினைத்து தங்கள் இயல்பு நிலையை மாற்ற நேரிடும். சண்டையில் பிள்ளைகள் யார் பக்கமென பங்கு பிரிக்காதீர்கள்.

உன் குடும்பம் என் குடும்பம் என்கிற வேறுபாட்டை உருவாக்காதீர்கள்.

பிள்ளைகளின் கல்வி, ஏனைய தேவைகள் வரும் போது உங்கள் கோப தாபங்களை ஒதுக்கி வைத்து விட்டு இருவரும் சேர்ந்து பேசி முடிவுகளை எடுங்கள்.

பிள்ளைகள் தவறுகளை செய்யும் போது ஒருவர் திட்டினால் ஒருவர் "ஏன் (அம்மா அல்லது அப்பா) உங்களை திட்டினார் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

உங்களுக்குள் வீண் விட்டுக் கொடுப்பு இல்லாமை இருந்தாலும் பிள்ளைகளுக்காக சில விடயங்களில் ஒருவரை ஒருவர் பொறுத்துச் செல்லுங்கள்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில். அவர்கள் நல்லவர்களாகவும் கெட்டவர்களாய் வளர்வதும் பெற்றோர் வளர்ப்பிலே உள்ளது என்பதை புரிந்து நடக்க சிறப்பு



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

## தூங்கும் முறை

உடலும், மனமும் ஆரோக்கியமாக இருப்பதற்கு தூக்கம் அடிப்படையானது. இரவில் போதுமான தூக்கம் இல்லையென்றால் அடுத்த நாள் உங்களின் அனைத்து செயல்பாடுகளும் பாதிக்கப்படும். சீரான தூக்கம் ரத்தத்தில் சர்க்கரை அளவைப் பராமரிப்பது முதல் பல நன்மைகளை உண்டாக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தூங்கும்போது, குப்புறப்படுத்தல், மல்லாந்துப் படுத்தல், ஒருக்களித்துப் படுத்தல் என்ற மூன்று முறைகளில் தூங்குபவர்களே அதிகம். இது தவிர, குழந்தை போல உடலைச் சுருக்கிக் கொள்வது, ஒரு புறம் சாய்ந்து அருகில் இருப்பவர்கள் அல்லது தலையணையை அணைத்துக்கொள்வது, கால்களுக்கு மட்டும் தலையணை வைத்துப் படுப்பது, மல்லாந்து படுத்துக் கொண்டு கை, கால்களை அகற்றி வைத்தவாறு தூங்குவது, நாற்காலியில் அமர்ந்தவாறு மேசையில் சாய்ந்து தூங்குவது, கட்டில் அல்லது சோபாவில் ஒரு காலை மட்டும் கீழே தொங்கவிட்டபடி தூங்குவது என பல விதங்களிலும் தூங்குகிறோம்.

எத்தகைய நிலையில் தூங்குகிறோம் என்பதும், உடல் நலத்தில் பாதிப்புகளை உண்டாக்கும். இதையும் படியுங்கள்: காய்கறிகளும்□ அதில் உள்ள வைட்டமின்களும் தூக்கத்தின்போது உடல் உறுப்புக்கள் தன்னைத் தானே சீர்படுத்திக்கொள்ளும். தூங்கும் முறை முதுகுத் தண்டு மற்றும் முக்கிய உறுப்புகளில் எவ்வித தாக்கத்தை உண்டாக்குகிறது என்பதைப் பொறுத்து, நன்மை தீமைகள் ஏற்படலாம்.

இரவில் தூங்கி காலையில் எழுந்திருக்கும்போது சிலருக்கு அதிக உடல் வலி இருக்கும். தூங்கும் முறை சரியில்லாததே இதற்கு காரணம். குப்புறப்படுத்து தூங்கும்போது வயிற்றுப் பகுதியில் அழுத்தம் ஏற்பட்டு செரிமானக் கோளாறுகள் உண்டாகும். அதேபோல் மல்லாந்து கை, கால்களை அகற்றி வைத்த நிலையில் படுப்பதால், உடலுக்குத் தேவையான அளவு ஆக்ஸிஜன் கிடைக்காமல் போகும். இது குறட்டையை உண்டாக்கும். உட்கார்ந்தபடி தூங்குவது, உடலைச் சுருக்கிக் கொண்டு தூங்குவது, கை, கால்களை தொங்கவிட்ட நிலையில் தூங்குவது உடலின் சீரான ரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும். இதனால், உடலில் குறிப்பிட்ட பகுதியில் வலி, உணர்வின்மை உண்டாகும்.

வலது பக்கமாக சாய்ந்து படுக்கும்போது சுவாசத்தின் அளவு குறையும். ஆகையால், உடல் எளிதில் குளிர்ச்சி அடைந்துவிடும். இரைப்பையில் உள்ள உணவு செரிக்காமல், வயிற்று உப்புசம் மற்றும் வாயுத் தொல்லை அதிகரிக்கும். சரியான உறங்கும் முறை: இடது கை கீழாகவும், வலது கை மேலாகவும் இருக்கும்படி, இடது புறம் ஒருக்களித்தபடி, கால்களை நீட்டி படுக்கலாம். அல்லது தலையணையில் சரியாக தலையை வைத்து மல்லாந்து கால்களை ஒட்டியபடி நீட்டியும், கைகளை உடல் மேல் வைத்தும் படுக்கலாம். இம்முறையில் தூங்கும்போது உடல் முழுவதும் சீராக ரத்த ஓட்டம் பாயும். உடலுக்குத் தேவையான பிராண வாயு கிடைத்து உணவு எளிதில் செரிக்கும். கர்ப்பிணிகள், அறுவை சிகிச்சை செய்தவர்கள் மருத்துவரின் ஆலோசனை படி தூங்கும் முறைகளை பின்பற்றுவது அவசியம்.



# கிராமிய கலைகள் ஒன்றிய ஆடற்கலைப் போட்டி







அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடனும் இரத்தினபுரி மாவட்டத்தில் நடத்திய ஆடற்கலைப் போட்டி அண்மையில் இரத்தினபுரி இரத்திணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.





# அமீரகத்தின் பாரம்பரியத்தை தெரிந்து கொள்ள உதவும் அபுதாபி ஷேக் ஜாயித் திருவிழா

அமீரகத்தின் பாரம்பரியத்தை தெரிந்து கொள்ள உதவும் வகையில் அபுதாபி ஷேக் ஜாயித் திருவிழா நடந்து வருகிறது.

அபுதாபி அல் வத்பா பகுதியில் ஷேக் ஜாயித் திருவிழா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி தொடங்கியது. இந்த திருவிழாவையொட்டி நான்காயிரத்துக்கும் மேற்பட்ட பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 112 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த திருவிழா வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதியுடன் நிறைவடையும். இந்த திருவிழா அமீரக அதிபர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆதரவுடனும், அமீரக துணை பிரதமரும், ஜனாதிபதி அலுவலக மந்திரியுமான ஷேக் மன்சூர் பின் ஜாயித் அல் நஹ்யான் வழிகாட்டுதலின் படியும் நடக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களை கவர்ந்து வரும் இந்த திருவிழாவில் ஐக்கிய அரபு அமீரகம், இந்தியா, ஓமன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இரு பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தத் திருவிழாவையொட்டி நடக்கும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்று மக்களை மகிழ்ச்சிப் படுத்துவர். இதன் மூலம் பொதுமக்கள் பல்வேறு நாடுகளின் கலாச்சாரம், பாரம்பரியம் உள்ளிட்டவற்றை தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். ஆளில்லா விமான கண்காட்சி, வண்ணமிகு வாண வேடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமீரகத்தின் பாரம்பரியத்தை தெரிந்து கொள்ள உதவும் வகையில் மண்பாண்டங்கள் செய்வது, கைவினைப் பொருட்கள் செய்வது உள்ளிட்டவை இங்குள்ள பாரம்பரிய கிராமத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த பொருட்களை இந்த திருவிழாவை பார்வையிட வரும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். இதனால் இந்த பணியில் ஈடுபட்டு வரும் பொதுமக்களுக்கு நல்ல வருவாய் கிடைத்து வருகிறது. பொதுமக்கள் பலர் அவர்கள் மேற்கொள்ளும் பாரம்பரிய பணிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருவது அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் இருக்கிறது. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் இந்த பாரம்பரிய பொருட்கள் மிகவும் உறுதுணையாக இருக்கிறது. இந்த பாரம்பரிய பொருட்களை செய்யும் பணிகளுக்கு கலீபா பின் ஜாயித் அல் நஹ்யான் அறக்கட்டளை உள்ளிட்ட பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆதரவு அளித்துள்ளன. தினமும் மாலை 4 மணிக்கு தொடங்கும் இந்த திருவிழாவை காண திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரையில் இலவச பஸ் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கு ஒரு முறை இலவச பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.





# மண்ணின் மைந்தர்களை பாராட்டுதல்









பிரதேச அபிவிருத்தி அரங்கம் சாமிமலையில் நிகழ்த்திய துறைசார் சாதனையாளர்களை பாராட்டும் நிகழ்வு சாமிமலை ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. சாமிமலை பிரதேசத்திலுள்ள 24 தோட்டப் பிரிவுகளிற்கும் சேவையை வழங்கி அப்பிரிவுகளிலுள்ள தனித்திறமையாளர்களை அடையாளப்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கான செயற்பாடுகளாக அரங்கத்தின் இச்செயற்பாடு அமைந்தது. மலையகத்தில் சாமிமலையை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது பல்வேறு பிரதேசங்களில் வாழுகின்றவர்கள் தமது தனிப்பட்ட முன்னேற்றத்தோடு தாம் பிறந்து வளர்ந்த தமது சமூகத்திற்கும் சேவைகளை வழங்கி வருகின்ற கல்வி, கலை, சமூகசேவை, மருத்துவம், காவல்துறை, விளையாட்டு, தொழில்முயற்சியாளர்கள், இளங்கவிஞர்கள் ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்கள் மற்றும் ஊடகம் முதலான துறை சார்ந்தவர்கள் பாராட்டப்பட்டனர். நிகழ்வின் பிரதம அதிதியாக நோர்வுட் பிரதேச செயலகத்தின் யெலாளர் ஐ. எம் சேனநயக்கா கலந்து கொண்டதுடன், செயலகத்தின் சமுக சேவை உத்தியோகத்தர் திருமதி மோகனாராணி, தேசிய கலையிலக்கிய பேரவையின் பொதுச் செயலாளர் சிவ ராஜேந்திரன், வணிக உலக சர்வதேச அமைப்பின் இயக்குனர் ரகு இந்திர குமார், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஸ்பகுமார உட்பட வர்த்தக மற்றும் கல்வி சார் பிரதிநிதிகள் விருந்தினர்களாகக் கலந்து விழாவை சிறப்பித்தனர். விழாவின் சிறப்பம்சமாக மலையக மக்களின் வாழ்வியலில் வெளிப்படும் மகிழ்வான தருணங்களை அடையாளப்படுத்தும் தப்பு சத்தம் எனும் கவியரங்கமும் நாட்டார் பாடலும் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைசார் ஆளுமைகளுக்கான நினைவுப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கு இசை பயிற்சிக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# கிழக்கில் சிவந்த சுவடுகள் நூல் வெளியீட்டு விழா










'இயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தினால் உலகில் யுத்தமே நடக்காது. இயற்கை நுண்ணறிவு அன்பைப் போதிக்கிறது. செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தியதால் தான் ரஷ்ய_ உக்ரைன் யுத்தம் உருவானது. இஸ்ரேல்_ பாலஸ்தீன யுத்தம் உருவானது' என தொழிலதிபரும் எழுத்தாளருமான கலாநிதி நாகேஸ்வரன் அருள் ராசா (கல்லாறு சதீஸ்) சுவிஸ் சூரிச் நகரில் இடம்பெற்ற 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். "சூரியனால் மட்டும் கிழக்கு சிவக்கவில்லை, இனமோதல்களால் மதமோதல்களால், இயக்க மோதல்களால், பிரதேச மோதல்களாலும் கிழக்கு சிவந்திருக்கிறது" என அவர் தெரிவித்தார். ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' நூல் அறிமுகவிழா ஊடகவியலாளர் தாந்தியான் வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது. "கிழக்கு சூரியனால் மட்டும் சிவக்கவில்லை. பல்வேறு பிளவுகளாலும் சிவந்திருக்கிறது. போரின் வலிகளை மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், வலிகளை ஆதாரபூர்வமாக இந்நூல் பேசுகிறது. இது ஒரு ஆவணம். இந்நூல் அடுத்த சந்ததிக்கும் சென்றடைய வேண்டும்" என அவர் தெரிவித்தார். "விபுலானந்த அடிகளார் கிழக்கு மாகாணத்தில் பிறந்த ஆளுமைமிக்க ஒருவர். அவர் அன்பை போதித்தார். கல்வியை போதித்தார். பல கல்லூரிகளை கட்டித்தந்தவர். அவர் கல்முனையில்தான் ஆரம்பக் கல்வியை கற்றார். அந்த கல்முனையில் 1990 யூன் 20ஆம் திகதி நடந்த சம்பவங்களை அறிகின்ற போது உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. அந்த அவலங்கள் துன்பங்களை இழப்புக்களை எல்லாம் இந்நூல் பேசுகிறது" என கலாநிதி நாகேஸ்வரன் அருள் ராசா தெரிவித்தார். பிரதம அதிதியாக கலந்து கொண்ட சுவிட்சர்லாந்து சோசலிச ஜனநாயக கட்சி உறுப்பினரும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரும் தொழிலதிபருமான கலாநிதி சிறி இராசமாணிக்கம் உரையாற்றுகையில், "எமது இனத்தின் வலிகளை சுமந்து வந்திருக்கும் 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' என்ற இந்நூல் ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார். "ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் அவர்களை எனக்கு நீண்டகாலமாக தெரியும். சுவிட்சர்லாந்தில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்ட போது இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு அதனை தெளிவூட்டும் வகையில்தான் பணியாற்றிய தொலைக்காட்சியில் என்னிடம் செவ்வி ஒன்றை எடுத்து ஒளிப்பரப்பினார். அந்தப் பிரசாரம் எமக்கு பெரும் வெற்றியைத் தந்தது. சமூக பொறுப்போடு நீண்டகாலமாக ஊடகத்துறையில் பணியாற்றும் அவர் கடந்த காலங்களில் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளை அவலங்களை 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' என்ற நூலில் வெளியிட்டிருக்கிறார். காலத்தின் தேவைக்காக அவர் இதனை மிகுந்த பொறுப்புணர்வுடன் எமக்கு தந்திருக்கிறார். அவரின் இந்த பணிகளுக்கு என்றும் எனது ஆதரவு இருக்கும்" என கலாநிதி சிறி இராசமாணிக்கம் தெரிவித்தார். நூல் அறிமுக உரையை எஸ்.ஜெயமோகன் நிகழ்த்தினார். நூல் விமர்சன உரையை ஊடகவியலாளர் புஷ்பராசா அசோக் லூயிஸ் நிகழ்த்தினார். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் இரா.துரைரத்தினம் நிகழ்த்தினார். நூலாசிரியர் இரா.துரைரத்தினம் அவர்களுக்கு ரி.ஆர்.ரி தமிழ் ஒலி வானொலி சார்பில் மூத்த பத்திரிகையாளர் ஞா.குகநாதன் அவர்களும் உலக இந்து ஆத்மீக அறக்கட்டளையின் தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார் அவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# பொன்விழாக் காணும் எழுத்தாளர் பீ.ரீ.அஸீஸ்



இலங்கையின் சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவரான கிண்ணியாவைச் சேர்ந்த பீ.ரீ. அஸீஸ் இலக்கியத்துறையில் (1974 2024) பொன்விழாக் கொண்டாடும் ஓர் அரிய வாய்ப்பினை தன் வாழ்நாளில் பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமாகும்.

1974 இல் பேசும் தெய்வம் எனும் சிறுவர் பாடலை தினகரன் பத்திரிகையில் தனது முதலாவது ஆக்கமாக கவிதையினை பதிவு செய்த இவர், அதனைத் தொடர்ந்து தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, ராதா, சுந்தரி, மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் எழுதத் தொடங்கினார்.

தனிப்பட்ட சில காரணங்களின் நிமித்தமாக பல வருடங்கள் இலக்கிய உலக செயற்பாடுகளிலிருந்து மௌனித்ததன் பின்னர் மீண்டும் 2011 ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசம் செய்தார். இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் கவனம் செலுத்தி அவற்றின் மூலம் தனது ஆளுமைகளை வெளிப்படுத்திய எழுத்தாளர் பீ.ரீ.அஸீஸ் கிராமியம், நூல் திறன் நோக்கு, சிறுவர் இலக்கியம் என்பவற்றில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படத் தொடங்கினார்.

அதன் விளைவாக முதுமையில் விளைந்த புதுமைகள், சின்னப் பாப்பா, கிராமிய சுகந்தம் எனும் சிறப்பான நூல்கள் பலவற்றுக்கு சொந்தக் காரரானார். கிராமியம் சார்ந்த இவரது படைப்புகளில் எழுத்துரு கவிகளின் வளர்ச்சியும் அதன் முக்கியத்துவமும் என்ற பொருளினை உள்ளடக்கமாகக் கொண்ட கிராமிய சுகந்தம் எனும் கட்டுரை நூல் இப்பணியில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட தொடக்கப் புள்ளியாக அமைகிறது. எழுத்துரு கவிகள் பற்றி இந்நூல் தெளிவாக கூறுவதும் ஒரு சிறப்பம்சமாகும்.





21 இற்கு மேற்பட்ட நூல்களையும் அண்ணல் கவிதைகள் என்ற கவிஞர் அண்ணலின் நூலினை மீள் பதிப்புச் செய்தும், தனது இலக்கியப் பணியினை தொடர்ந்து செல்லும் எழுத்தாளர் பீ.ரீ.அஸீஸ் இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் உள்ள சிரேஷ்ட எழுத்தாளர்களுள் முக்கியமான ஒருவராக கணிக்கப்படுகின்றார்.

சுமார் 92 நூல் திறன்நோக்குகளை எழுதியதன் மூலமாக திறன் நோக்குத் துறையில் தனியிடமும் சிறப்பும் பெறுகிறார். மேலும் இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி இதுவரை 50 முதலிடங்களை தனதாக்கிக் கொண்டுள்ளதோடு, 50 நூல்களின் திறன் நோக்குகளும் நூல் வடிவில் வெளிவருகிறது. இவரால் வெளியிடப்படவிருக்கும் பொன் விழா மலரில் 50 முக்கியஸ்தர்களின் ஆக்கங்கள் இடம்பெறுவது விஷேடமாக குறிப்பிடக்கூடியதொன்றாகும்.

இலக்கியத்துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து பொன் விழாக் காணும் எழுத்தாளர் பீ.ரீ. அஸீஸ் தேச கீர்த்தி, கலாபூஷணம், கலாவிபூஷண, இலக்கிய வாரிதி போன்ற சிறப்பான பல பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். 03.12.2023 இல் மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் சிறந்த கலைஞருக்கான விருதினை கிழக்கு மாகாண ஆளுநர் எஸ்.தொண்டமான் அவர்களிடமிருந்து இவர் பெற்றுக்கொண்டுள்ளமையும் விஷேட சிறப்பம்சமாகும். இவரை நாமும் வாழ்த்தி அவரது பணிகள் மேலும் தொடர பிரார்த்திப்போம்.

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181













காலி,தங்கெதர நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களை கௌவிக்கும் நிகழ்வும் அண்மையில் காலியில் நடைபெற்றது. இதில் பிரபல பேச்சாளர் காதர் மொஹிதீன் கலந்து கொண்டு சிறப்பாக உரையாற்றினார். இதன் போது க.பொ.த உயர் தரம் மற்றும் சாதாரண தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் திறமை செலுத்திய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு பிரதேச மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.அமைப்பின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பிரதேச மக்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

# வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்

வாசிப்பின் மீதான குறியீட்டுருவாக்கம் புதிய புதிய தோற்றுவாய்களை உருவாக்கும்.இலக்கியப்பிரதி மீதான வாசக நோக்கு ஆழங்கொள்ளுமிடமாக இத்தகைய வாசிப்புமுறைமை உருக்கொள்கிறது.

பாரதியின் பிரதிகள் மீது செலுத்தப்படும் குறியீட்டு வாசிப்பு பாரதியின் படைப்பு போக்கை வெளிக்கொணர்கிறது.

கண்ணன் பாட்டு வெறுமனே கிருஷ்ணனைப்புகழ்வதற்காக பாரதி பாடியதல்ல.அதன் தளம் விரிவானது.பாரதியின் கவித்துவ ஆளுமை,புதுமை நாட்டம்,சமய, சமூக,கலாசார எண்ணப்பாட்டின் திரட்சி,தத்துவ மனசையும்,கருத்தியலையும் வெளிப்படுத்தும் பனுவலாகும்.

கண்ணன் அபிமானியான பாரதி கண்ணனை பல்வேறு பாத்திரங்களூடாகக் கட்டமைக்கும் போது திருமாலின் அவதாரபுருஷன் வெளிப்படுகிறான்.இதிகாசக் கண்ணனுக்கும் பாரதியின் கண்ணனுக்குமிடையே வேறுபாடுண்டு.கண்ணன் என்கிற கவர்ச்சி உருவத்திற்கு கற்பனை மாலையை பாரதி சூட்டுகிறான். இன்னொரு நோக்கில் கண்ணன் என்கிற தத்துவம் அல்லது பொருள் அல்லது பெயர் பாரதிக்கு தார்மீக பலமும் சக்தியும் வழங்கிய பெருமகனைக் குறிக்கும் குறியீடாகிறது.

'பாரதியின் கண்ணன். முழுமையும் ஸ்ரீ ராமகிருஷ்ண அவதாரமல்ல; வெறும் கற்பனைக்கதையுமல்ல; அவரது வாழ்வோடு சம்பந்தப்பட்ட மகா புருஷனின் கதை'




கண்ணன் இலக்கியவெளியில் இலக்கியப்பாத்திரமாக,தொன்மக் குறியீடாக,நவீன பாத்திரமாக உருவமைகிறான்.

பாரதியின் கண்ணன் பாட்டு வாசிப்பில் குறியீட்டைச்செலுத்தும் போது அவன் தோழனாக,தாயாக, தந்தையாக,பிள்ளையாக,சீடனாக, சேவகனாக,காதலன் காதலியாக வெல்லாம் உருவமைவதனூடாக இயல்பின் நிறுவுதல் பாரதி செய்துள்ளான் என்பதை அறியலாம். அதாவது மானுடத்தின் மை குறித்த பார்வை வெளிப்படுவதைக்காணலாம்.

குறியீட்டுப்பார்வை பாரதியின் மறுமலர்ச்சிக் கருத்துக்களின் புதையலாக கண்ணன் பாட்டை இனங்காண முடியும்.

இலட்சியம்,ஏகாதிபத்ய எதிர்ப்பு, விடுதலை என்பன தொன்மக்குறியீடாக இந்த வாசிப்பில் வெளிப்படுகிறது.பழைய பாரதத்துக்கு விடைகொடுத்து புதிய பாரதத்துக்கு அழைப்பு விடுக்கும் ஒரு பாத்திரமான கண்ணன் சிருஷ்டிப்பு நோக்கத்தக்கது.

இவ்வாறு பாரதியின் குறுங்காவியமான கண்ணன் பாட்டு மேலோட்ட வாசிப்பைப் புறந்தள்ளி ஆழமான குறியீட்டு வாசிப்பை அவாவி நிற்கிறது.

கண்ணன் தாயாகும் கூற்றில் தாய், சேய் உறவினூடு கடவுள்,பக்தன் உறவு மறுவாசிக்கப்படுகிறது.

மேலும் கண்ணனை தந்தையாகக் காணும் பகுதியில் பிறப்பு,தோற்றத்தில் உயர்வுதாழ்வு இல்லை;ஒழுக்கம்,அறிவு,செயல்,என்பவற்றால் உயர்வு தாழ்வு காணப்படும் எனும் தத்துவம் உணர்த்தப்படுகிறது.துன்பத்தை மனவுறுதி கொண்டு எதிர்த்தல் வேண்டும்.பாரபட்சம் கூடாது, போலிச்சாத்திரங்களை ஒழித்தல் வேண்டும். சமூக அன்பு துன்பம் நீக்க வல்லதென்ற தத்துவத்தை பாரதி நிறுவுகிறான்.இவ்வாறு கண்ணன் பாட்டு வாசிப்பு குறியீட்டுணர்வின் வெளிப்பாடாகிறது.

# நீங்களும் எழுதலாம்;

ஈழத்தில் சிறுசஞ்சிகைச் சூழல் காத்திரமான வகிபாகம் கொண்டது. அவ்வப்போது தோன்றி நின்றிலங்கி மறைந்து போனவையும், மறையாது நிற்பவையுமாக சஞ்சிகைப்புலம் இருக்கிறது.

இந்த இருத்தலில் தொடர்ந்தியங்களில் "நீங்களும் எழுதலாம்" முக்கியமானது.

எளிமையின், கையடக்கத்தில், கருத்துப்புலப்பாட்டிலென அதன் முக்கியத்தை நீங்களும் எழுதலாம். இருமாத கவிதை இதழென 'தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி 'பயணிக்கும் முப்பத்து நான்காவது இதழ் வெளிவந்திருக்கிறது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் இதன் இயக்கப்புள்ளி. சமூக கருத்தியல் தளத்தில் இயங்கும் கவிதை இதழில் கவிதைகளும், மொழிபெயர்ப்பும், அஞ்சலியும், நூல்குறிப்புமென படைப்புகள் உள்ளன.

அ.வா.முஹ்சீன் எழுதிய 'இலங்கை முஸ்லிம்களை புரிந்து கொள்ளல்' கதிர் திருச்செல்வம் எழுதிய 'உறவுகள் சொல்லும் உணர்வு' கனகசூரியர் யோகானந்தனின் 'காற்றுக்குத்தூது விட்டு'என்பன கிடைக்கப்பெற்றோமென அறிமுகம் காணுகின்றன. லலித் கோபனின் 'காலாறம் போனவள்'அறிமுகக்குறிப்பை காரையன் சுதன் எழுதுகிறார்.

மூலமும் பெயர்ப்புமாக What Makes Hero இடம் பிடிக்கிறது.Jose Maria Sison(19292022) ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்.

மாற்று மொழிக்கவிதையாகவும் அதனைத் தருகிறோம்.

'வீரனாக்குவது எது'

சி.சிவசேகரன் தமிழுக்குத்தருகிறார்.

வீரனாக்குவது எது<br>
ஒருவனை வீரனாக்குவது<br>
பகைவனுக்கு எதிரான<br>
போராட்டத்தினின்று<br>
பெறும் அர்த்தமன்றிச்<br>
சாவின் விதமல்ல<br>
போர்க்களத்திற்<br>
சாகும் வீரனுள்ளான்<br>
பசியாலும் நோயாலுஞ் சாகும்<br>
வீரனுள்ளான்<br>
ஏதோ விபத்திற்சாகும்<br>
வீரனுள்ளான்<br>
வயது முதிர்ந்து சாகும்<br>
வீரனுள்ளான்<br>
சாவின் விதம் எதுவாயினும்<br>
பொதுக்கூறாக ஒன்றுண்டு<br>
ஒரு வீரன் தன் இறுதி மூச்சு<br>
வரை மக்களுக்குச்<br>
சேவையாற்றுகிறான்

நீங்களும் வாசிக்கலாம்

தொடரட்டும்.

ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கத்திற்கு வாழ்த்துக்கள் நீங்களும் எழுதலாம்

# மறுசொல்

முல்லை முஸ்ரிபா






கலை இலக்கியப்புலத்தில் காத்திரமான உரையாடலை அவாவி நிற்கிறோம். படைப்பு சார்ந்த விவாதங்கள்,விமரிசனங்கள்,அறிமுகங்கள் மற்றும் குறிப்புகள் அவசியமாகின்றன.

இதன் பொருட்டு

கலை,இலக்கிப் புனைவு மற்றும் அபுனைவு சார்ந்த பனுவல்கள் குறித்த அறிமுகக்குறிப்புகளை மறுசொல் எழுதி வருகிறது.

ஆர்வமுடைய படைப்பாளர்கள்,வெளியீட்டாளர்கள் உங்கள் பனுவலின் பிரதியொன்றை அனுப்பிவைப்பீர்களாயின் அது பற்றியும் வாசிப்புபுலத்தின் விரிவு வேண்டி எழுதலாம். மறுசொல் உங்கள் பனுவல்களை வரவேற்கிறது.

பனுவல்களை அனுப்ப வேண்டிய முகவரி:

*'Maru sol'*<br>
*A6,2/1,Kalaimagal St,*<br>
*Maligawatta,*<br>
*Colombo 10*




இரண்டாம் பக்க அடிக்குறிப்பு<br>
(ஈ)<br>
பாடசாலைகளின் உயிர்கள் மீதெழுதும் உயிலா<br>
அகரத்தின் கூரொலியில்<br>
மிதக்கிறது கடலெனக் கல்விக்கூடம்<br>
பிள்ளைகளைத் கற்றலென்பது ஆசிரியனுக்கு அவசியம்<br>
"யோனுக்கு ஆங்கிலம் கற்பிப்பதென்பது ஆங்கிலம் தெரிந்திருந்தல் என்பதல்ல யோனைக்கற்றல்"<br>
ஆசிரிய நிதானங்களில் நிரம்பி வேண்டும்.

புறக்குட வார்ப்பல்ல கல்வி<br>
கோப்பில் நிரப்பும்<br>
விதானக்குறிப்பல்ல கல்வி<br>
உயிர்களிடத்துத்துத்<br>
தோய்தல்<br>
உயிராகி நிற்றல்<br>
குழந்தமையுணர்வுகளைப்<br>
புரிதலெனும் ஆவல் பூக்க<br>
ஆசிரியம் தோப்பாகும்<br>
மாணவமும்<br>
வண்ண வண்ண மலர்<br>
வடிவழகாகும்<br>
மாணவரைக்கற்றல்<br>
பெற்றோரைக்கற்றல்<br>
சமூகத்தைக்கற்றல்<br>
கற்றலென்பது<br>
அனுபவங்களின் சாரம்

ஆளுமை ஆசிரியம்<br>
வகுப்பறைக்கு மட்டும்<br>
வரையப்பட்ட சிற்றோவியமன்று<br>
கரும்பலகை வெண்கட்டிச் சுட்டியுமல்ல<br>
அது அகன்ற புலத்தின்<br>
அடையாளம்<br>
வானமெடுத்த பறப்பு<br>
திசை அவாவும்<br>
பேரெண்ணம்<br>
பிள்ளைச் செல்வங்களின்<br>
களஞ்சியம்<br>
அறிதலாட்சி<br>
இயக்கவாட்சி<br>
உள் வளர்ச்சியாட்சி<br>
பயிலுதலாட்சி விரியும்<br>
களம் பள்ளிச்சாலை

ஆசிரியப் புனிதத்தின் மீது<br>
கறைகள் வீழ்ந்த கணம்<br>
பள்ளிக்கூடம் இருள்கிறது<br>
சமூக முகம் கறுக்கிறது<br>
கறைகளற்ற<br>
கரங்களால் எழுப்பப்படுகிறது வெள்ளை<br>
நிறத்திலொரு<br>
பள்ளிக்கூடம்<br>
பள்ளிக்கூடத்தின்<br>
சுவர்களில்<br>
ஆசிரியத்தின்<br>
வேர்வை படிகிறது<br>
வேர்வையில்<br>
வேர்கொள்கிறது<br>
ஒரு சமூகத்தின்<br>
இருப்பு இரண்டாம் பக்க<br>
அடிக்குறிப்பு

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



மண்டேலாவின் முதற் போராட்டம் வெற்றிகரமாக முடிவடைந்ததால் கல்லூரியில் மாணவர்கள் மத்தியில் மண்டேலா தலை சிறந்த வீரனாக மதிக்கப்பட்டான். புதிய மாணவர்கள் அனைவரும் அவனை தலைவனாக வைத்து கொண்டாடினர். அச்சந்தர்ப்பத்தில் கல்லூரி மாணவர் பிரதிநிதி கவுன்சில் தேர்தல் நடைபெறப் போவதாக அறிவிப்பு வந்தது. அத் தேர்தலில் மண்டேலாவையும் வேட்பாளராக நிற்க வைக்க மாணவர்கள் அனைவரும் விரும்பி மண்டேலாவிடம் அன்புக் கட்டளை இட்டார்கள். முதலில் வேண்டாம் என்று மறுத்த அவன் பின் தன் சக தோழர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுக்கொண்டான். தேர்தலில் மண்டேலாவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டது. மண்டேலா முதன் முதலாக கல்லூரி தேர்தலில் களமிறங்கினான். கல்லூரியில் முதலாண்டு படிப்பு நிறைவடையும் காலப்பகுதியிலேயே தேர்தல் நடைபெறப் போவதாக அறிவிப்பு வந்தது.

கல்லூரியில் மாணவர்கள் மத்தியில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கின. மண்டேலாவும் சுறுசுறுப்புடனும் ஆசையுடனும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டான். கல்லூரியில் தேர்தல் முயற்சிகள் களைகட்டியது. கல்லூரியில் மண்டேலாவுக்கான செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே சென்றது. தேர்தல் நெருங்க நெருங்க மண்டேலாவுக்கு உற்சாகமும் எதிர்பார்ப்பும் பன்மடங்காகப் பெருகியது.

நிர்ணயிக்கப்பட்ட நாளில் தேர்தல் நடைபெற்றது. கல்லூரியில் மண்டேலாவுக்கு செல்வாக்கு அதிகம் என்றபடியால் அனைவரும் எதிர்பார்த்தபடி மண்டேலா அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றான். இனியென்ன கொண்டாட்டம் தான். மண்டேலா ஆனந்தக் கடலில் மூழ்கினான். கல்லூரி வளாகத்தில் தலை நிமிர்ந்த தலைவனாக வலம் வந்தான். மண்டேலாவுடன் சேர்த்து ஆறு மாணவர்கள் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்லூரி நிர்வாகமே தன் கைக்குள்ளேதான் என்ற இறுமாப்புடன் மண்டேலா செயற்பட்டான். பல காலமாக கவுன்சில் பதவி செல்வாக்கற்ற பெயரளவுப் பதவியாக மட்டுமே இருந்து வந்தது. மண்டேலா கூட்டம் ஒன்று நடாத்தி மாணவர்களின் குறைகளை கேட்டறிந்து தீர்வு வழங்கினான். இவ்வாறான பல பயனுள்ள செயற்திட்டங்களை மண்டேலா கல்லூரியில் மேற்கொண்டான்.

ஒரு சந்தர்ப்பத்தில் கல்லூரியில் பரிமாறப்படும் உணவு தரமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு பிரதானமாக எழுந்தது. ஒட்டு மொத்த மாணவர்களும் இதை முன்மொழிந்தனர். மண்டேலா இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கி வைப்பதற்காக இப்பிரச்சினையை கல்லூரி நிர்வாகத்திடம் எடுத்துச் சென்றான். ஆனால் கல்லூரி நிர்வாகமோ அதை பொருட்படுத்தாமல் புறக்கணித்து விட்டது. பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மாணவர் கவுன்சில் இதில் தலையிடத் தேவையில்லை, நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என நிர்வாகம் சொல்லிவிட்டது. இதை மண்டேலாவால் பொறுக்க முடியவில்லை. தான் நினைத்ததை சாதிக்க முடியவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அவனை வாட்டியது. அது அவனுக்கு அவமானமாக இருந்தது. இந்த சின்ன பிரச்சினைக்கே தன்னால் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியாத போது கல்லூரி கவுன்சில் பதவி இருந்து என்ன பயன்? என்று நினைத்து அப் பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்தான். நண்பர்கள் எவ்வளவோ தடுத்தனர். பொறுத்துப் பார்ப்போம். இதற்காக நீ பதவியை விட்டு விலகாதே என கெஞ்சினார்கள். ஆனால் மண்டேலா பிடிவாதமாக மறுத்துவிட்டான் கல்லூரி முதல்வரிடம் சென்று தான் பதவி விலகுவதாகக் கூறி ராஜினாமா கடிதத்தை அவர் முன் நீட்டினான். ஆனால் கல்லூரி முதல்வரோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த சின்ன விஷயத்துக்காக யாராவது பதவியை துறப்பார்களா? என்று கூறி புத்திமதிகள் சொல்லி சமாளித்து அனுப்ப முயன்றார்.

மண்டேலாவோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பது போல பிடிவாதமாக பதவி வேண்டாம் என்று உறுதியாக ஒற்றைக் காலில் நின்றான். கல்லூரி நிர்வாகத்திற்கு இது பெரும் பிரச்சினையாகிவிட்டது. இறுதியில் கல்லூரி முதல்வர் மண்டேலாவை பார்த்து "நீ பிடிவாதம் பிடிக்காமல் நான் சொல்வதைக் கேள். இன்னும் சில நாட்களில் கல்லூரி விடுமுறை வந்துவிடும். விடுமுறைக்குப் பின் அடுத்த ஆண்டு நீ மீண்டும் கல்லூரிக்கு வரும்போது துறந்த பதவியை திரும்பவும் நீ ஏற்றாக வேண்டும். அதற்கு நீ உடன்படாவிட்டால் இனி நீ கல்லூரிக்கு வரத் தேவையில்லை.

இதுதான் எம் நிர்வாகத்தின் முடிவு. அதற்கு நீ கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். பிடிவாதமும் இறுமாப்பும் நிறைந்த மண்டேலா கல்லூரி முதல்வரின் பேச்சை தட்டிக்கழித்துவிட்டு கல்லூரி வாழ்க்கையை இடையிலேயே முடித்துக்கொண்டு ஜோங்கிந்தாபாவின் அரண்மனைக்கு வந்துவிட்டான். விஷயங்களைத் தெரிந்துகொண்ட அவர் கோபத்துடன் கத்தினார். "ரோஹிலாலா நீ செய்தது பெரிய முட்டாள்தனம். (மண்டேலாவை ரோஹிலாலா என அழைப்பதே அவர் வழக்கம்) உன் தலையிலே நீயே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டுவிட்டாய். அது எவ்வளவு பெரிய கல்லூரி அதை விட்டு விட்டு நீ ஏன் இங்கு வந்தாய்? கல்லூரி முதல்வர் என்ன சொல்கிறாரோ அதை செய்ய வேண்டியது உன் கடமை. விடுமுறை முடிந்ததும் ஒழுங்காகத் திரும்பிப் போய் படி. படிப்பில் கவனம் செலுத்த வேண்டிய காலத்தில் தேர்தல் பதவியெல்லாம் உனக்குத் தேவையா? நீ ஏன் என்னுடன் கலந்தாலோசிக்காமல் முடிவெடுத்தாய்? சரி போனது போகட்டும். இனியாவது உன் கோபத்தையும் பிடிவாதத்தையும் தூக்கி எறிந்து விட்டு கல்லூரிக்குச் சென்று படிக்கும் வேலையை பாரு." என்று கடுங்கோபத்துடன் புத்திமதி கூறினார். ஆனால் பிடிவாதம் கொண்ட மண்டேலா அதை ஏற்கவில்லை. அரண்மனையிலேயே தங்கிவிட்டான்.சில தினங்களிலேயே ஜஸ்டிஸ{ம் படிப்பை முடித்துவிட்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். இருவரும் பழைய அரண்மனை வாழ்க்கைக்கு திரும்பினார்கள்.

விளையாட்டு அரங்குகள், பூங்கா, சுற்றுலா, கேளிக்கை என இருவரும் பொழுதைக் கழித்து சொகுசு வாழ்க்கையில் மிதந்தார்கள்.இளமைப் பருவத்தின் கட்டிளம் காளைகளாக, இளமைக்கே உரிய துடிப்புடன் இருவரும் துள்ளித் திரிந்தார்கள். மண்டேலா ஜோங்கிந்தாபாவுக்கு தன்னாலான அலுவலக உதவிகளை செய்து வந்தான். ஒருநாள் திடீரென்று ஜோங்கிந்தாபா இருவரையும் தனியாக பேச வேண்டுமென்று அழைத்தார். இருவரும் பயத்துடன் என்னவோ ஏதோவென்று திக்குமுக்காடிவிட்டனர். யாராவது தங்களைப் பற்றி ஏதும் புகார் கொடுத்துவிட்டார்களோ என நினைத்து திகைத்தனர். நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு மண்டேலாதான் முன்சென்று "என்ன விஷயம் தந்தையே" என பதற்றத்துடன் வினவினான்.

ஜோங்கிந்தாபா இருவரையும் பார்த்து சிரித்துவிட்டு "ஏன் பிள்ளைகளே இப்படி பதறுகிறீர்கள். ஏதாவது குறும்புத்தனம் செய்துவிட்டீர்களா" என கேலி செய்துவிட்டு நேரடியாக விஷயத்திற்கு வந்தார். "பிள்ளைகளே, எனக்கும் வயதாகிவிட்டது. இன்னும் எவ்வளவு காலம் இப்பூமியில் தாக்குப் பிடிப்பேனோ எனக்கே தெரியவில்லை. அதற்குள் உங்களுக்கு திருமணத்தை நடத்திவைக்க விரும்புகிறேன். உங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் துணையை தேடித் தருவது என் கடமையல்லவா. உங்கள் இருவருக்கும் ஒரே மேடையில் திருமணத்தை நடத்திப் பார்க்க வேண்டுமென்பது என் நெடுநாள் ஆசை." என்று கூறியதும் இருவரும் திகைத்துவிட்டனர். என்ன பேசுவதென்று தெரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஜோங்கிந்தாபா பேசிக்கொண்டே போனார்.

"உங்கள் இருவருக்கும் வாழ்க்கைத் துணையாக வருவதற்கு இரண்டு பெண்களை பார்த்துள்ளேன். நல்ல குடும்பம். நல்ல பின்புலம். குடும்பத்திற்கேற்றவாரான ஒழுக்கமான பெண்கள். ஜஸ்டிஸ்! உனக்கு பார்த்திருக்கும் பெண் தெம்பு இனத்தை சேர்ந்தவள். தெம்பு இனத்தலைவர் கலிபா என்பவரின் மகள். அவர் மிகவும் செல்வாக்குள்ள நபர். ரோஹிலாலா! உனக்குப் பார்த்திருக்கும் பெண் உள்ளூர்ப் பூசாரியின் மகள். அவர்களது குடும்பமும் செல்வாக்கான குடும்பம் தான். நான் உங்கள் இருவருக்கும் நல்ல வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்து தந்துவிட்டேன். இனி உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது." என்று சொல்லி முடித்ததும் இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. அவர்களது எதிர்கால வாழ்க்கைக் கனவுகள் சுக்குநூறாகிப் போனது.

**(தொடரும்)**



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்



# மூத்த நடிகை பி.ஆர். வரலட்சுமி

மூத்த நடிகை பி.ஆர். வரலட்சுமி. 1966ல் சினிமா உலகில் அடியெடுத்து வைத்தவர், 70களிலும் 80களிலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என ஐந்து மொழிகளில் வலம் வந்திருக்கிறார். எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக 'நவரத்தினம்', கமலுக்கு ஜோடியாக 'சங்கர்லால்' என உச்ச நட்சத்திரங்களுக்கு நாயகியாக நடித்து கொண்டிருந்தவர் திருமணம், குழந்தைப் பிறப்புக்குப் பிறகு சில வருடங்கள் சினிமாவுக்கு பிரேக் விட்டிருக்கிறார். அடுத்த ரவுண்டில் 'பூவே உனக்காக', 'நான் அவனில்லை' என்று இளைய தலைமுறையினருடன் நடிக்க ஆரம்பித்தவர், தற்போது சீரியல்களில் பாட்டியாக நடித்து எல்லோருடைய மனங்களையும் கொள்ளையடித்து வருகிறார். 'சுந்தரி' சீரியலில் அப்பத்தா ரோலில் ஜாலியான பாடி லாங்வேஜுடன் அதகளப்படுத்திக் கொண்டிருப்பவர். சின்ன வயசுல எங்க தெருவுல இருக்கிறவங்க என்னை 'சாவித்ரி மாதிரியே இருக்கே'ன்னு சொல்வாங்க அதைக் கேட்டு கேட்டுதான் எனக்கு சினிமாவுல நடிக்கணும்ங்கிற ஆசை வந்துச்சு. தமிழ்ல 'வாழையடி வாழை'தான் என்னோட முதல் படம். ஓர் ஏழை வீட்டின் மூத்த மகள் கேரக்டர். ரொம்ப உருக்கமான ரோல் என்னுடையது. 'சினிமா பைத்தியம்' படத்துல பெரிய ஹீரோயின் ஆகணும்னு வீட்டைவிட்டு வெளிய வந்த கேரக்டர் என்னுடையது. சாலிகிராமத்தில் எங்க வீடும் ஷோபா சந்திரசேகர் வீடும் ஒரே தெருவுலதான் இருந்துச்சு அந்த வகையில விஜய்யை சின்ன வயசுல இருந்தே எனக்குத் தெரியும். ரொம்ப அமைதியானவர். பூவே உனக்காக படத்துல அவரோட நடிச்சபோதும் அதே அமைதி தான்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# புதிய ஆடை வடிவமைப்பு காட்சி





வரையறுக்கப்பட்ட விஜய குழும வர்த்தக தனியார் நிறுவனத்துடன் இணைந்த CIB ஷொபின் சென்டர் வலையமைப்பால் CIB HELA VASTRA FASHION GALA 2024 என்ற ஃபேஷன் ஷோ சுதந்திர சதுக்க ஆர்கேட் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. அன்று இரவு 7.00 மணி முதல் 30 மாடல்களைக் கொண்ட குழு, ELK, HOT மற்றும் AriElle Premium Clothing Brand 03 என்ற பெயரில், 160 க்கும் மேற்பட்ட சமீபத்திய புதிய ஆடை வடிவமைப்புகளை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தியது.






















# தேசிய சாரணர் ஜம்போரி நிகழ்வு திருகோணமலையில்



இலங்கையின் 10ஆவது தேசிய சாரணர் ஜம்போரி நிகழ்வு 'மாற்றத்துக்கான தலைமைத்துவம்' எனும் தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைபெறும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 520 சாரணர்கள் பங்கேற்றுள்ளனர். திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா கல்லூரி மைதானத்தை மையமாகக் கொண்டு நடைபெறுகின்ற ஜம்போரி நிகழ்வுக்காக அதன் அருகிலுள்ள மைதானங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் 11,500 க்கும் மேற்பட்ட ஆண், பெண் சாரணத் தலைவர்கள் பங்குபற்றுகின்றனர். மேலும் ஜம்போரி நிகழ்வை காலை முதல் இரவு 9.00 மணிவரை பொதுமக்கள் பார்வையிட முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மைதானத்தில் கூடாரங்களை அமைத்து சாரணத் தலைவர்கள் பல்வேறு பிரயோக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிகழ்வில் தலைமைத்துவம், புத்தாக்கம் உட்பட பல துறைகளில் தமது திறமைகளை வெளிக்கொணர சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.